ரூபா 20.00

www.onlineuthayan.com




பக்கங்கள்: 52

# உதயன்

சுடர் 27
கதிர் 43

வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 22 ஞாயிற்றுக்கிழமை (08/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# வன்னி மக்களின் காணிகள் படைகளுக்குத் தாரை வார்ப்பு

## துணுக்காய் பிரதேசத்தில் மட்டும் 650 ஏக்கர் சுவீகரிப்பு; மேலும் 260 ஏக்கர் கையகப்படுத்தவும் திட்டம்

உதயன் சிறப்புச் செய்தி

முல்லைத்தீவு, ஜனவரி 8

வடக்கில் தமிழ் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமரப் படையினர் இன்னும் முழுமையாக அனுமதி வழங்காத நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் ஆகக்குறைந்தது 650 ஏக்கர் காணியை முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பயன்பாட்டுக்காக பாதுகாப்பு அமைச்சு கையகப்படுத்தி இருக்கிறது. இவை அனைத்தும் அரச காணிகள் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மேலாக பொதுமக்களுக்குச் சொந்தமான 260 ஏக்கர் காணிகளைப் பலவந்தமாகப் பெறும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உதயனுக்கு நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

துணுக்காய் அமைதிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் சுமார் 200 ஏக்கர் அரச காணி கொமாண்டோ றெஜிமன்ட் படைப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று தென்னியன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 46 ஏக்கர் அரச காணி படையினரின் பாவனைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கோட்டைகட்டியகுளம் பகுதியில் 150 ஏக்கர் அரச காணியை தமக்கு வழங்குமாறு படையினர் விண்ணப்பித்திருக்கின்றனர். எனினும் அந்தக் காணி மக்களின் மீள்குடியேற்றத்துக்குரிய காணி என பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டு அது படையினருக்கு வழங்கப்படவில்லை.

பழையமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவிலும் 50 ஏக்கர் அரச காணி படையினரின் பாவனைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தேறாங்

» 19

# தனியார் காணிகளை கையகப்படுத்த ஒட்டகப்புலத்திலும் படைகள் முயற்சி

## 20 வருடங்கள் இருந்ததால் தமக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடுகின்றன

யாழ்ப்பாணம், ஜன. 8

வயாவிளான் கிழக்கு, ஒட்டகப்புலத்தை அண்டிய பிரதேசத்தில் தனியாருக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணியைக் கையகப்படுத்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தப் பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினர் 20 வருடங்களாக இருக்கின்றனர் என்பதால் அது படையினருக்கு உரிய காணி என பாதுகாப்பு அமைச்சு, காணி அமைச்சிடம் உரிமை கோரி உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து காணி அமைச்சினால் வருட இறுதியில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், உடனடியாக அந்தப் பிரதேசக் காணிகளைப் பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

''ஒட்டகப்புலத்தில் உள்ள 20 ஏக்கர் காணியில் படையினர் கடந்த 20 வருடங்களாக நிலை கொண்டிருக்கின்றனர். அதனால், அது அரச காணியாகவே கருதப்படவேண்டும். அந்த அரச காணியை உடனடியாகத் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் ஊடாகப் பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கவும்'' என்று காணி அமைச்சின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

» 19

# மீனவர்கள் மீதான தாக்குதல்கள் இந்தியக் கடலில் நடக்கவில்லை

சென்னை, ஜன. 8

இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து தமிழக மீனவர்கள் மீது எந்தத் தாக்குதல்களும் நடத்தப்படவில்லை என்று புதுடில்லி அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் உறுதியாகத் தெரிவித்திருக்கிறது. இலங்கைக் கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்பதையும் அது ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழக மீனவர்கள் கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தக்கோரி மீனவர்கள் சார்பில் ரிட் மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

» 19

# கிளிநொச்சி கந்தனுக்கு கிடைத்தது அன்னதானமடம்

கிளிநொச்சி, ஜன.8

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்குரிய அன்னதானமடம், குருக்கள் விடுதி போன்றவை கடந்த சில வருடங்களின் பின்னர் மீண்டும் ஆலய நிர்வாகத்திடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஆலயச் சூழலிலுள்ள இந்தக் கட்டடங்கள் மற்றும் மலசலகூடம் ஆகியன இதுவரைகாலமும் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருந்தன.

ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொதுநலவிரும்பிகள் பலரும் நீண்டகாலமாக - தொடர்ச்சியாக இந்தப்

» 19

## மரணித்த மறவர்களுக்கு அஞ்சலி செலுத்த வாரீர்

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மரணித்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு நாளை மறுதினம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். நகரில் நினைவுத் தூபி அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. 1974 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகிய 10 பேரையும் மனதில் நிறுத்தி இந்த நிகழ்வு நடைபெறுகிறது. இந்த நிகழ்வில் தமிழின ஆர்வலர்களைக் கலந்து கொண்டு மரணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (ஒ-10)

## ஆஸி செல்ல முயன்ற 12 பேர் கைதாகினர்

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்த 12 பேர் நேற்று தங்காலை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். தங்காலை ரெக்கவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த அவர்களை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன கூறியுள்ளார். சந்தேகநபர்கள் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு திட்டமிட்டிருந்தமை ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## திருமண வீட்டு மோதலில் ஒருவர் பலி

ஊடராபொல பகுதியில் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட இரண்டு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரழந்துள்ளார். இநத சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். கூரான ஆயுதமொன்றினால் குத்தியதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வல்கமுல்ல, அங்குருபிச்சிய பகுதியைச் சேர்ந்த 30 வயதான ஒருவரே இந்த மோதல் சம்பவத்தில் உயிரிழந் துள்ளார்.

## காய்ச்சலால் நேற்றும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.8

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரகாலமாக பரவிவரும் ஒருவகைக் காய்ச்சலினால் நேற்றும் ஒருவர் மரணமானார். இதனால்இக்காய்ச்சலினால் மரணமானவர்களின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது.

இதுதவிர கிளிநொச்சியைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் இந்த வகைக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று மரணமானவர்,காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு கடந்த 2 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது அங்கு மரணமானார். கிளிநொச்சி உதயநகரைச் சேர்ந்த கதிர்வேலு வைத்தி (வயது 55) என்பவரே நேற்று மரணமானார்.

எனவே இத்தகைய காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதனை செய்து சிகிச்சைபெற்றுக்கொள்ளுமாறு வைத்தியர்கள் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (த-4-15)

AIR MARK
Travels & Tours

கொழும்பு - பாரீஸ் - 38000/-
கொழும்பு - லண்டன் - 42000/-
கொழும்பு - டோகா - 15500/-

0777727617
IATA

# 05, STANLEY ROAD, JAFFNA.
021 222 4777 / 021 222 4888
# 379,2/2,GALLE RD, COLOMBO-06
# 94, CHATHAM STREET, COLOMBO-01



புதுவருடத்தையொட்டி வாடிக்கையாளர்களுக்கு Granite விற்பனையில்
மாபெரும் விலைத்தள்ளுபடி
வெகு விரைவில் எமது புதிய கிளை
நெல்லியடியில்
The metro engineering (pvt) ltd
365 Days Open
212, Palaly Road, Jaffna.
05, Stanley Road, Jaffna.
021 222 4777 / 021 222 4888
021 222 0033 / 021 222 0044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழக மீனவருக்கு கச்சதீவில் இடமில்லை

## இந்திய மத்திய அரசு உயர்நீதிமன்றில் மனு

புதுடில்லி, ஜன. 8

கச்சதீவு பகுதியில் மீன் பிடிக்க தமிழக மீனவருக்கு உரிமை இல்லை என இந்திய உயர் நீதிமன்றக் கிளையில் மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்கு முப்படை பாதுகாப்பு வழங்க உத்தரவிடக்கோரி வழக்கறிஞர் ப.ஸ்டாலின் உயர் நீதிமன்றக் கிளையில் மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள்- தமிழக மீனவர்களுக்கு கப்பற்படை உயர் அதிகாரி மேற்பார்வையில்- கடலோர காவல் படை பாதுகாப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவு- குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதையடுத்து- இந்திய உயர் அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக்கோரி ஸ்டாலின் மனுத்தாக்கல் செய்தார்.

அதற்கு மத்திய அரசு சார்பில் வெளியுறவுத்துறை இயக்குநர் தீபக்மித்தல் பதில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: இந்தியா - இலங்கை இடையே மன்னார் வளைகுடா- வங்காள விரிகுடா கடல் பகுதியில் கடல் எல்லை நிர்ணய ஒப்பந்தம் 1976 இல் ஏற்பட்டது. மன்னார் வளைகுடாவில் 13ஆவது கடல் மைலில் இந்தியா- இலங்கை- மாலைதீவு நாடுகளின் கடல் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது.


இந்த ஒப்பந்தப்படி- கச்சதீவில் தமிழக மீனவர்கள் ஓய்வு எடுக்கலாம்- வலைகளை உலர்த்தலாம்-

அங்குள்ள அந்தோனியார் தேவாலயத் திருவிழாவில் கலந்து கொள்ளலாம். ஆனால் கச்சதீவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்க உரிமம் கிடையாது.

**அந்தோனியார் தேவாலயத் திருவிழாவில் கலந்து கொள்ளலாம். ஆனால் கச்சதீவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்க உரிமம் கிடையாது.**

கச்சதீவுக்கு செல்ல வழங்கப்பட்டுள்ள அனுமதியை மீன்பிடி உரிமையாக தவறாக நினைத்து செயல்படுகின்றனர். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. பின்னர் இம்மனு மீதான விசாரணை வரும் 11ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## நடராஜப் பெருமானுக்கு அரோஹரா...!





காரைநகர், ஈழத்துச் சிதம்பரத்தில் நேற்றுத் திருவாதிரை உற்சவ தேர்த்திருவிழா நடைபெற்றது! நடராஜப்பெருமான் சித்திரத் தேரில் பக்தர்கள் புடைசூழ ஆடி அசைந்து வரும் காட்சியையே இங்கு காண்கிறீர்கள். (ஒ-250)

## பண மோசடி வழக்கு

யாழ்ப்பாணம், ஜன.8

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாண இளைஞரிடம் இருந்து 15 இலட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்யப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள முகவர் நிலையமொன்றில் கடமையாற்றிய கண்டியைச் சேர்ந்த சிங்கள யுவதி ஒருவரே மேற்படி மோசடியை செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட இளைஞனால் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் யுவதியைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதோடு, நீதிமன்ற உத்தரவுக்கமைய பிணை அடிப்படையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

இதன்போது மோசடி செய்யப்பட்ட பணத்தை உரியவரிடம் ஒப்படைக்கவும் உத்தரவிடப்பட்டிருந்தது.

யுவதி இன்னமும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டிய நிலையில் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (10-4)

## 'கிளிறிசிடியா' மரத்திலிருந்து இலங்கையில் மின்சாரம்!

### சீன நிறுவனத்தினர் ஆய்வு வெற்றி

கொழும்பு, ஜன,08

வடக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் பரவலாகக் காணப்படும் கிளிறிசிடியா மரங்களுக்கும் இனி மவுசு வருமோ அல்லது அந்த மரங்கள் அழிக்கப்பட்டு விடுமோ என்று தெரியவில்லை.

காரணம் இதுதான் சீமைக் கிளுவை என அழைக்கப்படும்கிளிறிசிடியா மரத்தில் இருந்து இலங்கையில் மின்சாரத்தைத் தயாரிக்க சீனா தயாராகி விட்டது. அதற்கான ஆய்வில் சீன நிறுவனம் ஒன்று வெற்றி கண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த ஆய்வை மேற்கொண்ட சீனாவின் ஹெனா சக்தி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சினிகியாங் சூ தலைமையிலான அதிகாரிகள் குழு பிரதமர் டி.எம்.ஜயரத்னவிடம் தமது ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையில் கிளிறிசிடியாவில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது குறித்த முழுமையான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

கிளிறிசிடியாவில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றும், சீனாவின் உதவியுடன் வவுனியா, மொனராகல, அம்பாறை, எம்பிலிப்பிட்டிய, கண்டி, நுவரெலியா போன்ற இடங்களில் இந்த மின்உற்பத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, வேலிகளுக்கும், கால்நடைத் தீவனமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்த கிளிறிசிடியா தற்போது கிராம மக்களுக்கு அதிக வருவாயை ஈட்டிக் கொடுக்கும் பயிராக மாற்றமடைந்துள்ளதாக பிரதமர் ஜயரத்ன கூறியுள்ளார். (ஒ-10)

## புனர்வாழ்வுக் கால எல்லையை தீர்மானிக்க முடியாது

கொழும்பு,ஜன 8

முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வுக் காலஎல்லையைத் தம்மால் தீர்மானிக்க முடியாது என்று கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் கைவிரித்துள்ளது.

படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட மயில்வாகனம் வினோதலிங்கம் என்ற விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதிவான் இவ்வாறு கூறியுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த இவர் தீவிரவாத தடுப்புக் காவல் பொலிஸாரினால் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவரைப் புனர்வாழ்வுக்கு அனுப்ப நீதிவான் உத்தரவிட்டார்.

அப்போது சந்தேகநபர், தான் புனர்வாழ்வு பெற வேண்டிய காலப்பகுதியைக் குறிப்பிடுமாறு நீதிவானிடம் கேட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்த நீதிவான், புனர்வாழ்வு பெற வேண்டிய காலப் பகுதியைப் புனர்வாழ்வு அதிகாரிகள் தான் தீர்மானிப்பார்கள், அதனை நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து குறிப்பிட்ட சந்தேகநபரைப் புனர்வாழ்வுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த)

## ரூ.3000 அபராதம்

சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் பதிவு செய்யாமல் அப்பளத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களுக்கு யாழ். நீதிமன்றம் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மேலங்கி இல்லாமல் அப்பளம் தயாரித்த நால்வருக்கும் அனுமதிப்பத்திரம் இன்றி தொழிலகத்தை நடத்திய ஒருவருக்குமே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

## அதிவேக நெடுஞ்சாலைக்குள் ஆடு! உரிமையாளருக்கு ரூ.5,000 வேட்டு!!

கொழும்பு, ஜன. 8

தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்குள் திடீரெனப் பிரவேசித்தது ஆடு. வந்தது வினை. ஆட்டின் உரிமையாளர் அபராதம் செலுத்த நேரிட்டது! அதுவும் ஆயிரம் ரூபா, 2 ஆயிரம் ரூபா அல்ல. சுளையாக 5 ஆயிரம் ரூபா அபராதம் ஆட்டுக்காரருக்கு!

ஆட்டின் சொந்தக்காரருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்துப்பிரிவு அத்தியட்சகர் எரிக் பெரேரா அறிவித்திருக்கிறார். (ஒ-10)

## துப்பாக்கி முனையில் நேற்றிரவு கேபிள் வழங்குநருக்கு கொலை மிரட்டல்

யாழ்ப்பாணம், ஜன,08

அலெக்ஸ் கேபிள் ரி.வி. வழங்குநரின் வீட்டுக்குள் நேற்றிரவு புகுந்த ஆயுததாரிகள் சிலர் துப்பாக்கியைக் காட்டி தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தனர் என்று பாலசுந்தரம் அலெக்ஸ்குமார் என்பவர் நேற்றிரவு குற்றச்சாட்டுத் தெரிவித்தார்.

இதுபற்றி பொலிஸில் முறையிட்டுள்ளார் என்று அவர் கூறினாலும் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு சம்பவத்தின் உண்மை குறித்து உறுதி செய்ய முடியவில்லை.

கடந்த பத்து வருடங்களாக அலெக்ஸ்குமார் கேபிள் ரி.வி. வழங்குநராக தொழிற்பட்டு வருகிறார். [illegible] குழுவினரே தனக்குக் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு வீட்டுக் கண்ணாடிகளை அடித்து நொருக்கிவிட்டுச் சென்றனர் என்று நேற்றிரவு அவர் வழங்கிய வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ்நிலைய நடமாடும் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்த அலெக்ஸ் உதயன் அலுவலகத்துக்கு வந்து தனக்கு ஏற்பட்ட நிலை [illegible]

அவர் தெரிவித்ததாவது: நான் பத்து வருடங்களாக கேபிள் ரி.வி வழங்குநராக இருக்கின்றேன். கடந்த வருடம் உள்ளூர் கேபிள் ரி.வி வழங்குநர்களுக்கான அனுமதிப் பத்திரம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கொன்று உள்ளது. நாங்கள் நீதிமன்ற உத்தரவின்பேரில் தொடர்ந்து சேவையை வழங்கி வருகிறோம்.

கடந்த சில நாள்களாக எனக்கு உள்ளூர் ரி.வி அலைவரிசை நிறுவனம் ஒன்றிலிருந்து அழுத்தம் தரப்பட்டது. தன்னிச்சையாக கேபிள் ரி.வி நடத்த முடியாது என்று மிரட்டிய அந்த நிறுவனத்தினர் தங்களுடன் இணைந்தே கேபிள் ரி.வி சேவையை வழங்கவேண்டும் என்றும் இல்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மிரட்டுகின்றனர்.

**எனக்கு உள்ளூர் ரி.வி அலைவரிசை நிறுவனம் ஒன்றிலிருந்து அழுத்தம் தரப்பட்டது.**

இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் என் மீது அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். அது குறித்து நேற்று முன்தினம் பொலிஸாரால் நான் விசாரிக்கப்பட்டேன்.

இந்த நிலையிலேயே எனக்கு நேற்றிரவு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று அலெக்ஸ் தெரிவித்தார். இது தொடர்பில் குறித்த தொலைக்காட்சி நிலையத்தின் கருத்தை அறிய நேற்றிரவு முடியவில்லை. (உ-10-319)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னி மக்களின் அவலங்களைத் தீர்க்க மனங்கொள்வது எப்போது?

வன்னிப் பிரதேசத்தில் இனம் காணப்படாத ஒரு வகைக் காய்ச்சல் வேகமாகப் பரவிவருகிறது. இந்தப் புதிய காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் இரண்டு அல்லது மூன்று நாள்களில் பலியாகின்றனர். இந்தப் புதிய நோய் சகல வயதினரையும் தாக்குகின்றது. இது சுவாசப் பாதிப்பால் உண்டாகும் வியாதி என்று சந்தேகிக்கப்பட்டாலும் அது எந்த வகை சார்ந்தது என்று இன்னமும் இனம் காணப்படவில்லை. இந்நோய் வயது வேறுபாடின்றி மக்களைத் தாக்கி வருவதால் அதன் தன்மையை அறிந்து கட்டுப்படுத்த வேண்டிய உடனடித் தேவை உருவாகி உள்ளது.

மழை காலத்திலும் அதன் பின்னரும் தொற்று நோய்கள் பரவுவது வழமையே. ஆனால் அவற்றின் தன்மையை அறியாமல் சிகிச்சை வழங்குவதும் கட்டுப்படுத்துவதும் கடினம். எனினும் இந்நோய் கண்டவர்கள் தாமதம் இன்றி வைத்தியர்களை நாட வேண்டும்; கால நேரத்தை வீணாக்கினால் ஆபத்து உண்டு என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இந்தப் புதிய காய்ச்சல் எந்தவகை சார்ந்தது என்பதனைக் கண்டறிவதற்கு வைத்திய நிபுணர் குழு ஒன்று வன்னிக்கு விரைவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நோய் பலரைப் பாதிப்பதற்கு இடங்கொடாமல், அது குறித்த பகுப்பாய்வும் மருத்துவமும் உடனடித் தேவைகள்.

போரினால் இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகள் தானும் இல்லாமல் மீளக்குடியமர்ந்த வன்னிப்பிரதேச மக்கள் பல வசதியீனங்களுடனேயே நாளாந்த வாழ்க்கையை எதிர்கொள்ள நேரிடுகிறது.

புதிய வகை நோய்கள் உண்டாவதற்கும் பரவுவதற்கும் வாழ்க்கைப் புறச்சூழல் வன்னியில் நலிவுற்றுப் போனமையும் பிரதான காரணிகளில் ஒன்று என்பதனை மறுக்க முடியாது. மீளக்குடியேற்றம் உரிய வகையிலும், மக்களின் அடிப்படைத் தேவைகளை ஈடுசெய்யும் வகையிலும் நடைபெறவில்லை என்பது வார்த்தைகளால் பூசி மறைக்கக்கூடிய ஒன்றல்ல.

போர் முடிவுற்று சுமார் ஒரு வருடத்துக்குப் பின்னரே மக்கள் மீளக்குடியமர்வு ஆரம்பமானது. இரண்டு முழு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் அவர்களால் முந்திய வாழ்க்கை நிலையை இன்னமும் எட்டிப் பிடிக்க முடியவில்லை. அதற்கான வசதிகளும் ஆதரவும் போதிய அளவில் அரசிடம் இருந்து கிடைக்கவில்லை என்பது மிகத் துலாம்பரமானதாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களைக் குறுகியகாலத்தில், முந்திய நிலைமைக்கு மீள்விக்க முடியாது என்ற தேற்றம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றே. எனினும் போரை விரைவில் வென்றுவிட வேண்டும் என்பதில் அரசிடம் இருந்த வேகமும் வீச்சும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையை மீள்விப்பதில் காட்டப்படவில்லை என்பது நிதர்சனம்.

மீளக்குடியமர்த்தப்பட்ட, மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதார நிலை, இன்னமும் சராசரித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்குத் தானும் உயர்த்தப்படவில்லை. அதற்குத் தேவையான பரிமாணத்திலும் கட்டவிழ்க்கப்படவில்லை. இதனை, இப்போது அந்தப் பகுதியில், முந்திய போர்ப் பிராந்தியத்தில் வாழும் மக்கள் மத்தியில் நிலவும் அடிமட்டம் வரையான நாளாந்த அவலங்கள் புலப்படுத்துகின்றன.

வன்னியில் தான் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் உள்ளந்தரங்கமான நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு உள்ள அக்கறையும் அசுர வேகமும், ஒப்பீட்டளவில் மக்களின் வாழ்க்கை வசதிகளில் மேம்பாட்டைக் கொண்டு வருவதில் இல்லை என்பது உராசி அல்லது தேய்த்து மாற்றிவிட முடியாத தழும்பு எனலாம்.

அதற்குரிய ஒரு சிறிய உதாரணமாகப் பின்வரும் தள நிலைமையைக் கொள்ளமுடியும்:

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குள் அடங்கும் திருமுறிகண்டியின் ஒரு பகுதியில் அங்கு முன்னர் வாழ்ந்த மக்களுக்கு மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. ஆனால் இராணுவத்தினர் அப்பகுதியில் நிரந்தரமாக நிலை கொண்டு விட்டனர். சம்பந்தப்பட்ட மக்களுக்குப் பிறிதொரு பகுதியில் காணிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது பழமொழி. அதற்கு ஒப்ப, வன்னிப் பகுதிக்கு இராணுவப் பிரதேசங்களை எல்லை அரண்களாகக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதற்கு திருமுறிகண்டியை ஒரு மாதிரி உதாரணமாகக் கொள்ளலாம்.

போரினால் பல வகை இழப்புகளையும் இடர்களையும் எதிர்கொண்ட வன்னி மக்களின் வாழ்க்கை நிலையை மீள்விப்பதற்கு, அரசு ஆற்ற வேண்டிய பணிகள் பலவகை சார்ந்தவை. மனிதாபிமானத்தின் பேரிலும் மனித நேயத்தின் பாற்பட்டும் சர்வதேச நாடுகளும், அங்குள்ள அமைப்புகளும் உதவ முன்வந்திருக்கும் தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. வன்னி மக்களுக்கு உதவுவதையும், அமிழ்ந்துள்ள அவர்களின் வாழ்வை மேலெழுந்து மிதக்க வைக்கச் செய்வதற்கும், அரசு முன்னுரிமை தருவதாக அப்பகுதி மக்கள் திருப்தி கொள்ளும் வகையில், தன்னையும் தனது நடவடிக்கைகளையும் ஆக்கிக் கொள்வதற்கு, அது இப்போது முன்னுரிமை கொடுக்காது வேறு எப்போது அது வழங்கப்போகிறது?

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

# யாழ்.கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைகள் சீரமைப்பு

## கிளைக் குழுத் தேர்தல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் , ஜன.8

யாழ். குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைகளை இந்த ஆண்டில் மறுசீரமைக்கும் பணிகளைக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதற்காகச் சங்கக் கிளைகளின் வாக்காளர் இடாப்புக்களை சீர் செய்யும் பணிகளில் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

கூட்டுறவுச் சட்டத்திற்கு அமைய இயக்குநர் சபைகளின் பதவிக் காலம் மூன்று வருடங்களாகும். அதன் பின்னர் கிளைக்குழுத் தேர்தல் நடத்தப்பட்டுப் பொதுச் சபையின் உதவியுடன் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட வேண்டும்.

கடந்த கால போர்ச் சூழலால் அநேகமான சங்கங்களில் இவ்வாறான சட்டபூர்வமான இயக்குநர் சபைத் தெரிவு இடம்பெறவில்லை.

சில சங்கங்களில் நியமன இயக்குநர் சபைகளே செயற்பட்டு வருகின்றன.

இதனால் சில சங்கங்களின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை.

இதனையடுத்து அந்தச் சங்கங்களின் செயற்பாடுகளைத் திருப்தியான நிலைக்குக் கொண்டு வருவதற்காக சட்டபூர்வமாகக் கிளைக் குழுத் தேர்தலை நடத்தி ஏழு பேர் கொண்ட இயக்குநர் சபைத் தெரிவுகளை மேற்கொள் வதற்குக் கூட்டுறவுத் திணைக்களம் தயாராகி வருகின்றது.

இதற்காக சங்கங்களின் வாக்காளர் இடாப்புக்களை சீர் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு தேர்தல் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது என்று கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தின் 23 கிளைகளுக்கு இந்தத் தேர்தல் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கான கிளைக்குழுத் தேர்தல் இடம்பெறும்.

உடுப்பிட்டி, புலோலி, பண்டத்தரிப்பு போன்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிளைக்குழுத் தேர்தல் ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(த-17)

# வைத்தியசாலை கட்டடம் 18 ஆம் திகதி திறப்பு

தென்மராட்சி,ஜன.8

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டட விடுதியும் வைத்திய அதிகாரிகள் வதிவிடமும் எதிர்வரும் 18ஆம் திகதி உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தக் கட்டடங்களைத் திறந்து வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதிகள் திறப்பது தொடர்பாக மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் அடங்கிய குழு கடந்த புதன்கிழமை வைத்தியசாலைக்கு நேரில் வந்து விடுதிகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

பின்லாந்து ஐரிஸ் நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கங்களினால் 156 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களும் வைத்திய உபகரணங்கள் தளபாடங்களும் கடந்த மாதம் சுகாதாரத் திணைக்களத்தினரால் உத்தியோக பூர்வமாக வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-207)

# கொலைச் சந்தேக நபர்கள் விடுதலை

யாழ்ப்பாணம் , ஜன.8

2003 ஆம் ஆண்டு கோப்பாய் இராமக்குட்டி செல்லத்தம்பி என்பவரை அடித்துக் கொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இரண்டு எதிரிகளும் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

முதலாம் எதிரி கந்தசாமி சுதாகரன் கொலையுண்டவரின் குடும்ப நண்பராவார். இரண்டாம் எதிரி செல்லத்தம்பி வாலாம்பாள் கொலையுண்டவரின் மனைவியாவார். இந்த வழக்கில் 2 பெண் பிள்ளைகளும், அயலவர்கள் 2 பேரும் அரச தரப்பில் சாட்சியமளித் தனர்.

முதலாம் எதிரியின் வாக்கு மூலத்தின் பிரகாரம் கொலைக்குப் பயன்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட மண்வெட்டிப் பிடியொன்றை கைப்பற்றியவரான பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 4 பொலிஸாரும் அந்த வேளையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக இருந்த ஸ்ரீ செல்வமும், சட்ட வைத்திய அதிகாரியும் அரச தரப்பில் சாட்சிகளாக அழைக்கப்பட்டு சாட்சியமளித்திருந்தனர்.

பொலிஸ் காவலிலிருந்தபோது முதலாவது எதிரி பொலிஸுக்கு அளித்த வாக்கு மூலத்தின் பகுதியொன்றும் ஒரு சான்றுப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்டது. அரச தரப்பு சாட்சியம் முடிவடைந்ததையடுத்து எதிரி தரப்புச் சாட்சியம் மேல் நீதிமன்றினால் கோரப்பட்டது. எனினும் எதிரி தரப்பில் சாட்சியம் எதையும் முன்வைக்கவில்லை என அவரது சட்டத் தரணி, நீதிபதியிடம் தெரிவித்தார்.

தவிர கொலையுண்டவரின் மூத்த மகள் தனது சாட்சியத்தில், தனது தந்தைக்கும், தாய்க்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும், தனது தந்தை, தாய்க்கு அடிக்கப் போன போது, தனது தாயார் கதவுக்குப் போடும் தடி ஒன்றினால் தனது தந்தைக்கு அடித்தபோது தந்தை கீழே விழுந்து விட்டார். தந்தைக்கு அடித்தவண்ணமே ஐயோ என்னைக் கொல்லுகிறான் காப்பாற்றுங்கோ என்று தாயார் கத்தினார் என்றும் அவ்வேளை அங்கு வந்த சுதாகரன் மண்வெட்டியினால் தந்தைக்கு அடித்து விட்டு ஓடி விட்டார் என்றும் பின்னர் வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்ட தனது தந்தை மூன்று நான்கு நாள்களின் பின்னர் இறந்து விட்டார் என்று சாட்சியமளித்திருந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தீர்ப்பு வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா நம்பகரமான சாட்சியத்தின் மூலம் குற்றச்சாட்டை நிரூபிக்க அரச தரப்புச் தவறிவிட்டது எனவும் அரச தரப்பு சாட்சியத்திலுள்ள முரண்பாடுகளைத் தான் கவனத்தில் எடுத்திருப்பதாகவும் தெரிவித்து எதிரிகள் இருவரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ்.ஏ.ஈ ஏகநாதன், சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆஜராகியிருந்தார்.

(த-4)

# நிகழ்வுகள் இன்று

**கவிதை நூல் வெளியீடு**

யாழ். இலக்கிய குவியத்தின் ஏற்பாட்டில் 'நாம்' பேஸ்புக் கவிதைகள் கவிதை நூல் வெளியீட்டு விழா காலை 9.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கவிஞர் வேலணையூர் தாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் தே.தேவாணந் பிரதம விருந் தினராகக் கலந்து கொள்வர். (ம-313)

**பௌர்ணமி கலைவிழா**

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "முழுநிலா முத்து" பௌர்ணமி நாள் கலை விழா மு.ப.10மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்து கொள்வார்.

**யோகக் கலைப் பயிற்சி**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலவச யோகக் கலைப் பயிற்சி நெறியின் அறிமுகவிழா காலை 7மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு கலந்து கொள்வார்.

**பொதுக் கூட்டம்**

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் பி.ப. 5மணிக்கு வளர்மதி சனசமூக நிலைய முன்றிலில் நிலையத்தலைவர் வி.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-288)

***

முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கக் கூட்டம் பி.ப. 3 மணியளவில் பாடசாலையில் அதிபர் த.யோகானந்தராஜா தலைமையில் இடம்பெறவிருக்கிறது. (க-415)

**கலந்துரையாடல்**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்தப்பட்ட பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல் முற்பகல் 11மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்தக்கலந்துரையாடலில் மெய்வல்லுநர், வலைப்பந்து, உதைபந்து, கிரிக்கெட் மற்றும் சகல விளையாட்டுத்துறையிலும் ஈடுபட்ட பழைய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்து நொருக்கப்பட்டது நக்கீரன் அலுவலகம்


அ.தி.மு.க. குண்டர்களின் அடாவடி

சென்னை, ஜன,08

சென்னை ராயப்பேட்டையிலுள்ள நக்கீரன் பத்திரிகை அலுவலகம் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. கற்கள், பொல்லுகளால் தாக்கப்பட்டதுடன் அங்கிருந்த உடைமைகளும் அடித்து நொருக்கி நாசமாக்கப்பட்டுள்ளன.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த குண்டர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா தொடர்பாக அவதூறான செய்தி வெளியாகியதாகத் தெரிவித்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

அதேசமயம் மதுரை, சிவகாசி, ஈரோடு, திருநெல்வேலி, கரூர், நாமக்கல், ராசிபுரம், விருதுநகர் மாவட்டம் சாத்தூர், வால்பாறை உள்ளிட்ட பகுதிகளில் அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் நக்கீரன் பத்திரிகைப் பிரதிகளை தீ வைத்து எரித்து அழித்தனர். பொலிஸார் முன்னிலையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக நக்கீரன் கோபால் கூறினார்.

பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சியினர் ஆகியோர் களத்துக்கு நேரில் வந்து செய்தி சேகரிக்கும்போது அவர்கள் முன்னிலையிலேயே அ.தி.மு.க குண்டர்கள் கற்களை வீசினர் என்று நக்கீரன் செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிஸார் அவர்களைப் பெயருக்குத் தடுத்தபோது, பொலிஸாரைத் தள்ளிவிட்டு அ.தி.மு.க. குண்டர்கள் தாக்குதலைத் தொடர்ந்தனர். நக்கீரன் அலுவலகத்திற்குள் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தவர்களும் தாக்குதலை நேரடியாக எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

இத்தாக்குதலுக்கு தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார். இவ்வாறான தாக்குதல்கள் ஜனநாயக நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல என்று கருணாநிதி கூறியுள்ளார்.(ஒ-10)

## வெடி பொருள்கள் மீட்பு

மன்னார், ஜன. 8

மன்னார் பாலம்பிட்டிக் கிராமத்தில் மறைத்து வைக்கப்பிட்டிருந்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பாலம் பிட்டிக் கிராமத்தில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருள்களை மன்னாருக்குப் பொறுப்பான புலனாய்வுத்துறையினரும், மன்னார் பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் 2.30 மணியளவில் மீட்டுள்ளனர்.

மன்னாருக்குப் பொறுப்பான புலனாய்வுத்துறையினருக்கு முன்னாள் புலி உறுப்பினர்கள் வழங்கிய இரகசியத் தகவலையடுத்து மன்னாருக்கு பொறுப்பான புலனாய்வுத்துறை அதிகாரிகள் மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து மன்னார் பொலிஸாரும், புலனாய்வுத்துறையினரும் குறித்த இடத்துக்குச் சென்று வெடி பொருள்களை மீட்டுள்ளனர்.

இதன் போது 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு 01, 60 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் 14, ரி.என்.ரி.60 மில்லி மீற்றர் குண்டு 1, பியூஸ் இணைப்பு 03, சார்ச்சர் 03 ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடி பொருள்களைச் செயலிழக்கச் செய்வதற்காக இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-601)

## வவுனியாவில் முதலிடம்



வவுனியா, ஜன. 8

அண்மையில் வெளியான க.பொ.த (உயர்தர) பரீட்சையில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் சிவகுமாரன் கௌதமன் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் 3(ஏ) களுடன் ''சுப்பர் மெரிட்'' (அதிவிசேட திறமைச் சித்தி) பெற்று வவுனியா மாவட்டத்தில் முதல் இடம் பெற்றுள்ளார். சமீபத்தில் இவர், அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பௌதிக ஒலிம்பியாட் பரீட்சையில் வென்று, தங்கப் பதக்கத்தை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களிடமிருந்து பெற்றுக் கல்லூரிக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்தவர். 2009 - 2010 ஆம் ஆண்டுகளில் சார்க் நாடுகளிடையே இலங்கையில் நடைபெற்ற இளைஞர் தகவல் தொழில்நுட்பப் போட்டியில் இலங்கை சார்பில் கலந்து கொண்ட ஐவர் அடங்கிய குழுவில் அங்கம் வகித்த ஒரே தமிழ் மாணவன் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலத்தில் தோற்றி ஒன்பது பாடங்களிலும் ''ஏ'' சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றவர். கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வனாகவும் விளங்கிய செல்வன் சிவகுமாரன் கௌதமன், காரைநகர் கோவளத்தைச் சேர்ந்தவரும், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆசிரியருமாகிய தமிழருவி த.சிவகுமாரன், குமாரதேவி தம்பதியரின் மகனும் ஆவார்.

(க-)

## இழந்த கல்வியை மீட்போம்

### துணுக்காய் கல்விப் பணிப்பாளர் சூளுரை

அக்கராயன், ஜன. 8

போர்க்காலத்திலும் நலன்புரி நிலையங்களிலும் மாணவர்கள் இழந்த கல்வியைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான திட்டங்களை வரைந்துள்ளோம். இவ்வாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் வலய மாணவர்களின் கல்வி நிலவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

துணுக்காய் வலயத்தில் தரம் 9 மாணவர்கள் மத்தியில் பகுப்பாய்வு செய்துள்ளோம். இதன் பிரகாரம் இந்த மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மிகக் குறைவான புள்ளிகளைப் பெற்ற நிலையில் உள்ளனர். போருக்குள் சிக்குண்டமை மற்றும் நலன்புரி நிலையங்களில் மாணவர்கள் இருந்தமை ஆகிய காரணங்களால் மாணவர்கள் கல்வியை இழந்துள்ளனர். இந்த மாணவர்கள் இரு ஆண்டுகளுக்குப் பின்பு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் போது குறைந்த புள்ளிகளைப் பெறும் நிலை உருவாகியுள்ளது. எனவே இவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்த வேண்டும்.

> போருக்குள் சிக்குண்டமையால் மாணவர்கள் கல்வியை இழந்துள்ளனர்.

இழந்த கல்வியை மீட்டுக் கொடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். அதற்கான செயற்திட்டமொன்றையும் நடைமுறைப் படுத்தவுள்ளோம்.

2012 ஆம் ஆண்டில் 10 ஆம் ஆண்டிலிருக்கும் மாணவர்கள் 2013 க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் போது இழந்த கல்வியை மீளப்பெறும் வகையில் பரீட்சைக்கு தோற்றும் நிலையை உருவாக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-410)

## ரூபா 5,000

முல்லைத்தீவு, ஜன. 8

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி இதுவரையில் 5 ஆயிரம் ரூபா பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு இந்த உதவு தொகை வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலகத்தால் கிராம அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-500)

## எமக்கும் வேண்டும் 'கோப் சிற்றி' கிளை

முல்லைத்தீவு, ஜன. 8

முத்துஐயன்கட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கோப்சிற்றி' கிளையை ஒட்டுசுட்டானில் மீண்டும் அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் இங்கு அமைக்கப்பட்டிருந்த 'கோப் சிற்றி' விற்பனை நிலையம் போருக்கு முன்னர் சிறந்த முறையில் இயங்கி வந்தது. போரின் போது பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இழக்கப்பட்டன. அத்துடன் இந்த விற்பனை நிலையம் மீண்டும் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

> தற்போது மக்கள் பெருமளவில் மீள்குடியமர்ந்த நிலையில் இதன் தேவை அதிகரித்துள்ளது.

தற்போது மக்கள் பெருமளவில் மீள்குடியமர்ந்த நிலையில் இத்தகைய விற்பனை நிலையங்களின் தேவை உணரப்பட்டுள்ளது. மேலும் முன்னர் இயங்கி வந்த கோப் சிற்றி விற்பனை நிலையத்தில் இந்தப் பகுதி மக்கள் மட்டுமன்றி அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

ஆகவே மக்களின் நன்மை கருதி இந்தக் 'கோப்சிற்றி' விற்பனை நிலையத்தை மீண்டும் அமைக்குமாறு சங்கத்தின் புதிய தலைவரான சி.இராஜேந்திரனிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-500)

## செழிப்பான சோளப் பயிர்

முல்லைத்தீவு, ஜன. 8

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோளச் செய்கை வெற்றியளித்துள்ளது.

பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்து பயிற்சிகள் வழங்கியதுடன் சிறந்த விதைகளும் வழங்கப்பட்டுள்ளமையே இதற்கான முக்கிய காரணமெனக் கூறப்படுகின்றது.

அத்துடன் கடன் உதவி மூலமும் விவசாயிகள் சோளச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

தற்போது அனைத்து இடங்களிலும் சோளப் பயிர்கள் செழிப்புடன் காணப்படுகின்றன.

மேலும் ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் நட்டால் மட்டுமே பயிர் நன்றாக வளருமென்பது தற்போது பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் செய்கை பண்ணப்பட்ட சோளச் செய்கை நல்ல நிலையில் உள்ளதோடு நல்ல வருவாயும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-500)

## பயிர்களை அழிக்கும் யானைகள்

முல்லைத்தீவு, ஜன. 8

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் யானைகள் விவசாயத்தை அழித்து வருகின்றன.

கடந்த பல நாள்களாக இரவு, பகல் என்ற பேதமில்லாது யானைகள் துவரமோட்டைக் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட விவசாயப் பயிர்களை அழித்து வருகின்றன.

வெள்ளம் மற்றும் நோயினால் பயிர்கள் சேதமடைந்த நிலையில் இருக்கும்போது யானைகளும் அழிவுகளை மேற்கொண்டு வருகின்றன.

மேலும் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள், பன்றிகள் என்பனவும் பயிர்களுக்குப் பெரும் சேதம் விளைவித்துள்ளன. தற்போது யானைகளும் இதில் ஈடுபட்டுள்ளன.

தென்பகுதியிலிருந்து இங்கு யானைகளைக் கொண்டு வந்து விட்டமையே இந்த அழிவுகளுக்கு முக்கிய காரணமெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-500)

## புதிய பாடசாலைகள்

அக்கராயன், ஜன. 8

துணுக்காய் கல்வி வலயத்தில் மூன்று புதிய பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

1000 பாடசாலைகள் திட்டத்தில் இணைந்துள்ள முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை, மாங்குளம் மகாவித்தியாலயம், பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளே தனிப் பாடசாலைகளாக இயங்கத் தொடங்கியுள்ளன. மேலும் இந்தப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகள் தனியானதொரு அதிபரின் கீழ் இயங்கி வருகின்றன. நிர்வாகச் செயற்பாடுகளும் வெவ்வேறாகவே அமையும்.

இந்தத் தகவல்களைத் துணுக்காய்க் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் தெரிவித்தார்.

(க-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் தலையெடுக்கிறது டெங்கு

## சுகாதாரத் திணைக்களம் அபாய மணி

**யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் குறிப்பாக அளவெட்டி வடக்குப் பகுதியில் அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம், ஜன.08

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் மீண்டும் பரவத் தொடங்கியுள்ளது. தற்போது பரவுகின்ற டெங்கு நோயினால் அதிகளவான மரணங்கள் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது. இதிலிருந்து பாதுகாத் துக்கொள்வது பொது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே எச்சரிக்கையாக இருக்கு மாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணி மனை அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சுகாதாரத்திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

டெங்கு என்று சந்தேகிக்கக் கூடிய காய்ச்சல் ஏற்பட்டால் உரிய சிகிச்சை பெறுவதுடன் ஒரு வாரகால பூரண ஓய்வும் போதியளவு நீராகாரங்களைப் பருகுவதும் அவசியம். ஓய்வெடுக்காவிடில் திடீரென மரணம் சம்பவிக்கலாம். எக்காரணம் கொண்டும் காய்ச்சலுக்குச் சுயமாக மருந்துகளை எடுக்க வேண்டாம். முக்கியமாக புரூபன், அஸ்பிரின், டைக்குளோ பெனக் சோடியம் போன்ற வலி நிவாரணிகளை முற்றாகத் தவிர்க்கவும். தேவைப்பட்டால் மாத்திரம் பரசிற்ற மோல் வகை மருந்துகளைப் பாவிக்க வேண்டும்.

உங்களுக்கோ அல்லது வீட்டிலுள்ள எவருக்கேனும் காய்ச்சல் அல்லது அசௌகரியம் ஏற்பட்டால் உடனடியாக தகுதியான வைத்தியரிடம் ஆலோசனை பெற வேண்டும் கடுமையான காய்ச்சலின்றியும் டெங்கு நோய் ஏற்படலாம்.

நீங்கள் கொழும்புக்குச் சென்று வந்த பின் அல்லது கொழுலும்பிலிருந்து வருபவர்கள் அயலில் தங்கிச் சென்றபின் காய்ச்சல் ஏற்பட்டால் அது டெங்குவாக இருக்கலாம் அவசியமமற்ற கொழும்புப் பயணங்களைத் தவிர்க்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் குறிப்பாக அளவெட்டி வடக்குப் பகுதியில் அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகும், ஓய்வெடுக்கும் இடங்களை அழித்து விடுங்கள் டெங்கு நோய்த் தடுப்புத்தொடர்பில் உங்கள் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்றுள்ளது.

(த-4)

# வாகனங்களால் நெருக்கடி

தென்மராட்சி, ஜன.8

சாவகச்சேரி நவீனசந்தை முன்பாக நிறுத்தப்படும் வாகனங்களால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

நவீன சந்தைமுன்பாக வீதி அபிவிருத்திச் சபையினரால் வடிகால் அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதியில் உள்ள மதகினையும் புனரமைப்பதற்கு ஏதுவாக ஏ-9 வீதியின் அரைவாசிக்கு பள்ளம் தோண்டியுள்ளனர். இதனால் மிகுதிப் பகுதியை ஒரு வழிப் பாதையாக பயன்படுத்திவருகின்றனர்.

இந்த நிலையில் ஒரு வழியாக பயன்படுத்தப்படும் இந்த வீதியின் ஓரமாக சைக்கிள்களையும் மோட்டார் சைக்கிள்களையும் நிறுத்தி வருகின்றனர். தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்துவதால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல் வோரும் நடந்துசெல்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை அமைக்கப்படும் வெள்ளம் வழிந்தோடும் வடிகால் நிர்மாணப்பணிக்காக வீதியின் ஒரு பக்கம் மணல், கல், சிமெந்து போன்றவை முழுமையாக வீதியை ஆக்கிர மித்துள்ள நிலையிலும் மறுபக்கத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் அந்த வழியே பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

நகர்ப்பகுதியில் பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் காணப்படும் வாகனங்களை வேறு இடங்களில் நிறுத்துவதற்கு பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

(எ-207)

# அகப்பட்டனர் 18 வர்த்தகர்கள்

தென்மராட்சி, ஜன.8

யாழ்.மாவட்டச் செயலக விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் வர்த்தக நிலையங்களில் நடத்திய திடீர் சோதனையின் போது பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய 18 வர்த்தகர்கள் அகப்பட்டனர்.

இந்த 18 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப் படுத்தாமை, அதிக விலைக்கு பொருள்கள் விற்பனை செய்தமை, திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமை போன்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் கடந்த வருட பிற்பகுதியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது அகப்பட்ட 37 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்யப் பட்டு அபராதம் விதிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-207)

# சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்த தினத்தில் நிதியுதவி

வலி வடக்கு ஜன 08

துர்க்காதுரந்தரி கலாநிதி அமரர் தங்கம்மா அப்பாக்குட்டியின் 87 ஆவது பிறந்த நாள் அறக்கொடை நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

விசேட பூஜை வழிபாடுகளுடன் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் தர்மகர்த்தா சபைத் தலைவர் ஆறு.திரு முருகன் தலைமையில் இந்த நிகழ்வுநடைபெற்றது.

ஆலய வடமேற்கு மூலையில் அமைந்துள்ள எண்கோண மண்டபத்தில் ஆத்ம சாந்தி வழிபாடுகள் இடம் பெற்றன. தொடர்ந்து தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள தங்கம்மா அப்பாக்குட்டியின் சிலைக்கு மாலை சூட்டியும், மலர்கள் தூவியும் அஞ்சலிக்கப்பட்டது.



அன்னையின் நினைவாக சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட உடற் கூற்றியல் துறைத் தலைவர் கலாநிதி செல்வி சகுந்தலா அம்பிகைபாகன், சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய சுகாதார சேவைகள் யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், முல்லைத்தீவு துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன குரு முதல்வர் திருஞான சம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள், ஆலய பிரதம குரு அகிலேஸ் வரக்குருக்கள், அமெரிக்காவில் இருந்து வருகை தந்துள்ள ரிஷி தொண்ட நாதசுவாமிகள் ஆகியோர் வழங்கினர்.

வாழ்த்துரைகளை வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறையின் செயலாளர் சி.சத்தியசீலன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் வேல் நம்பி ஆகியோர் நிகழ்த்தினர்.

அன்னையின் ஞாபகார்த்த அறக் கொடையாக யாழ். போதனா வைத்திய சாலையின் என்பு முறிவுப் பிரிவுக்கு ஒரு லட்சம் ரூபா பணமும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கான ஐம்பதாயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த துணுக்காய் கல்வி வலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 100 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதியாக இரண்டு லட்சம் ரூபா துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

சிவத்தமிழ்ச் செல்வி ஞாபகார்த்த விருதுகளை இளைப்பாறிய அதிபர் சிற்பி. சிவசரவணபவான், இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் பொன்னையா செல்லப்பா, புகைப்படக் கலைஞர் எஸ். கதிரவேலு, சைவசமய பௌராணிகர் பண்டிதை திருமதி. சிவபாக்கியம் பாலநாதன் மற்றும் சிற்பக் கலைஞர் ஏ.வி. ஆனந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

(ஙு-86)

# வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தன கட்டில்கள்

சாவகச்சேரி,ஜன.8

சாவகச்சேரிஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரு விடுதிகளுக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்குப் பயன்படுத்தும் கட்டில்கள் வந்து சேர்ந்தன.

3மில்லியன் ரூபா பெறுமதியுடைய 6கட்டில்களை பின்லாந்து சென்சிலுவைச் சங்கத்தினர் கொழும்பு பயோமெட் (BIOMED) நிறுவனத்தின் ஊடாக வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளனர்.

மின்சாரம் பொருத்தப்பட்டுள்ள இந்த கட்டில்கள் பயோமெட் நிறுவன தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் வைத்தியசாலை விடுதியில் பொருத்தப்பட்டு வருகின்றன.

பின்லாந்து சென்சிலுவைச் சங்கத்தினரால் வைத்தியசாலை வளாகத்தில் 135 மில்லியன் ரூபா செலவில் விடுதிகள் கட்டடங்கள் நிர்மாணித்து அவற்றுக்குரிய வைத்திய உபகரணங்களும் தளபாட வசதிகளும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-207)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் நோய் கண்டறிதல் கிளினிக்

தென்மராட்சி,ஜன.8

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான நோய் கண்டறிதல் கிளினிக் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கிளினிக் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மு.ப 10மணி தொடக்கம் 11 மணி வரை வைத்தியசாலையின் 26ஆவது அறையில் நடத்தப்படவுள்ளது.

ஆண், பெண் இருபாலாரும் தமக்கு நோய் உள்ளதா எனக் கண்டறிய இந்தக் கிளினிக்கில் பரிசோதனை மேற்கொள்ள முடியும். எமக்குத் தெரியாமல் உடலில் காணப்படும் பல்வேறு நோய்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நோய் இருக்கும் அறிகுறிகள் காணப்பட்டால் வைத்தியசாலையில் நடத்தப்படும் ஏனைய கிளினிக்குகளில் சிகிச்சை பெற சிபார்சு செய்யப்படும்.

வைத்தியசாலையில் நிலவும் ஆளணி பற்றாக் குறை காரணமாக இந்த கிளினிக் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வாரத்தில் பத்துப் பேருக்கு சிகிச்சை வழங்கப்படுமென வும் ஆளணி பற்றாக்குறை நீக்கப்பட்ட தும் முழுநேரக் கிளினிக்காக மாற்றப்படுமென தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனையில் ஆரம்பிக்கப்பட்டு தென்னிலங்கை வைத்திய சாலைகளில் நடத்தப்பட்டு வரும் இந்த கிளினிக் வடமாகாணத்தில் முதல் முறையாக சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-207)

## குடும்பஸ்தர் காயம்

மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரை வழி மறித்த இனம் தெரியாத கும்பலொன்று பொல்லுகளாலும் கம்பிகளாலும் தாக்கி காயப்படுத்தினர் . இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் இடம் பெற்றது. காயங்களுக்கு இலக்கான செல்வரத்தினம் விஜயரூபன் (வயது-32) என்பவர் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீரென நடத்தப்பட்ட இந்தத்தாக்குதல்திட்ட மிட்டே நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகிக் கப்படுகின்றது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதி [illegible] தெரிவிக்கப்பட்டது(எ -207)

# டெங்கு நுளம்புக்கு ஒத்தாசை; 16 பேருக்கு எதிராக வழக்கு

அளவெட்டி, ஜன.08

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நிர்வாகப் பிரிவுக் குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் கடந்த ஒரு வாரத்தில் 16 பேருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கள் செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஈ.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அளவெட்டி, மல்லாகம், தெல்லிப்பழைப் பகுதிகளில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ள இடங்களை இனங்கண்டு அவர்களுக்கெதிராகவே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

டெங்கு நுளம்பின் பெருக்கத்துக்கு காரணமாக இருந்து தனக்கும் தன் சுற்றாடல் மக்களுக்கு இடையூறு விளை விக்கும் நபர்கள் மீது டெங்கு ஒழிப்பு சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்திய சாலைக்கே அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடனோ தொடர்பு கொண்டு உடனடியாக குருதிப்பரிசோதனை செய்ய வேண்டும்.

குருதிப் பெருக்கு நிலை காணப்பட்டால் காலதாமதமின்றி வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும். மேலும் டெங்கு தொடர்பான கருத்துக்களை விளக்கிக் கூற வருபவர்களுக்கு பொது மக்களாகிய நீங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்கள், பொது நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் என்பன டெங்கு நோய் சம்பந்தமாக மக்களுக்கு விளங்கக் கூடிய வகையில் கருந்தரங்குகளையும் நடத்த வேண் டும் - என்றார்.

(எ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் குழுநிலை போட்டிகள் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஜன.8

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 2012 ஆம் ஆண்டுக்கான குழுநிலைப் போட்டிகளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப்போட்டி 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5மணி வரை வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லேப்போட்டி 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5மணி வரை வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப்போட்டி 22ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5மணிவரை வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப்போட்டி 11ஆம்திகதி புதன்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5மணிவரை வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.


ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட்போட்டி 28ஆம், 29 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5மணி வரை வவுனியா சிறுவர் பூங்கா மைதானம், வவுனியா நகரசபை விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் நடைபெறும்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி 28ஆம்திகதி சனிக்கிழமை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டப்போட்டி எதிர்வரும் 4ஆம், 5ஆம், 7ஆம், திகதிகளில் வவுனியா நகரசபைவிளையாட்டு மைதானம், வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் நடைபெறும்.

(த-23)

# கைதடி இளைஞருக்கு குங்பூவில் கறுப்புப்பட்டி



தமிழ் நாட்டிலுள்ள வேலூர் மாவட்டத்தில் குடியாத்தம் பகுதியில் உள்ள ஈழமக்கள் குடியிருப்பு முகாமில் வசித்து வரும் கைதடி மேற்கைச் சேர்ந்த தனபாலசிங்கம் சகுலன் குங்பூ கலையில் கறுப்புப் பட்டி பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இங்கிருந்து இடம்பெயர்ந்து தனது பெற்றோருடனும் அங்கு வசித்து வரும் இவர் வேலூர் வொங் பெல் ஹங்மொனாச்குங்பூ அக்கடமியில் 2006 ஆம் ஆண்டு இணைந்து தொடர்ந்து ஐந்து வருடங்கள் அங்கு பயின்று கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இந்தக் கறுப்புப் பட்டியைப் பெற்றுள்ளார்.

இவர் அங்கு கற்கும் பாடசாலையில் இடம்பெறும் கல்வி சார்ந்த போட்டிகளிலும் விளையாட்டுத்துறை சார்ந்த போட்டிகளிலும் பல பதக்கங்களை வென்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(த-288)

# வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 8

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற மேசைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற கழகங்களின் விவரம் வெளியாகியுள்ளது.

மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சர்வசக்தி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும், மலர்மகள் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் வென்றன.

பெண்கள் பிரிவில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் கலைமகள் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

(த-23)

# கரப்பந்தாட்ட சங்கம் அங்குரார்ப்பணம்

வலி வடக்கு, ஜன.8

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. புதிய கரப்பந்தாட்டச் சங்கத் தின் நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய் யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் - செ.சதீஸ்குமார், உபதலைவர் - வே.சுந்தரலிங்கம், செயலாளர் - ச.சசிக்குமார், உபசெயலாளர் - செ.செல்வரஜீவன், பொருளாளர் - சி.சந்திரகாந்தன்.

செயற்குழு உறுப்பினர்களாக க.கலைஅமுதன், த.யேசுநாயகம், இ.பஞ்சதீபன்.

(த-86)

# கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

எனவே அங்கத்துவக் கழகங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-288)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.8

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடத்துகிறது.

இதில் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நியூ பைற் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(த-23)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## சிதம்பரப்பிள்ளை மகேசன்



தோற்றம்
01.02.1952

மறைவு
09.12.2011

இவ்வுலகில் சிறப்பாய் வாழ்ந்து
எம் இமைபோல் எம்மிடம் இருந்து
மண்விட்டு அமரராகி சிவன் வீடு கண்டு
நம் வீட்டு தெய்வமாகி எம்மோடு உள்ளீர்கள்

அம்பன்,
குடத்தனை.

(C/7795)

மனைவி, உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பினார் தியேரி



தியேரி

சமீபத்தில் ஆர்சனல் அணி நிர்வாகம் தியேரி ஹென்றிக்கு லண்டன் எமிரேட்ஸ் மைதானத்தில் சிலை அமைத்து கௌரவப்படுத்தியது.

நியூயோர்க் ரெட்புல்ஸ் அணிக்காக விளையாடி வந்த தியேரி ஹென்றி மீண்டும் ஆர்சனல் அணியில் இணைந்தார்.

ஆர்சனல் அணியின் முன்னாள் தலைவர் தியேரி ஹென்றி தற்போது மேஜர் சாக்கர் லீக்கின் நியூயார்க் ரெட்புல்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.2012ஆம் ஆண்டுக்கான மேஜர் சாக்கர் லீக் போட்டி வரும் மார்ச் மாதம் மீண்டும் தொடங்க உள்ளது.

இதற்கிடையே எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி ஆபிரிக்க கிண்ண உதைபந்தாட்டப் போட்டி தொடங்குகிறது. இந்த போட்டியில் பங்கேற்க ஆர்சனல் அணி வீரர்களான சாமக்(மொராக்கோ) ஜெர்வின்ஹோ (ஐவரிகோஸ்ட்) ஆகியோர் தாய்நாடு திரும்பியுள்ளனர். இவர்களில் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 2 மாதங்களுக்கு தியேரி ஹென்றியை ஆர்சனல் ஒப்பந்தம் செய்துள்ளது. ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 8 போட்டிகளில் அவர் ஆர்சனல் அணிக்காக விளையாட உள்ளார். தியேரி ஹென்றியை ஒப்பந்தம் செய்தமை குறித்து ஆர்சனல் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்ததது.

ஆர்சனலுக்காக மீண்டும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை குறித்து தியேரி ஹென்றி கூறுகையில் ''நான் இங்கு ஒரு ஹீரோவாக வரவில்லை. ஜெர்வின்ஹோ,சாமக் ஆகியோரின் வெற்றிடத்தை நிரப்பவே வந்துள்ளேன். மீண்டும் ஒரு முறை ஐரோப்பாவில் விளையாட வேண்டும் என்று நான் நினைத்திருக்கவில்லை.ஆனால் ஆர்சனலின் வேண்டுகோளை என்னால் தவிர்க்க முடியாது.ஏனென்றால் எனது இதயத்தில் நிறைந்த அணி இது. நான் மீண்டும் அமெரிக்கா திரும்ப மாட்டேன் என்று நியூயார்க் ரெட்புல்ஸ் ரசிகர்கள் கருதுகின்றனர். சீசன் முழுக்க விளையாட நான் இங்கு வரவில்லை.எனது முன்னாள் அணிக்கு உதவி புரியவே வந்துள்ளேன். நியூயோர்க் ரெட்புல்சுடன் மேஜர் சாக்கர் லீக்கில் பட்டம் வெல்வதே எனது இலக்கு'' என்று கூறினார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் ஆர்சனல் அணிக்காக விளையாடிய ஹென்றி 2007ஆம் ஆண்டு பார்சிலோனாவில் இணைந்தார். ஆர்சனலுக்காக 369 போட்டிகளில் விளையாடி 226 கோல்களையும் அடித்துள்ளார். பிரான்ஸூக்காக 123 சர்வதேச போட்டிகளில் 51 கோல்களையும் தியேரி ஹென்றி அடித்துள்ளார்.சமீபத்தில் ஆர்சனல் அணி நிர்வாகம் தியேரி ஹென்றிக்கு லண்டன் எமிரேட்ஸ் மைதானத்தில் சிலை அமைத்து கௌரவப்படுத்தியது.ஆர்சனலுக்கும் ஹென்றிக்கும் அப்படி ஒரு பந்தம்.ஹென்றியின் ரத்தத்தில் கலந்தது ஆர்சனல் என்றால் மிகையில்லை.அந்த பந்தமே மீண்டும் அவரை லண்டன் திரும்ப வைத்துள்ளது.

## எம்.எம்.சி. உறுப்பினராகிறார் சங்கா



எம்.எம்.சி. உலகக் கிரிக் கெட் குழுவில் ஓர் உறுப்பினராக செயற்படுவதற்கு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார அழைக்கப்பட்டுள்ளார். இன்றும், நாளையும் ஹேப்ரவுனில் நடைபெறவுள்ள எம்.எம்.சி உலகக் கிரிக்கெட் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்ககார அழைக் கப்பட் டுள்ளார்.

1787 ஆம் ஆண்டு லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட மெரில்போன் கிரிக்கெட் கிளப்பே எம்.எம்.சியாகும். இந்தக் கிளப்பானது இங்கிலாந்தின் வேல்ஸிலும் உள்ள கிரிக்கெட் சபைகளுடன் இணைந்து உலகம் முழுவதிலுமுள்ள கிரிக்கெட் சபைகளை ஆளும் நிறுவனமாகும்.

34 வயதான குமார் சங்க்கார கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் உயர்நிலை துடுப்பாட்டக்காரராக விளங்குகின்றார். இலங்கையின் சார்பில் மைக்கல் திஸ்ஸேராவுக்கு பின்னர் உலகக் கிண்ண கிரிக்கெட் குழுவில் இடம்பெறும் இரண்டாவது உறுப்பினராவார். அத்துடன் வயதில் குறைந்த முதலாவது உறுப்பினர் சங்காதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்பதில் எதுவித தயக்கமும் இல்லை என்று சங்ககார தெரிவித்துள்ளார். (ப)



கேசிலாசின்

## திறமைக்கு மரியாதை

தடுமாறிக் கொண்டிருந்த ஸ்பெயின் அணிக்கு புதுரத்தம் பாய்ச்சி அந்த அணி அடுத்தடுத்து வெற்றிகளை குவிக்கச் செய்ததில் இகெர் கேசிலாசின் பங்கு முக்கியமானது.

ஸ்பெயின் உதைபந்தாட்ட அணித் தலைவர் இகெர் கேசிலாசின் சொந்த ஊரில் அவர் பிறந்து வளர்ந்த வீதிக்கு 'இகெர் கேசிலாஸ் அவென்யூ' என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஸ்பெயின் அணித் தலைவர் இகெர் கேசிலாஸ் மாட்ரிட் அருகேயுள்ள மோஸ்டோலெஸ் என்ற நகரை சேர்ந்தவர்.1981 இல் பிறந்த கேசிலாசின் இளவயது வாழ்க்கை இந்த நகரில் இருந்துதான் தொடங்கியது. உதைபந்தாட் டத்தில் அவர் உச்ச நட்சத்திரமாக இருந்தாலும் அடிக்கடி சொந்த ஊருக்கு வந்து செல்வார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிண்ணத்தையும் 2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தையும் இவர் தலைமையிலான ஸ்பெயின் அணி வென்றது. இதையடுத்து அவரை கௌரவிக்கும் விதத்தில் மோஸ்டோலெஸ் நகரில் கேசிலாஸ் வீடு உள்ள வீதிக்கு 'இகெர் கேசிலாஸ் அவென்யூ' என்ற பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான விழா வில் கலந்து கொண்ட இகெர் கேசிலாஸ் அந்த நகர மேயருக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

## தவறு முழுவதும் எங்கள் மீதே



டோனி

முதல் இன்னிங்ஸில் தமது துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக் கத் தவறியமை ஆஸ்திரேலியாவுடனான இரண்டா வது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா தோல்விய டையக் காரணம் என்று அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

அத்துடன் மைக்கல் கிளார்க்கின் துடுப்பாட்டத்தை கட்டுப்படுத்த தவறியமை மற்றுமொரு காரணம் என்று டோனி சுட்டிக்காட்டியுள்ளார். வெளிநாட்டு மைதானங்களில் இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் வெற்றிபெற கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவருகின்ற போதிலும், அண்மைக்காலமாக இந்திய அணியால் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

சிட்னியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் ஒரு இன்னிங்ஸாலும் 68 ஓட்டங்களாலும் இந்தியா தோல்வியடைந்திருந்தது (15)

## ஐ.பி.எல். அட்டவணை அறிவிப்பு

ஐந்தாவது ஐ.பி. எல் 'ரி-20' கிரிக்கெட் தொடர், சென் னையில் எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி தொடங்குகிறது. முதல் ஆட்டத்தி சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன. 54 நாட்களில் மொத்தம் 76 ஆட்டங்கள் நடக்க உள்ளன.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) சார்பில், ஆண்டுதோறும் 'ரி-20' கிரிக்கெட் தொடர் நடத்தப்படும். இந்த ஆண்டுக்கான ஐந்தாவது ஐ.பி.எல். தொடர், எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தொடங்குகிறது.

இந்தத் தொடருக்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை(பி.சி.சி.ஐ) மும்பையில் நேற்றுமுன்தினம் அறிவித்தது. எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி சென்னையில் நடக்கும் முதல் ஆட்டத்தில், நடப்பு சம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடுகின்றன.

கடந்த தொடரில் அறிமுகமான கொச்சி டஸ்கர்ஸ் கேரளா அணி, சமீபத்தில் ஐ.பி.எல் தொடரில் இருந்து நீக்கப்பட்டது. இதனால் இந்த முறை சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்த்தா நைட்ரைடர்ஸ் உள்ளிட்ட ஒன்பது அணிகள் பங்கேற்கின்றன. மொத்தம் 54 நாட்கள் நடக்கும் இந்தத் தொடரில், 72 லீக் ஆட்டங்கள், மூன்று 'பிளே-ஓப்' (இறுதிக்கான தகுதிச் சுற்று), இறுதியாட்டம் உட்பட மொத்தம் 76 ஆட்டங்கள் நடக்கின்றன. இந்த ஆட்டங்கள் நாட்டின் முக்கிய நகரங்களில் உள்ள 12 மைதானங்களில் நடக்கின்றன. பெங்களூரில் இரண்டு 'பிளே-ஓப்' ஆட்டங்களும், சென்னையில் ஒரு 'பிளே-ஓப்' மற்றும் இறுதி (மே 27) நடக்கிறது. (15)

## சாதனையல்ல வெற்றியே முக்கியம்



கிளார்க்

தனிப்பட்ட சாதனைகளைவிட அணியின் வெற்றியே தமக்கு அவசியம் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் 329 ஓட்டங்களை குவித்திருந்தபோது [illegible] மைக்கல் கிளார்க்கின் இந்த தீர்மானம் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி யது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இன்னிங்ஸ் ஒன்றில் அதிகபட்சமாக சேர். பிரட்மன் 334 ஓட்டங்களைப் பெற்றதுடன் சில வருடங்கள் கழித்து மார்க் டெய்லர் 334 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்று பிரட்மனை விஞ்சக்கூடாது எனக் கருதி தனது [illegible]தை இடைநிறுத்திக் கொண்டிருந்தார்.

இது போன்றதொரு எண்ணத்திலா கிளார்க்கும் ஆட்டத்தை இடையில் நிறுத்தியிருப்பார் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருதினர். எனினும் அந்த சந்தர்ப்பத்தில் தமக்கு பிரட்மனோ அல்லது டெய்லரோ நினைவுக்கு வரவில்லை எனவும், அணியின் வெற்றியை கருத்திற்கொண்டே 329 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத் திக் கொண்டதாகவும் கிளார்க் தெரிவித்துள்ளார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.8

தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாண மேற்தரக் கிளையில் சிறுவர் சேமிப்பு கணக்கினை நடைமுறைப்படுத்தி வரும் மாணவர்களில் 2011 இல் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் இதுவரை பதிவு மேற்கொள்ளாத மாணவர்கள் தமது விவரங்களை முன் வங்கியில் பதியுமாறு வங்கியின் மேந்தரக் கிளை முகாமையாளர் தெரிவித்தள்ளார்.

(ம)


## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக பூச்சு வேலைகளுக்கு சிறந்தெனும் நாமத்தைப் பெற்ற மண்கும்பான் மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப் பாணத்தில் .

4 - ரக்டர் ரூபா 24000

அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு

(ஒரு கல் -38 ரூபா)

தொடர்பு: கண்ணா

0776766499, 0771106371

(12630)

## தெல்லிப்பழை மேற்கு வித்தகபுரம் பொற்கலம் தம்பை ஞானவைரவர் ஆலய ஆண்டுப் பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி ஆலயத்தின் ஆண்டுப் பொதுச் சபைக் கூட்டம் 22/01/2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகும். அன்றைய தினம் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட இருப்பதால் மாதப்பூசை, அலங்கார உற்சவம், விசேட உற்சவம் ஆகியவற்றின் உபயகாரர்கள் மற்றும் அங்கத்தவர்கள், அடியார்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர், பரிபாலனசபை.
செயலாளர். (12783) (6,7,10)

## பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 02 ★ 04 ★ 1937

உதிர்வு 24 ★ 12 ★ 1996



அமரர் இராசதுரை இராசமணி (மணி அக்கா)

திதி: பௌர்ணமி (08.01.2012)

இடம் நாம் பெயர்ந்திட
இல்லமும் அழிந்திட
எமை அழவிட்டுப் போனீர்கள்
உறவுகள் மறப்பினும்
உங்கள் நினைவுகள்
பிறவிகள் தோறும் எமைத் தொடரும்

"ஆனந்த வாசா"
15/2, ஒடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(12760) (2-6-7)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 ★ 02 ★ 1983

மறைவு 08 ★ 01 ★ 2010



## நடராசா சந்திரமோகன்

(முகமாலையைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியைத் தற்காலிக முகவரியாகவும் செட்டிக்குளம் ஆனந்தகுமாரசாமி முகாமில் தனது வாழ்வை முடித்துக்கொண்டார்)

வருடகாலம் என்னை வாழ வைத்த மகனே
உனது பிரிவைத் தாழாது தினம் தினம்
தவிக்கின்றது எனது நெஞ்சம்
எங்கு சென்று நான் உன்னைத் தேடுவேன்
என் மனம் உன் பிரிவை என்றுமே தாங்காது

என்னை வேதனையில் ஆழ்த்தி விட்டு
எங்கு நீ சென்றாய்
இன்று நான் உன் பிரிவை எண்ணி
"பரிதவித்து நிற்கின்றேனே"
உன் பிரிவால் துயர் உற்றிருக்கும் உனது அப்பா

அல்வாய், பருத்தித்துறை. - செ.நடராசா.

(12349)(2-6-7)

## விற்பனைக்கு

முத்து மணவறை, பிளாஸ்ரிக் பூ மணவறை விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779789467, 0213737968

## காணி விற்பனை

கோப்பாய் வடக்கு, பருத்தித்துறை வீதியில் AGA OF ஃபிக்கும் பூதர் மடத்திற்கும் இடையில் 1½ - 2 பரப்பு வரை காணி விற்பனைக்குண்டு. மாலை 6 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும் .

தொடர்பு: 0779751641

## வாடகைக்கு

யாழ். நகருக்கு அருகில் சகல வசதியுடன் கூடிய வீடு மற்றும் கடை வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்குகந்தது.

T.P. 077 541 3783

## காணி விற்பனை

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி, முதலாம் ஒழுங்கையில் கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி (ஏ-9 வீதிக்கு அருகில்) விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு : 077 6034626

## காணி தேவை

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குள் இரண்டு பரப்புக் காணி தேவை. பருத்தித்துறை நகரத்திற்கு அருகில் 2Km தூரத்திற்குள் விரும்பத்தக்கது.

உடன் தொடர்பு கொள்ளவும்.

தொ. இல : 077 3024293

## முதியோர் இல்லம்

"யாழில் முதியோர் இல்லம்" திருநெல்வேலி Centae nursing home உடன் இணைந்து முதியோர், நோயாளர் யாழ். நகரிலும் பராமரிக்கப் படு கின்றனர். கிளைகள் வெள்ளவத்தையிலும் உண்டு

தொடர்பு: 071 8234691, 075 2555689,

## வாகனம் விற்பனை

நல்ல நிலையில் உள்ள Toyota Crew Cab (Toyoace 1996) G XXXX விற்பனைக்குண்டு.

கொழும்பு - தொடர்பு: 077 7629337
077 3474610

(12469) (45-6-7)

## அறை வாடகைக்கு

பல்கலைக்கழக மாணவிகள், வேலைபார்க்கும் பெண்களுக்கும் சமையல் அறை வசதியுடன் அறைகள் வாடகைக்குள்ளது.

தொடர்பு: 072 3116671 (12533) (45-7-6)

## காணி விற்பனை

கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கையில் 6 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 7489043

E.Mail - Romseyclose @ Hotmail. Com.

(சி/7405) (45-7-6)

## வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் 72/9, பணிக்கர் ஒழுங்கையில் 4 அறைகள் உள்ள சகல வசதிகளுடைய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், காரியாலயங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 021 222 3083

## கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சி நியாயமான விலையில் விற்கப்படும். காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர், இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

## காணி விற்பனை

முல்லைத்தீவு, அளம்பிலில் உள்ள உடுப்புக் குளம் 5 ஆம் கட்டைப் பகுதியில் முல்லைத் தீவு புல்மோட்டை திருகோணமலை பிரதான காப் பெற் வீதியில் 10 ஏக்கர் தென்னந் தோட்டக் காணி உறுதிக்காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 0774912596

## விற்பனைக்கு/ வாடகைக்கு

NPVS XXXX தொடர்பு இலக்கமுடைய தனிப்பாவனையில் உள்ள CB UNICORN HONDA மோட்டார் சைக்கிள் (யாழ்ப்பாணத்தில்) விற்பனைக்கும், கிளிநொச்சி வயலெஸ் பிரதான வீதி உதயநகர் மேற்கில் சகல வசதிகளு டன் கூடிய வீடு, அமைதியான சூழலில் வாட கைக்கும் உள்ளது. தொடர்பு: 0773512940

## உடனடியாகத் தேவை

சங்கானையில் உள்ள கணினி பிரிண்டேர்ஸ் நிறுவனத்திற்கு கணினி அறிவு (ரைப்பிங்) தெரிந்த பெண் ஊழியர் ஒருவர்

[illegible]

[illegible] 077 36[illegible]

021 2250082

## மன்னார் கல்வி நிலையம்

## இல. 86, கொன்வென்ற் றோட், மன்னார்

A/L கலைத்துறை

| | |
|---|---|
| தமிழ் - B. பத்மநாதன் | புவியில் - V. மயூரன் |
| அரசியல் - M.R.பிறின்ஸ் டயஸ் | வரலாறு - S.லதீஸ் |
| இந்து நாகரிகம் - H.றோகன் ராஜ் | நாடகமும் அரங்கியலும் - S.சந்திரன் |
| கிறிஸ்தவ நாகரிகம் S.தேவா | அளவையியல் - M.சிவா |

மன்னார் மாவட்டத்தில் மாணவர்களின் ஒரே தெரிவு எமது கல்வி நிலையம் கடந்த பதினைத்து வருடகாலமாக மன்னார் மாவட்டத்திலிருந்து பெருமளவு மாணவர்களை பல்கலைக்கழம் அனுப்பி வருகின்றது. தற்போது 2012, 2013 பிரிவுகளுக்கு வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

கலைப்பிரிவிற்கு

Day Class 09/01.2012 ஆரம்பமாகின்றது

தொடர்புகளுக்கு: 023 222 3260

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அருணாசலம் வேலுப்பிள்ளை

அவர்கள் 09.12.2011 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தகவல்:
பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழகம்.

(சி/2203)(2-6)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

Jan.2012 To June2012

22

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2012

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
சின்னையா
வல்லிபுரம்

தோற்றம்
21.04.1922

மறைவு
09.12.2011

கடந்த 09.12.2011 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் சின்னையா வல்லிபுரம் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க.நாகராசா,
உசன், மிருசுவில் (சி/7713)(2-6-7) - குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை பத்மநாதன்

*(முன்னாள் இயந்திர இயக்குநர்-உதயன் பணிமனை)*

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை பத்மநாதன் 05-01-2012 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பவளம் தம்பதியரின் மூத்த மகனும், சபாபதிபிள்ளை தம்பதியரின் மருமகனும், மகிழம்மா (லீலா)வின் அன்புக்கணவரும், வசந்தி (கனடா), ராஜன் (ஜேர்மனி), ரஞ்சன் (கனடா), சிறீ (கனடா), பாமா (ஜேர்மனி), ரமேஸ் (ஜேர்மனி) ஆகியோரது அன்புத் தந்தையும், காலம்சென்ற சந்திரன் (கனடா), சாந்தி (ஜேர்மனி), மதி (கனடா), அனித்தா (கனடா), செழியன் (ஜேர்மனி), றிஷா (ஜேர்மனி) ஆகியோரது அன்பு மாமனும், பத்மலிங்கம் (கிளி), நற்குணநாதன் (குவைத்), கணேசலிங்கம் (இத்தாலி) ஆகியோரது சகோதரனும், காலம்சென்றவர்களான இந்திரா, கிளி மற்றும் றஞ்சி (இத்தாலி) ஆகியோரது மைத்துனரும் கௌரி (கனடா), கஜன் (இத்தாலி), வாசுகி (கோண்டா வில்), காலம்சென்ற கௌதமி மற்றும் துஸ்யந்தன், அனுஷா, காந்தன், கௌசல்யா, அகலியா, அகிலன், அரவிந்தன் ஆகியோரது பெரியதந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 10-01-2012 செவ்வாய் கிழமை மு.ப. 10.00 மணிக்கு கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : லீலா (மனைவி),**
**பத்மலிங்கம்-கிளி,**
**சகோதரன் உரும்பிராய்.**

**தொ.பே.இல: 0014162911674**
**சிவன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

(12620) (6,7,10)

## விற்பனைக்குண்டு

$A^3$, $A^4$, OFF-Set Printing மெசின்கள் (DEVI DSON, HAMADA) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 344, கோயில் வீதி, நல்லூர். 077 923

(12782) (45-7-8)

## வீடு விற்பனைக்கு உண்டு

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு, வேம்பன் வீதியில் (ஒஸ்கா லேன்-50m தூரம்) கிணற்றுடன் வீடு சகல வசதிகளுடன் 2 பரப்பு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0783016666**

(12787)

## தேவை

I. ஆண் தாதிய உத்தியோகத்தர் அல்லது பயிலுநர்
II. சாதாரண தொழிலாளி
III. சிறு பிள்ளைகளைப் பராமரிக்கப் பெண்

அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
நேரில் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்

**வைத்திய பணிப்பாளர்**
**சென்றல் நேஸிங் ஹோம்,**
**350, பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

(சு/7779)

## வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கட்டிடம் தேவை

25 வருடங்களுக்கு மேலாக வங்கித்துறையில் ஈடுபட்டு வரும் நாம் எமது கிளை வலையமைப்பை விஸ்தரிப்பதற்காக கீழ் காட்டப்பட்டுள்ள இடங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் தேவை.

- யாழ்ப்பாணம்
- சுன்னாகம்
- மாங்குளம்
- கோக்கட்டிச்சோலை
- திருகோணமலை
- முத்தூர்
- கிண்ணியா
- வாகரை
- நிலாவெளி

**நிபந்தனைகள்**

1500-2000 சதுர அடியை கொண்ட, 02-04 வாகனங்களை நிறுத்தக்கூடிய தரிப்பிட வசதியுடன் இருத்தல்.

2012/01/13 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ் காட்டப்பட்டுள்ள முகவரிக்கு விபரங்களை அனுப்பி வைக்கவும்.(உரிமையாளர்கள் மட்டும்)

வி.இ. 4211
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்

## சிவபாதசுந்தரம் இராசமணி



கப்பல் வளவு, கே.கே.எஸ் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் இராசமணி (5.01.2012) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.இராமலிங்கம் சுந்தராம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருளானந்தமூர்த்தி, தங்கம்மா, மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனி யும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சாரதாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், இராமலிங்கத்தின் (J.P) சிறியதாயும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் சாமிநாதர் (தலைவர்-கனடாவாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியம்), துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியும் ஜெசிந்தா (கனடா), கிரிசாந்தி ஆகியோரின் அப்பம்மாவும் முகுந்தன் (கனடா), கஜதேவி (கனடா), மணிமாறன் (கனடா), சிவசுந்தர் (கனடா), பாலநாதன் (கனடா), றஜீவன் (கனடா), ஜெனகன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09-01-2012) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கப்பல் வளவு**
**கே.கே.எஸ். வீதி,**
**சுன்னாகம்.**


**தகவல் : மா.இராமலிங்கம்**
(பெறாமகன்,
ஒய்வுநிலை கிராம அலுவலரும்
சமாதான நீதிவானும்)
பா.கிரிசாந்தி (பேரப்பிள்ளை)

**தொ.பே: 0019058289307 (கனடா)**

(12635) (6,7,10)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் நடராஜா (பூத்திரை)



யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடராஜா (03.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசம்மாவின் அன்புக் கணவரும் மற்றும் சின்னராஜா, சின்னக்கிளி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகம்மா,தனபாலசிங்கம், குணபாலசிங்கம் (லண்டன்), சுவேந்திரா (ஜேர்மனி), தங்கேஸ்வரி (வவா-லண்டன்), சுவந்தி (ஜேர்மனி), தயா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினி தேவி, ஜெனிற்றா (லண்டன்), துரைசிங்கம் (ஜேர்மனி), சிவரஞ்சிதம் (லண்டன்), தனபாலசிங்கம் (பிரான்ஸ்), ஜெயபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் கஜித் (லண்டன்), கஜன், கறீஸ், காமீன்ஸ், கொட்வின் (லண்டன்), மெர்லீன் (லண்டன்), துயின் (ஜேர்மனி), றஜீத் (ஜேர்மனி), துஜிதா (ஜேர்மனி), றஜிதா (ஜேர்மனி), பொஸ் (ஜேர்மனி), அகஸ்னா (லண்டன்), நிறோஜித் (லண்டன்), மிசேல் (லண்டன்), பர்னபா (ஜேர்மனி), தேபோரா (ஜேர்மனி), யோனா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் செமேயாவின் (லண்டன்) பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (09.01.2012) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்று பகல் ஒரு மணிக்கு அன்னாரின் நல்லடக்க ஆராதனை 41/16, செம்மணி வீதி, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள மகனின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**41/16, செம்மணி வீதி,**
**நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

(12596)(2-6-7)

**தனபாலசிங்கம் (மகன்)**

DAMRO

# TECHNICIANS

## JAFFNA , TRINCOMALEE

With recent expansions, we seek to recruit suitable males below 30 years of age to be appointed as Technicians.

**APPLICANTS SHOULD :**

- be permanent residents within 25km from the above areas.
- have G.C.E. O/L qualification.
- have completed a technical certificate course from a recognized technical institute.
- be able to speak Tamil Language.

Experience in the field will be an advantage.

**Total earnings will not be less than Rs. 20,000/= p.m.**

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non - related referees to reach us within ten days of this advertisement.

The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road, Nittambuwa.
E-mail: hrm@damro.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## பஞ்சலிங்கம் செல்வராஜா

(முன்னாள் சாரதி, சாலைப் பரிசோதகர் இ.போ.ச)

திதி: மார்கழி பூரணை (08.01.2012)

தோற்றம் 13.06.1946

மறைவு : 20.12.2010

எங்கள் அன்பான அப்பாவே
எமைப் பிரிந்து ஓர் ஆண்டு கடந்தாலும்
எம் நெஞ்சினில் நீங்கவில்லை
உம் நினைவுகள்
எப்போதும் ஓய்வு விடாது
எமக்காக உழைத்த உன்னதமான காலங்கள்
பூமியிலே நீங்கள் வாழ்ந்த காலங்கள்
இனிமையாக எம்மை அரவணைத்து
அறிவுரை கூறிய காலங்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மறக்க முடியாது அப்பா.

உங்கள் நினைவுகளுடன்
உங்களது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.
மில் லேன்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(12775) (2-6-7)

## மாடி வீடு வாடகைக்கு

நிறுவனங்கள், அலுவலகங்களுக்கு, உகந்த 6 அறைகள், 3 விறாந்தைகள், இணைந்த குளியல் அறை, முற்றிலும் குளிரூட்டப்பட்ட 5 வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய மாடி வீடு (யா/பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 1149527

(12815) (45-7-6)

## தேவை

முன்னணி வங்கியொன்றுடன் தொடர்புடைய நிறுவனத்திற்கு வியாபார அபிவிருத்தி அதிகாரிகள் தேவை. நிரந்தர தொழில் குத்தகை/ காப்புறுதியில் அனுபவமுள்ள 35 வயதிற்கு கீழ்பட்டவர்கள் (கொழும்பு) தேவை.

தொலைபேசி: 011 4422188-0727 771244
072 7771288

Email - Careers- dupal @ Sltnet.lk.

(சி/7408 (45-7-6)

## VACANCY FOR A MARKETING EXECUTIVE

VELOCITY HOLDINGS (PVT) LTD.

We are an importer and distributor of all verities of printing paper & board based in Colombo looking for a competent

**MARKETING EXECUTIVE**

to be based in Jaffna to look after our business in Northern part of Sri Lanka. He should study the current market condition for Paper & Board for printing purposes and develop the market in Northern part to secure orders on a regular basis.

Prerequisite of the candidate are as follows:

- Minimum of G.C.E [A/L] pass
- Age should be less than 35 years
- Fluent in English
- Computer literate
- Able to work independently.
- Minimum of 1 year experience in sales
- Holding a valid Motor Bicycle riding license

An attractive salary will be offered to right candidates, & resumes can be mailed to; velocity@sltnet.lk with two non related referees within 7 days of this advertisement.

## சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலைகளின் அனைத்து வளாகங்களிலும் January 2012 ற்கான புதிய அனுமதிகள்.

ஆகக்குறைந்த அனுமதிக்கட்டணம் (Admission Fees) முதல் வருடத்திற்கு மட்டுமே!

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்

* இதுவரை BBSஇன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறார்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதிசிறந்த பாடசாலைகளில் அனுமதி பெற்றிருப்பதுடன் 5 ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் அதிகளவு புள்ளிகளைப்பெற்றுச் சித்தியடைந்துள்ளார்கள்.
* உங்கள் வசதி கருதி யாழ்குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான பாடசாலை

### Dr.Maria Montessori & Canadian Early Learning Method
### ஆங்கில மொழிமூல பாடசாலை தமிழுடன்.

### BBS இன் சர்வதேச பாலர் பாடசாலைகள்

**பாலர் பிரிவுகள்**

* **Play Group** (2+சிறார்களுக்கு)
  - Sensorial Activities
  - விளையாட்டுக்களுடன் கூடிய அதிநவீனகற்கை நெறிகள்
  - Song, Poems, Drama & Dialogue
* **Montessori** (3+சிறார்களுக்கு)
  - மொழி அறிமுகம் - ஆங்கிலம் (Speech Skills)
  - எழுத்து அறிமுகம் - தமிழ் (Writing Skills)
  - எண்பயிற்சிகள் (Arithmetical Operations)
  - Sensorial Activities
  - Song, Poems, Drama & Dialogue
* **Pre-School** (4+சிறார்களுக்கு)
  - மொழி அறிமுகம் - ஆங்கிலம் (Speech Skills)
  - எழுத்து அறிமுகம் - தமிழ் (Writing Skills)
  - எண்பயிற்சிகள் (Arithmetical Operations)
  - Sensorial Activities
  - Song, Poems, Drama & Dialogue

**பாலர் பாடவிதானம்**

பாடசாலை ஆரம்பம் காலை - 7.30
பாடசாலை முடிவு மதியம் - 12.30

வாரத்தின் 25 மணித்தியாலயங்களுக்கான கல்விச்செயற்பாடுகள்

| | |
|---|---|
| Language Skills - English | - 5 hrs |
| Language Skills - Tamil | - 4 hrs |
| - Maths | - 4 hrs |
| Sensorial Activities | - 2 hrs |
| Songs, Poem, Drama, Dialogue | - 2 hrs |
| Art and Craft | - 2 hrs |
| Play Activities | - 3 hrs |
| Baratha Natyam | - 1.5 hrs |
| Computing | - 1.5 hrs |

எம் அனைத்து சிறார்களும் பங்குபெறும் கல்விசார் நிகழ்வுகள்

- English Day & Concert
- Sports Day
- Bharatham Festival
- Art & Craft Exhibition
- Muthamilzh Vizhla
- Pre-School Graduation & Carols Ceremony

| | | | |
|---|---|---|---|
| நல்லூர் | 140, கோவில் வீதி, நல்லூர் | சங்கானை | நிகர வைரவர் கோவிலடி AGA Office அருகாமை |
| கோப்பாய் | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி | சாவகச்சேரி | சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை அருகாமை |
| நீர்வேலி | 1ம் கட்டை, இராசவீதி நீர்வேலி | மானிப்பாய் 1 | 252, ஆலடிசந்தி, யாழ்வீதி, மானிப்பாய் |
| அச்சுவேலி | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை | மானிப்பாய் 2 | சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாய் |
| புலோலி | ஸ்ரீ பத்மநாதன் இல்லம் மந்திகை | சுண்ணாகம் | Lakshmi (புதிய நீதிமன்றம் அருகாமை) KKS வீதி, மல்லாகம் |

| விசேட ஆங்கில பாடநெறிகள் | | காலம் |
|---|---|---|
| IELTS BRITISH COUNCIL | STUDENT VISA வில் வெளிநாடு செல்வதற்கு ஒரே ஒரு பாடநெறி அங்கிகரிக்கப்பட்ட பரீட்சைப் பதிவு நிலையம் | 3 மாதம் |
| KET PET | ஐரோப்பிய நாடுகளுக்கு குடியமர அல்லது குடும்பத்துடன் இணைவதற்கு அல்லது Work permit இற்குமான அங்கிகரிக்கப்பட்ட பாட நெறி | 3 மாதம் |
| DIPLOMA IN ENGLISH | அடிப்படை அறிவிற்கும் DIPLOMA வரை ஆங்கிலத்தைப் புகட்டும் அங்கிகரிக்கப்பட்ட பாட நெறி | 3 மாதம் |
| Pre-Foundation Level 1,2,3,4 | சிறுவர்களுக்கான அங்கிகரிக்கப்பட்ட விசேட பாட நெறிகள் | 1 வருடம் |

10 வருடத்தில் BBS

# BRITISH BUSINESS SCHOOL


140, கோவில் வீதி, நல்லூர். Contact : 021 2225796, 077 3627055, 077 6646357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






காரைநகர் காரை மத்தி பிரிவில் நீண்ட காலம் கிராமசேவையாளராகக் கடமையாற்றிய கிராம சேவையாளர் இ.திருப்புகழூர் சிங்கம் காரை மத்தி மேம்பாட்டுக் கழக பொதுக்கூட்டத்தில் அவரின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். காரை மத்தி மேம்பாட்டுக்கழக பிரதிநிதி கிராம சேவையாளர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (ம-250)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரைப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. மூன்றாம் நாள் திருவிழாவில் பக்தர்கள் புடைசூழ சுவாமி திருவீதி உலா வருகின்றார்.



கொழும்பில்நடைபெற்ற மாவட்ட புள்ளிவிவரவிறத் தலைவர்களுக்கான கூட்டத்தின்போது தொகை மதிப்பு அத்தியட்சகரும், தொலைமதிப்பு புள்ளிவிவரவியல் திணைக்களத்தலைவருமான திருமதி ஈ.ஆ.க.கு. வித்தியாரட்ணவின் அர்ப்பணிப்புள்ள சேவையைப் பாராட்டி மன்னார் மாவட்ட புள்ளிவிவரவியலாளர் மனுவல் வித்தியானந்தநேசன் நினைவுக்கேடயம் வழங்குன்றார்.





யாழ்.வண்வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய இணையத்தள ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் சிவஸ்ரீ.சி.கிருபாகரக் குருக்கள் மங்களவிளக்கேற்றகிறார்.



மாணவர்களின் உடல், உளநலன்கருதி தும்பளை யோகசாந்தி நிலையத்தினர் குடத்தனை கரையூர்அமெரிக்க மிசன் தமிழ்க்கலன் பாடசாலையில் நடத்திய யோகாசனக் கண்காட்சியில் எஸ்.நேசன் யோகாசன பயிற்சியை செய்து காண்பிக்கின்றார். யோகாசன ஆசிரியர் தே.தேவராஜேந்திரன் மாணவன் ஒருவருக்க கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்ககின்றார். (236)



நவாலி கிழக்கு ஜே135 கிராம சேவையாளர் பிரிவின் கிராமிய சிவில் பாதுகாப்பு குழுவினருக்க மானிப்பாய் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி பி.சந்திரபாலவால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. (100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கற்பவைகற்க, கற்பவை கசடறக் கற்க"

**YAALH ENGLISH ACADEMY**

திறுவுநர்+ ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

விவரங்களுக்கு : 0773212711

யாழ்.நகரில் : வகுப்பிட அனுசரணை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி: யாழ். நகர்

**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான No- 1 புறோயிலர் கோழிக் குஞ்சுகள் (13.01.2012) அன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

'சிற்றி பாம் ரேடேர்ஸ்''

ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.

T.P.No. 021 222 1158

(12751) (7-9-45)


## திருவாதிரை நிகழ்வு

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருவாதிரை தினத்தை முன்னிட்டு விசேட திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (ம-236)

## திருவெம்பாவை பூசைகள்

யாழ்ப்பாணம்,ஜன.8

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேரப் பிள்ளையார் கோயிலின் திருவெம்பாவை இறுதி நாள் பூசை இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகின்றது.

காலை5மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

இதேவேளை, மதியம் 12 மணிக்கு ஆலயத்தில் அன்னதானம் இடம்பெறும்

## முற்றோதல்

கைதடி வடக்கு கயற்றவிட்டி கந்த சுவாமி ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-288)


**அறிவிப்பு**

இல. 46, கனகசபை ஒழுங்கை, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கையில் இயங்கி வந்த

**இந்தியன் பியூட்டி பார்லர்**

தற்போது மயமாக புதுப்பொலிவுடன் மஞ்சவனப்பதி கோயில் வாசல், கொக்குவில் என்னும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 077 0540935

**சாவகச்சேரியில்**

20% தள்ளுபடியுடன்

**மாபெரும் மலிவு விற்பனை**

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க தைப்பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள் சிறுவர்களுக்கான ஆடைகள்

**மரியம்'ஸ்**

பெண்களுக்கான பெருமை மிகுந்த ஆடையகம்

இடம் : "கலா, காமெண்ட்"
16 A, கண்டி வீதி, சாவகச்சேரி (கொமஸியல் வங்கி அருகில்)

திகதி : 03.01.2012 தொடக்கம் 14.01.2012 வரை

நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால்
800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free

தொடர்புகளுக்கு: 0777140844,0718034848



**மலேசியா**

தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு





மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516

**GOODLINE MANPOWER SERVICES**

38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.

Tel : 011 3091521 Hotline : 077 3179592





கலாபூஷணம் பண்டிதை

**திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை**

அவர்களின்

கௌரவிப்பு விழாவும் நாட்டியநாடகத் தொகுப்பு நூல் வெளியீடும்

இடம் : இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கல்யாண மண்டபம்
காலம் : இன்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 02.30 மணி
தலைவர் : பேராசிரியர் க. தேவராஜா போசகர் தி.நெ.த.ம.க, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ்.பல்கலை.
வரவேற்புரை : க.ஜனார்த்தனன் - தலைவர், இணுவில் பொது நூலகம் ச.ச.நி
ஆசியுரை : சோ.பிரசன்னசர்மா
விரிவுரையாளர், சமஸ்கிருத துறை கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்.
சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள் பிரதமகுரு, இணுவில் கந்தசுவாமி கோயில்
வாழ்த்துரைகள் :
நா.பொன்னுத்துரை - ஓய்வு பெற்ற ஆசிரியர்
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் - உதவிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி, வலிகாமம் கல்வி வலயம்.
ஈ.குமரன் - சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை. யாழ்.பல்கலை.
திருமதி வேணுகா சண்முகரட்ணம் அதிபர், யா/இராமநாதன் கல்லூரி
எம்.ஜி. காண்டீபன் - கணக்காளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
சு.சண்முககுலகுமாரன் - அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி
எஸ்.சதானந்தம்-அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி
இ.கிருஷ்ணகுமார் - கலாசார உத்தியோகத்தர், வலி.தெற்கு பிரதேச செயலகம்.

**நாட்டிய நாடகத்தொகுப்பு நூல் வெளியீடு**

மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் பரிசில்களைப்பெற்ற நாட்டிய நாடகங்களின் தொகுப்பு.

வெளியீட்டுரை - இரா.அருட்செல்வம் அதிபர், A.T.C கல்வி நிலையம்
நூல் வெளியீடு - வெளியிட்டு வைப்பவர் பேராசிரியர் க.தேவராஜா போசகர் திருநெறிய தமிழ் மறைக்கழகம்
முதல் பிரதி பெறுபவர்கள் - த.பராபரம், த.சொக்கலிங்கம்
நூல் ஆய்வுரை - கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்
கலை நிகழ்ச்சிகள் : 1. தில்லைத்தரிசனம் காண்பேனோ... அ.நெ.மாணவர்கள்
2. "சூரன்போர்" நாட்டிய நாடகம் யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள் (தமிழ்த்தினப் போட்டி-தேசியமட்டம் முதலாம் இடம்) (ஆக்கம்-பண்டிதை வை.கணேசபிள்ளை)
நன்றியுரை: ச.முகுந்தன் ஆசிரியர் - தலைவர் திருநெறிய தமிழ் மறைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இணுவில் திருநெறிய தமிழ் மறைக்கழகம்

(12617) (6,7,10)



AFTER GCE O/L

GCE A/L

what next?

**STUDY IN UK**

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

February/March Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்

பதிவுகளுக்கு | Colombo-011 7 555511/14 Fax-011 7 555517
Jaffna-021 7538395 /021 2227230

EXPONET (Group of Exponet (Pvt) Ltd.)

Head Office : 379 - 1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
London Branch : 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK.
Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி ம.உமாசுதசர்மா
அவர்களின் அன்புத் தாய்

### கந்தசாமிஜயர் சந்தணம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய வட்டம் - யாழ்.மத்தியகல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு. பத்மாகரன்
அவர்களின் அன்பு மாமியார்

### றெஜினா பூமணி செல்லத்துரை

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம், யாழ்.மத்திய கல்லூரி**

## கண்ணீர்த் துளிகள்



கைதடி நாவற்குழியை பிறப்பிடமாகவும் எமது ஆலய தர்மகர்த்தாவாகிய

### கந்தையா மனோகரன்

அன்னார் 5/1/2012 காலமாகிய செய்தி கேட்டுக் கலங்கிய நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையக் கந்தனை வேண்டுவதோடு துயரில் இருக் கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிக்கிறோம்.

சிவசுப்பிரமணிய சர்மா, சண்முகநாத சர்மா,
மயுரன், மாது, தாரணி.

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், கந்தர்மடம், மணல்தரை ஒழுங்கையில் 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0714 148255

தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்

## வீட்டுக்குப் பெண் உதவியாளர் தேவை

நல்லூரில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டு வேலை செய்வதற்கும், சிறு பிள்ளை யைப் பார்ப்பதற்கும் உதவியாளர் தேவை. வீட்டில் வந்து இருக்கக் கூடியவர் விரும் பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப் படும். (12787) **தொடர்பு: 0750481186**

## விற்பனைக்கு

Dubaiல் இருந்து கொண்டு வரப்பட்ட
NX 710 Sony 40" LED TV, HOME THEATURE SYSTEAM. ASUS LAPTOP, HAMMER DRILLER, CIRCULAR SAW CHAIN SAW, ANGLE GRINDER, CAR STRERIO,
**விற்பனைக்கு உண்டு.**
**தொடர்பு: 0714 829215**

## தமிழ்/ஆங்கில மொழிகளில்
## A/L பௌதிகவியல் / இணைந்த கணிதம்

மேற்படி பாடங்களை பிரபல கல்லூரிகளில் சிறப்பாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) சிறப்பாகக் கற்பிக்கப்படும்.
பரீட்சை எடுத்தவர்களுக்கு பகல் நேரத்தில் கற்பிக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. T.P. 077 6648751

ஆசிரியர்
R. பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey) Dip.in.Ed.
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(12643)

## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா சற்குணம்



புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சற்குணம் (04.01.2012) புதன்கிழமையன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - சின்னத்தங்கம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான அம்பலவாணர் - சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராசரத்தினம், தங்கம்மா மற்றும் செல்லத்துரை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை மற்றும் பூமணி (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் ரஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் சாரதாதேவி (பிரான்ஸ்), கண்ணதாசன் (பிரான்ஸ்), சந்திராதேவி (புங்குடுதீவு), வரதராசன் (சுவிஸ்), யோகலட்சுமி (ஜேர்மனி), தமிழினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் தனபாலசுந்தரம் (பிரான்ஸ்), கௌரிமாலா (பிரான்ஸ்), தனஞ்செயன் (புங்குடுதீவு), சயந்தினி (சுவிஸ்), ஆனந்தகுமார் (ஜேர்மனி), குகனேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கஜந்தன், கஜிதா, நதீரா, லஸ்மன், நிதுஷா, நிதுஷியா, சங்கீதா, வசீகரன், ஆதவன், மிதுஷன், கஸ்தூரி, அஸ்வின், ஆரூண், நவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் முனையப்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (12636)(2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி, பஸ் நிலையத்திற்கு அருகில் சிவன்பண்ணை வீதியிலுள்ள வீடு (3 படுக்கையறைகள், 2 குளியலறை, விசாலமான மண்டபம், சமையலறை) தளபாட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
021 222 5129 - 0718 150 863 - 011 - 2593065

## காணி விற்பனை

பரந்தன் சந்திக்கு அருகில் உறுதியுடன் கூடிய 1½ ஏக்கர் நிலப்பகுதி, பகுதி பகுதியாகவோ, மொத்தமாகவோ விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773 951525

## Renu Travels and Tourists

**A/c Bus Booking Center**
ஆசன முன் பதிவு நிலையம்

**Mannar to Colombo**
**Colombo to Mannar**

| மன்னாரிலிருந்து புறப்படும் இடம்: | கொழும்பிலிருந்து புறப்படும் இடம்: |
|---|---|
| வைத்தியசாலை வீதி, | சிவன் கோயில் முன்பாக, |
| சென் சொனிக் முன்பாக, மன்னார். | ஜெம்பட்டா ஸ்றீற், கொச்சிக்கடை, கொழும்பு. |
| புறப்படும் நேரம் - இரவு 10.30 மணி | புறப்படும் நேரம் - இரவு 10.00 மணி |

**தொ.பே: 023 4820777, 023 3234270, 0779061885.**

## 66 ஆவது பிறந்ததினம்



தேவி இல்லம், பத்தியவத்தை
நெல்லியடி வடக்கு, நெல்லியடியைச் சேர்ந்த
திருமதி
### சுந்தரலிங்கம் பரதேவி
(தேவி)

அவர்கள் இன்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை தனது 66 ஆவது பிறந்ததினத்தை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை கணவர் சுந்தரலிங்கமும், பிள்ளைகளான சுபா, சுபாஸ் (சுவிஸ்), அருந்தவராஜா (சின்னிமாஸ்டர்), சுனேகா, சுகன்ஜா மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தேவி இல்லம்,
பத்தியவத்தை, வதிரி மேற்கு. (8040)(5,6,7,10)

மூத்த மகள்
S. சுபா

## தசாக திருஹயக்ரு அழைப்பு



அன்புடையீர்,
நிகழும் கரவருடம் மார்கழி மாதம் 15 ஆம் நாள் (31.12.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் கந்தசாமி ஐயர் சந்தணம்மா

அவர்களின்
ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்க ளில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 09.01.2012 | திங்கட்கிழமை | 10.00 மணி தசாகம் |
| 10.01.2012 | செவ்வாய்க்கிழமை | ஏகோதிஷ்டம், மாசிகம் |
| 11.01.2012 | புதன்கிழமை | சபிண்டீகரணம் |
| 12.01.2012 | வியாழக்கிழமை | நண்பகல் 12 கிருஹயக்ஞம் |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.
T.P.: 0773144394 (12789)(5,6,7,10)

இங்ஙனம்
[illegible]
K.[illegible]

## விசேட இலவசக் கருத்தரங்கு

SEC *இன் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!*

UK, France, German, Switzerland, Italy, Poland, Rusia, Cyprus Canada மற்றும் U.S.A. போன்ற நாடுகளுக்கு செல்பவர்களுக்கு VISA பெறுவதற்கான விசேட இலவசக் கருத்தரங்கானது எமது நிறுவனத்தின் (SEC) அனுபவமிக்க சட்ட ஆலோசகர்களால் இம் மாதம் 8, 9, 10 ஆம் ஆகிய தினங்களில் நடைபெறும் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

**VISIT VISA**

Visa பெறுவதற்கு முன்பு எதுவித முற்பணமும் அறவிடப்படமாட்டாது

- **London** இல் உறவுகள் இருந்தால் 100 % விசா உத்தரவாதம்
- நீங்கள் தனிநபர் or கூட்டு வியாபாரம் சான்றிதழ் வைத்திருக்கின்றீர்களா?
- நீங்கள் புது மணத் தம்பதியினரா?
- அரச உத்தியோகத்தரா?



கோண்டாவில், யாழ்ப்பாணம்.

**புத்தாண்டில் (2012) Family Visa பெற்ற குடும்பத்தினர்**

**Student Visa**

- A/L பெறுபேறுகள் வெளிவந்த மாணவர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்
- O/L இல்லாத 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் புது விதிக் கமைய Visa பெற்றுக் கொடுக்கப்படும்.
- IELTS அவசியம் இல்லை (Condition Apply)
- ஏற்கனவே Visa பெற்றவர்களின் உறவினர்களிடம் கலந்துரையாடும் வசதி.

**கடந்த ஆண்டில் Visa பெற்ற மாணவர்களில் சிலர்**



Logarajani Jaffna | S.Jasotharan (Pointpetro) | Thanusiya Jaffna | Kesavan Jaffna | Thaskumar Jaffna | Suthagaran Thellippalai

*உங்களை நம்புகின்றோம் எங்களை நாடுங்கள்!!!*

காலம் : இம் மாதம் 8, 9, 10 (ஞாயிறு, திங்கள், செவ்வாய்) ஆம் ஆகிய தினங்களில் காலை 9.00 am to 5.00 pm

இடம்: **SEC VISA Tech**
**620 K.K.S. Road, Jaffna.**
(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)

**Hot Line: 021 222 0555**
**0771022984**
**0777887181**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர்களுக்கு கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் விவரங்களை கணினி மயப்படுத்துவதற்காக தகவல் திரட்டிய தொண்டர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பெற்றுச் சேவைகள் பிரிவில் வழங்கப்படவுள்ளன. உரியவர்கள் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-207)

# கண்ணீர் அஞ்சலி



நாதஸ்வர வித்துவான்

### கோவிந்தசாமி வாகீஸ்வரன்

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழாக் காலங்களில் இசைவேள்வி வழங்கி வந்த நாதஸ்வர வித்துவான் அமரர் N.R. கோவிந்தசாமி அவர்களின் மறைவின் பின் இசை வேள்வி வழங்கி வந்த அவரது புதல்வர் நாதஸ்வர வித்துவான் கோவிந்தசாமி வாகீஸ்வரன் அவர்கள் 3.1.2012ல் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த துயரத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய புனிதரை வேண்டுதல் செய்கின்றோம்.

நிர்வாகம்,
புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயம்.

NO- 18,MALLIKA LANE,
COLOMBO-06
SRI LANKA
Phone No- 011 4380 900
Web- www.realmatrimony.com
Email- support@realmatrimony.com

Real Matrimony.com — Build heaven for you

1. யாழ், இந்து , 1979, புனர்பூசம் 1ம் பாதம், America PR மணமகனுக்கு மணமகள் தேவை.
2. யாழ், இந்து , 1981, ஆயிலியம், Software Engineer, Australia PR மணமகனுக்கு மணமகள் தேவை.
3. யாழ், இந்து , 1981,பூசம், Canada PR மணமகனுக்கு மணமகள் தேவை.
4. யாழ், இந்து , 1980, திருவோணம் , Doctor மணமகனுக்கு மணமகள் தேவை.
5. யாழ், இந்து , 1974, பூரட்டாதி 1ம் பாதம், Engineer மணமகனுக்கு மணமகள் தேவை.
6. யாழ், இந்து , 1984, பூரம், BSc Agriculture மணமகளுக்கு மணமகன் தேவை.
7. யாழ், இந்து , 1981, மகம், Doctor மணமகளுக்கு மணமகன் தேவை.



ஜெய் குருதேவ்

## வாழும் கலைப் பயிற்சி

மூச்சுப் பயிற்சி,
பிராணாயாமா,
சுதர்சன கிரியா,
யோகா, தியானம்
09.01.2012
அறிமுக உரை

இடம்:-
மகேஸ்வரன் மணிமண்டபம் (நல்லூர்)

பயிற்சி:- காலை: 10.00 am - 12.30 pm
மாலை:- 2.00 Pm 4.30 pm
6.00 pm - 8.30 pm

முற்பதிவுகள்:
0777740593

### தொடர்பு கொள்ளுங்கள்

சாவகச்சேரி - 0777078349
வடமராட்சி - 0779037321
அச்சுவேலி - 0773233187
மானிப்பாய் - 0776286689

(10996) (2-6-9)

## Vehicle Sale

Honda Cd 200 Road Master (Bike 86 Sri) Brand New 280/= (92 Sri) Recondition 190 /= Yamaha Fzr 250 CC - JC 6470 Japan Bike 250 /=
Jaffna Kokkuvil. 0776 511299, 0727 - 111527

## கார் விற்பனை

K.G xxxx தொடரிலக்கமுடைய மிக நல்ல நிலையில் உள்ள, இறக்குமதி செய்யப்பட்ட டாட்டா இண்டிகோ மரீனா GLX. கார் விற்பனைக்குண்டு (வேகன் மோடல்)
தொடர்புகளுக்கு: 075 7402318

## கடை வாடகைக்கு

187, (49), கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 7062349

## SMALL VAN SERVICE

(JAPPAN HONDA BADDY)
மாதாந்த வாடகை/ நாள் வாடகைக்கு அல்லது சாரதியுடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0770575454

## வான் விற்பனைக்கு

Toyato Hiace Dolpin - No:62 _ 5XXX ரக வான், (12 A/C, Adjustable Seats, Alloy Wheel) லீசிங்குடன் விற்பனைக்கு உண்டு.
குறிப்பு: செல் மொடல் வானிற்கு மாற்றப்படும்.
தொடர்பு:- 0778736777, 0776617845

## வீடு வாடகைக்குத் தேவை

நான்கு பேர் கொண்ட உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு. மூன்று அல்லது நான்கு அறை களுடன், குளியலறையும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில் பகுதி விருப்பத்தக்கது.
முற்பணம், வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 0777590496

## காணி விற்பனைக்கு

இணுவில் தெற்கில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779485860

## சேவை

கனடா, இத்தாலி, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு வேர்க், விசிட், PR போன்ற விசா ஒழுங்குகள் செய்து தருவதுடன் Pending, Refusal போன்ற விசாக்களுக்குத் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து மீண்டும் விசா கிடைப்பதற்கான ஒழுங்குகள் காலதாமதமின்றியும், நம்பிக்கையுடனும், உத்தரவாதத்துடனும் எம்மால் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 0772484403 / 011-2363880
251, 1/1, Galle Road, Wellawatha,Colombo - 6

## மொத்த வியாபாரிகள் தேவை (Jaffna)

Brand New Hi.fi Setup, DVD Player, Rice Cooker, Gas Cooker, 12", 15" Baffal மற்றும் சிங்கப்பூரில் பாவிக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள Sony TV, Washing Machine, Fridge, நம்பமுடியாத மிகக் குறைந்த விலையில்
கொழும்பு - 0773511484 / 0726050770

(சி/7420) (2-6-7)

## STUDY IN CHINA

(DEGREES IN ENGLISH MEDIUM)

ENGINEERING
M.B.B.S

MARCH INTAKE

(Sri Lanka and Internationally recognized China Government Universities)

WIN LANKA WORLD EDUCATIONS
Contact 0777813450,077 5149965
email: bislanka@yahoo.com



## வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்

### கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும்

இதேபோன்று முல்லைத் தீவுவின் ஏனைய பிரதேச செயலகங்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச காணிகளை இனங்கண்டு அவற்றை படையினரின் பாவனைக்காக கையகப்படுத்தும் நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு முன்னெடுத்து வருகிறது. அந்தந்த பிரிவு பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பகரமாக அறியவந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் இந்த நடவடிக்கை பல மட்டங்களிலும் பெரும் சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது. இவ்வாறு கையகப் படுத்தப்படும் காணிகள் எதிர்காலத்தில் என்ன தேவைக்காகப் பயன்படுத்தப்படப் போகின்றன என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அரச காணிகளைப் படையினருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பிரவுகள் ஊடாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

போர் முடிந்து வன்னியில் சிவில் நிர்வாகம் ஆரம்பித்த வேளையே அந்தப் பிரதேசத்தில் உள்ள அரச காணிகளை அடையாளம் காணுமாறு மாவட்ட செயலகங்கள் ஊடாக அரசு உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது. அப்படி அடையாளம் காணப்பட்ட அரச காணிகளில் இருந்தே இப்போது படையினருக்கான ஒதுக்கீடுகளைப் பாதுகாப்பு அமைச்சுக் கோரி உள்ளது.

இராணுவம், கடற்படை, அதிரடிப்படை, பொலிஸ் ஆகியவற்றுக்கு முகாம்களை அமைக்கவும் படையினருக்கான தங்குமிடங்களை அமைக்கவும் என இந்தக் காணிகளைக் கையகப் படுத்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் மட்டும் இவ்வாறு படையினருக்கு ஒதுக்கப்பட்ட காணிகளின் விவரங்கள் உதயனுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

## தனியார் காணிகளை கையகப்படுத்த ஒட்டகப்புலத்திலும் படைகள் முயற்சி

1 »

காணி அமைச்சு உரிமை கோரும் பிரதேசத்தில் உள்ள காணிகள் அனைத்தும் தனியாருக்கு - தமிழ் மக்களுக்கு - சொந்தமானவை என்பதை உதயன் உறுதி செய்துள்ளது. இந்தப் பிரதேசத்தில் வசித்த மக்கள் அனைவரும் 1990ஆம் ஆண்டு, இராணுவத்தினர் அந்தப் பகுதியை நோக்கி முன்னேறியதைத் தொடர்ந்து இடம்பெயர்ந்தனர்.

கடந்த 20 வருடங்களாக அந்தப் பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி வைத்திருந்தது அரசு. அதனால் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இராணுவம் தடைவிதித்திருந்தது.

இடம்பெயர்வதற்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் 200க்கும் குறையாத தமிழ்க் குடும்பங்கள் இருந்தன என்பதையும் உதயன் உறுதிப்படுத்தி உள்ளது. இந்தப் பிரதேசங்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள்தான் என்பதை பிரதேச செயலகப் பதிவுகளும் உறுதி செய்கின்றன.

தேசிய மொழிக் கொள்கை பெயரளவில் ஒட்டகப்புலத்திலுள்ள 20 ஏக்கர் காணியையும் பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்குமாறு கோரி காணி அமைச்சு அனுப்பி இருந்த கடிதம் முழுக்க முழுக்க சிங்களத்திலேயே யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சகல அமைச்சுக்களில் இருந்தும் தமிழ் மொழியிலேயே சுற்றிக்கைகள், கடிதங்கள் அனுப்பப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இருப்பினும் காணி அமைச்சின் கடிதம் முழுக்க முழுக்கச் சிங்களத்திலேயே வந்துள்ளது. இவ்வாறு சிங்களத்தில் வரும் கடிதங்களுக்கு திணைக்களங்கள் பதிலளிக்கத் தேவையில்லை என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்தார்.

(உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்சயா

புதிய பிரிவுகள் ஆரம்பம் — மிகக் கழிவு கட்டணத்துடன்

- பேசியல், மேக்கப், கெயாஸ்டைல், ஐசிங், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், கெயர் கட்டிங், பிளவுஸ் கட்டிங், சாறி வேக், வொக்கே செட்டிங் - மேற்படி பயிற்சி நெறிகள் நடை பெறுகின்றன.
- கடும் கறை, கறுப்பு பருக்கள் அகற்றும் வைற்றிங் பேசியல் செய்து கொள்ளலாம்.
- பேசியல் மேக்கப், ஐசிங் கேக், றிச்கேக், ஓடருக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
- உடல் எடை குறைக்கும் பால்மா, ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை, கடும் கறை, பருக்கள், புள்ளிகள் அகற்றும் வைற்றிங் கிறீம் விற்பனைக்குண்டு.

**அட்சயா**

(12801) 461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

## அவுஸ்திரேலியா

முற்பணங்கள் இல்லாமல் ஆஸ்திரேலியா 3 மாத காலத்தில் செல்ல இலவச ஆலோசனை.



**திசைகாட்டி**
பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212219016
(12807)

## கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்

உங்கள் கட்டட வேலைகள் எதுவாயினும் அழையுங்கள் 0776679564

AXSHAYA CONSTRUCTION, JAFFNA.

## தொழிற் பயிற்சிகள்

- Electronics சகல இலத்திரனியல் பொருள்கள் இயங்கும் முறை பழுதுகள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் காலம்: 10 மாதம்
- Mobile Phone Rapairing
  சகல களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் காலம்: 6 மாதம்.
- Air Conditioning
  சகல குளிர்சாதனங்கள் இயங்கும் முறைகள்.
  பழுதுகள் திருத்தும் முறை பயிற்சி அளிக்கப்படும்.

சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 09.01.2012 திங்கள் 9.30 a.m.

விபரங்களுக்கு:

**Jaffna Technical Institute**

45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.:0778249949

கிளை: 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 07792254078

குறிப்பு: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

## Personal Class (கணினி)

★ கற்கை நெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★ MS Office 2007/2010, Internet and E.mail, DTP, Web Design, Graphic Design போன்ற கற்கை நெறி
★ பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு- கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக பயிற்சியளிக்கப்படும்.

ஆசிரியர்:-KRC நல்லூர். T.P- 0779672038

## CHEMISTRY

Group & Personal classes
Nimal- B.Sc
one hour -250/=
Phone no: 0778697256

## கார் வாடகைக்கு உண்டு



திருமண வைபவங்கள் மற்றும் அதிவிசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய 2011 HYBRID கார் (வெள்ளை நிறம்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: S.மதன்
077 7289283, 077 8096873

## இனிய புத்தாண்டில் 10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிரீம் இயந்திரம்

50,000/- மேல் மாத வருமானம்



- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்

விலை 99,000/- இல் இருந்து — புத்தம் புதியது

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

## IIS

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களே !! உங்களுக்காகவே விஷேட பிரிவுகள் ஆரம்பம்

### Diploma in Eng.Drawing & Auto CAD

பேராதனிய ,மொறட்டுவ பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெற்ற மாணவர்களே உங்களுக்காகவே ஆரம்பம்

### Diploma in Computerized Accounting

வணிக முகாமைத்துவ துறையில் பணிபுரிபவரா நீங்கள் ?உங்கள் வேலைகளை இலகுவாக்க கூடிய வகையில் அமைந்துள்ள கற்கை நெறி...

### Diploma in Computer Programming

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற அனைத்துப் பீட மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆரம்பமாகிறது
(Java, VB.NET, C++)

ஆரம்பம்:- பிரிவு I :- 07.01.2012 பிரிவு II :- 09.01.2012
காலை 10.00 மணி

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே :- 021 222 2831

## க.பொ.த (சா/த) மற்றும் (உ/த) பின்னர்

City & Guilds UK

யாழ் நகரில்

# Engineering Courses



பதிவுகளுக்கு முந்துங்கள்

**யாருக்காக...?**
- A/L இன் பின்னர் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை தவற விட்ட மாணவர்களுக்காக!
- O/L இன் பின்னர் விரைவாக பட்டப்படிப்பை, பூர்த்தி செய்யும் நோக்குடன் இருக்கும் மாணவர்களுக்கானது.
- NCT, NDT, HND, NCIT பூர்த்தி செய்து தமது மேற் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ய விரும்பும் மாணவர்களுக்கானது.

### Civil Engineering and Quantity Surveying

துரித வளர்ச்சி பெற்று வரும் கட்டிட நிர்மாண துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும், உயர் சம்பளத்துடனான வேலை வாய்ப்பை எதிர் நோக்கி இருக்கும் மாணவர்களுக்கானது.

### Electrical and Electronic Engineering

தற்போது நடைபெற்றுவரும் புனர்நிர்மாணப்பணிகளில் அதிக கேள்வியை ஏற்படுத்துகின்ற மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைகளில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும், இத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்பவர்களுக்கானது.

### Motor Vehicle Engineering

உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டில் கூட உயர் சம்பளத்துடனான வேலை வாய்ப்புக்களை அள்ளி வழங்கும் மோட்டார் வாகன பொறியியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்புவோருக்கும், வேலை வாய்ப்பை எதிர்பார்த்து இருப்போரும் செய்ய வேண்டிய முக்கிய கற்கை நெறியாக இது காணப்படுகின்றது.

### Mechanical Engineering

இலங்கையில் துரித வளர்ச்சியடைந்து வரும் இயந்திரவியல் துறையில் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளவும், வேலைவாய்ப்பை எதிர்நோக்கி இருப்போரும் செய்ய வேண்டிய ஒரு முக்கிய கற்கை நெறியாக இது காணப்படுகின்றது.

### Benefits:

- UKயை தலைமையகமாக கொண்டு 100 க்கு மேற்பட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்.
- தவணை முறையில் பாடநெறிக் கட்டணத்தை செலுத்தும் வசதி
- விரிவுரைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்.
- பொறியியல் படிப்புக்களின் இறுதி வருடத்தை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொடரும் வாய்ப்பைப் பெறலாம்.
- குறித்த துறையில் Diploma பாடநெறியை முடித்தவர்களுக்கு பிரபல பொறியியல் கம்பனிகளில் வேலைவாய்ப்புகள் பெற்றுத்தரப்படும்.
- ஐரோப்பிய, மத்திய கிழக்கு, அமெரிக்க நாடுகளில் இலட்சங்களில் சம்பளத்தைப் பெறக்கூடிய தொழில்வாய்ப்பை பெறக்கூடிய சர்வதேச தரம்வாய்ந்த பாடநெறிகள்.
- O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரும் பொறியியல் கற்கை நெறிகளை கற்க முடியும். (Results) கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

© 0214 66 66 99 / 0771 067 394

**SKILLS COLLEGE OF TECHNOLOGY**
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Website : www.skillsinternational.lk

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

2011 December G.C.E O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

### Diploma In English (2 Month)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS (International English Language Testing System)

(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We guarantee minimum band 5.0 Upwards

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

அனைத்துப்பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

| | | |
|---|---|---|
| Batch I | 11.01.2012 | 9.00 a.m |
| Batch II | 11.01.2012 | 11.00 a.m |
| Batch III | 14.01.2012 | 3.00 p.m. |
| Batch IV | 14.01.2012 | 4.00 p.m. |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vaiavarpulliam Kulam, Vavuniya. Tel: 024 324 528

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



சம்பூர்; விடிவு கிட்டுமா? 19



அதிர்ஷ்டம் உண்டா? 07



ஒஸ்தி - விமர்சனம் 14



புதிய மாற்றம் 06



மீண்டும் கிருஷ்ண விஜயம் 13


# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 08 ஜனவரி 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# மீண்டும் குந்தி...!

"போர் புகுந்த தேசத்தில் நிறையக் குந்திகளை சூழ்நிலை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டது. இப்போதே அதை தவிர்க்க முயற்சிக்காவிட்டால் விளைவுகள் விபரீதமாகவே இருக்கும்



■ *ஓரண்யன்*

**''ஒரு சாண் வயித்துக்குத் தான் எல்லாத்தையும் விக்கிறன். நான் எல்லாத்தையும் விக்கிறன்'' - 'ஈசன்' என்ற படத்தில் வருகின்ற பாடல் வரி கள்.**

வீட்டுக்குள்ளேயே வலியோடு போராடிக் கொண்டிருக்கிறாள் அந்தப்பெண். வெளியே விடயம் தெரிந்தால் மானம் போய் விடும். சற்று நேரத்துக்கெல்லாம் பெண்ணின் உடல்வலி மறைந்தது. பூமியைத் தொட்டது புதிய ஜீவன். அந்தக் குழந்தை யின் முகத்தைக் கூட அந்தப் பெண் பார்ப் பதற்கு பிரியப்படவில்லை. அப்படிப் பார்க்க நேர்ந்தால் பாச உணர்வு மேலெழுந்து அவள் செய்ய நினைத்திருக்கும் காரியத்துக்கு முட்டுக்கட்டை போட்டுவிடக்கூடும். இவ்வளவு நேரமும் பட்டிருந்த வேதனையையும், உடல் நோவையும் சமாளித்தவாறு எழுந்தாள் அந்தப் பெண். சில நொடிகளில் சேலை ஒன்றுக்குள் ஏதுமறியாப் பிள்ளை கதறக் கதறச் சுற்றப்பட்டது. உறங்கிக் கொண்டிருந்த நீர் நிலையின் மீது வீசப்பட்டது சேலைப் பொதி. தண்ணீர் குழந்தையை தாலாட்டியபடி எடுத்துச் என்று தேரோட்டி ஒருவனின் கைகளில் பத்திரமாகச் சேர்த்தது. அதன் பின்னர் அவளுக்கு சட்டபூர்வ திரு மணத்தின் பின்னர் ஐந்து குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்கு எதிரியாக மூத்த குழந்தை உருவெடுப்பதை அந்தப் பெண் தன் கண் முன்னே காண நேர்ந்தது. மூத்த வன் கர்ணன். மற்றப் பிள்ளைகள் பஞ்ச பாண்டவர்கள். அவள் குந்தி.

*கதை உபயம்- மகாபாரதம்.*

★ ★ ★

வரலாறு தன் பக்கங்களை மீள மீள புரட்டிக்கொண்டே இருக்கும். ஆனாலும் ஒவ்வொரு முறை புரட்டும்போதும் மாற்றங்களும் அந்தப் பக்கங்களில் சேர்ந்த கொண்டே இருக்கும். வரலாறு பல நூற் றாண்டுகள் கடந்து குந்தியின் பக்கத்தை . மீண்டும் ஒரு முறை வன்னியில் புரட்டி யது.

இப்போதும் வீட்டுக்குள் பிரசவ வலியில் துடித்த படி ஒரு பெண். கணவன் ஏற்கனவே இறுதிப் போரில் இறந்திருந்தார். அவளுக்கு பாண்டவர்கள் போல ஐந்து பிள்ளைகள்.

தாயின் வேதனையைக் கண்டு கண்ணில் நீரோடு அவளின் ஐந்து பிள்ளைகள். தாயின் வலியை போக்க என்ன செய்வ தென்று தெரியாதவர்களாக அவர்களும் அழத் தொடங்கியிருந்தார்கள். புதிதாகப் பெண் குழந்தை பிறந்தது. இங்கும் துணி யொன்றால் சுற்றி குழந்தையை நீர் நிலைக்குள் - கிணற்றுக்குள் - வீசியெறிந்தாள் நவீன குந்தி.

எப்போது தாலாட்டுப் பாடுவதையும் தன் மீது வீசப்பட்ட குழந்தையைக் காப்பாற்றுவதையும் தண்ணீர் மறந்துபோயிற்று. எந்த விதமான எதிர்ப்பும் இன்றி அந்தப் பச்சி ளங் குழந்தை கிணற்றில் போர்வையோடு மூழ்கிப் போனது. எஞ்சிய ஐந்து பிள்ளை களையும் இழுத்துக் கொண்டு இருளோடு மறைந்து போனாள் இந்தக் குந்தி.

கிளிநொச்சி விசுவமடுவில் தான் மீண்டுமொரு குந்தியின் வரலாறு மீள் வாசிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. சிசு ஒன்றின் '' குவா குவா'' சத்தம் , எவருக்கும் கேட்கமுன்னரே கிணறொன்றுக்குள் வீசப்பட்டிருக்கிறது. இப்போது குழந்தையை வீசிய குந்தியை பொலிஸார் தேடத் தொடங்கியுள்ளனர்.

கிணற்றுக்குள் துணியோடு கட்டி குழந்தையை வீசிய சம்பவத்தை ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்ட அநேகருக்கு ரத்தம் கொதித்திருக்கும். அந்த தாய் பற்றிய விம்பங்கள் படு கொடூரமாக மனங்களில் உருவகப்படுத்தப்பட்டிருக் கும்.

''பெத்த பிள்ளையை இப்பிடி இரக்கமில்லாமல் கிணத்துக்குள்ள போட்டுட்டாளே. பத்தி எரிவாள்'' என்று தமக்குத் தெரிந்த நாலு பேரிடம் மன ஆதங்கத்தையும் கொட்டித் தீர்த்திருப்பார்கள். ஏதுமறியா பச்சிளம் குழந்தையை கிணற்றுக்குள் வீசிக் கொலை செய்தது படுபாதகமான செயல்தான். ஆனால் அந்தப் பாதகத்துக்கு குறித்த பெண்ணை மட்டும் குற்றம் சொல்ல முடியாது.

ஏற்கனவே ஐந்து பிள்ளைகளோடு அல்லாடுகின்ற அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் தரவோ, குடும்பத்துக்கான பொருளாதார வளத்தை ஈட்டிக்கொடுக்கவோ கணவன் இல்லை. போர் [illegible] பாதோ இரையாக்கி இருந்தது. நலன்புரி நிலையத்தில் அடைபட்டு இருந்துவிட்டு மீள்குடியேற்றப்பட்ட பின்னர் அந்தப் பெண்ணுக்கு வாழ்வதற்கான வழி எதுவும் திறக்கப்படாமல் இருந்திருக் கலாம். அரசு வழங்குகின்ற நிவாரணம் அரை வயிற்றைக் கூட நிரப்பப் போதுமான தல்ல. அவள் பெற்றெடுத்த ஐந்து பிள்ளைகளும் பசித்த வயிறோடு, ஏக்கம் நிறைந்த விழிகளோடு அவளது சேலையைப் பற்றி இழுத்தபடி அழுதுகொண்டிருக்க அவள் குழந்தைகளின் கண்ணீரைத் துடைக்க ஏதாவது வழியைத் தேடமுற்பட்டிருப்பாள். வேலை கிடைப்பது குதிரைக் கொம்பா யிருக்கும். வேறு வழியில்லாமல் குழந்தை களின் பசி நெருப்பை அணைத்து அவர்க ளின் கண்ணீரைத் துடைக்க உடலை இன்னொரு ஆடவன் அனுபவிக்க அனுமதித்திருக்கக்கூடும் என்று ஊரவர்கள் சந்தேகிக்கின்றனர். ஆனால் உண்மை அவளுக்கு மட்டுமே வெளிச்சம். அதுவே அவள் வயிற்றில் சிசுவாக மாற வேறு வழியின்றி இரக்கத்தைப் புதைத்தவிட்டு குழந்தையை கிணற்றுக்குள் வீசியிருக்கக் கூடும்.

வன்னியில் மட்டுமல்லாமல் போர் நிகழ்ந்த தமிழர் பகுதிகளில் இருளின் மறைவுக்குள் இப்படித்தான் நிறைய நிகழ்வுகள் நடந்து முடிகின்றன. அவை எல்லாவற்றுக்குமே ஏதோ ஒரு காரணம் இருக்கும். இந்தப் பெண்ணின் பொருளாதார வளத்தை சீராக்கும் வகையில் ஏதாவது ஒரு திருப்பு முனை நிகழ்ந்திருந்தால் கூட அந்த சிசுவின் மரணத்தை தடுத்திருக்க முடியும்.

கோயில் திருவிழாக்களுக்கும் கோபுரங்களுக்கும், பிறந்த தினக் கொண்டாட்டங்களுக்கும் கொட்டிக் குவிக்கின்ற பணத்தில் [illegible] பெண் தலைமைத் துவ குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு செலவளிக்க எங்களில் எவருமே தயாராக இல்லை.

புலம்பெயரிகளின் ஒரு சிலர் இது போன்ற முயற்சிகளில் இறங்கினாலும் அவர்கள் அனுப்புகின்ற பணத்தில் பாதியை இங்குள்ளவர்கள் பங்கு பிரித்தபின்னர்தான் உரியவர்களுக்கு அது போய்ச் சேருகிறது. அத் தோடு வெறுமனே பணத்தைத் தான் வழங்குகிறார்களே தவிர தொழில்முயற் சிக்குரிய எத்தனங்களை கொடுப்பதற்கு பலர் தவறிவிடுகிறோம். மீள் குடியமர்த்தப் பட்ட மக்களின் இழப்புகளை சரிவர இனங் கண்டு ஒவ்வொருவருக்கும் உரிய தேவை களை பூர்த்தி செய்ய அரசுக்கோ அரசு அதிகாரிகளுக்கோ அக்கறை எதுவும் இருப்பதில்லை. மீள்குடியமர்த்திவிட்டோம் என்று தம்பட்டம் மட்டுமே அடிக்கத் தெரிந்த அரசால் மீள்குடியமர்ந்த பின்னர் அங்குள்ள மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்கத் தெரியவில்லை. இறுதிப் போரால் எல்லாவற்றையுமே இழந்து பூச்சியமாகிப் போன வாழ்வோடும் பொருளாதாரத்தோடும் நடு வீதிக்கு வந்துவிட்ட மக்கள் என்ன செய் வார்கள். வயிற்றுப் பிழைப்புக்காக எதை யுமே செய்யலாம் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்படலாம். அதற்காக உடலை விற்பது நியாயம் என்று சொல்ல வரவில்லை. எனினும் அவ்வாறு செல்வதை தடுப்பதற்கு நாம் என்ன செய்தோம் என்று கேட்டால் பலர் தலையைக் குனியவேண்டியிருக்கும்.

போர் தின்ற மக்களை பொருளாதார ரீதியில் வளப்படுத்துவதற்கு எல்லோரும் இனியாவது இதயசுத்தியோடு முன்வர வேண்டும். ஆக்கபூர்வமான அபிவிருத்தித் திட்டங்கள் காகிதங்களில் மட்டுமல்லாமல் நடைமுறைக்கும் வரவேண்டும். இல்லா விட்டால் வரலாறு அடிக்கடி புரட்டப்பட்டு இன்னும் நிறைய குந்திகள் நம் தேசத்தில் உருவாகி விடக் கூடும். ✱


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் வந்தார்கள்?

■ சங்கர்

யாழ். சிவில் பிரதிநிதிகளைச் சந்திக்க விரும்பாத இந்தக் குழு, சுற்றுலாவாக வந்த சிங்களப் பயணிகளைச் சந்திக்க நேரம் ஒதுக்கியிருந்தது.



பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வார்ட்டன் அடங்கிய குழுவினரின் வடக்குக்கான பயணம் சில சந்தேகங்களைக் கிளப்பி விட்டுள்ளது. கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட இந்தக் குழு சில தரப்புகளைச் சந்தித்துவிட்டுத் திரும்பியுள்ளது.

போரின் பின்னரான வடக்கின் தற்போதைய நிலவரம், மக்களின் மனநிலை, அவர்களின் எதிர்பார்ப்பு, அரசின் அபிவிருத்தி முன்னெடுப்பு, மீள்குடியமர்வு ஆகிய விடயங்கள் தொடர்பாக அந்தக் குழு தனது பயணத்தின்போது அறிந்து சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டனின் பிரதிநிதி ஒருவர் வருகிறார் என்றால் அவர் ஏதோ நல்லதுக்குத்தான் வருவார். நாட்டில் உள்ள பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் சாதகமாகச் செயற்படுவார் என்றுதான் தமிழ் மக்கள் நம்பி இருப்பர்.

**அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. 16ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் இலங்கையை ஆட்சி செய்தனர். அவர்களது ஆட்சியில் இனப்பாகுபாடு இருக்கவில்லை. சிங்கள மக்கள் மட்டுமன்றி அனைத்து இன மக்களும் உரிமைகளைப் பெற்று வாழ்ந்தனர். இந்த அடிப்படையிலேயே தமிழ் மக்களின் மனதில் பிரிட்டன் என்ற நாமம் ஆழப் பதிவாகியுள்ளது.**

**ஆனால் பிரிட்டனின் அண்மைக் காலப் போக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைக் குழி தோண்டிப் புதைப்பதாக மாறியுள்ளதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.**

**இதனை உறுதிப்படுத்துவதாகப் பிரிட்டனின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸின் ராஜினாமா விடயம் அமைந்திருக்கிறது.**

இலங்கை அரசுக்கும் இராணுவத்துக்கும் சார்பாக லியம் பொக்ஸ் நடந்து கொண்டமை நிரூபிக்கப்பட்டதன் பின்னரே அவர் தனது பாதுகாப்பு அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இலங்கை அரசின் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து பலகோடியைப் பெற்றது தொடர்பான குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

வடக்குக்கு அண்மையில் பயணம் செய்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரின் நடவடிக்கைகளும் லியம் பொக்ஸின் செயற்பாடுகளுக்கு உரமூட்டுவது போலவே அமைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஜேம்ஸ் வார்ட்டன் மேற்கொண்ட பயணத்தின் பிரதிபலிப்பானது தமிழ் மக்களுக்கு மிகப் பாதகமாகவே அமையும் எனத் தற்போது வடக்கில் நம்பப்படுகின்றது.

**இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில், அமைச்சின் முக்கிய பிரதிநிதி சகிதம் ஜேம்ஸ் வார்ட்டன் வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டார். யாழ்ப்பாணத்தில் அவர் கலந்து கொண்ட சந்திப்புகளில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் கலந்து கொண்டிருந்தார்.**

**அரச அதிகாரிகளின் வழிகாட்டலில் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய** முற்பட்டிருக்கிறார் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர். இவ்வாறான நிலையில் மக்களது பிரச்சினைகள், தேவைகள், எதிர்பார்ப்புகளை உரிய முறையில் வெளிப்படுத்துவது எப்படி? இது வெறும் துடைப்புச் சந்திப்பு என்றே சொல்ல வேண்டும்.

உள்நாட்டலுவல்கள், பொதுநிர்வாக அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமையவே யாழ்.அரச அதிபர் பிரிட்டன் குழுவினருடன் இணைந்து கொண்டதாகவும் அறிய முடிகிறது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தரவை அடுத்தே யாழ்.அரச அதிபருக்கும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையிலான சந்திப்பை வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நடத்த வேண்டி ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

முன்னாள் இராணுவ அதிகாரியான வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி முன்னிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரும் எதுவித மறுப்பும் இன்றி அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளார்.

**இதன்மூலம் வடக்கில் இராணுவ அடக்குமுறை இருக்க வேண்டும் என்பதற்கான ஆசியை பிரிட்டன் மறைமுகமாக வழங்கியுள்ளதா என்ற கேள்வி குடாநாட்டு மக்களிடம் எழுந்துள்ளது.**

**அது மட்டுமன்றிப் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்தித்த தரப்புகள், சந்திப்பின்போது கேட்டறியப்பட்ட விடயங்கள் ஆகியனவும் பிரிட்டனின் முகத்திரையைக் கிழித்துள்ளன.**

யாழ்.ஆயர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஆகிய தரப்புகளுடனான சந்திப்பின்போது தமிழ் மக்களின் நிலைப்பாடு, அரசியல் அபிலாசைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தப்பட்டது. அப்போதெல்லாம் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரின் கை குறிப்பெடுக்கத் தவறிவிட்டது. அத்துடன் ஏனோதானோ என்ற ஓர் அலட்சியப் போக்குடனேயே இந்தச் சந்திப்புகளில் அவர் கலந்து கொண்டதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தமிழ் மக்கள் எப்படி நோக்குகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் விடயத்தில் தாயக மக்களின் நிலைப்பாடு என்ன? ஆகிய விடயங்களைக் கேட்டறிவதில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் அதிக ஆர்வம் காட்டியுள்ளார்.

**வேடிக்கையான விடயம் என்னவென்றால் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திப்பதை விரும்பாத பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சுற்றுலா மேற்கொண்ட யாழ்.நகருக்கு வந்திருந்த சிங்கள மக்களுடன் உரையாடுவதற்கு நேரம் ஒதுக்கியிருந்தார்.**

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் விடயத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரியப்படுத்த விரும்பாமலிருந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர், அரசியல் தந்திரோபாய நகர்வுக்கான திடீர் அழைப்பொன்றை விடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்தார்.

இந்தத் திடீர் அழைப்புக் காரணமாக கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள முடியாது போனது.


**ஆயினும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவர் கொழும்பில் தேடிச் சென்று சந்தித்திருக்கிறார். 40 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதும், அப்படி யாரும் கொல்லப்படவில்லை என அரசுக்கு வக்காலத்துப் பாடும் அமைச்சர் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருக்கு என்னவெல்லாம் கூறியிருப்பாரோ தெரியவில்லை.**

**இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேசத்தின் முன்னிலையில் பக்கச் சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பல தரப்புகளும் தற்போது கோரி வருகின்றன.** இந்த விடயத்தில் பிரிட்டனும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துவருகிறது. பிரிட்டனில் உள்ள தமிழ் மக்கள் பேரவையும் இதனை வலியுறுத்துகிறது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் கொந்தளிப்புகளைக் கட்டுப்படுத்தத் தாயக மக்களின் உணர்வுகளை அறிவது என்ற நோக்கத்துடனும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் இங்கு வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஆக பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரின் பயணம் தமிழ் மக்களுக்கு ஆபத்தான ஒன்றாகவே அமைந்திருக்கிறது என்பது வெளிப்படை.*

# நோய் மீதே வாழ்வு

■ விகேளம்



இறுதிப்போர் முடிந்து மூன்று வருடங்களை எட்டும் நிலையில் வன்னியில் புதிய வடிவங்களில் மக்கள் வாழ்க்கையுடன் போராட வேண்டியவர்களாகவே இன்னமும் இருக்கின்றனர். வாழ்வியல் ரீதியாக இந்த மக்கள் எதிர்நோக்கியுள்ள பல்வேறு வகையான நெருக்கடிகள், இருப்புக்கான கேள்விக் குறிகளை ஏற்படுத்திவருகின்றன. போரின் கோர முகங்களை மறந்து புதிய வாழ்வுக்குள் நுழைய எத்தனிக்கும் ஒரு சமூகத்துக்கு, அதிலிருந்து மீள முடியாத அளவுக்கு அரசின் அபிவிருத்திப் பணிகள் இருக்கின்றன.

இன விடுதலைக்காகப் போராடிய அமைப்பு தோற்கடிக்கப்பட்ட நிலையில், அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களும் திட்டமிட்டு பழிவாங்கப்படும் சூழலில் வாழ வேண்டியவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். போரின்போது உறவுகள், உடைமைகளை இழந்து உடல்ரீதியாகவும் மனோரீதியாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் வன்மப் பிடியிலிருந்து எங்களை விட்டு விடுங்கள் என்ற நிலைப்பாட்டுடன் வாழ்கின்றனர்.

போரின்போது மக்கள் எதிர்கொண்ட நிலைமைகள் இப்போது அவர்களுக்குத் தாக்கத்தைக் கொடுத்துவருகின்றன. குறிப்பாக இடவசதி, போதிய காற்றோட்டம், சுத்தமான குடிதண்ணீர், சுகாதாரமான கழிப்பறை வசதி, போசாக்கான உணவு போன்ற அடிப்படைத் தேவைகள் இறுதி போர் நடைபெற்ற போது மக்களுக்குக் கிடைக்கவில்லை.

போரின்போது கொல்லப்பட்டவர்களின் உடலங்களைச் சுகாதாரமான முறையில் அடக்கம் செய்ய மக்களுக்கு அவகாசம் இருக்கவில்லை. தமக்கு முன்னால் இறந்தவர்களை உறவுகள் தாம் இருந்த பங்கருக்குள் போட்டு மூடிவிட்டு வேறு இடத்துக்கு நகர்வது மட்டுமே இயலுமான ஒன்றாக அப்போது இருந்தது. கைவிடப்பட்ட உடலங்களைக் காகங்களும் நாய்களும் உண்ணவேண்டிய நிலை ஏற்பட்டது. அழுகிய உடல்களின் நாற்றமும், நச்சுக் குண்டுகளின் புகைகளும் மக்களின் சுவாசமாக மாறின.

வன்னிப்போரில் சர்வதேசரீதியில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களான கிளஸ்ட்டர் குண்டுகளும், நச்சுக்குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன.

போரில் இருந்து மீண்டு நலன்புரி முகாம்களுக்குச் சென்ற மக்கள் தொடர்ந்தும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர். போர்முடிந்து மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இப்போது புதிய நோய்கள் பரவ ஆரம்பித்து மக்களை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன.

ஏற்கனவே தொற்றுநோய்கள், ஆபத்தான நோய்கள் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக வைத்தியர்கள் சுட்டிக்காட்டிய நிலையில் மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி வேண்டப்பட்டது. குறிப்பாக போரால் பாதிக்கப்பட்டவர்களில் அனேகமானவர்களுக்கு காசநோய் பாதிப்பு ஏற்பட்டிருப்பது வைத்திய அறிக்கைகளில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இப்போது கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு வகைக் காய்ச்சலினால் கடந்த இரு வாரங்களில் மட்டும் ஏழு பேர் மரணமாகியதுடன், இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். நேற்றைய தினம் (சனிக்கிழமை) கிளிநொச்சி வைத்தியசாலையைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் இந்தக் காய்ச்சலுக்கு இலக்காகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சுவாசத்துடன் தொடர்புடைய இந்தக் காய்ச்சல் சகல வயதினரையும் தாக்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு அல்லது மூன்று நாள் காய்ச்சலுடனேயே இந்த மரணம் நிகழ்வதால் காய்ச்சல் ஏற்பட்ட உடனேயே வைத்தியர்களை நாடுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வன்னியில் உள்ள பல மருத்துவமனைகள் போதிய அடிப் படைவசதிகள் இன்றியே இயங்கிவருகின்றன. இதனால் அந்த மருத்துவமனைகளில் மக்கள் சாதாரண காய்ச்சலுக்குக்கூட மருந்தைப் பெறுவது சிரமமாக உள்ளது. எனவே மக்கள் ஆபத்தான நோய் பரவலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தொடர்ந்தும் போராடவேண்டியுள்ளது. *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




உலகின் மிக அழகான பெண், ஒஸ்கார், கோல்டன் குளோப், அக்கடமி விருதுகள் குவித்தவர் ஹொலிவூட் பட உலகின் முடிசூடா மன்னி அஞ்சலினா ஜோலி. அவரது நடிப்பு, இயக்கத்தில் வெளியாகி இருக்கும் படம் 'இன்த லான்ட் ஒவ் பிளட் அன்ட் ஹனி'. தேனும் இரத்தமும் ஓடும் மண் என்று தமிழ்ப்படுத்திக்கொள்ளலாம் படத் தலைப்பை. டிசெம்பர் 23ஆம் திகதி அமெரிக்காவில் மட்டும் வெளியானது இந்தப் படம். அஞ்சலினா இயக்கிய முதல் படம் என்ற பெருமைக்கு அப்பால், பொஸ்னியப் போரின் பின்னணியில் அழகான ஒரு காதல் கதை சொல்லப்பட்டிருக்கிறது படத்தில். போர் பெண்களை எப்படியெல்லாம் பாதிக்கிறது, போரின்போது ஆண்கள் பெண்களை எப்படியெல்லாம் பார்க்கிறார்கள், வதைக்கிறார்கள், பயன்படுத்துகிறார்கள் என்றெல்லாம் பேசும் இந்தப் படத்துக்கு போரால் பாதிக்கப்பட்ட பெண்களிடம் இருந்து அமோக வரவேற்புக் கிடைத்துள்ளது. ஏனெனில் பாலியல் வன்புணர்வுகள் போரின்போது எப்படி ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பன பற்றி அழுத்தமான சோகத்துடன் பேசுகிறது படம்.

அமெரிக்காவில் வெப்பநிலை ஏகத்துக்கு எகிறியிருக்கிறது. நேற்று அங்கு 80 பரனைட் உச்ச வெப்பம் பதிவாகி இருக்கிறது. சூடு தாங்காமல் பரிதவித்துப்போயிருக்கும் அமெரிக்கர்கள், 2006 ஆண்டில் மட்டுமே இந்தளவுக்கு வெப்பம் அதிகரித்ததாகக் கூறித் திரிகிறார்கள். கடும் வெப்பத்தைத் தந்த சூரியன் மறைவதைப் படமெடுத்துப் பதிவு செய்வதிலும் ஆர்வமாக உள்ளார்கள்.





முகப்புத்தகம் என்கிற 'பேஸ்புக்' தனது பயனாளர்களின் தகவல் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வினோதமான திட்டத்தை அறிவித்துள்ளது. கணினிமென்பொருளினுள் புகுந்து திருடும் நிபுணர்களான 'ஹக்கேர்ஸ்' எவராவது தமது பாதுகாப்புத் தளங்களை உடைத்து உள்நுழையும் ஒவ்வொரு ஓட்டைகளுக்கும் தலா 500 டொலர் உடனடிப் பரிசு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜெர் டுவானி ஒரு காலத்தில் சிறுவர் போராளி. தென்சூடானின் ஆயிரக்கணக்கான 'காணாமற்போன பையன்'களில் ஒருவர். பெற்றோரிடமிருந்து பலவந்தமாகப் பிரிக்கப்பட்டு ஆயுதக் குழு ஒன்றில் இணைக்கப்பட்டார். பலத்த போராட்டங்கள், துன்பங்களுக்குப் பின்னர் ஒருவாறு தப்பி அமெரிக்கா சென்ற அவர் நியூயோர்க் நகரில் இப்போது நடிகராகவும் மிகச் சிறந்த மாடலாகவும் இருக்கிறார். ஆறு மாதங்களுக்கு முன்னர் தென்சூடான் தனி நாடாகிய பின்னர் அண்மையில் அங்கு சென்ற டுவானி, தனது புதிய தாய்நாடு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறி இருக்கிறார். தாய் நாடு சுதந்திரம் அடைந்தமை குறித்தும் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்.

இந்தச் சிறுவன் பெயர் மஹ்மூட் அகமட். லிபியாவின் மேற்கு நகரான சிந்தானில் ஒருநாள் இவனது எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிட்டது. தன் வாழ்நாளில் என்றுமே பார்த்திராத ஒரு பொருளைத் தூக்கிப் பார்க்கப் போக, அது வெடித்து அவனது இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டு விட்டது. இப்போது பிளாஸ்ரிக் கையைப் பொருத்திக் கொண்டு வெடிப்பொருள்கள் பற்றிய விழிப்புணர்வுக் கல்வி வகுப்புகளுக்குச் சென்று வருகின்றார் அகமட். லிபியத் தலைவர் மஹ்மூத் கடாபியைப் பதவியில் இருந்து அகற்றும் போராட்டத்தின் பக்கவிளைவு அகமட்.

வியட்நாமைச் சேர்ந்த குன்ஜென் டுய் ஹய் என்பவருக்கு திடீரென எப்படி என்றே தெரியாமல் வகைதொகையின்றி சதை வளர்ச்சி கண்டது. அவரது உடல் எடையை விடப் பல மடங்காக வளர்ந்த அந்தக் கட்டியின் நிறை 90 கிலோ கிராம். சில நாள்களுக்கு முன்னர்தான் அந்தக் கட்டியை மருத்துவர்கள் வெட்டி அகற்றினார்கள். சத்திரசிகிச்சையின் பின்னர் அவர் ஆரோக்கியத்துடன் உள்ளார் என்று மருத்துவர்கள் அறிவித்திருப்பது டுய் ஹய்யின் மனைவிக்குப் பெரும் ஆறுதலைத் தந்திருக்கிறது.








வங்குரோத்து நிலையை அடைந்துவிட்ட இலங்கைக் கிரிக்கெட் பணம் சம்பாதிப்பதற்காக ஐ.பி.எல். ஆட்டங்களை இலங்கையில் நடத்துவதற்கான பேரங்களில் ஈடுபட்டுள்ளது.

சிட்னியில் நடக்கும் 100ஆவது ஆட்டத்தில் தனது 100ஆவது 100 ஓட்டங்களைப் பூர்த்தி செய்வார் என்று 3 நூறுகள் ஒன்று சேரும் என்ற ரசிகர்களின் எதிர்பார்ப்பை பொய்யாக்கி விட்டார் மாஸ்டர் பட்ஸ்மன் சச்சின் டெண்டுல்கர். 80 ஓட்டங்களை மட்டும் பெற்றுவிட்டு, நான் சதத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று சொல்லி இருக்கிறார் சச்சின். "நீங்கள் எப்போது கவலைப்பட்டீர்கள். உங்களுக்காக வேலைமினக்கெட்டு தொலைக்காட்சி முன் தவம் கிடக்கும் நாங்களல்லவா கவலைப்படுகிறோம்" என்று குமுறுகிறார்கள் ரசிகர்கள்.




உலகப் பொலிஸ்காரன் அமெரிக்கா, ஈழப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்குள்ளும் மூக்கை நுழைத்துக் கொண்டு பிரச்சினைப்படுத்திக் கொண்டிருந்தாலும் அந்த நாட்டில் வேலையில்லாதோரின் எண்ணிக்கையைக் குறைக்க முடியவில்லை. ஒரு கோடியே 26 லட்சத்து 13 ஆயிரம் பேர் இன்னும் வேலை இன்றி இருக்கிறார்கள். ஆனால் கடந்த 3 வருடங்களில் இதுதான் மிகக் குறைந்த தொகை என்று பெருமூச்சு விட்டிருக்கிறது அமெரிக்க நிர்வாகம். 2009ஆம் ஆண்டு பொருளாதாரச் சரிவுக்குப் பிறகு வேலையற்றவர்களின் எண்ணிக்கை கடகடவென அதிகரித்தது. 2010ஆம் ஆண்டில் அது ஒரு கோடியே 48 லட்சத்து 25 ஆயிரமாக 9.6 என்ற விகிதத்தை எட்டியது. டிசெம்பர் மாதத்தில் இந்த விகிதம் 8.5 ஆகியிருப்பது அமெரிக்கப் பொருளாதாரம் மெல்ல மீண்டு வருகிறது என்பதைக் காட்டுகிறது [illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில புலி வெளியில எலி

■ டிலீப்



சம காலத்தில் கடந்த வாரம் இடம்பெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களும் ஆசிய அணிகளுக்கு பாதகமாகவே முடிந்திருக்கின்றன. அதிலும் அதற்கு முந்தைய ஆட்டத்தில் இலங்கை அணி தென்னாபிரிக்காவில் வரலாற்று வெற்றியைப் பதிவு செய்த அதே வேளை இந்தியா அன்னிய மண்ணில் தொடர்ச்சியாக 5 ஆவது தோல்வியை பெற்றுக் கொண்டது.

இதில் இலங்கை அணியைப் பொறுத்த வரையில் சொந்த மண்ணிலும் சரி, அன்னிய மண்ணிலும் சரி உலகக் கிண்ணத்துக்குப் பின்னர் தொடர்ந்து தோல்விகளை மட்டுமே சந்தித்து வருகின்றது. அணியின் தலைமைப் பதவி மாற்றப்படும் வரையில் இலங்கையின் சரிவு தொடரத்தான் போகின்றது.

ஆனால் இந்திய அணியின் நிலைமை வேறு. உலக் கிண்ணத்தை வெற்றி கொண்ட பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் - பலவீனமான - அணியுடன் சாதித்து வெற்றியை தனதாக்கியது. அத்துடன் இந்தியாவின் அன்னிய மண்ணிலான வெற்றி முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் இங்கிலாந்துக்கு சென்ற இந்திய அணிக்கு தாங்க முடியாத அளவுக்கு வேதனையை இங்கிலாந்து வீரர்கள் கொடுத்து விட்டனர்.

எந்த ஒரு ஆட்டத் திலும் வெல்ல முடியாமல் டெஸ்டில் இருந்த முதலிடத்தையும் பறிகொடுத்து தாய்மண் திரும்பியமைதான் மிச்சம்.

ஆனால் தாய் மண்ணில் இங்கிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடரில் சரியான பதிலடி கொடுத்ததுடன், மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான டெஸ்ட் ஆட்டத்திலும், ஒரு நாள் ஆட்டத்திலும் சாதித்தது.

இதன் பின்னர் ஆஸ்திரேலிய அணியுடனான தொடர் ஆரம்பமானது. ஆஸ்திரேலிய அணியோ மிகவும் ஒரு பலவீனமான நிலையிலேயே இந்திய அணியை எதிர்கொண்டது. இந்தியப் பெருந் தலைகள் அதுவும் பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட இந்தியாவை, 'பிள்ளைப் பூச்சிகளான' அறிமுகப் பந்து வீச்சாளர்களைக் கொண்டு சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்திய அணியை சாணக்கியமாக மடக்கி இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணி தனது முத்திரையைப் பதித்து விட்டது. இந்திய அணியைப் பொறுத்த வரையில் ஓர் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் சாதித்தால், பந்து வீச்சில் சாதிக்க மாட்டார்கள், துடுப்பாட்டத்தில் படு மோசமாக சொதப்பினால் பந்து வீச்சில் ஓரளவு சாதிப்பார்கள். இவ்வாறே இந்திய அணி தனது இரண்டு டெஸ்ட் ஆட்டங்களையும் எதிர்கொண்டது.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் சொற்ப ஓட்டங்களுக்குள் சுருண்டு, பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி ஆரம்பத்தில் தடுமாறிய போது உரிய வகையில் அழுத்தத்தை பிரயோகித்து கட்டுப் படுத்தாமல் விட்டு பின்னர் எப்போதடா ஆஸ்திரேலிய அணி ஆட்டத்தை இடை நிறுத்தும் என்னும் அளவுக்கு இந்தியர்களை ஏங்க வைத்தது இந்திய அணி.

டெஸ்ட் ஆட்டத்தில் டோனியின் தலைமைத்துவம் மீது பலருக்கும் சந்தேகங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் இந்திய அணிக்கு உண்மையில் மிகச் சிறப்பான சகல துறை ஆட்டக்காரராக தமிழக வீரர் அஸ்வின் வாய்திருக்கின்றார். ஆஸ்திரேலிய மண்ணில் அஸ்வினின் துடுப்பாட்டம் அசத்தும் படியாக இருந்தது. எதிர்கால இந்தியாவுக்கு மிகச் சிறந்த வீரராக அஸ்வின் அமைந்திருக்கின்றார்.

சதத்தில் சதம் அடிக்கும் சச்சினின் இலக்கு கனவாகவே கடந்து விடப் போகின்றதா என்ற எண்ணம் எழுகின்றது. உண்மையில் இதுவும் இந்திய அணியின் தோல்விக்குரிய காரணங்களிலொன்று. ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்திய அணித்தலைவர் டோனி தெரிவிக்கையில், ' சச்சின் சதம் அடிக்கும் வரையில் ஒட்டுமொத்த அணிக்கும் பதட்டமாகவே இருக்கும், அவர் முதலாவது ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸிலேயே சதம் அடித்து விட்டால் எங்களுக்கு பிரச்சினை இருக்காது '. டோனியின் கருத்தின் தார்பரியம் இந்தியாவின் தோல்விக்கு பின்னால் இழையோடிக் கொண்டிருக்கின்றது.

தொடரை பறிகொடுப்பதை தவிர்பதற்கு அடுத்த ஆட்டத்திலாவது இந்திய அணி வெற்றி பெறவேண்டும். மத்திய வரிசை துடுப்பாட்டத்தில் மாற்றம் செய்து ஹோக்லியை நீக்கி, புதிய அணியாக பரிணமித்தால் இந்திய அணி வெளியிலும் புலியாகலாம். ✱

# தமிழருக்காக வாழ்ந்தவர்

**கடந்த வியாழக்கிழமை மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு தினம். இவரது நினைவாக 2000.8.12 ஆம் திகதி அவரின் நினைவாக கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் சண்டே லீடர் பிரதம பதிப்பாசிரியர் அமரர் லசந்த விக்கிரமதுங்க ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கத்தின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது**



குமார் தமிழ் மக்களின் உயர்வை முன்னிறுத்தப் பாடுபடும் ஒரு கிளர்ச்சிக்காரராக விளங்கினார். எங்கே அநீதி இருந்ததோ, தமிழ் மக்களுக்கெதிரானதாயிருந்தாலும் சரி, முஸ்லிம் மக்களுக்கெதிரான தாயிருந்தாலும் சரி அல்லது சிங்கள மக்களுக்கெதிரானதாயிருந்தாலும் சரி, அங்கே குமார் போராடத் தயாராய் இருந்தார். காலத்தினதும் பதவியில் இருந்த அரசினதும் சூழ் நிலையில் மக்கள் குமாரை ஒரு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுதாபி என முத்திரை குத்தினர்.

ஒரேயொரு நோக்கத்திற்காகக் குமார் உண்மையாயுழைத்தார், அது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கமாகும். ஓர் உதாரணத்தை உங்களுக்கு நான் தருகின்றேன். 1988 ஜனாதிபதித் தேர்தலின்போது, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட அனேக கட்சிகளுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டு ஜனநாயக மக்கள் கூட்டமைப்பு என்னும் அமைப்பை உருவாக்கியது. இதற்கென அயரா முயற்சியெடுத்து ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்துக் கொண்டிருந்த குமார், அதில் இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்வையும் உள்ளடக்கியிருந்தார். இத்தீர்மானத்திற்கு வந்த கையோடு, தமிழீழ விடுதலைப் புலிகளை இச்செயன்முறைக்குக் கொண்டுவராவிடில் எந்தத் தீர்வும் சாத்தியமாகாது என்ற நிலைப்பாட்டையும் எடுத்திருந்த அவர், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவியாய் இருந்த திருமதி பண்டாரநாயக்காவிடம், என் முன்னிலையில், இத்தீர்வுப் பொதியை நான் எல்.ரி.ரி.இயிடம் எடுத்துச் சொல்லட்டுமா? அப்படியாயின், தீர்வினை ஏற்படுத்துவதில் தாங்கள் உண்மையான அர்ப்பணிப் போடிருந்தால், உங்கள் மகனை என்னோடு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டார். அப்போதைய ஜனாதிபதி வேட்பாளராக இருந்த திருமதி பண்டாரநாயக்கா அம்மையாரும் இதற்கு உடனடியாகச் சம்மதம் தெரிவித்தார். வன்னி நோக்கிய கடினமான ஒரு பயணத்தை நாம் மேற்கொண்டோம். அத்தூதுக்குழுவில் நானும் இணைந்திருந்தேன். அனுருத்த ரத்வத்த, அநுரா பண்டார, காலஞ்சென்ற தர்மசிறி சேனநாயக்க, குமார் பொன்னம்பலம் மற்றும் திரு.மோதிலால் நேரு ஆகியோர் அத்தூதுக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

1994இல் நிகழ்வுகள் வேறுவிதமாக அமைந்திருந்தன. அரசியலமைப்புப் பற்றி அரங்கேறிய நாடகமெல்லாம் பொதுமக்கள் பணத்தைச் செலவிடுவதற்கான ஒரு நாடகமேயன்றி வேறில்லையென்பதைக் குமார் தொடக்கத்திலிருந்தே அறிந்திருந்தார். கலந்துரையாடல்களுக்காக வைக்கிற நீங்கள் அனுப்ப விரும்பும் தீர்வுப்பொதி தான் என்ன? என்று அரசாங்கத்தில் ஓர் அமைச்சராக இருந்த அஷ்ரப்பை குமார் கேட்டபோது, அப்படிப்பட்ட எந்தத் தீர்வுப் பொதியும் கிடையாது என, அவர் கூறியதாக, தீர்வொன்று இல்லாமை பற்றிக் குமாருடன் பேசியபோது அவர் கூறியது நினைவுக்கு வருகிறது. குமார் தனது போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்தார். அவர் பகிரங்கமாகவே பேசினார். குமார் கூறியவற்றோடு நான் எப்போதும் இணங்கிப் போகவில்லை. ஆனால், அவர் எப்போதும் என்னிடம் கூறுவார், லசந்த, இவ்விடயங்கள் குறித்து நாம் எப்போதும் வாதம் புரியலாம், ஆனால், அதற்கு முன் நாம் என்ன கூறுகிறோம் என்பதற்கு முதலில் செவிகொடுங்கள் என்று ரி.என்.எல். நிகழ்ச்சியொன்றில் குமார் தோன்றும் போதெல்லாம் அதைக் கேட்பதற்கு மிகப் பெரிய கூட்டம் திரண்டது என்று என்னால் கூறமுடியும். குமார் கூறியவற்றுடன் இணங்காதவர்கள் அவரை வெறுக்கத் துடித்தனர். ஆனாலும், அவர் கூறுவதற்கு எப்போதும் செவிமடுத்தனர். உறுதிப்பாட்டில் அவர் வெளிப்படுத்திய தைரியத்தை அவர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அதை அவர்கள் வியந்தனர்.

தனது கோட்பாடுகளையும் நிலைப்பாட்டையும் விட்டுக்கொடுத்து இலகுவாகவே முடிக்குரிய ஒரு வழக்கறிஞராக அவர் மாறியிருக்கலாம். தமிழர் போராட்டத்தைப் பலிகொடுத்து இலகுவாகவே அவர் நாடாளுமன்றம் சென்றிருக்கலாம். ஆனால், குமார் எடுத்த காரியத்தில் உறுதியாக நிற்பவர். அற்ப பதவிகளுக்காக தன் சொந்தச் சமூகத்தையே விற்கும் நிலைப்பாட்டில் அவர் இருக்கவில்லை. நீடித்து நிலைக்கும் ஒரு தீர்வையே குமார் நம்பியிருந்தார். அடிக்கடி நான் மேற்கொள்ளும் உரையாடல்களிலிருந்து அறியக்கூடியதாயிருந்தது. என்னவெனில், தமிழர்களுக்கு நீதியான ஒரு தீர்வு கிட்டிய எதிர் காலத்தில் கிடைக்கப் போவதில்லை என்பதை காலஞ் செல்லச் செல்லக் குமார் உணர்ந்திருந்தார் என்பதாகும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த சில நாட்களின் பின்னர் குமார் என்னை அழைத்து லசந்த, உங்களுக்கு உயிராபத்து இருக்கலாம். எனவே, நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் வந்து எனது வீட்டில் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன் என்று கூறினார். அவரது உயிருக்கே ஆபத்து இருக்கையில், அவரது வீட்டில் எனக்கு அடைக்கலம் தருவதன் மூலம் அவர் தனக்கே ஆபத்தை வரவழைத்துக் கொள்வதையிட்டு அவர் கிஞ்சித்தும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து தேசிய தொலைக்காட்சியூடாக ஜனாதிபதி தேசத்திற்கு ஆற்றிய உரையின் பின்னர், குமார் ஜனாதிபதிக்குப் பதிலளித்தார். பலத்த அடியாக அப்பதில் அமைந்திருந்தது. குமார் அப்பதிலை என்னிடம் கொணர்ந்து, லசந்த, தயவுசெய்து இதை உங்களால் பிரசுரிக்க முடியுமா? எனக் கேட்டார். குமாரின் ஆக்கங்களைச் சாதாரணமாக நான் எப்போதுமே பிரசுரிப்பதுண்டு. ஆனால், அந்த வேளையில் நான் குமாருக்கு அறிவுரை கூறினேன்.

ஒரு நண்பன் என்றவகையில் தனிப்பட்ட முறையில் குமார் எனக்கு எவ்வளவோ செய்தார். அதே உதவியையும் ஒத்துழைப்பையும் குமார் உயிரோடிருக்கையில் அவருக்கு வழங்க எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனால், குமாரின் ஒரு நண்பர் என்ற வகையிலும் ஒரு ஊடகவியலாளர் என்ற வகையிலும் ஊடகத்துறையில் உள்ள குமாரின் ஏனைய நண்பர்களுடன் இணைந்து குமாரின் நினைவைக் களங்கப்படுத்த விடமாட்டோம் என்று உங்களுக்கு நாம் உறுதிகூறுகின்றோம்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் சிங்கள மக்களுக்கு எதிரானவர் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த அரசின் இராஜதந்திரம்

■ தில்லாலங்கடி

'எனக்கு அந்த ஐஸ்கீரிம் கப் தான் வேணும், அது என்ன விலை ? , தொண்ணூறு ரூபா, உனக்கு எந்த நாளும் ஐஸ்கீரிம் தேவையே சும்மா பேசாம வாயை மூடிக் கொண்டு வா. இண்டைக்கு ஒண்டும் வாங்கித் தரேலாது பேசாம வா..'

தந்தையின் கண்டிப்பான சொல்லுக்கு அந்தப் பிஞ்சின் வாய் அடங்கிப் போய்விட்டது. இறுதியில் தந்தை அருகிலிருந்த கடையில் இருபது ரூபா 'கோன் ஐஸ்கீரீம்' வாங்கிக் கொடுத்ததும் அந்தப் பிஞ்சின் முகத்தில் மகிழ்ச்சி.

அந்தப் பிஞ்சைப் பொறுத்த வரையில் ஒண்டுமே கிடைக்காதென்ற நிலையில் இதாவது கிடைத்ததே என்றே மகிழ்ச்சி. தந்தையைப் பொறுத்த வரையில் அதன் நச்சரிப்பை ஒருவாறு நிறுத்தியாகி விட்டது. நல்லூர் திருவிழா காலங்களில் பின் வீதியில் அடிக்கடி இடம்பெறும் சம்பவங்களில் இதுவுமொன்று.

இந்த நிலையில்தான் எங்களின் தமிழினமும் நிற்கின்றது என்பது எங்களுக்கு இன்னும் புரியவில்லை. தனித் தமிழீழம் கேட்டுத் தொடங்கிய எங்களின் போராட்டம் இடையில் வந்த அதிகாரப் பரவலாக்கத்தையும் தூக்கி எறிந்து இறுதியில் இருக்கின்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்த போராட வேண்டி அதற்காக பேச்சும் நடத்த வேண்டியிருக்கின்றது.

இதனைவிட தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு, பாட வைப்பதற்று புதியதொரு போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. எங்களைப்பற்றி எதுவுமே இல்லாத தேசிய கீதத்திற்கு நாங்கள் ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்படியிருக்கையில் அதனை தமிழில் பாடினாலென்ன, சிங்களத்தில் பாடினாலென்ன ? இதற்கெல்லாம் போராடத் தொடங்கியதால்தான் இன்று போராட வேண்டிய விடயத்தை விட்டு விட்டு நிர்கதியாகி நிற்கின்றோம்.

இன்று பத்திரிகைகளின் முன் பக்கத்தில் கொட்டையெழுத்துக்களில், காணி - பொலிஸ் அதிகாரங்கள் தேவை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, காணி - பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது - அரசு. இவைதான் இன்றை செய்திகளாக மக்களை சென்றடைகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரையில் அரசுடன் பேச வேண்டிய கட்டாயத்தில் பேசிக் கொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசுடனான பேச்சின் போது கடந்த டிசெம்பர் மாதம், மாகாண சபையில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருக்கின்ற காணி - பொலிஸ் அதிகாரங்களை முன் வைத்தது. இதனை கேட்டதுதான் தாமதம் அரசில் உள்ள இனவாத வெறியர்களுக்கு நல்ல ஒரு விடயம் சப்பி மென்று துப்பக் கிடைத்து விட்டது.

இதனைவிட நியாயமான தீர்வு தருவேன் என்று சொன்ன மஹிந்தரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகள் கேட்டதையே கேட்கின்றனர் என்று கொக்கரித்தார். புலிகள் கேட்ட தமிழீழத்தை ஒரு வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டிருந்தால் நிலைமைய எண்ணிப் பார்க்கக் கூடமுடியாதிருக்கின்றது.

எங்கள் தமிழ்த் தலைமைகளும் எவ்வளவோ விடயங்களை கேட்டு சலித்து விட்டார்கள். இறுதியில் மாகாணசபையில் உள்ளடக்கப்பட்ட , நடைமுறைப்படுத்தப்படாது இருக்கின்ற அதிகாரங்களையாவது கேட்டுப் பார்ப்போம் என்று கேட்டனர். அதற்கே இவ்வளவு தூரம் கொந்தளிக்கின்ற ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களுக்கு எப்படி இனிவருங் காலங்களில் தீர்வைத் தரும்.

உண்மையில் இதில் கூட மஹிந்த ராஜபக்ஷ தனது இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்கின்றாரா என்று எண்ணத் தோன்றுகின்றது. தனது அமைச்சர்களை வைத்தே இந்த காணி - பொலிஸ் அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்கக் கூடாது என்று பரப்புரை செய்து அதனை ஊதிப் பெருப்பிக்க மஹிந்தர் முயலுகின்றார். மறுபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கு ஆதரவான சக்திகளை ஒன்று திரட்டி, அதிலும் சில அமைச்சர்களையும் கொண்டு அந்த அதிகாரங்கள் மாகாணசபைக்கு வேண்டுமென்று போராடுகின்றது.

இருக்கின்ற அதிகாரங்களையே பெரும் போரட்டத்தின் பின்னர் எங்களுக்காக வழங்குவது போல் பாசாங்கு செய்து மஹிந்தர் தருவார். அதனுடன் நாங்களும் ஏதோ ஒரு பெரு வெற்றியை சாதித்தவர்கள் போல், எங்களின் திறமையே நாங்களே புகழந்து தள்ளுவோம்.

ஆனால் உண்மையில் மஹிந்தர் எங்களுக்கு தேவையானதை தராமல், இருப்பதை போராட வைத்து பெற வைத்து விட்டு, நியாமானதை எங்களை கேட்கவிடாமல், தப்பித்துக் கொள்ளும் இராஜதந்திரத்தை செய்கின்றார் என்பது எங்களில் பலருக்கு தெரியாமல்தான் இருக்கின்றது. ✱

# அரசியல் ஆட்டம் போடும் நியமனங்கள்

■ உசிலமணி

இடமாற்றங்கள்,
நியமனங்கள்
தேவைக்கேற்ப
இடம்பெற
வேண்டிய
ஒன்றுதான். ஆனால்
இங்கு....?

இடமாற்றங்கள் இலங்கையில் என்றும் சர்சைக்குரியதாகவே இருக்க வேண்டும் என்பது எழுதாத தலைவிதி போல் தெரிகின்றது. ஆசிரிய இடமாற்றங்கள், அரச அதிகாரிகள் இடமாற்றங்கள் எல்லாமே அரசியல் மயப்படுத்தப்பட்ட பேரம் பேசும் சக்திகளினூடு நடத்தப்படுகின்றன. ' வலியது வாழும்' என்ற கோட்பாட்டுக்கு அமைய பேரம் பேசும் அரசியல் சக்திகள் பெரிய இடமாக இருந்தால் இந்த இடமாற்றங்கள் விரும்பியவாறே அமையும்.

### இடமாற்றச் சர்ச்சைகள்

ஆசிரிய இடமாற்றங்களில் எழுந்த சர்ச்சை அலை இன்னும் ஓய்வதற்குள் அடுத்து பிரதேச செயலர்களது இடமாற்றத்தில் மீண்டுமொரு சர்ச்சை வெளிக்கிளம்பியிருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட - மேற்கொள்ளப்படவுள்ள இடமாற்றங்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டு விட்டதாகவே பலரும் கருதுகின்றனர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த இடமாற்றங்களின் தீர்மானத்துக்கு அமைய ஒரு நிலையத்தில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் கடமையாற்றி பிரதேச செயலர்கள் இடமாற்றப்பட்டனர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி யாழ். மாவட்டத்தின் இடமாற்றம் தொடர்பான பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டன.

இதன் பின்பு அந்த இடமாற்றத்தை மேன்முறையீடு செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டு மீண்டும் டிசெம்பர் மாதம் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது. முதல் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்தினை எதிர்த்து யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரதேச செயலர்கள் மேன்முறையீடு செய்திருந்தாலும் அவை எவையுமே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முன்னர் வழங்கிய அதே இடமாற்றம்தான் மீண்டும் வழங்கப்பட்டது.

இந்த இடமாற்றங்கள் இந்த வருடம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதாக இருந்த போதும், சனத்தொகை மதிப்பீடு, நிதியாண்டு அறிக்கை என்பவற்றால் ஏப்ரல் மாதம் வரையில் ஒத்தி வைக்குமாறு அரச அதிபரினால் அமைச்சின் செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும் அமைச்சு, பெப்ரவரி மாதம் வரையிலே வழங்க முடியும் என்று அறிவித்திருந்தது.

இவற்றுக்கிடையில் இந்த இடமாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல் சில பெண் பிரதேச செயலர்கள் தமது அதிருப்தியை காட்டிக் கொண்டனர். அவர்கள் தாங்கள் விரும்பிய இடங்களை எப்படியேனும் அடைவோம் என்று சில இடங்களில் சவாலும் விடுத்திருக்கின்றனர். இந்த பெண் பிரதேச செயலர்களுக்கு ஆதரவாக மாவட்ட செயலகத்தின் இரண்டாம் நிலையிலுள்ள அதிகாரியும் ஒத்துச் செயற்பட்டிருக்கின்றார்.

### திரை மறைவு நாடகங்கள்

அதாவது குறித்த பெண் பிரதேச செயலாளர்கள் தனக்கு ஆதராவாக இருப்பதால் மாவட்டத்தின் முதல் நிலை அதிகாரி வேண்டுமென்று கஷ்டப் பிரதேசங்களில் அந்தப் பெண் பிரதேச செயலர்களை நியமனம் செய்திருப்பதாக இங்கே அமைச்சர் என்று இருக்கும் ஒருவருக்கு போட்டுக் குடுத்திருக்கிறார். அவரும் துடித்து அவர்கள் விரும்பும் இடங்களுக்கு தான் இடமாற்றம் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இவையனைத்தும் திரைமறைவில் இடம் பெற்றுக் கொண்டிருந்த நிலையில் திடீரென்று கடந்த நாலாம் திகதி மாலை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 6 பிரதேச செயலர்களது இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. அதில் முன்னர் தீர்மானிக்கப்பட்ட இடமாற்ற பட்டியல் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. மேன்முறையீட்டின் பின்னர்கூட மாற்றப்படாத பெயர் பட்டியல் தீடீரென மாற்றப்பட்டது பல சந்தேகங்களை தோற்றுவித்தது.

தீடீரென இடமாற்றம் வெளியிடப்பட்டமைக்கான காரணங்களை தேடிய போது அதிகாரிகள் நொண்டிக் காரணங்களை அடுக்கினர். கரவெட்டிப் பிரதேச செயலராக கடமையாற்றிய சத்தியசீலன் யாழ்ப்பாண பிரதேச செயலராக நியமிக்கப்பட்டிருந்த நிலையில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதால் அவர் அந்தப் பதவியை ஏற்க வேண்டியிருப்பதாலேயே இந்த இடமாற்றம் உடனடியாக 6 பேருக்கு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதனை விட புதிய இடமாற்றத்தின் பிரகாரம் தெல்லிப்பழை பிரதேச செயலராக திருமதி எழிழரசி அன்ரன் யோகநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார். முன்னர் ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பணிமனைக்கே இவர் நியமிக்கப்பட இருந்ததும், ஊர்காவற்துறை உதவி அரச அதிபராக கடமையாற்றிய கே.ஸ்ரீமோகனே தெல்லிப்பழை பிரதேச செயலராகவும் நியமிக்கப்பட இருந்தனர். இவ்வாறனதொரு நிலையிலேயே இவ்வாறான குத்துக்கரண இடமாற்றம் வெளியாகியிருந்தது.

இதில் குறித்த பெண் பிரதேச செயலர், தொடர்ந்தும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலேயே கடமையாற்ற கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இருப்பினும் அவருக்கு ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பணிமனை கிடைத்த பின்னர் அதனை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அதற்காக இவர் பலரை நாடிய போதும் இறுதியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் ஒருவரின் உதவியுடன், பச்சை நிற பெரும்பான்மை கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசீர்வாதத்துடன் இறுதியில் தனது இடமாற்றத்தை ஊர்காவற்துறையிலிருந்து மாற்றியிருந்தார்.

### ஆளுநரின் பணிப்பு

இதனை விட பிரதேச செயலர் இடமாற்றத்தின் போது பத்து வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்ததன் காரணமாக வெளிமாவட்டத்துக்கு இடமாற்றம் பெற வேண்டிய ஒரு பிரதேச செயலருக்கு, வடக்கு மாகாண அமைச்சின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பதவி கிடைத்திருக்கின்றது. இருப்பினும் அவரை இப்போது பதவியேற்க வேண்டாமென ஆளுநரும், அமைச்சரும் அவருக்கு பணிப்புரை விடுத்துள்ளனர். ஏனெனில் அவர் கடமையாற்றிய பிரதேச செயலகத்துக்கு நியமிக்கப்பட்ட பெண் பிரதேச செயலர் தான் தொடர்ந்தும் தற்போது கடமையாற்றும் பிரதேச செயலகத்திலேயே கடமையாற்ற விரும்புவதாக ஆளுநருக்கும், அமைச்சருக்கும் தெரிவித்திருக்கின்றார்.

எனவே மாகாண சபை கிடைத்தவர் வெளியே சென்றால்தானே அந்த இடத்துக்கு செல்ல வேண்டியேற்படும். மாகாண அமைச்சின் செயலாளர் பதவி கிடைத்தவர் இப்போது பதவி ஏற்காமல் இருந்தால், சிறிது காலத்தின் பின்னர் அந்தப் பெண் பிரதேச செயலர் தொடர்ந்தும் தனது இடத்திலேயே கடமையாற்றலாம் என அறிவுரை கூறியுள்ளனர்.

அரச அதிகாரிகளின் இடமாற்றத்திலேயே இவ்வளவு தூரம் அரசியல்வாதிகள் புகுந்து தமது அரசியலை செய்கின்றனர் என்றால் நிய மனங்களில் எவ்வளவு தூரம் அரசியலை புகுத்துவார்கள் என்பது இதிலிருந்தே ஊகிக்க முடியும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோபனா

# மக்கள் சேவையில் புதிய மாற்றம்

**வலி.வடக்குப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பொதுமக்கள் இடம்பெயர்வை சந்திக்க நேரிட்ட போது பிரதேச மக்களின் மருத்துவத் தேவையை இடைவிடாது மானிப்பாய், மந்திகை போன்ற வைத்தியசாலைகளில் தற்காலிகமாக சேவை வழங்கி வந்தது.**

மனிதனுடைய வாழ்வின் அடிப்படைத் தேவைகளின் ஒன்றாக மருத்துவத் தேவை உள்ளது. இந்த நிலையில் 25 வருடங்களாக மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்வதில் பல இடர்பாடுகளைச் சந்தித்த மக்களுக்கு கடந்த வாரம் முதல் விடிவு காலம் கிடைத்துள்ளது.

உளநோய், புற்றுநோய், பொதுவைத்தியம் என பல்வேறுபட்ட மருத்துவ சேவையை வழங்கும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்திற்கு முன்பாகவுள்ள ஒரு கட்டடத் தொகுதியில் தற்காலிக சேவையை கடந்த வருடங்களில் வழங்கி வந்தது.

வலி.வடக்குப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பொதுமக்கள் இடம்பெயர்வை சந்திக்க நேரிட்ட போது பிரதேச மக்களின் மருத்துவத் தேவையை இடைவிடாது மானிப்பாய், மந்திகை போன்ற வைத்தியசாலைகளில் தற்காலிகமாக சேவை வழங்கி வந்தது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வலி.வடக்குப் பிரதேசத்தில் மீளவும் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளதை அடுத்து அங்குள்ள மக்களின் மருத்துவ வசதியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் மீண்டும் தனது பழைய இடமான தெல்லிப்பழை வீதியிலுள்ள வறுத்தலையான் பகுதியில் கடந்த முதலாம் திகதி முதல் புதியகட்டடத் தொகுதியில் புதுப் பொலிவுடன் சேவையை வழங்க ஆரம்பித்துள்ளது.

**நிக்கொட், என்றிப், யுனிசெப், உலக வங்கி ஆகியவற்றின் நிதியுதவிகளுடன் பல மில்லியன் ரூபா செலவில் இந்த வைத்தியசாலை மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.**

**பொதுவைத்தியத்துக்கான கட்டடத் தொகுதி, புற்றுநோய்சிகிச்சைப் பிரிவு, உளநோய்ச் சிகிச்சைப்பிரிவு, எட்டு விடுதிக்கட்டடத் தொகுதிகள், இருமாடிக்கட்டடத் தொகுதிக் கட்டடங்கள் என புதிய கட்டடத் தொகுதியுடன் புதுப்பொலிவாகக் காட்சியளிக்கின்றது இந்த வைத்தியசாலை.**

வைத்தியசாலையின் தற்போதைய நிலைப்ப பழை ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியர் அ.ஜெயக்குமரன் அங்கு கடமைபுரியும் உத்தியோகத்தர் மற்றும் சிகிச்சை பெறுவோருடன் கலந்துரையாடிய போது அவர்கள் கூறிய கருத்துக்களில் சில.



**வைத்தியர் அ.ஜெயக்குமரன்**

பழைய கட்டடத் தொகுதியில் வைத்தியசாலை இயங்கிய போது வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவை மேற்கொள்வதிலும், விடுதிகளில் நோயாளிகளை தங்க வைப்பதிலும் பல இடர்பாடுகளைச் சந்தித்து வந்தோம். தற்போது உத்தியோகத்தர்கள் எந்தவித இடர்பாடுகளும் இல்லாமல் மக்களுக்கான சேவையை வழங்கி வருகின்றார்கள்.

**சிகிச்சை பெறுவோர் (ஒரு மாதத்தில்)**

ஒரு மாதத்தில் சராசரியாக ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கும், சராசரியாக மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கிளினிக்கில் சிகிச்சை பெறுவதற்கும், விடுதி அனுமதியில் சிகிச்சை பெறுவதற்கு சராசரியாக 800 பேரும் வந்து போகின்றனர்.

**சிகிச்சை பெறவருவோர் இருக்கும் பிரதேசம்**

குறிப்பாக சுன்னாகம், மாத்தனை, அம்பனை, புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றார்கள், உளநோய் சிகிச்சைப் பிரிவுக்கு யாழ். மாவட்டத்தின் பலதரப்பட்ட பிரதேசங்களிலும் இருந்து வருகை தருகிறார்கள்.

**நிறைவேற்றப்படாத தேவைகள்**

கட்டடப் பணிகள் முற்றுமுழுதாக முடிவடையவில்லை, முக்கியமாக உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதி அவசியமாகத் திருத்தப்பட வேண்டியுள்ளது. அத்துடன் இயன்மருத்துவக் கட்டடத் தொகுதி உடைந்த நிலையிலேயே உள்ளது.

**பற்றைக்காடாகவுள்ள இயன் மருத்துவப் பிரிவு**



இயன்மருத்துவப்பிரிவு இயங்காத நிலையில் காணப்படுவதால் அதற்கான சிகிச்சையை வழங்கமுடியாது உள்ளது. அத்துடன் வைத்தியசாலையின் முக்கிய பிரச்சினையாக இருப்பது வைத்தியசாலை வரையான பஸ் சேவை. கிளினிக் வருவோர், ஊழியர்கள் உட்பட அனைவரும் அரைகிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் நடக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக தனியார் மற்றும் அரச பேருந்து சேவை அதிகாரிகளுடன் பேசியுள்ளோம். ஆனால், அவை இன்றும் முற்றுமுழுதாக நிறைவேற்றப்படவில்லை. ஒரு சில பஸ் சேவை மாத்திரமே வைத்தியசாலை வரை வந்து போகின்றது.

**எதிர்கால வளர்ச்சித் திட்டம்**

வெகுவிரைவில் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப்பிரிவு (தியேட்டர்) அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. பிரதேச மக்கள் தமது மருத்துவத் தேவைக்காக இன்னொரு வைத்தியசாலையை நாட வேண்டிய தேவை இருக்காது. சகல நோய்களுக்கும் சிகிச்சை வழங்கக் கூடிய முறையில் எமது வைத்தியசாலையை உயர்த்துவதே எமது நோக்காகும்.

**பொதுமக்கள் சிலருடன்**

**சிவரஞ்சினி - (வயது 24)**

மீள்குடியமர்வு செய்யப்பட்டு எமது பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்ட பின்னர் மருந்து எடுக்க யாழ்ப்பாணம் போக வேண்டி இருந்தது. இப்ப அந்தப் பிரச்சினை இல்லை. பக்கத்தில வைத்தியசாலை இருப்பதால் வந்து போகக் கூடியதாக உள்ளது. நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து மருந்து எடுக்க வேண்டிய தேவை இப்ப இல்லை.





பரமேஸ்வரி-(வயது 62) - நான் கட்டுவனில் இருந்து இஞ்ச மருந்து எடுக்க வந்தனான். வைத்தியசாலையில இருந்து ஒரு கொஞ்சத் தூரம் தான் என்ர வீடு, இப்ப சந்தியில் இருந்து நடந்து வர வேணும். வருத்தம் எண்டு வாறம் நடந்து வாறத்துக்கிடேல்ல எல்லா வருத்தமும் இன்னும் கூடிடும். பஸ் பிரச்சினையை சீர்ப்படுத்தித் தந்தால் நல்லது.

**வைத்தியசாலை உத்தியோகத்தர்** - சன நெருக்கடி, இடநெருக்கடி எதுவும் இல்லை. மனத்திருப்தியா வேலை செய்கிறம். முதல் இருந்த இடத்தில் நாங்கள் நிண்டு வேலை செய்யவே இடம் இருக்காது. இப்ப அந்தப் பிரச்சினை இல்லை. பணியாளர்களும் நோயாளர்களுக்கு ஏற்றால் போல் இருக்கு. அறைப்பற்றாக்குறை என்பது கிடையாது. வைத்தியசாலை திருத்தம் செய்து புதுக்கட்டடத்தில் இயங்குவது சந்தோஷம்.

வைத்தியர் ஒருவர்- அநேகமான நோயாளிகள் காய்ச்சல் என்று தான் வருகினம். மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசம் என்பதால் மக்கள் அவதானிப்புடன் இருக்க வேண்டும். தமது ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும். இவற்றை பெரிய கட்டடத் தொகுதி தெல்லிப்பழைப் பிரதேச மக்களுக்குக் கிடைச்சிருக்கு. இன்னும் எத்தனை வைத்தியசாலைகள் திருத்தப்படாமல் இருக்கு இதனை மக்கள் சரியான வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஊழியர் பற்றாக்குறையோ, பொதுவைத்தியத்திற்கான எந்தவித இடர்பாடுகளோ இல்லாமல் புதிதாக சேவை வழங்கும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் குறைகளை அதிகாரிகள் இனங்கண்டு நிறைவேற்றினால் மக்கள் இன்னும் நலன் பெறுவர் என்பதை அனைவரதும் பொதுவான கோரிக்கையாகவுள்ளது. ✱

# நோயாளர்களுக்கு உணவளிக்கும் முறை

தேக நிலை நன்கிருக்கும் போது தேவைப்படும் போசணைச் சத்தோடு நோயாளிக்கு நோயால் ஏற்படும் சிதைவை நிவர்த்தி செய்வதற்கேற்ற வகையில் உணவை அளிக்கவேண்டும். நோய் சுகமாகி உடல் பழைய நிலையைத் திரும்பவும் அடைவது, அந்தக் காலத்தில் ஊட்டப்படும் உணவிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கிறது. எனவே உயிர்ச்சத்து, கனிப்பொருள், புரதம் போன்ற போசணைச் சத்து மிக்க உணவு வகைகளைப் போதியளவு அந்தக் காலத்தில் அளித்தல் அவசியமானது.

வைத்தியர் தவிர்க்க வேண்டுமெனக் குறித்தவற்றை நீக்கி, எல்லா வகைச் சத்துக்களையும் அளிக்க வல்ல மற்றைய மாற்று உணவு வகைகளை நோயாளிக்குப் பரிமாற வேண்டும். தவிர்க்கப்பட்ட உணவு அளிக்கக் கூடிய உயிர்ச்சத்தை வைத்தியரின் அனுமதிப்படி குளிசை மூலம் ஊட்டவேண்டும். நோயாளியின் உணவில் மிளகு, உப்பு, வினாகிரி போன்றவற்றை அதிகமாகச் சேர்க்கக்கூடாது. எந்தக் காரணங்கொண்டும் எவ்வகை எண்ணெயையும் உபயோகிக்கக்கூடாது. அவித்தல், நீராவியில் வி[illegible] போன்ற [illegible] முறையில் உணவை ஆக்கவேண்டும். பொரித்த உணவு வகைகளை அறவே நீக்கவேண்டும். சோற்றிலும் பார்க்கப் பாண், வறுத்தபாண், விசுக்கோத்து சிறந்தவை. சோறாகில் அதைக் குழையச் சமைத்துச் சூட்டுடன் பரிமாறவேண்டும். தேங்காச் சொட்டுப்பாலை (1ஆம் பால்) நீக்கி கப்பிப்பாலில் கறிகளை ஆக்கவேண்டும். இறைச்சியிலும் பார்க்க மீன், நெத்தலி, முட்டை விசேடமானவை நோயின் தன்மைக்கேற்ப உணவும் வித்தியாசப்படும்.

நோயாளிகளுக்கு நீர்ப்பதார்த்தமே அதி முக்கியமானது. நீர்ப்பதார்த்தம் தாக்கத்தைத் தணிப்பதோடு நோயாளியின் நாக்கு ஈரலிப்பாயிருப்பதற்கும், வாய் சுத்தமாயிருப்பதற்கும் உடலிலிருந்து நஞ்சை தேவையற்ற கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கும் உதவும்.

**நோயாளிக்கு உணவு ஊட்டும் போது கவனிக்க வேண்டிய சில விடயங்கள்:**

முக்கியமாக நோயாளி உண்ணக்கூடிய உணவையே ஆக்கவேண்டும். அல்லாவிடின், அது எவ்வளவு சிறந்ததாயினும் வீணாகவே போகும். மற்றையது உணவை சுவையுள்ளதாயும் இலகுவில் ஜீரணிக்கக்கூடியதாயும் ஆக்கவேண்டும் உணவுக்குத் தேவையான பொருள்கள் நல்ல தரமுள்ளனவாயிருக்கவேண்டும். அதற்காக மிகவும் விலை உயர்ந்தவற்றை வாங்கவேண்டுமென்றது அவசியமில்லை. கொடுக்கும் பணத்துக்குத் தகுந்ததாக கவனித்து வாங்கவேண்டும்.

சரியான வேளைகளில் உணவு அளிக்கப்படல் வேண்டும். அப்படியான நேரத்தில் நோயாளி நித்திரையாயிருந்தால் அவரது நித்திரையைக் கலைக்கக்கூடாது அவர் எழுந்தவுடன் உண்ணக்கூடிய வகையில் உணவு ஆயத்தமாயிருக்கவேண்டும். நோயாளி உணவை விருப்புடன் உண்ணக்கூடிய விதம், சூழ்நிலை, சுற்றுப்புற சூழல் வசீகரமாயிருக்கவேண்டும். வாய் கொப்பளித்து, கைகால் அலம்பிச் சுத்தம் செய்த பின் நோயாளி உணவை உட்கொள்ளவேண்டும்.

**ம.வத்சலா, வயம்ப பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்கெல்லாம் யார் பொறுப்பு ?

“ யாழ்ப்பாணக் கலாசாரம் வெளிநாட்டுக் கலாசாரமாகிவிட்டது என்ற கருத்துத் தான் இன்று பல்வேறு மட்டங்களிலும் நிலவுகின்றது

■ கங்கா

யாழ்ப்பாணச் சமுதாயம் வெளிநாட்டுச் சமுதாயம் என்ற ஒரு மணப்பதிவு இப்போது வெளியே இருந்து பார்க்கும் அனைவரது கருத்தாகவும் மாறிவிட்டது.

ஒரு காலத்தில் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து போய்விட்டாலும் கூட எமது பாரம்பரியங்கள் சிதைந்துபோய் விடாமலும் கல்விச் சமூகம் குலைந்து போய்விடாமலும் பேணிப் பாதுகாத்தனர்.

எமது முன்னோர் தோட்டம் செய்துதான் தாம் வாழ்ந்ததாகவும் வாழைக்குலை விற்றுத்தான் படித்ததாகவும் இன்றும் பெருமையடித்துக் கொள்வார்கள்.

இதில் சிரிப்பதற்கோ கேளிக்கையாக நினைப்பதற்கோ இடம் எதுவும் இல்லை.

அன்றைய சமுதாயம் ஒரு கட்டுக் கோப்பான சமுதாயமாக பெரியோருக்குக் கட்டுப்பட்டு கஷ்டம், துன்பங்களை உணர்ந்த சமுதாயமாக இருந்தது. இப்படி இருந்தபடியால்தான் அவர்கள் சாதிக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

தோட்டத்துக்கு அதிகாலை போய்வந்து மாடுகளை மேயக் கட்டி பால் எடுத்து விற்ற பின்னர்தான் எந்த ஒரு பிள்ளையும் படிக்கப் போனால் என்ன, உத்தியோகம் பார்க்கப் போனால் என்ன. அது போல்தான் வீடு வந்ததும் இதே தொடர் கதைதான்.

ஏன் இவ்வாறு வேலைகள் செய்தவாறு அந்தக் காலத்து மக்கள் படிக்கவில்லையா? நல்ல நிலையை அடையவில்லையா? இவர்கள்தான் உயர் பதவிகளையும் வகித்திருந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை தான்.

இவர்கள் படிப்பதற்கும் தமது குடும்பத்தைக் கொண்டு செல்வதற்கும் இந்தத் தோட்ட வேலைகளில் வருமானம் தான் கைகொடுத்தது என்றால் பாருங்களேன். அந்தக் காலத்தில் இப்படி வயலிலும் தோட்டத்திலும் வெயிலிலும் மழையிலும் நின்று தமது பிள்ளைகளுக்கு கல்வியூட்டினார்கள். அவர்கள் இன்று உச்சக் கட்ட நிலையில் மிகவும் அந்தஸ்துடன் உள்ளனர்.

ஆனால் இனிவரும் சந்ததியினரின் நிலைமை என்ன என்று எவராவது எண்ணிப் பார்த்ததுண்டா?

ஒரு குடும்பத்தில் ஒருவராவது வெளிநாட்டில்தான் என்ற நிலைமை இன்று யாழ்ப்பாண மக்களின் கலாசாரமாகிவிட்டது.

வெளிநாட்டில் யாராவது இல்லை என்றால் அது தரக்குறைவு என்ற நிலைமை தான் உள்ளது.

ஆனால் வெளிநாட்டில் உள்ளவர்கள் எவ்வளவு துன்ப, துயரங்களை அனுபவிக்கிறார்கள் என்பதை எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை. இதில் ஒரு சிலர் விதிவிலக்காகக் கூட இருக்கலாம்.

எவ்வளவோ துன்ப துயரங்களுக்கு மத்தியில் வெளிநாடுகளில் இருக்கும் உறவுகள் உழைத்து அதை மிச்சப்படுத்தி வீட்டுக்கு அனுப்பினால் இங்கு இருப்பவர்களின் கூத்தோ தாங்க முடியாததாகி விடுகிறது.

ஆளுக்கொரு மோட்டார் சைக்கிள், போதாக் குறைக்கு ஒன்றுக்கு இரண்டு செல்போன்களுடன் வீதிகளிலும் சந்திகளிலும் நின்று குடித்துவிட்டு அடிக்கும் கூத்துகளோ தாங்க முடியாதவை. இவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவது போல்தான் இவர்களின் பெற்றோர்களின் செயற்பாடுகளும் உள்ளன. பிள்ளைக்கு மோட்டார் சைக்கிள் என்றாலென்ன, செல்போன் என்றாலென்ன எது வேண்டுமானாலும் கேட்டவுடன் வாங்கிக் கொடுத்துவிடுகின்றனர்.

அதன் பின்னர் தன் பிள்ளை எங்கு செல்கிறது, என்ன செய்கிறது என்ற எண்ணமோ சிந்தனையோ அவர்களுக்கு இருப்பதில்லை.

நான் எமது பிள்ளைக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றை வேண்டிக் கொடுக்கப் போகிறோம் என்றால் அது அந்தப் பிள்ளைக்குத் தேவையான ஒன்றுதானா என்பதை முதலில் யோசித்து முடிவெடுக்க வேண்டும்.

அதை தற்காலப் பெற்றோர்கள் ஒரு சிலலைத் தவிர மற்றவர்கள் சிந்திக்கிறார்களா? ஏன் சிந்திக்கத் தவறுகிறார்கள். வெளிநாட்டு வருமானம்தான் காரணம்.

இப்படியே எமது சமுதாயம் சீரழிந்து சின்னாபின்னமாகித் தெருவில் நிற்கிறது. தெருவைத் திருத்த சீனாக்காரன் இங்கு வருகிறான். இது தேவையா எமக்கு.

ஏன் எமது நாட்டில் வளம் இல்லையா? இதை உரிய வகையில் பயன்படுத்த முடியாதா? ஆள்பலம் இல்லையா?

இப்படி எல்லாமே இருந்தும் நாம் ஏன் இன்றும் இல்லாதவர்களாகவே வாழ்கிறோம். இனியும் வாழப் போகிறோம்.

எந்தவொரு அபிவிருத்திப் பணியை எடுத்துக் கொண்டாலும் சாதாரணமாக மேசனில் இருந்து எல்லாத் தரங்களுக்கும் வெளியிடங்களில் உள்ளவர்களே நியமிக்கப்படுகின்றனர்.

இந்த நிலை ஏன்? இதனை உருவாக்கியவர்கள் யார்? இது இப்படியே வளர வழி விட்டவர்கள் யார்? எவராவது எண்ணியதுண்டா? கழுதை தேய்ந்து கட்டெறும்பாய் போன கதை போல் தான் இன்று தமிழனின் நிலையும் தொடர்கிநது. ✱

# ‘லோக்பால்’ பிரேரணைக்கு அதிர்ஷ்டம் உண்டா ?

■ யமுனா

இந்திய நாட்டில் எதற்கெடுத்தாலும் லஞ்சம் தலை விரித்தாடும் நிலை தொடர்கிறது. கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம் போன்ற முக்கிய துறைசார் விடயங்களில், ஏன் ஒரு சாதாரண சிறு தேவையைக் கூட லஞ்சம் கொடுத்து இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை நாட்டில் நிலவுகிறது. இதற்குக் காரணம் ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கத்தினரும் தான். சட்டங்கள் வெறும் எழுத்தளவில் மட்டுமேதான். நடைமுறையில் சட்டம் உரிய வகையில் செயற்படுத்தப்படுவதில்லை. எங்கும், எதிலும் ஊழல் தான் மலிந்து காணப்படுகின்றது.

**முக்கிய பரிந்துரைகள்**

ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் ஊழல் செயற்பாடுகள் இல்லாத விதத்தில், பொதுமக்கள் தமது தேவைகளை நியாயமான வழிமுறையில் பெற்று அனுபவிக்கவென 1960 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் சில நாடுகள் ஒரு நிர்வாகக்கட்டமைப்புநடைமுறையை உலகுக்கு அறிமுகப்படுத்தின. அந்த வகையில் இந்தியாவில் 1966 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நிர்வாக மறுசீரமைப்புக்குழு அரசுக்கு இரு முக்கிய பரிந்துரைகளை மேற்கொண்டது. அவையாவன,

1.லோக்பால் (மத்திய அரசுக்கான நிர்வாக நடைமுறை)

2.லோக்யுக்தா (மாநில அரசுகளுக்கான நிர்வாக நடைமுறை)

லோக்பால் மசோதாவை இந்திய நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்ற கடந்த 1971 முதல் 2008 வரையான காலகட்டத்தில் மொத்தமாக எட்டுத் தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதனை நிறைவேற்ற இயலாதுபோய் விட்டது.

இந்தியாவில் நீதித்துறையும், தேர்தல் ஆணையமும் கட்டுப்பாடுகள் எதுவுமற்ற சுதந்திரமான சுயாதீன அமைப்புக்கள். இந்த இரு துறைகளிலும் அரசு தலையிட முடியாத வகையில் இந்திய அரசியல் சாசனம் வகுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஊழலுக்கு இடமளிக்காது, அதிகாரத் தரப்புக்களின் எவ்வித தலையீடும் இல்லாமல், சுதந்திரமாக சுயாதீனமாக ஏனைய அரச துறைகளிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படத்தக்க விதத்தில் தயாரிக்கப்பட்டதே லோக்பால் மசோதா பிரேரணை.

**மாற்றியமைப்பு**

இந்த லோக்பால் மசோதா பிரேரணைக்கமைய அரச நிர்வாக நடைமுறைகளில் பொதுமக்களும் உள்ளடக்கப்படுவர். அவர்கள் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் விசாரிக்கும் அதிகாரம் பெற்றவர்களாகவும் இருப்பர். ஆனால் இதில் சில மாற்றங்களைச் செய்து பொது மக்களும், அரசும் என்ற இருதரப்புக்களும் இடம் பெறும் வகையில் இது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரதமரதும் நீதிமன்றங்களதும் செயற்பாடுகள் குறிப்பிட்ட ஒரு வரம்புக்குள் வரையறுக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனான லோக்பால் பிரேரணையை ஆதரிக்கும் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரேயின் ‘ஊழலுக்கு எதிரான இந்தியா’ என்ற அமைப்பு அதனைச் சட்டமாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றது.

தற்போது பரிசீலிக்கப்பட்ட லோக்பால் சட்டம் மிகப் பலவீனமானது என்றும் இதன்படி உருவாக்கப்படும் அமைப்புக்கு பரிந்துரை செய்யும் அதிகாரம் மட்டுமே அரசுக்கு இருக்கும் எனவும், ஆதலால் வெவ்வேறு அரச ஆணையகங்கள் லோக்பால் தொடர்பாகச் செய்த பரிந்துரைகளையும் சேர்த்து சட்டத்துக்கு வலிமையூட்டும் வகையில் ஹஸாரே தலைமையிலான குழு மாதிரிப் பிரேரணையைத் தயார் செய்தது. அந்த விதத்தில் இறுக்கமான சட்டவிதிகளின் அடிப்படையில் புதிய லோக்பால் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதே ஹஸாரேயின் வலியுறுத்தலாகும்.

**வெற்றி தராத போராட்டம்**

லோக்பால் மசோதாவை வலியுறுத்தி ஹஸாரே டில்லியில் ராம்லீலா மைதானத்திலும் மும்பையிலும் உண்ணா விரதப் போராட்டங்களை




நடத்தினார். எனினும் அவருக்கு அவை முழுமையான வெற்றியைக் கொடுக்கவில்லை என்று தான் சொல்ல முடியும். அதேநேரம் உண்ணாவிரதப் போராட்டம் என்ற போர்வையில் ஜனநாயக வழிமுறைகளைச் சிதைக்க முனைகின்றார் என்று அவர் மீது குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. எனினும் அவரது கோரிக்கையை நிறைவேற்றுவதாக பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்ததையடுத்து உண்ணா விரதம் கைவிடப்பட்டது.

இத்தகைய நெருக்கடிகள் லோக்பால் பிரேரணையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்ய வழிவகுத்தது என்றே கூறலாம். அதனடிப்படையில் கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்ற நிலைக்குழுத் தலைவர் அபிஷேக் மனுசிங்வி லோக்பால் மசோதாவைத் தாக்கல் செய்தார்.

பிரேரணையில் உள்ள சில விடயங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் இருந்து எதிர்ப்புகள் வந்த போதும் நீண்ட விவாதங்களின் பின்னர் மக்களவையில் அப்பிரேரணை நிறைவேறியது.

**துக்கமான விடயம்**


இருந்தபோதும் லோக்பால் சட்டத்தை ஒரு அரசியல் சாசன அமைப்பாக இருக்க வழி செய்யும் உட்பிரிவு எண்(2) வாக்கெடுப்பில் தோல்வியடைந்தது. இந்தத் தோல்வி “ஜனநாயகத்துக்கு விழுந்த ஒரு அடி” என்றும், ஒரு துக்ககரமான விடயம் என்றும் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி மக்களவையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, லோக்பால் பிரேரணை மாநிலங்களவையில் கடந்த 28 ஆம் திகதி விவாதத்துக்கு எடுக்கப்பட்டபோது சபையில் அமளி துமளி ஏற்பட்டது. குறிப்பாக மம்தா பானர்ஜியின் திரணாமூல் காங்கிரஸ் பிரேரணைக்கு பல முக்கிய திருத்தங்களை முன் வைத்தது. அவற்றைப் பிரேரணையில் உள்ளடக்காவிட்டால் பிரேரணையை தமது கட்சி ஆதரிக்காது என அந்தக் கட்சி தெரிவித்தது. இதனையடுத்து மறுதிகதி அறிவிக்கப்படாமலே சபை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஊழலை ஒழிக்க வலுவான ஆயுதமான லோக்பால் பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் ஹஸாரேயும் தமது செயற்பாடுகளைக் கைவிட்டபாடில்லை. அதற்காக மீண்டும் உண்ணாவிரதம் ஆரம்பிப்பேன் என்று மிரட்டுகிறார். அதற்கு அவரது உடல் நிலை அனுமதி அளிக்குமா என்பது சந்தேகம்தான். எனவே ஊழலுக்கு எதிரான லோக்பால் சட்டம் நிறைவேற்றப்பட வாய்ப்புண்டா? என்பது இன்னமும் வெறும் கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை இழிவுபடுத்தும் சொற்பதங்கள், பழமொழிகள்



■ உமா

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஆண்கள் எப்போதும் ஆண்மை உள்ளவர்கள்,வலிமை,வீரமிக்கவர்கள்.ஒரு பெண் எப்போதும் ஆணுக்கு கீழ்படிந்து நடத்தல் வேண்டும். அவன் ஒருபோதும் அவளது பேச்சைக் கேட்கக்கூடாது. இதற்கு உதாரணமாக,

'பெண்சாதி பேச்சைக் கேட்பவன் பேய் போல் அலைவான்'

'தன்னைப் புகழ்வானும் சாட்சி சொல்லி நிற்பானும்
பொன் மிகத் தேடிப் புதைப்பானும்
நாணமில்லாதவனும்
பெண்புத்தி கேட்பானும் பேய்'

'இளைத்தவன் பெண்டாட்டி எல்லார்க்கும் மைத்துனி'

சொத்துரிமைச் சமூகத்தின் தோற்றம் முதல்,குடும்பத்தின் வாரிசாக ஆணே இருக்கின்றான். அவன்தான் தொடர்ந்து தந்தையின் பெயரைச் சுமக்கின்றான்.உற்பத்திக் காரணியின் உரிமை வழியாகத் தந்தையின் வாரிசாக மகன் இருப்பான் என்ற கருத்துக்கமைய, ஒரு குடும்பத்துக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்காத பட்சத்தில் அந்தக் குடும்பத்தின் பெயரைத் தொடர்ந்து நிலைநிறுத்த முடியாதென நினைக்கின்றனர்.

'சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை வேண்டும்'

'ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆஸ்திக்கு ஓர் ஆணும்'

அதேசமயம் பெண் குழந்தை தாயின் தொடர்ச்சியான பராமரிப்பில் இருத்தல் வேண்டும். அவள் பிறந்த நாள் முதல் திருமணம் முடிக்கும் வரை பெண்ணுக்குரிய 'பண்புகள்' எனக் கருதப்படுபவையுடன் வளர்த்து, பாதுகாப்பது ஒரு தாயின் தலையாய கடமை என்பதே எமது சமூகம் சொல்லி நிற்கும் பாடம். பிள்ளைகள் இழைக்கும் எந்தத் தவறுக்கும் தாய்மாரே பொறுப்பேற்க வேண்டியேற்படுகின்றது. தாயின் குணாம்சங்களை ஒத்தே மகளும் இருப்பாள் என்பதைப் பல பழமொழிகள் காட்டி நிற்கின்றன.

'தாயைச் சந்தையிலே கண்டால் பிள்ளையை
வீட்டிலையா பார்க்க வேண்டும்?'

'தாயைப்போலப் பிள்ளை நூலைப் போல சேலை'


'தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு; பாலைப் பார்த்து பசுவைக் கொள்ளு'

அடுத்து கருத்து ரீதியாகப் பெண்களை மாத்திரம் குறிக்காவிட்டாலும் பெண்களை இழிவுபடுத்தும் சொற்களால் அமைந்த சில பழமொழிகளைப் பார்ப்போம்.'ஆடத் தெரியாதவள் மேடை கோணல் என்றாளாம்'

'இளமையிலே ஆடியவள் வயது சென்றும் காலைக் காலை ஆட்டுவாளாம்'

இத்தகைய பெண்களை இழிவுபடுத்தும் பழமொழிகளினதும், சொற்பிரயோகங்களினதும் உபயோகத்துக்கெதிராக நாம் பெண்கள் என்ற ரீதியில் என்ன செய்யலாம்? இத்தனை காலமும் வழக்கில் வந்ததை எப்படி உடனே நிறுத்துவது? என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது. தமிழ் இலக்கிய உலகத்தில் எழுத்துச் சொல் திருத்தம் பற்றிய கருத்துக்கள் ஏற்பட்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் பெண்களைப் பாதிக்கும் வகையில் அமையும் சொற்பிரயோகங்களை மாற்றியமைப்பது அல்லது மாற்றீடான சொற்களை இயற்றுதல், மற்றும் பழமொழிகளின் பாவனையை நிறுத்துதல் போன்றவற்றில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். முதலில் பெண்களாகிய நாம் இந்தப் பழமொழிகள், சொற்பிரயோகங்கள் போன்றவற்றை உபயோகிப்பதை நிறுத்த வேண்டுமென்பதோடு, இவற்றைக் கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவைக்கெதிராக கண்டனக்குரல் எழுப்ப வேண்டும். அந்தப் பழமொழிகள் சொற்பிரயோகங்கள் என்பவை இயற்றப்பட்டதன் சமூகக் காரணிகள், பின்னணிகள், அவற்றின் கருத்து என்பவற்றை இனங்காண முயற்சித்து பிறருக்கும் புரியவைத்தல் வேண்டும். எந்தச் சீர்திருத்தமும், மாற்றமும் பாதிக்கப்படுபவர்களாலேயே உருவாக்கப்பட முடியும். ஆகவே இந்த மொழி மாற்றத்தில் எமது பங்களிப்பின் அவசியத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். (முற்றும்)

# பொறுமை



ஒவ்வொரு பெண்ணுக்கும் உரிய சிறந்த அணிகலன்களாகப் பொறுமை, அடக்கம் அதனோடு கூடிய இன்முகம் என்பன கூறப்படுகின்றன. மனிதனை மிருகமாகவும், மிருகத்தனத்தில் இருப்பவனை மனிதனாகவும் மாற்றக்கூடிய வல்லமை பெண்களிடம் தான் உள்ளது. இன்றைய சமுதாயத்தில் ஒவ்வொரு பெண்ணும் கவனமாக இருக்கவேண்டும். அதாவது வழுக்கும் தரையில் நடக்கும் போது எவ்வாறு அவதானத்துடன் அடிமேல்அடி வைத்து நடக்க வேண்டுமோ அதேபோல ஒவ்வொரு பெண்ணும் செயலாற்றவேண்டும்.

வனவாசத்தின்போது சீதா வைராக்கியமாக இருந்ததைப் போலவும்; பாஞ்சாலி வைராக்கியமாக இருந்ததைப்போலவும் ஒரு பெண் சோதனை நேரத்தில் காட்டுகின்ற வீரம் எங்களுடைய நாட்டையும் வீட்டையும் பெருமைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

நேற்றைய பெண் தன்னையும், கணவனையும், தன் குடும்பஉறவுகளைப்பற்றியும் கவலைப்பட்டு பொதுநல உணர்வு உடையவளாக இருந்தாள். ஆனால் இன்றையபெண் தன் குடும்பத்தையும், தன்னைப் பற்றியும் மட்டும் கவலைப்படும் அளவுக்கு அவளுடைய உள்ளம் சுருங்கிவிட்டது. இந்த நிலையில் நாளைய பெண்ணானவள் தன்னைப்பற்றி மட்டும் கவலைப்படுவாளா? என்ற கேள்விக் குறி எழுகிறது. எனவே நேற்றைய பெண்ணைப்போல ஒவ்வொரு பெண்ணும் செயற்பாட்டால் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியோடும், தன்னம்பிக்கையோடும், பொறுமையுடனும் சுயமாக வாழப் பழகிக் கொள்ளலாம்.

'பேதமை என்பது மாதற்கு அணிகலம்'

சி.கங்கானந்தி,
5ஆம் வட்டாரம், நயினாதீவு.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இது கதையல்ல 6

■ யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



களைத்துப்போய் வந்து சேர்ந்த விஜிதா வழமை போல் ஒரு சிறிய குளியலின் பின் தானே தயாரித்த தேனீருடன் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையுடன் அதை அருந்திக் கொண்டிருந்தாள். முன்பென்றால் வந்ததும் வராததுமாக ஆரவாரத்துடன் வித்தியாவைப் பற்றிக் கொட்டித் தீர்த்திருப்பாள். "கதைத்தது போதும் போய்ப்படி" என்று சொல்லிச் சொல்லியே அவளைப் படிப்படியாக மாற்றிவிட்டேனோ?

"என்ன விஜி? என்ன யோசிக்கிறாய்?"

"ஒண்டுமில்லையம்மா"

அவளுடைய பதில் ஏமாற்றத்தைத் தந்தாலும் நான் அவளை அணுகியே ஆக வேண்டும் என்பது இப்போது எனக்குப் புரிந்த விடயமல்லவா?

"வித்தியா வீட்டுக்குப் போகேல்லையா?"

போனனான் அம்மா. பெரிய பாவம். அவள் செல்லுறதை நம்பவே முடியேல்லை. அந்தப் பிரபு அவளைச் சரியாகக் கொடு மைப்படுத்தினவன் எண்டு வித்தியா சொல்லுறாள்".

வித்தியா சொன்னவற்றை அப்படியே அவள் நம்பவில்லை என்பது விஜிதாவின் பேச்சிலேயே விளங்கியது.

"பிரபு அவளைக் காதலித்துக் கூட்டிக் கொண்டோடினவனோ?"

"ஓமம்மா. ஏன் அப்படிக் கதைக்கிறியள்?"

"ஊர் அப்படித்தானே அவையைப் பற்றிக் கதைக்குது"

விஜிதா மௌனமானாள்.

"அவன் ஏன் கொடுமைப்படுத்தினவனாம்?"

அவளிடமிருந்து மேலும் விடயங்களை அறிவதற்காக ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தேன்.

"வித்தியாவிட்டை நிறைய நகைகளிருந்ததாம். இவள் ஒரு சங்கிலியும் ஒரு சோடி காப்புந்தான் போட்டபடி போனவளாம். ஒரு நாள் அப்பா அம்மாவின்ரை பொருளொண்டும் வேண்டாமெண்டு நகையளைக் கொண்டுவரேல்லை எண்டு சொல்லிப்போட்டாளாம். அண்டு தொடங்கி ஒரே சண்டையும் பிரச்சினையுந்தானாம். இவள் நகையை விட்டிட்டு வந்தவளெண்டு இவளைச் சாப்பிடக்கூட விடானாம். அப்படி ஒருத்தன் செய்வானோ?"

"அவன் வித்தியாவைக் காதலிக்காமல் காசைக் காதலித்திருக்கிறான். அது கிடைக்கேல்லை என்றவுடனே அப்பிடிச் செய்திருக்கிறான்" என்று விளக்கமளித்த போது அவளுடைய கண்களில் அவநம்பிக்கைதான் தெரிந்தது.

இந்தப் பெரிசுகளுக்குக் காதலைப் பற்றி என்ன தெரியும். குறை சொல்லித் தடுக்கத்தான் இவைக்குத் தெரியும். என்ற எண்ணம் அவளுக்குள் ஓடியிருக்கலாம். ஆனால் இந்தப் பெரிசுகள் ஒரு காலத்தில் இளவயதினராக இருந்துதான் முதிர்வடைந்தார்கள். கால ஓட்டத்தில் பல அனுபவங்களைப் பெற்றவர்கள் என்று பெற்றவர்களைப் பற்றி இந்தப் பிள்ளைகள் யோசிப்பதில்லையே.

"என்ன அப்பிடிப் பார்க்கிறாய் விஜி? நான் சொல்லுறது இப்ப உனக்கு விளங்காது. அனுபவப்பட்டால்தான் விளங்கும். அன்பு, பாசம், காதல் இதெல்லாம் இல்லையெண்டு நான் சொல்லேல்லை. உயிரைக் காப்பாற்றுகிற மருந்துகள் முதற்கொண்டு எல்லாத்திலும் போலி இருக்கு. பெரும்பாலும் இந்தப் போலிகள் உண்மையானவை மாதிரி இருக்கும். சுயரூபத்தைக் கண்டுகொள்ளக் காலம் செல்லும். அந்த மாதிரித்தான் காதலும்.


சிலபேர் திட்டம் போட்டே காதலிக் கிறமாதிரி நடிப்பினம். சிலபேர் தங்களுடைய மனதிலை ஏற்பட்டது காதல் எண்டு நினைப்பினம். ஆனால் பிரச்சினை என்று வரும்போது அது நின்றுபிடிக்காது. அப்போதுதான் காதல் பறந்து போகும். அது காதல் இல்லை என்று விளங்கும்.

பிரபு எப்படிப்பட்டவனோ தெரியேல்லை. வித்தியாவின்ரை அப்பா பெரிய வியாபாரம் செய்யிறவர். சுசீலா அன்ரியின்ரை கழுத்து, கையெல்லாம் பவுண் காய்த்துத் தூங்கும் . இவைகளைப் பார்த்து விட்டுத்தான் வித்தியாவைத் கல்யாணங் கட்டினால் நிறையச் சொத்து கிடைக்கும் என்று நினைத்துக் காதல் வலை வீசியிருக்கலாம். அப்படிச் செய்யிறவை நிறையப் பேரிருக்கினம்.

சிந்தனை நீண்டது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுந்தலையிடம் காதல் வயப்படல்



இலக்கியக் காட்சி - 115

■ மட்டுவில் நல்லதம்பி

மகாகவி காளிதாசனின் கணையாழி சாகுந்தலம் நாடக நூலும் மேகதூதம் என்ற கவிதைக் கற்பனை நூலும் வடமொழியில் ஆக்கப்பட்டுள்ளன.

மூவேந்தராலும் போற்றப்பட்ட முத்தமிழ்க் காப்பியமான கண்ணகிகதை, சிலம்பு காரணமாக எழுந்த கதை யானபடியால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது போல, கணையாழி சம்பந்தமாக இயன்ற சகுந்தலையின் கதை கணையாழி சாகுந்தலம் ஆனது.

பரத நாட்டின் மன்னனான துஷ்யந்தன் வேட்டை மேற்கொண்டு கானகம் போகிறான். ஒரு மானைத் துரத்திக் கொண்டு போகும் பொழுது, அந்தமான், தபோதனர் வசிக்கும் பகுதிக்குள் சென்று விடுகிறது. இதனை அறியாமலே, அரசன் அதனைக் குறிவைத்துக் கொல்ல அம்பைத் தொடுக்கிறான். அப்பொழுது, ''அரசனே, இது ஆசிரம மான்; கொல்லத்தக்கதன்று, கொல்லவுங் கூடாது'' என்று தாபசன் ஒருவன் தடுக்கிறான்.

மறுபேச்சின்றி அரசன், அம்பைக் கூட்டினுள் போட்டு விடுகிறான். இதனால் மகிழ்ந்த அத்துறவி,

*''துன்பம் தீர்க்கவே' அரசனது ஆயுதம்*
*மாசில் லாதவரை மாய்க்கவல்ல;*
*புகழ் பெற்ற புருவம்சத்தில் பிறந்த நீ*
*இவ்விதம் நடப்பது உசிதமே;*
*உன்னைப் போலவே சற்குணங் கூடி*
*மன்னர் மன்னனாகும் மகனை அடைவாய்''* என்கிறார். அரசனுக்கு மட்டில்லா மகிழ்ச்சி; கைகூப்பி வணங்கி நிற்கிறான். மேலும் துறவி, ''அரசனே, நாம் சமிதை சேகரிக்க வந்தோம்; அதோ மாலினி நதி தீரத்தில் குலபதி கண்வ முனிவரது ஆசிரமம் இருக்கிறது; அங்கு மகள் இருக்கிறாள்; அவளிடம் விருந்துபசாரம் பெற்றுப் போகலாம்'' என்று கூறிவிட்டுப்போகிறார்.

ஆசிரமத்தின் வெளியே தேர்ப்பாகனை நிறுத்திவிட்டு அரசன் உள்ளே போகிறான். அங்கு காசியபர் மகளான சகுந்தலை, அனசூயா, பிரியம்வதை ஆகிய தோழிகளுடன் செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டு நிற்பதைக் காண்கிறான். அவன், அவர்கள் பேசுவதை அவதானித்துக் கொண்டு, ஒரு மரத்தின் மறைவில் நிற்கிறான். அவனது மனதில் இனம்புரியாத கற்பனை தோன்றுகிறது.

*''பாசி படர்ந்தாலும் கமலம் கண்ணைக்கவரும்;*
*மதியில் காணும் மலினக் குறியும் அதன் பேரழகைப் பெருக்கும்;*
*மரவுரி தரித்தாலும் இச்சிறுமி மனத்தை மயக்கும் மோகினியே;*
*நல்லுருவத்துக்கு எல்லாப் பொருளும் அலங்காரமாவது ஆச்சரியமோ?''*

''இந்த மங்கை அரச குலத்துக்கு ஏற்றவள்; எனது மனம் இவளை விரும்புகிறது. இவள் தபோவனத்தில் இருந்தாலும் சத்திரியப் பெண்தான்.

அரசன் இவ்வாறு நிற்கையில், சகுந்தலையைச் சுற்றி வண்டு ஒன்று வட்டமிடுகிறது. அது கண்ட தோழிகள், ''உன்னைக் காப்பாற்ற நாங்கள் யார்? துஷ்யந்தனைக் கூப்பிடு; தபோவனத்தைக் காப்பது அரசனல்லவா'', என்கின்றனர். அது கேட்ட அரசன், ''யார் அங்கே?'' என அதட்டிக் கொண்டு வெளிப்படுகிறான்.

*''பொல்லாதவரை அடக்கும் பௌரவன்*
*மேதினி காக்கும் காலையில்*
*இளம் தாபசக் கன்னிகளிடம்*
*தகாதன் செய்யும் துஷ்டன் யார்?''* என்கிறான்.

அதற்கு தோழிகளுள் ஒருத்தியான அனசூயா,'' ஐயா, நமக்கு ஒரு துன்பமும் இல்லை; எங்கள் சகி, வண்டால் துன்பப்படுகின்றாள்'' என்று சொல்ல, ''நங்காய், தவம் வளருகின்றதா?'' எனக்கேட்க, சகுந்தலை நாணத்தால் தலை குனிந்து நிற்கிறாள்.

பின்பு, சகுந்தலையும் தோழிகளும் அரசனை அங்குள்ள மர நிழல் மேடையில் அமரச் செய்து, விருந்துபசாரம் செய்கின்றனர். தமக்குள் இவர்கள் உரையாடும் போது, அரசன், ''பகவான் காசியபர் நித்திய பிரம்மசாரி என்பது உலகறியும். உங்கள் சகுந்தலை அவரது மகளாவது எப்படி?'' எனக்கேட்க, ''பெரியோய், கௌசிகர் என்ற இராஜரிஷி எமது சகுந்தலையின் பிறப்புத் தந்தை; அவரால் கைவிடப் பெற்ற இவளைச் சீராட்டி வளர்த்துவந்ததால் காசியப முனிவர் இவள் தந்தையாவார்'' என அனசூயா, பதில் கூறுகின்றாள். மேலும் தொடர்ந்து, ''கௌசிகரின் தவத்தைக் கெடுக்க மேனகை என்ற தேவமாதைத் தேவர்கள் அனுப்பினார்கள். வசந்த காலம் தொடங்கவே, அவளது மயக்கு உருவத்தில் மயங்கி''... என்று சொல்லி மௌனமாகிறாள் அனசூயா, ''மிகுதி எனக்கு விளங்குகிறது'' என முடிக்கிறான் அரசன்.

''உங்கள் தோழி தொடர்ந்து தபோவனத்தில் இருப்பாளா?'' என்று அரசன் கேட்கவே, ''இவளுக்குத் தகுந்த வரனைத் தேடிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் எங்கள் குருவின் சங்கற்பம்'' என்று பிரியம்வதை பதில் சொல்கிறாள். சகுந்தலை நாணத்தால் அவ்விடம் விட்டுச் செல்ல முற்படுகிறாள். ''செடிகளுக்கு நீர் ஊற்றியதில் எனக்கு இரண்டு குடம் கடன் பாக்கி'' எனச் சகுந்தலையைத் தடுக்கிறாள் பிரியம் வதை. ''அந்தக் கடனை நான் கொடுக்கிறேன்'' என்று அரசன் கணையாழியைக் கழற்ற முனைகிறான். அதில் பெயர் முத்திரை இருப்பதை தோழிகள் காண்கின்றனர்.

''இது அரசனால் அளிக்கப் பெறுகிறது: வேறு விதமாக எண்ணி விடாதீர்கள்'' என்று அரசன் சொல்லவே,'' அப்படியானால் தோழி! உங்கள் விரலைவிட்டு இக் கணையாழி நீங்கலாகாது; உங்கள் கடனை இப் பெரியவர் தீர்த்துவிட்டார்.'' என்று பிரியம் வதை கூறுகின்றாள். பின்பு ''நேரமாகிறது'' எனக் கூறித் தவச்சாலைக்கு மூவரும் புறப்படும்போது, ''ஐயா, இன்று விருந்து உபசாரம் சரிவர நடைபெறவில்லை; மீண்டும் தாங்கள் தரிசனம் தரவேண்டுகிறோம்'' எனக் கேட்டுப் பிரிகின்றனர். தனது எண்ணம் நிறைவேற வாய்ப்புக்கிடைக்கிறது என்ற மகிழ்ச்சி மன்னனுக்கு!

அப்போது சகுந்தலை, ''முல்லைக் கொடி என் மரவுரியில் சிக்கிவிட்டது; அதை எடுத்துவிட்டு வருகிறேன்'' என்று குனிந்து, அரசனைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டுச் செல்கிறாள்.

இந்தச் செயல்,''கை வளை திருத்துவு கடைக் கணின் நோக்கினாள்,'' எனச் சீதை இராமனைப் பார்த்தமையைக் கம்பன் வர்ணித்த விதம் போல் அமைகிறதைப் பார்க்கிறோம்.

துஷ்யந்தனும், சகுந்தலை தன்னை நேராகப் பார்க்கவில்லையே எனக் குறைப்பட்டுக் கொண்டு,

*''யான் நோக்குங்காலை நிலன் நோக்கும் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்''* [குறள் 1094]

என்று வள்ளுவன் வாக்கை நினைவில் கொண்டவனாய், ஊர் திரும்ப மனமின்றி தபோவனத்துக்கு வெளியே கூடாரம் அமைத்து சேனைகளோடு தங்கிவிடுகிறான்.

மறுநாள், வேட்டைக்குப் போக விருப்பமின்றி அரசன் ஓய்வாக இருக்கிறான். மற்றைய உதவியாளர், சேனாதிபதி ஆகியோருக்கும் ஓய்வு கிடைக்கிறது. ஆயினும் துஷ்யந்தனின் மனம் மாத்திரம் ஓய்வின்றிச் சகுந்தலை எண்ணமாகவே இருக்கிறது. ஒரு முறையாவது தபோவனத்துள் நுழைவதற்குச் சந்தர்ப்பம் வராதா என ஏகப்பெருமூச்சு விட்டிருக்கையில் முனிகுமாரர் இருவர் அரசனை அழைத்துப்போக வருகிறார்கள். ''அரசனே பகவான் கணவர் இங்கில்லாமையால் அரக்கர் எமது வேள்விக்கு இடையூறு செய்கின்றனர். நீங்கள் ஆசிரமத்தைப் பாதுகாக்க வேண்டும்'' என்று சொன்னதும் அரசன் தேர் அங்கு விரைந்தது. கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா என்ன? ✱

# எல்லாமே சங்கடம் தான்




■ பா. பாலச்சந்திரன், சுன்னாகம்.

''சிவமண்ணை கிளாக்கர் வாறார். இண்டைக்கு அவற்றை T.V.S சிலையிலோ யாழ்ப்பாணம் போனவர்'' என்றார் சண் முகம்.

''உண்மையாப்பா! கெட்டிக்காரன் தான். அறுபத்து மூன்றிலை மோட்டார் சைக்கிள் பழகி யாழ்ப்பாணம் போய்வந்திட்டார்'' என்றார் சிவத்தார்.

''அவரைவிட வீட்டுக்காரிக்குத்தான் சரியான சந்தோஷமாய் இருக்கும். உவர் போகமாட்டார்; அவாவின்ரை ஆய்க்கினையால்தான் போய் இருப்பார். இவருக்கு மோட்டார் சைக்கிள் பழகிற எண்ணம் இல்லை. அவாவின்ரை அத்தானார் எடுத்துப் போட்டார் என்ற உடனே இவரையும் எடுக்கச் சொல்லி அவா ஒரே பிடி. அதனால் தான் எடுத்தவர்'' என்றார் சண்முகம்.

''அப்படியே சங்கதி யாழ்ப்பாணத்துச் சனம் போட்டா போட்டி போட்டுத்தானே வாழ்க்கை நடத்துதுகள். உதாலை எத்தனையோ பாடு படுதுகள். பிள்ளைகளை அதுகளின் விருப்பத்திற்கு மாறாக அதைப் படி இதைப் படி என்று பாடு படுத்துதுகள். இதாலை எத்தனை பிள்ளைகள் வருத்தக் காரர்களாக இருக்குதுகள். இந்தாளுக்கும் விபத்தொன்றும் வராமல் துர்க்கை அம்மன் தான் காப்பாற்ற வேண்டும்'' என்றார் சிவத்தார்.

''அண்ணை சரியாகச் சொன்னீர்கள். ஒரு நாள் கிளாக்கர் சொன்னவர் 'அவாவின்ரை ஆசைக்குத்தான் இந்தப் பாடு. இல்லையென்றால் எனக்கேன் இந்த விஷப்பரீட்சை?'' என்றார் சீனிவாசக மாஸ்ரர்.

''என்ன கிளாக்கர் கற்பூரம் கொழுத்தி கும்பிடுகிறார். வரட்டும் என்ன விஷயம் என்று கேட்போம். ஒருவேளை அசம்பாவிதங்கள் ஒன்றும் இல்லாமல் வீட்டுக்குத் திரும்பிப் போனால் கற்பூரம் கொழுத்துவதென்று நேர்த்திக்கடனோ'' என்றார் சிவத்தார்.

இவர்கள் மூன்று பேரும் துர்க்கை அம்மன் பூசை முடித்து முன் மணலில் இருந்து கதைக்க கிளாக்கர் உள்ளுக்குப் போய் கும்பிட்டுவிட்டு சிரித்துக் கொண்டு வெளியே வந்தவர் கின்னஸ் சாதனை படைத்த மகிழ்ச்சியோடு இவர்களுக்கருகில் வந்தார். அவர் வந்ததும்,

''கிளாக்கர் இன்று வெள்ளோட்டமோ?'' என்றார் சண்முகம் சிரித்துக் கொண்டு.

''உனக்கு ஆராடாப்பா சொன்னது? என்ரபாடு எனக்குத்தான் தெரியும். உனக்கென்ன எல்லாம் பகிடிதான். இப்ப யாழ்ப்பாணம் சைக்கிளில் போக இளைஞர்களே பயப்படுகிறான்கள். எத்தனை விதமான பயங்கரங்களைத் தாண்டிப் போக வேண்டும். இதுவரை காலமும் ஒவ்வொரு விதமாய் ஆக்களை முடித்த மாதிரி இதுவும் ஒரு விதம் போல. தப்புறவன் இருக்கட்டும். போறவன் போகட்டும் என்று ஆமை வேகத்திலை வேலை நடக்குது.'' என்றார் கிளாக்கர் எரிச்சலோடு.

''இல்லையண்ணை, நல்லாப் பயந்து போனியள் போல இருக்கு. அதுதான் கேட்டனான். எனக்கு தெல்லிப்பளையில் இருந்து சுன்னாகம் போகவே பயம் அண்ணை. மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டால் யமன்ரை எருமை மாடு வாற மாதிரி ஒரு பீதி'' என்றார் சண்முகம்.

''சண்முகம்! இப்ப தெல்லிப்பளையில் இருந்து யாழ்ப்பாணம் போகிறதென்றால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தான் றோட்டிலை போக வேணும். சில இடங்களில் சல்லியைப் பரவிவிட்டு வாகனத்தைப் போகச் சொன்னால் எப்படி? உருட்டிவிடும். ரயரையும் தின்றுவிடும். ஆறு, குளம், கிடங்கு, மழை, சறுக்கும் சேறு, இங்காலை விழுந்தால் குளம், அங்காலை விழுந்தால் [illegible] சோதனைகள் [illegible] சென்று வந்தேன். இதுவும் ஒரு சாதனை தான்'' என்றார் கிளாக்கர்.

''உங்களின்ரை கதையைக் கேட்க எனக்கு ''பில்கிறீம் புறோசஸ்'' என்ற கதையிலை நித்திய ஜீவனையடைய அந்த பக்தன் பட்டபாடுதான் எனக்கு ஞாபகத்துக்கு வருகுது'' என்றார் சிவத்தார்.

''[illegible] சொல்லத் தான் எனக்கு [illegible] வருகுது லண்டன் மெற்றிக்ஸ் பரீட்சைக்கு. படிக்கேக்கை Addison ன்ரை The Vision of Mirzah என்ற கதையிலை கண்ட நகரப்பாடுகளின் காட்சியும் கிட்டத்தட்ட இப்படித்தான்'' என்றார் சீனிவாசக மாஸ்ரர். ''ஏன் கிளாக்கர் பஸ்ஸிலை போகலாம் தானே?'' என்று கேட்டர் சண்முகம்.

''டிரக்ரரில் வைக்கோல் அடைந்த மாதிரி அடைபடவோ? கடவுளே! ஆளைவிடு. உன் தரவளி ஐம்பதைக் கடக்காத ஆள்களுக்கு சரிவரும். எங்களுக்கு அது சரிவராது. ஆக்களே போக இடமிருக்காது இரண்டு, மூன்று பெரிய மூட்டைகளைக் கண்டால் அதையும் ஏத்திக்கொண்டு ஆக்களோடை சரிசமனாய் கொண்டு போவார்கள். மனிசர் என்ன நசிந்து சாகிறதோ தம்பி சண்முகம்?'' என்றார் கிளாக்கர்.

''அதுசரி தான் கிளாக்கர் தெல்லிப் பளையில் வாங்கோ ஐயா என்பார்கள், சுன்னாகம் போக பின்னுக்கு போங்கோ என்பார்கள், மருதனார்மடம் போக நிமிர்ந்து நில்லுங்கோ, பக்கப் பாட்டுக்குப் பாருங்கோ, காலை ஒழுங்காக வைத்து நில்லுங்கோ, எத்தனை தரம் சொல்லுறது என்று சினப்பார்கள். எனக்கு இதைப் பார்க்க துரைச்சாமி மாஸ்ரர் P.T பழக்கிற ஞாபகம் தான் வரும்'' என்று சண்முகம் சொல்ல எல்லோரும் சிரித்தனர்.

''அதுதான் நான் S.L.T.B இல் தான் போகிறனான். அது கிடைத்தால் சுவிப் ரிக்கற் விழுந்த மாதிரிதான்'' என்றார் சிவத்தார்.

''மெய்தான் அண்ணை, அதில் போறது சுகம்தான். ஆனால் காணக்கிடைக்காதாமே. அப்படிக் கிடைத்தாலும் நிக்காமல் போகவல்லோ வேண்டும்'' என்றார் சீனிவ்ாசக மாஸ்ரர் .

''அப்ப எங்களை மினிபஸ்காரரிடம் ஒப்படைத்தாச்சுப் போல. பலாலி றோட்டிலை 764 மட்டும் அரை மணித்தியாலத்திற்கு ஒன்று போகின்றது போல. அதுசரி சீனிவாசக மாஸ்ரர் கடவுள் கைவிட்டுவிட்டார் போல இருக்கு. கைவிட்டது பரவாயில்லை, சாத்தன் இடம் அல்லோ கையை விரித்து விட்டார். அவன் நாளுக்கொரு பிரச்சினையாய், பொழுதொரு

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 08.01.2012 முதல் 14.01.2012 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் ஏற்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். சக ஊழியர்கள், குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் பொறாமை பிரச்சினைகள் உருவாகலாம். நினைத்தபடி சில காரியங்கள் நடக்காமல், ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். அடிக்கடி ஆதங்கம், மனக்குறைகள் ஆள்கொள்ளும். செலவுகளும் அதிகரிக்கும். ஒருநாள் உற்சாகமாகவும், மறு நாள் அதிருப்தியாகவும் செயற்படும் சூழ்நிலை உருவாகும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் உருவாகும். வீண் பிடிவாதங்கள், பரிகாசங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

### இடபம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட காரியங்களில் தடுமாற்றங்கள் ஏற்படலாம். செலவுகளும், தேவையற்ற அலைச்சல்களும் அதிகரிக்கும். மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்கும் சூழ்நிலை உருவாகும். இழுபறியாக இருந்த பத்திரப் பதிவுகள் திடீரென நடக்கலாம். நீண்ட நாள்களாக விட்டுப்போன சில உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். ஒரு வேலை முடியும் முன்னரே அடுத்த வேலை வந்து விடும். தாயார் உடல் நலன் தொடர்பான வகையிலும் கவனம் அவசியம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். அதேநேரத்தில் ஆபத்தான பொருள்களைக் கையாளும்போது, கவனம் அவசியம்.

### மிதுனம்

திட்டமிட்ட காரியங்களை நீண்ட நேரம் காத்திருந்தாவது முடிப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியிலும், தேக ஆரோக்கியக் குறைவுகளாலும் செலவுகள் உண்டாகலாம். மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பி எதையும் செய்ய வேண்டாம். மற்றவர்களுக்காகப் பரிதாபப்பட்டு, உதவிகள் செய்வதை முடிந்த வரை தவிர்க்க வேண்டும். அதுவே உபத்திரவமாக முடியலாம். போட்டி, எதிர்ப்புகள் இல்லாமல் நினைத்த காரியங்களைச் சாதிப்பீர்கள். ஆடம்பர விடயங்களை முடிந்த வரை தவிர்ப்பது நன்மை தரும். பிள்ளைகள் தொடர்பான கவலைகளும் அவ்வப்போது ஆள்கொள்ளும். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். செலவு, அலைச்சல் உண்டு. மறதியால் அவதியுண்டு.

### கடகம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரை எதிர்பாராமல் சந்திக்கலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். நீண்ட நாள்களாக வராத உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டுக்கு வரலாம். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். கடுமையான அலுவல் நெருக்கடிகளைக் கொடுக்கலாம். அத்துடன் தடை, தாமதங்களும் முட்டுக் கட்டைகளும் தொடரும். கடினமாக உழைத்தாலும், அதற்கேற்ற பலனோ, பாராட்டோ கிடைக்காமல் சங்கடப்படலாம். எந்த விடயத்திலும் பொறுமை, நிதானம் அவசியம். வேலைப்பளு அதிகரிக்கும்தொழில் ரீதியாகச் செய்யும் சிறிய தவறுகள் கூட பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம் என்பதால் கவனம் அவசியம். எதிர்பாராத வகையில் சில லாபங்களைப் பெறலாம்.

### சிங்கம்

மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட காரியங்களில் தடை, பயணங்களில் இடையூறு போன்றவற்றை எதிர்கொள்ளலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பிலும் மாட்டலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம். சொத்து வாங்கல், கொடுக்கல்களில் சுமூகமான நிலைமை காணப்படும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை. மனதுக்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும்.

### கன்னி

உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் செயற்படுவீர்கள். மனதில் புதிய சிந்தனைகள் தோன்றி, அதைச் செயற்படுத்த முற்படுவீர்கள். நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும். மறதி, கவனக்குறைவால் அவதிப்படலாம். ஆதாயமில்லாத சில விடயங்களில் இறங்கி அவதிப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே அடிக்கடி சிறு, சிறு சண்டை சச்சரவுகள் உண்டாகலாம். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். முடிந்தவரை கடுமையான வாக்குவாதங்கள், குதர்க்கமான வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். மனக்குழப்பம், மருத்துவ செலவு போன்றவை ஏற்படலாம்.

### துலாம்

எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரெனப் பேசலாம். சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். மனதில் நல்ல சிந்தனைகள், எண்ணங்கள் குடிகொள்ளும். எதையும் நினைத்த வேகத்துக்குச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். உடல் ஆரோக்கிய விடயங்களில் கவனம் அவசியம். வீண் அலைச்சல், விரயச்செலவுகள் அதிகரிக்கும் என்பதால், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். எந்த விடயத்திலும் பொறுமை, நிதானம் அவசியம். வேலைப்பளு அதிகரிக்கும்

### விருச்சிகம்

மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடிவடையாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல், குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சில வேலைகளை சிரமம் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். தொழில் ரீதியாக சிலர் பிரச்சினைகள், வீண் சர்ச்சைகளுக்கு ஆளாகலாம். அனுபவப் பாடங்களை கற்றுக் கொள்ளலாம். சில காரியங்களை தாமதம் இல்லாமல் விறுவிறுப்பாக நடக்கலாம். சகோதரர்கள் மீதான பாசம் கூடும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

### தனுசு

மற்றவர்களின் பேச்சைக்கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு, அவதிப்படுவீர்கள். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக சிலருக்கு நல்ல ஆலோசனைகள் சொல்வீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில், மகிழ்ச்சி, சந்தோஷம் குடிகொள்ளும். கொடுக்கல் வாங்கல்களை சீரான வகையில் நடத்திக் கொள்வீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். தொழில் புரிவோருக்கு நல்ல வேலையாள்கள் கிடைப்பர். திருமண காரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பணவரவுகளைப் பெறலாம். எந்த விடயத்துக்காகவும் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாக முடிவு எடுப்பீர்கள்.

### மகரம்

ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நன்மை தரும் சில காரியங்கள் நடக்கலாம். நீண்ட நாள்களாக ஆசைப்பட்ட சில விடயங்கள் நடக்கலாம். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கட்டளைகளை மறுக்க முடியாமல் கூடுதல் வேலைகளைச் செய்ய நேரிடலாம். இருந்தாலும், உழைக்கும் அளவுக்கு பலன் கிடைக்கும். கடந்த கால இழப்புகளை எல்லாம் ஈடுகட்டும் வாய்ப்பு உருவாகும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

### கும்பம்


நீண்ட நாள்களாகப் பிற்போட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். தந்தை வழியில் சில நன்மைகளை அடையலாம். எந்த விடயத்திலும் கோபத்தைக் காட்டாமல் பொறுமையாகச் செயற்பட வேண்டும். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

### மீனம்

மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய முற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். ஓய்வின்றி நாள் முழுவதும் பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் இடையூறுகளை, பிரச்சினைகளைச் சந்திக்கலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பதைத் தவிர்க்கவும். புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசுவோர் மூலம் ஆதாயம், அனுகூலம் பெறலாம். எந்த பிரச்சினைகளையும் துணிச்சலாகச் சந்திக்கும் வல்லமை உருவாகும். எந்த விடயத்திலும் பொறுமை, நிதானம் அவசியம். வேலைப்பளு அதிகரிக்கும். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓட்டைப் பானையும் திருட்டு எலியும்



பாட்டி வீட்டு பழம்பானை
அந்த பானையில் ஒரு புறம் ஓட்டையடா
ஓட்டை வழியாய் சுண்டெலியும்
உள்ளே புகுந்து கொண்டதடா
உள்ளே புகுந்த சுண்டெலியும்
நெல் ஊதிப் புடைத்து உண்டதடா
நெல் உண்டு கொழுத்ததனால்
உடல் ஊதி பெருகி விட்டதடா
ஊதிப் பெருத்த உடலாலே
ஓட்டை வழியாய் வெளியே வரமுடியவில்லை
காற்று எதுவும் இல்லாமல்
எலியும் உள்ளே இறந்ததடா



**ஸ்ரீ. மேனன்**
யா/ புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்.




**சா.பபிதா**
கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.



**ம.யாகிலா**
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி



**ஸ்ரீ. பத்மலோஜினி**
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



**ற.கஜப்பிரியன்**
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



**ஆ.கபிலன்**
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

# உயிரின வாழ்க்கைக் காலம்

| | | |
|---|---|---|
| பருந்து | - | 100 ஆண்டுகள் |
| கழுகு | - | 100 ஆண்டுகள் |
| கழுதை | - | 35 ஆண்டுகள் |
| திமிங்கிலம் | - | 35 ஆண்டுகள் |
| குதிரை | - | 25 ஆண்டுகள் |
| புலி | - | 18 ஆண்டுகள் |
| நாய் | - | 15 - 20 ஆண்டுகள் |
| பூனை | - | 15 -20 ஆண்டுகள் |
| சிங்கம் | - | 16 ஆண்டுகள் |
| நீர் வாத்து | - | 14 ஆண்டுகள் |
| தவளை | - | 10 ஆண்டுகள் |

ப.தனுஜா
வ/சைவப் பிரகாசா மகளிர் கல்லூரி.

# குருவிச்சை




உணவுக்காக தாவரங்களுக்கிடையில் உருவாக்குகப்பட்ட இடைத் தொடர்புகள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்போம். பச்சைத் தாவரங்கள் மீது வாழும் குருவிச்சை (Loranthus) தூக்குமக் கொத்தான் (Cuscuto) போன்ற தாவரங்களை அறிந்திருப்பீர்கள். இந்தத் தாவரங்கள் இரண்டும் தமது பருகி வேர்களை தாவரத் தண்டினுள் செலுத்தி அதன் மூலம் தாம் வாழ நீரையும், போசனைப் பதார்த்தங்களையும் பெற்றுக் கொள்கின்றன. இவை தாவரங்களுக்கு தீங்கிழைப்பதால், ஒட்டுண்ணித் தாவரங்கள் (Parasitic plants) என அழைக்கப்படுகின்றன. பச்சை ஒளித் தொகுப்பை நிகழ்த்துகின்றன. இவ்வாறான தாவரங்கள் விரிந்து ஏனைய தாவரங்களில் இருந்து நீரையும், கனியுப்புக்களையும் மாத்திரம் பெற்றுக் கொள்ளும். இதனால், இவை குறையொட்டுண்ணித் தாவரங்கள் என்றும் அழைக்கப்படும்.

சி. டிலக்சன்
தரம் -6ஏ, யா/ யூனியன் கல்லூரி.

# வாத்தும் மீனும்

வாத்து ஒன்று மீன்களைத் தேடி ஏரியில் நீந்திக் கொண்டிருந்தது. ஒரு மீனும் கிடைக்கவில்லை. இரவுப் பொழுது வந்தது. அப்போது வானத்தில் இளம்பிறை தோன்றியது. அதன் நிழல் தண்ணீரில் நன்றாகத் தெரிந்தது. பசியுடன் இருந்த வாத்து நிழலை மீன் என்று நினைத்தது. அதைப் பிடிப்பதற்காகத் தண்ணீரில் பலமுறை மூழ்கி எழுந்தது. இதைப் பார்த்த மற்ற வாத்துகள் "நிலவின் நிழல் உனக்கு மீனாகத் தெரிகிறதா? ஒருமுறை ஏமாந்தும் உனக்கு அறிவு வரவில்லையா? மீண்டும் மீண்டும் அவற்றை பிடிக்க முயற்சி செய்கிறாயே!" என்று கேலி செய்து சிரித்தன. ஐயோ மற்ற வாத்துகளின் கேலிக்கு ஆளாகிவிட்டேனே என்று வருந்தியது அது. அதன் பிறகு அது தண்ணீரில் மீனைப் பார்த்தாலும் பிடிக்கத் தயங்கியது. அது நிலவின் நிழலாக இருந்தால் வாத்துகள் கேலி செய்யுமே என்று நினைத்தது. பிறர் கேலிக்கு அஞ்சக் கூடாது என்பதை அறியாத அந்த வாத்து உணவு கிடைக்காமல் சில நாள்களில் இறந்து போனது.



நீதி: பிறர் என்ன சொல்வார்களோ, ஏது சொல்வார்களோ என்று நினைத்து வாழ்ந்தால் இப்படித்தான். நம்முடைய சுய புத்தியை உபயோகிக்க வேண்டும்.

# விடை தெரியுமா? 141

## உங்களுக்கும் பரிசில்கள்

1. பிரான்ஸ் நாட்டின் தலைநகர் எது?
2. உலகில் மிக உயரமான பூனை எங்கு காணப்படுகிறது?
3. ஆசியாவில் முதன் முதல் தியான யோகா சபையை நிறுவியவர் யார்?
4. லிபியாவின் புதிய இராணுவத் தளபதி யார்?
5. இந்தியாவின் மிகப்பெரிய சிறைச்சாலை எது?

## விடைகள் 139

1. செஞ்சிலுவை
2. 1948 ஆம் ஆண்டு
3. எமிரிட்டா ஆசியாடிக்கா
4. ஜோதி ஆம்க்
5. சீனா


## வெற்றி பெற்றோர் விவரம் (140)

★ ஏ.கீர்த்திகன், தரம் -4, யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
★ சி.வனோஜா, தரம் - 03, யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
★ சி.லதாங்கி, தரம் - 03, யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
★ ஏ.துவாரகி, தரம் - 07, யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
★ சி.நிறோஜன், தரம் - 07, யா/ நெல்லியடி ம.ம.வித்தியாலயம்
★ கு.மீரா, தரம் - 10, யா/இணுவில் இந்துக் கல்லூரி

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 14.01.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டிய காகமும் திறந்த வெளி மாடுகளும்



திண்ணைகளில், வெற்றிலைக் குதப்பல்களோடு
தெறித்து விழுந்தன உண்மைகள்
"ஐக்கிய ஜனநாயக சோஷலிசக் குடியரசின்"
'செங்கோலைச்' செய்த உலோகங்களை
சித்திரப் பரீட்சைக்காய் உரத்து உருப்போகிறாள்!
எப்பவோ எடுத்து வெளியே வைக்கப்பட்ட
தொலைபேசிக்கு,
அழைத்துக் களைத்த பின், அடிக் குரல் கேட்கிறது!
....."இண்டைப் பாட்டுக்கு விளக்கிலேயே படி பிள்ளை!"..

கத்தியேந்திய காட்டு மிருகத்தின் வால் கிளைத்த
எட்டுச் செதில் கணுக்களுக்கும், வேறு, அர்த்தமுள்ளதாம்!!
"ஏழாம் அறிவா", வேலாயுதமா" என்று கணித்தவன் தான்,
தேசியக் 'கணிதத்தில்'
.... எட்டாமிடத்திருந்தான் முதல் நாள்.

'அவுட்' டாக்கிய விடைத்தாள் விற்றகாசு
அஸ்திவாரமாகியது சீதன வீடொன்றுக்காய்!
'டென்மார்க்' சம்பந்தம், முன்பொருக்கால்
"டைவர்ஸ்" என்றறிந்த பின்,
நல்லூர் "முருகனும்" கல்லாகவே கிடந்தான்
"முரட்டு நேர்த்திகளின்" முடிவில்!!

உப்புத்தண்ணீரில் குளித்து, உபவாசமிருந்து
படித்தவன் உயர்ந்தான்!
மெத்தவுழைத்திருப்பார்கள், "இரண்டாவதாய்" இறக்கிவிட!
வித்தியாசம் கூடியதால், கைவிட்ட கதை
"உள்ளுக்கும்" தெரியும்!!


"வறுமைதான் வயசுப்பிள்ளைகளை
வாலிபம் தொலைக்க வீதி"யில் விட்டதென்று
வசனமிழுப்பவர்களின், பிக்கப் "காற்றுக்குறையும்" வரை
கற்களில் படுவதில், 'பித்தம்' வெடிக்காத கால்கள்!
ஒற்றைப்போக,
"வெங்காயமும், பொயிலையும்" போதும்,
"வெஸ்ட்மினிஸ்ரர்" வரை மூன்று வருடங்கள் முடித்து
ஊர் திரும்ப...
"சகலகலாவல்லி மாலை"யின் மேல் சத்தியமிது!

அபிதவன்

# ஒரு நெருடல்...

மார்கழி மாதம்
இடர்போக்கும்
அதிகாலை நேரம்
திருவெம்பாவை
ஓசையில்
விண்ணிலிருந்து
இறங்கிவந்து
வேதனை போக்கும்
தேவதை போல்
மண்ணில் படரும்
ஓசோன் படலம்

உயிர்களுக்கு
உத்தரவாதம்
பயிர்களுக்கு
உயர் பாதுகாப்பு
உலகின் கவசம்
என்னுமுணர்வில்
உச்சப் பயன்பெற
மூச்சுப்பையை
முழுவதும் நிரப்ப
உயிரணுவில்



புது நெடிலால்
ஒரு நெருடல்

இதுவரை; காலமும்
ஆதிக்க; ஆசையால்
ஆய்வென்றும்
ஆராய்ச்சியென்றும்
ஆர்வாரத்துடன்
பெயர் சூட்டி
பாரெங்கும் வீதி
பரிசோதித்த
பாரிய குண்டுகளில்
வாசம் செய்த
நச்சுக் கலவைகள்
நிச்சயமாயிதில்
கலந்திருப்பதை
நன்குணர்ந்து
சிறிதும்; தாமதமின்றி
சுவாசப்பையை
சுருக்கிக் கொண்டதால்
உயிர் பிழைத்தேன்.


க.நாகராசா, நுணாவில்

# கண்ணீர்

புலரும் பொழுதிலே,
மலரும் பூக்களின் முகத்திலே
படரும் பனித் துளிகள் தான்
கண்ணீரால்,
இலைகளையும் தழுவி
துடி துடிக்கின்றன.



க.செல்வமலர்



# நிழல்

நீ எனக்குச் சொந்தமில்லை
என்றாலும் உன் நிழல்கள்
எனக்குச் சொந்தம்
உன் பின்னால் திரும்பிப் பார்
உன்னைத் தொடர்ந்து வரும்
நிஜங்களற்ற நிழல்களைப் போல
என் நினைவும் உன்னை
நிழல்களாய் தொடர்ந்து
கொண்டிருக்கும், நிழல்கள்
நிஜமற்றவை தான் ஆனால்
என் காதல் நிஜமானது
நீ நிழலாய் இருக்கும்
வரை!....

# ஏமாற்றம்



சுவாசக்காற்று உட்செல்லும்
என் இதயம் என்னும் பரிஷக்
கூண்டுக்குள் பொன் வண்டாய்
நுழைந்தவன் நீ....
என்னை இன்பச் சிறையில்
வைத்திருப்பாய் என்று நம்பினேன்
துன்பச் சிறையில் தள்ளப் போவது
தெரியாமல்!..

# தோல்வி



நான் நேசிப்பதை நீ
அறிந்திருக்க டுயமில்லை
என் கவிதையைப்
போலவே என் காதலையும்
புரிந்து கொள்ள
மறுத்து விட்டாய்!....

# நினைவுகளில்



இதயத்தில் உறக்கம்
அற்ற ஒய்யாரமான
கனவில் கூட
தூக்கமின்றி உன் நினைவில்
என் கண்களின் ஓரத்தில்
தூக்கமின்றி உனதுருவம்
குடி கொள்கின்றது,
எப்போதும் என்றென்றைக்கும்
உன் நினைவுகளோடு மட்டும்
நான் வாழ்ந்து கொண்டிருப்பேன்!...

# இதயத் துடிப்பு

உனது துடிப்பை அறிந்திருக்காத போதும்
இதயமே நீ ஏன் இன்னும்
அவனுக்காய் துடித்துக் கொண்டிருக்கிறாய்,
உனது துடிப்பை இடை
நிறுத்தாத வரை துன்பச் சிறை
உனக்கு சொந்தமாகி
விடும்!.....

ச.சோபியா, முதலிக்கோயிலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்



# மீண்டும் ஒரு கிருஷ்ண வருகை

மகா பாரதத்தில் கிருஷ்ண வருகை என்பது மிகவும் ஒரு முக்கியமான சம்பவமாகக் கருதப்படுகிறது. குருசேத்திரப் போர் ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவு பெற்று விட்ட நிலையிலும் கூட அந்த விஜயம் சமாதானத்துக்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு கடைசி முயற்சியாகும்.

அந்த வகையில் கிருஷ்ணன் கௌரவர்களிடம் பாண்டவர்கள் சார்பில் 5 நாடுகளைத் தரும்படி கோரிக்கை வைக்கிறான். அது நிராகரிக்கப்பட்ட நிலையில் 5 ஊர்களைக் கேட்கிறான். அதுவும் மறுக்கப்பட 5 வீடுகளைக் கேட்கிறான். துரியோதனன் அவற்றைக் கூட வழங்க மறுத்த நிலையில் கிருஷ்ணன் தோல்வியுடன் திரும்புகிறான்.

அதன் விளைவாகப் பாரதப் போர் வெடிக்கிறது. இரு நாட்டிலும் பேரழிவுகள் ஏற்படுகின்றன. கௌரவர்கள் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றனர். இது மகாபாரதத்தில் இடம் பெற்ற கிருஷ்ண வருகை கண்ட பலாபலன்.

### போருக்குப் பிந்திய கிருஷ்ண பயணம்

தமிழ் மக்களின் விடுதலைப் போர் பல்வேறு சதி நடவடிக்கைகள் மூலம் தோற்கடிக்கப்பட்ட பின்பு இங்கு பல கிருஷ்ண வருகைகள் இடம்பெற்று விட்டன. மகாபாரதத்தில் இடம்பெற்றது போருக்கு முந்திய கிருஷ்ண விஜயம் இங்கு இடம்பெறுவது போருக்குப் பிந்திய கிருஷ்ண வருகை.

எனினும், கௌரவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் ஒரு பொதுத் தன்மை உண்டு. அவர்கள் ஐந்து வீடுகளைக் கூட கொடுக்கத் தயாராயிருக்கவில்லை. இலங்கை அரசும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கத் தயாராயில்லை.

ஒவ்வொரு முறையும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இலங்கை விஜயத்தை மேற்கொள்ளும் போது ஆக்கபூர்வமான ஏதாவது முடிவுகள் எட்டப்படக் கூடும் என்றொரு எதிர்பார்ப்பு இருக்கும்.

ஆனால் அழகான வார்த்தைகளிலான ஊடகப் பேட்டியை விட ஏமாற்றமே எஞ்சி நிற்கும்.

ஞாயிறு காரம்

மீண்டும் இவர் இம்மாத நடுப் பகுதியில் மேலும் ஒரு இலங்கைக்கான வருகையை மேற்கொள்ளவுள்ளார்.

ஏற்கனவே இவர் மேற்கொண்ட வருகைகளின் போது இருந்த சூழ்நிலையை விட இம்முறை சற்று வித்தியாசமான ஒரு சூழ்நிலையே நிலவுகின்றது.

### பெரும் முட்டுக்கட்டை

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே இடம்பெற்ற பேச்சுகளில் ஒரு பெரும் முட்டுக்கட்டை ஒன்று உருவாகியுள்ளது. வடக்குக் கிழக்கு இணைந்த பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய ஓர் அதிகாரப் பரவலாக்கத்தைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

அரசோ காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்க முடியாதெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துமாக இருந்தால் பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை எனவும் தெரிவித்துவிட்டது.

தமிழ் பேசும் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளையே வழங்க மறுக்கும் அரசு பேச்சு மேசையை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு மாற்றப் பகீரதப் பிராயர்த்தனம் செய்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு கொள்ள மறுத்துவிடுகிறது.

இப்படியான ஒரு நிலையில் நிகழவுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணாவின் வருகை பல கேள்விகளை எழுப்புவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

இந்த வருகைக்கு முன்பாகக் கிருஷ்ணாவும் மஹிந்த ராஜபக்ஷவும் ஊடகங்களுக்கு வழங்கிய சில கருத்துக்களை உற்று நோக்குவது பொருத்தமானதாகும்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இந்தியாவில் வைத்து இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை மிக முக்கியம் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேவேளையில் 'டெக்கன் குரோனிக்கல்' என்ற இந்திய ஊடகத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய செவ்வியில் தனக்கு இந்தியா தான் முதலாவது எனவும் மற்றெல்லாம் அதற்குப் பின்னால்தான் எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி அமெரிக்கா உட்பட மேற்குலகம் தன்னை அடிமைப்படுத்த முனைகிறது எனவும் தான் அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

### நோக்கம் என்ன?

கிருஷ்ணாவின் இலங்கை வருகையின் பிரதான நோக்கம் இலங்கை இந்திய உறவுகளை மேம்படுத்து வதையே அடிப்படையாகக் கொண்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே எமது இனப் பிரச்சினை விவகாரம் கையாளப்படும். அதாவது எமது இனப்பிரச்சினை விவகாரங்களைவிட இலங்கை-இந்திய உறவுகளை மேம்படுத்துவதே முக்கிய நோக்கமாக அமையும். இலங்கை சீனா பக்கம் சாய்வதைத் தடுக்க இலங் கைத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பலிப் பொருளாக்குவது இந்தியாவைப் பொறுத்தவரையில் இதுதான் முதல் தடவையல்ல. இதற்கான கலி நிலையை உருவாக்கும் முயற்சியை மஹிந்த ராஜபக்ஷ வெகு லாவகமாகவே கையாண்டு வருகிறார்.

ஒருபுறம் சிரேஷ்ட அமைச்சர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணி பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனக் கூறி வருகின்றனர். இன்னொரு புறம் ஜாதிக ஹெல உறுமய தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி போன்ற அமைப்புக்கள் எந்தவொரு சிறு அதிகாரம் கூட வழங்கப்படக் கூடாது எனக் குரலெழுப்பி வருகின்றன. அப்படி வழங்கப்பட்டால் சிங்கள மக்களை வீதியில் இறக்கிப் போராட்டங்களை நடத்தப் போவதாக மிரட்டி வருகின்றன.

அதாவது இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைக்கும் கோரிக்கைகள் மழுங்கடிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் என்பதே பேசப்படும் அடிப்படையாக மாற்றப்படலாம்.

### அழுத்தங்கள் வரலாம்

அப்படியான ஒரு நிலைக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தள்ளும் வகையில் கிருஷ்ணா சில அழுத்தங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கொடுக்கவும் முயலலாம். மஹிந்த ராஜபக்ஷவும் சிங்கள இனவாதிகளை மீறித்தான் சில விட்டுக் கொடுப்புகளுக்குத் தயார் என்ற வகையில் ஒரு பெரும் நாடகமாடலாம்.

இதில் நாம் கவனிக்க வேண்டியது சிரேஷ்ட அமைச்சர்கள் என்றால் என்ன, ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி என்றால் என்ன எல்லோருமே மஹிந்த ராஜபக்ஷவின் கயிற்றில் ஆடுபவர்கள். இப்போது இவர்களை எதிரெதிர்த் திசைகளில் நிறுத்தி மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கங்களை லாவகமாக நிறைவேற்றும் வகையில் ஆட்டி வைக்கப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசுக்கும் சகல விதமான உதவிகளையும் வழங்கியது இந்தியா என்பதை உலகறியும். ஒரு போர் நிறுத்தத்தை மேற்கு நாடுகள் வலியுறுத்திய போது கூட இந்தியா வழங்கிய துணிச்சலே இலங்கை அரசை அதைக் கூட உதாசீனம் செய்ய வைத்தது. அதாவது தமிழ் மக்களின் ஆயுத பலத்தைச் சிதைத்ததில் இந்தியாவுக்கு பெரும் பங்குண்டு.

### இந்தியாவின் கடமை என்ன?

எனவே இலங்கையின் இனப்பிரச்சினையை நியாயபூர்வமாகத் தீர்த்து வைப்பதில் இந்தியாவுக்கு ஒரு தார்மீகக் கடமை உண்டு. ஆனால் இந்தியாவே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை தனது பிராந்திய நலன்களுக்கு அமைவாகவே கையாண்டு வருகிறது.

ஆனால் தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் ஆதரவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா எடுத்திருக்கும் நிலைப்பாடும் இந்திய மத்திய அரசு, சிறு அளவிலாவ்து தமிழ் மக்களின் பிரச்சினையைச் சாதகமான முறையில் கையாள நிர்ப்பந்தித்துள்ளது.

அதேவேளையில், சிங்கள மக்களுக்கு மகாவம்சகாலம் தொட்டு இன்று வரை இந்தியா தொடர்பான ஓர் அச்சம் உண்டு.

இந்தியாவை அவர்கள் ஓர் ஆக்கிரமிப்பு சக்தியாகவே பார்க்கின்றனர். அதை மேலும் கூட்டும் வகையில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்க இரு சந்தர்ப்பத்திலும் இந்தியப் படைகள் பயன்படுத்தப்பட்டமை விளங்கியது. சிங்கள அரசியல்வாதிகளும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை சிங்கள மக்கள் மத்தியில் நியாயப்படுத்த இந்திய எதிர்ப்புணர்வை வளர்த்தனர்.

எனவே இவற்றையெல்லாம் மீறி இலங்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இந்தியா முயல்கிறது. இது இலங்கை ஆட்சியாளர்களுக்கு இசைவாகச் செயற்படுவதன் மூலம் நிறைவேறும் என இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் கருதுகின்றனர்.

### சாதகமாகப் பயன்படுத்தும் இலங்கை

இப்படியான பல்வேறு புறச்சூழல்கள் மத்தியிலேயே கிருஷ்ணாவின் இலங்கை வருகை இடம்பெறவுள்ளது. அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த இலங்கை அரசு சகல தயாரிப்புக்களையும் மேற்கொண்டு வருகிறது.

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே இடம் பெற்ற பேச்சுகள் ஒரு சிக்கலான நிலையை எட்டியுள்ள வேளையில் அவரின் விஜயம் தமிழ் மக்களுக்குச் சாதகமான சில நிலைமைகளை உருவாக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பு இருப்பது இயல்பு தான்.

ஆனால் இலங்கை இந்திய உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கமே இந்த பயணத்தின் பிரதான நோக்கமாதலால் தமிழர் தரப்புக்குச் சில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ளும் படி அழுத்தம் கொடுக்கப்படலாம். அதற்கான சாத்தியங்களே கூடுதலாகத் தென்படுகின்றன.

ஆனால் எவ்வித அழுத்தங்களுக்கும் அடிபணியாது தமது கோரிக்கைகளில் உறுதியாக நிற்குமளவுக்குத் தமிழ் மக்களிடம் தெம்பும் துணிவும் உண்டு. இலங்கை அரசு ஐந்து வீடு கூடக் கொடுக்கத் தயாரற்ற கௌரவர்களாக இருக்கும் வரை எத்தனை முறை கிருஷ்ண வருகைகள் மேற்கொள்ளப்பட்டாலும் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸ்தி




சிம்பு சிறுவயதில் இருக்கும் போதே சிம்புவின் அப்பா இறந்துவிட சிம்புவின் அம்மா ரேவதி சிம்புவை வளர்க்க கஷ்ரப்பட்டு நாசரிடம் அடைக்கலம் புகுகிறார். நாசருக்கும் ரேவதிக்கும் பிறக்கும் மகன் தான் ரமேஷ். அண்ணன் சிம்புவுக்கும் தம்பி ரமேஷுக்கும் இடையில் நடக்கும் பாசமும், வாழ்க்கைச் சண்டையும் தான் படத்தின் கதையாகும். இதற்கிடையில் சிம்புவின் தாயான ரேவதியை கொலை செய்கிறார்கள். கொலை செய்தவனை படத்தின் கடைசியில் கொலை செய்கிறான் சிம்பு. பொலிஸ் வேடத்தில் வந்து கலக்கும் காட்சிகள், மிரட்டல் பணிவு என சிம்புவின் நடிப்பு, ஒவ் வொரு காட்சிகளிலும் வித்தியாச மாக நகர்கிறது. படத்தின் ஆரம்பக் கட்டத்திலே பணத்தினை தேர் தலுக்காகச் செலவு செய்யக் கொண்டுசெல்லும் ஒரு ரவுடிக் கும்பலிடம் இருந்து அதனைப் பறித்து எடுக்கிறான். அந்தப் பணம் கள்ளப் பணம் என்று தெரிந்ததால் அந்தப் பணத்தினை தனது வீட்டில் பத்திரமாக வைக்கும்படி ரேவதியிடம் கொடுத்து வைக்கிறான் சிம்பு. ரவுடிக் கும்பலின் தலைவன் தான் தேர்தலில் வெற்றி பெற்று நிறைய பண மோசடி செய்யலாம் என்று எண்ணி இருந்தவேளை பணம் பறிபோனதை அறிந்ததும் அதிர்ந்து போகிறான்.

விமர்சனம்

பணத்தினை எடுத்தவனிடம் இருந்து அதனை மீண்டும் எடுத்துவிட தனது நடவடிக்கைகளை மேற்கொள்கிறான். சிம்புவின் தம்பி ரமேஷ் தகப்பன் நாசரின் மில்லில் உதவியாளனாக வேலை செய்கிறான். சிம்பு ரிச்சாவை காதலிக்க, ரமேஷ் சரண்யாவைக் காதலிக்க இருவரின் காதலும் சண்டைக்கிடையில் அமைதியாகச் செல்கிறது. ரவுடிக் கும்பலைப் பிடிப்பதற்காகத் துரத்திக் கொண்டு போகும்போது, வீடு வீடாகத் தாவிச் செல்கிறான் சிம்பு. அப்பொழுது நடுவீட்டில் இருந்த ரிச்சாவைக் கண்டு மனதைப் பறிகொடுக்கிறான். மயக்கம் என்ன படத்தில் வந்து கலக்கலாக நடித்தாலும் இந்தப் படத்தில் அமைதியாக நடிக்கிறாள் ரிச்சா. ரிச்சாவின் அப்பா ஒரு குடிகாரன். தகப்பனைத் திருத்துவதற்காக ரிச்சா எவ்வளவு முயற்சி செய்தாலும் அது முடியாமற் போகிறது. ரிச்சாவின் அப்பாவிடம் சிம்பு சென்று புத்திமதி சொல்லி மகளைக் கேட்கிறான். அதற்குச் சம்மதம் தெரிவித்த ரிச்சாவின் அப்பா சிம்பு சொன்ன புத்திமதிகளைப் பார்த்து தான் தவறு செய்துவிட்டேன் என்று எண்ணி குளத்தில் விழுந்து தற்கொலை செய்கிறார். ரமேஷ் தனது காதலியான சரண்யாவின் அப்பாவிடம் சென்று மகளைத் தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்டபோது, சரண்யாவின் அப்பாவோ பணத்தினைக் கொண்டுவா மகளை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன் என்று சொல்கிறார். ரமேஷ் வீட்டுக்கு வந்து சிம்புவின் அதாவது ரவுடிக் கும்பலிடம் இருந்து பறித்த பணத்தைக் களவாக எடுக்க முயற்சி செய்கிறான். அதனைப் பார்த்துவிட்ட தாய் ரேவதி, தடுக்க முயற்சி செய்தும் இயலாத கட்டத்தில் பணத்தைக் கொண்டுபோகும்படி விட்டுவிடுகிறாள்.

பணத்தைத் தேடி ரவுடிக் கும்பல் சிம்பு வீட்டுக்கு வந்து ரேவதியிடம் பணத்தினைக் கேட்டு மிரட்டி ரேவதியைக் கொலை செய்கிறார்கள். சிம்புவைப் பிடிக்காத நாசர் தனது மகன் ''ரமேஷ்சுடன் வாழ்ந்து வருகிறார். ரமேஷ்சிக்கும் - சரண்யாவுக்கும் திருமணம் நடக்கப்போகும் மண்டபத்திலேயே சிம்பு ரிச்சாவைக் கூட்டிக்கொண்டு வந்து அதேநாள் திருமணம் செய்கிறான். தம்பியின் திருமணம் நடக்கவிருந்த தருணத்தில் இப்படி இடையில் வந்து சிம்பு திருமணம் செய்துவிட்டானே என்ற ஆத்திரத்தில் - என்னுடைய முகத்திலேயே முழிக்காதே'' என்று நாசர் சிம்புவிடம் சொல்லுகிறார். பிரிந்து செல்கிறார்கள். ரேவதி இருக்கும் மட்டும் தான் இந்தக் குடும்பம் ஒற்றுமையாக இருந்தது. ரேவதி இறந்தவுடன் இரண்டாக உடைந்துவிட்டது. காட்சி நகர்கிறது. ரமேஷ் மில்லில் வேலை செய்யும் ஒருத்தனுக்கு உடம்பு பூராகவும் காயம் வரும் மட்டும் அடித்துள்ளான். அடி வாங்கியவன் சிம்புவிடம் சென்று முறையிட்டுள்ளான். சிம்பு வந்து ரமேஷினை அடிக்கின்றான். இருவருக்கும் கடைசியில் இருந்த உறவு கூடுதலாக பகை கொள்கிறது. காட்சி நகர்கிறது. நாசர் நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார். ஒரு ஆப்பரேசன் செய்ய வேண்டும் அதற்கான பணத்தினைக் கொண்டுவந்தால் ஆப்பரேசன் செய்யலாம் என்று சொல்லி விடுகிறார்கள். பணத்தினைத் தேடி அலைகிறான் ரமேஷ். வில்லன் ரமேஷ் இற்கு உதவி செய்வதாகக் கூறி தன்னுடன் வரும்படி அழைக்கிறாள். ரமேஷ்உம் பணம் கிடைக்கும என்ற எதிர்பார்ப்பில் வில்லனுடன் செல்கிறான். வில்லன் சொல்லும் வேலைகளைச் செய்கிறான். நாசர் வைத்தியசாலையில் இருப்பதை அறிந்த சிம்பு பணத்தினை வைத்தியசாலைக்குக் கொடுத்து ஆப்பரேசன் நடக்கிறது. நாசரைக் காப்பாற்றுகிறான். வில்லன் ரமேஷ்சினை அனுப்புகிறான் சிம்புவைக் கொன்றுவிட்டு வரும்படி. ஆனால் ரமேஷ் சிம்புவிடம் வந்து நடந்ததைக் கூறுகிறான்.

அண்ணன் தம்பி உறவு சேருகிறது. ரமேஷ் சிம்புவை கொலை செய்து விட்டதாக வில்லனிடம் சென்று சொல்லுகிறாள். உடனே வில்லன் உனது அம்மாவை நான்தான் கொலை செய்தேன். உனது அண்ணாவையும் கொலை செய்தேன். உன்னை இப்பொழுது கொலை செய்யப்போகிறேன் என்று ரமேஷ்சைப் பிடிக்கும்போது சிம்பு வந்து விடுகிறான். சண்டை அணல் பறக்கிறது. ரமேஷைக் காப்பாற்றினான் சிம்பு. இதுதான் படம். சிம்புவோடு வரும் சந்தானம், மயில்சாமி தங்கள் பாணியில் கலக்குகிறார்கள். தமனின் இசையில் உருவாகியிருக்கும் மெட்டுக்கள் அத்தனையும் சிம்புவுக்காக உருவான வட்டுக்கள் போலத்தான் இருக்கிறது. கோபிநாத்தின் ஒளிப்பதிவு மிரட்டியிருக்கிறது. வி.டி.விஜயனின் எடிட்டிங் எம்மைப் படத்துடன் ஒட்ட வைக்கிறது. கனல் கண்ணனின் சண்டைக்காட்சிகள் அதிரடி தரணி படங்களில் வில்லி, தூள் வரிசையில் ஒஸ்தி பெரிதாக எடுபடவில்லை. ஆனாலும் என்ன சிவப்பு சேலையோட வரும் ரிச்சா, பொலிஸ் காரனாக வரும் சிம்பு இருவரும் எதிர் தொள்ளும் காட்சிகள் பரவசமடைய வைக்கிறன.

# எழுதிச் செல்லும் விதியின் கை

## ②

இறைவனிடம் உங்கள் தீய குணங்களை ஒப்படைத்துப் பாருங்கள். அதற்குச் சமனான பிரதியுபகாரமாக சந்தோஷம் உங்களுக்குள்ளே உருவாகும். துன்பம் வந்த வேளையில் இறைவனை நினைக்கத் தெரிந்த எமக்கு அதற்குக் காரணமான காரியத்தை நாம் வைத்துக் கொண்டு துன்பத்தை மட்டும் போக்கச் சொல்லி இறைவனை இறைஞ்சினால் காரியம் உங்களிடம் இருக்கும் வரை துன்பம் தொடர்கதைதானே. துன்பத்திற்குக் காரணமான உங்கள் கோபத்தையோ அல்லது குடிப்பழக்கத்தையோ அல்லது ஏனைய தீய பழக்கங்களையோ நீங்கள் வைத்திருந்து கொண்டு துன்பத்தை மட்டும் நீக்கச்சொல்லி இறைவனைக் கேட்டால் அது எப்படி நியாயம் ஆகும். துன்பம் வந்த வேளையில் இறைவனுடன் பேரம்பேசுவதற்குப் பதிலாக நம்மிடம் உள்ள தீய பழக்கங்களான, துன்பத்திற்குக் காரணமான காரியங்களை அவனிடத்தில் ஒப்படைத்தால் வைத்தியர்களுக்கெல்லாம் தலை வனான வைத்தியநாதராக இறைவன் இருக்கும் உண்மை புலப்படும். அப்பொழுது துன்பங்களின் இருப்பிடமான தமோபிரதான் நிலையில் இருந்து மீண்டும் சதோபிரதான் நிலையை அடைய முடியும். அதற்கு நீண்ட பயிற்சிவேண்டும். ஒருமுறை இறைவனிடம் கொடுத்ததை திருப்பி எடுக்காத தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். உங்களுக்குள்ளே அந்தத் தீய பழக்கங்கள் மீண்டும் எழாமல் இருக்க சதா இறைவனை நினைத்தால் தான் அது சாத்தியம் ஆகும். காரணம் இந்த உலகில் உள்ள அனைவரும் உங்களுக்குச் சாதகமாக இல்லையே மீண்டும் அவர்களை நினைத்து கோபத்தை கையில் எடுத்தால் இறைவன் தந்து விடுவார் கூடவே துன்பத்தையும் தான். அவரிடம் கொடுத்ததை அவரிடம் கேட்காமல் நீங்கள் திருப்பி எடுப்பது உசித மல்லவே. அது உங்கள் தவறு தானே.. கடலில் கொட்டிய நதிநீர் மீண்டும் நதிக்குள் வராமல் இருப்பதுபோல் உங்கள் விதியை உங்கள் மதியால் எழுதிப் பாருங் கள். அங்கே உண்மையின் சத்தியம் உங்களுக்குப் புலப்படும். அதனால்தான் விதி காற் பங்கு மதி முக்காற் பங்கு என்றார்கள்.

> எதிர்காலம்
> என்பது
> எல்லோருக்கும்
> இல்லவே
> இல்லை.
> அது கடந்த
> காலத்தின்
> காட்சி மேடை
> யேற்றங்களே.

அடுத்தவனைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லா உலகில் இன்று நாம் வாழ்கின்றோம். உண்ணும் உணவில் உரம் தாராளமயப்படுத்தப் பட்ட கொள்கையாயிற்று. உணவில் தூய்மை இல்லை. சினிமா என்றாலும் சின்னத்திரை என்றாலும் சமுதாயச் சீர்கேட்டை சிறிதும் சிந்தியாது இலாப நோக்கோடு சினிமா எடுப்பதும் சின்னத்திரைகளில் வக்கிர புத்தியைத் தூண்டும் கதைகளை உருவாக்குவதும், சமுதாயத்தின் பாதையை தலை கீழாக்கியுள்ளது. விதியையும் மதியையும் நிர்வகிப்பதும், நிர்ணயிப்பதும் மனிதனே. அவனது எண்ணங்களோ. நல்லதை எண்ணினால் செயல் நல்ல வடிவம்பெறும். அல்லதை நினைத்தால் அழிவாற்றலைத் தோற்றுவிக்கும். அன்றைய சினிமாப் பாடல்களில் அர்த்தம் பொதிந்த வரிகள் இருந்தன. ஆனால் இன்றோ வெறும் அர்த்தமற்ற துள்ளிசை மட்டும்தான். அதுவும் ஓடும் பேருந்துகளில், உள்ளே பயணம் செய்துகொண்டு இருப்பவர்களின் மனநிலையைப் புரியாது பாடல் பெருத்த ஒலியெழுப்பி , இசைத்துக் கொண்டு இருக்க, அதனை இரசிக்கின்றார்களோ என்னவோ சகித்துக்கொண்டே தான் பிரயாணம் செய்யவேண்டும் என்ற மனோநிலையில் சாரதியும் நடத்துநரும் பிரயாணிகளை வாயில்லாப் பிராணிகளாக்கி விடுவார்கள். அது பிரயாணம் முடியும் வரை எழுதப்பட்டுள்ள விதி... எம்மைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தை இப்பேரிரைச்சல்கள் ஒழுங்கற்ற நிலைக்கு மாற்றும் பொழுது அங்கிருப்பவர்களது மனநிலையும் மாறத்தானே செய்யும்.

எதிர்காலம் என்பது எல்லோருக்கும் இல்லவே இல்லை. அது கடந்த காலத்தின் காட்சி மேடையேற்றங்களே. எப்பவோ நடந்து முடிந்த காரியத்தை தான் நாம் நடித்துக்கொண்டிருக்கிறோம். இன்றைய இல்லத்தரசிகள், தமது பிள்ளைகள் சகிதம் எவனோ ஒருவனால் தயாரிக்கப்பட்ட சின்னத் திரைகளில்தோன்றும் காட்சிகளுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை தங்கள் சமையல்களிலோ, பிள்ளைகளின் பழக்க வழக்க சீர்கேடுகளிலோ செலுத்துவ தில்லை. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் கெட்டவர் ஆவதும் அன்னை வளர்ப்பதிலே என்பது கருத்தற்றுப் போகும் காலம் வீழ்ச்சி பாதைாயை நோக்கி முன்னேறுகிறது. சினிமாவும், சின்னத்திரையும் முக்கிய இடத்தை நிர்வகித்து நிர்ணயிக்கின்றன. உணவு சமைக்கும் போதும் அதனைப் பரிமாறும்போதும் நல்ல சிந்தனையோடும உள்ளிருக்கும் நிலையான அழிவற்ற ஆத்மாவுக்கு சக்தி கொடுப்பதற்குப் பதிலாக சமைக்கும் போதும் அதனைப் பரிமாறும் போதும் நிலையற்ற கதையம்சத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து தினமும் சமையல் செய்யும் போது சின்னத்திரை நாடகம் பார்க்கும் நோக்கோடு சமையலை விரைவாகச் செய்து விரைவாக பரிமாறி விரைவாக உண்டால் இவ்வுடல் அழியும் போது திருவள்ளுவர் கூற்றுப் போன்று கற்றது எழு பிறவிக்கும் தொடர்வது போல் ஐம்பொறிகளையும் அடக்கியாள முடியாமல் சினிமாவும் சின்னத்திரையும் கற்றுத்தரும் வக்கிர புத்தியும் விரசமான காட்சிகளும் அடுத்த சந்ததியினரையும் எமதுமறு பிறவியையும் ஏழு பிறவி வரை சீரழிக்கும் என்பதில் ஐயமில்லையே.

நேரம் பொன்னானது. கடந்த நேரம் என்பது திரும்பி வராது. ஆனாலும் அதனையும் எண்ணாது தொடரைத் தவறவிடக்கூடாது என்று எண்ணுவது தான் தவறு. உலகின் எந்த முதற்தர கோடீஸ்வர பணக்காரர்களால் கூட தமது கடந்துசென்ற நேரத்தை அப்படியே திரும்பப் பெறமுடியாது. அப்படியிருக்க நாளொன்றில் சின்னத் திரைக்காக செலவிடும் நேரத்தைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் வாழ் நாளில் அடுத்தவன் வியாபாரத்துக்காக எமது நேரம், பிள்ளைகள் நேரம் விரயமாவது தெளிவாகும்.

(வளரும்...)

எஸ்.நடராஜா,யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதத் திறன் கொண்ட

# சிற்பவிற்பன்னர் கலைநயஞானி ஆ.சி.நாகராசா



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

25

தெய்வீகத் தன்மை பொருந்திய நுண் கலைகளுள் சிற்பக் கலை யானது கடினமான, நுட்பமான, அற்புதமான கலையாக விளங்கி வருகின்றது. ஈழத்தின் சிற்பக் கலை வரலாற்றில் சாதனை படைத்தவர்கள் எண்ணற்றவர்களாக இருப்பினும் இசை யாளர்கள் பயன்படுத்துகின்ற தோற்கரு விகளுக்கான உறுப்புக்களைப் (கொட்டு) புதிதாக உருவாக்குவதில் ஐம்பதாண்டு களுக்கும் மேலான அனுபவம் கொண்ட ஒருவராகவும் சோதிட வல்லவராகவும் சம யச் சொற்பொழிவுகளைத் திறம்பட நிகழ்த் தவல்ல ஆற்றலுடையவராகவும் விளங்கு பவர் சிற்பகலாமேதை ஆ.சி.நாகராசா.

மறைந்த ஆறுமுகம் சின்னத்தம்பி - மாணிக் கம் தம்பதியரின் மகனாக 01.12.1932இல் வட்டுக்கோட்டையில் இவர் பிறந்தார். தொடக்கக் கல்வியை வட்டு.சுப்பிர மணிய வித்தியாசாலையிலும் அதன் பின் னர் வட்டு.இந்துக் கல்லூரியிலும் கற்று எஸ்.எஸ்.சியில் சித்தியடைந்த இவர் சிறுவயதிலேயே சிறந்த பேச்சாளராகவும் விளங்கி வந்தார். எனினும் பரம்பரைத் தொழி லான சிற்பத் துறையில் பெரு விருப்புடன் ஈடுபட்டுத் தனது தந்தையிடமும் மாமனாரி டமும் இக்கலையைக் கற்று பதினெட் டாவது வயதிலேயே முழுமைபெற்றுத் தன்பணியைத் தொடங்கினார்.

கண்ணால் பார்க்கின்ற அழகிய உருவங் கள் அனைத்தையும் மரத்தில் சிற்பமாக உருவாக்கும் திறமை கொண்டிருந்த இவர் அந்தக்காலத்தில் மாட்டு வண்டிக்கான சக்கரங்களை உருவாக்குவதிலும் நிபுணத்து வம் கொண்டிருந்ததுடன் சைவ ஆலயங் களுக்குத் தேவையான அனைத்து விதமான வாகனங்களையும் மரத்தில் அழகுறச் சிற்பமாகச் செதுக்குவதில் தன்னி கரற்று விளங்கி வந்தார். இவ்வாறான வாக னங்களை ஆலயங்களுக்கு அன்பளிப்புச் செய்வோர் கேட்கும் வடிவத்திலும் விரும் பும் அளவிலும் அழகிலும் சற்றும் குறைவு வராமல் மனதில் நினைத்ததைக் கண் முன்னே வடிவமைத்துத் தரவல்ல இவரது கைவண்ணத்தில் உருவான ஏராளமான வாகனங்கள் ஈழத்தின் பல சைவாலயங் களிலும் வெளிநாடுகளிலும் பல ஆண்டு களாகப் பயன்படுத்தப்பட்டும் பேணப்பட் டும் வருகின்றன.

அனைத்துவிதமான தெய்வங்களுக் கும் தேவையான வாகனங்களை உயி ரோட்டமுடன் உருவாக்கும் வல்லமை கொண்ட இவர் இதுவரையில் இருநூறுக் கும் மேற்பட்ட வாகனங்களை உருவாக்கியுள் ளார். எனினும் தனது தொழில் வல்லமை யாலும் கலை ஆர்வத்தாலும் தோற்கருவி கள் அனைத்துக்குமான கொட்டு வகை களை அளவுப் பிரமாணம் பிசகாமல் பல்லா யிரக்கணக்கில் படைத்தளித்ததன் ஊடாக இவர் ஏனைய சிற்பக் கலைஞர்களுடன் ஒப்பிட முடியாத தனித்துவம் கொண்ட வராகப் பல ஆண்டுகளாக சேவையாற்றி வருகின்றார்.

தவில் கொட்டினை எவ்வாறு உரு வாக்க வேண்டும் என்பதற்கான அளவு கள் எவராலும் பின்பற்றப்படாத அக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் புகழ் கொண்ட தவில்மேதையாக அக்காலத்தில் விளங்கிய சின்னப்பழனியின் தூண்டுத லால் முதல் முதலில் இவரால் உருவாக் கப்பட்ட தவில் கொட்டானது சரியான தாகவும் சிறப்பானதாகவும் அமைந்து வெற்றியளித்தது. அக்காலத்தில் ஈழத்தின் ஈடு இணையற்ற தவில் மேதைகளாகத் திகழ்ந்த அளவெட்டி வி.தெட்சிணாமூர்த்தி, இணுவில் என்.ஆர்.சின்னராசா போன்ற அனைவரும் இவரால் உருவாக்கப்பட்ட தவில் கொட்டினையே விரும்பி உப யோகப்படுத்தி வந்தனர். கால ஓட்டத்தில் இவரது எண்ணத்தில் தோன்றிய அளவுப் பிரமாணமானது நிரந்தரமான நியமமாக ஈழத்திலும் தமிழகத்திலும் ஏற்றுக்கொள் ளப்பட்டமை இவரது புகழை மேலும் உயரச் செய்தது. தற்காலத்தில் ஈழத்திலும் தமிழகத்திலும் தவிலிசையாளர்களாக விளங்குகின்ற அனைவரும் இவரால் கடைந்தெடுக்கப்படுகின்ற கொட்டு களையே பெருவிருப்புடன் பயன்படுத்தி வருகின்றனர்.

இதே போன்று, மிருதங்கக் கலைஞ ரான கணபதியாபிள்ளை என்பவரின் ஆலோசனைப்படி மிருதங்கத்துக்கான கொட்டினையும் திறம்பட உருவாக்கி, அதிலும் வெற்றி கண்டார். இதற்கான அளவுப் பிரமாணங்களைக் கணபதிப் பிள்ளையிடம் தெரிந்து கொண்டதுடன் பழந்தமிழர் இசை இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையும் உள் வாங்கித் தனது தொழிலைக் கலைநயம் கொண்ட தொழிலாக வளப்படுத்திக் கொண் டார்.

உடுக்கு, கஞ்சிரா போன்ற தோற் கருவிகளுக்கான கொட்டுக்களையும் உருவாக்கவல்ல இவர் இதுவரையில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தவில் கொட்டுக்களையும் ஆயிரத்திற்கும் மேற் பட்ட மிருதங்கக் கொட்டுக்களையும் உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார். 1980களின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத் துக்கு அழைக்கப்பட்டிருந்த இசைமேதை மதுரை சோமு, இவரிடம் சென்று தனது சொந்தத் தேவைக்கான மிருதங்கக் கொட்டினை இவரிடம் வாங்கிச் சென்றமை, தமிழகத் தில் இவர் பெற்றிருந்த புகழுக்குச் சிறந்த எடுத்துக்காட் டாகும்.


மனித உழைப்பில் மட்டும் நம்பிக் கையும் விருப்பமும் கொண்டுள்ள இவர் இரவு பகல் என்னும் காலவேறுபாடு களைப் பொருட்படுத்தாமல் தன் பணி யைப் பொறுப்புடன் ஆற்றும் நற்பழக்கம் கொண்டவராகவும் விளங்குகின்றார். ஈஸ்வரன் சிற்ப ஸ்தாபனம் என்னும் பெயரில் இயங்கி வரும் இவரது தொழி லகத்தில் இவரது மருமகனும் மகனும் இவரைப் போன்ற சிற்ப வல்லுனர்களாக உருவாக்கப்பட்டுள்ளமை போற்றுதற்குரிய தாகும். புதிதாகக் கட்டப்படுகின்ற இல்லங் களுக்குத் தேவையான நிலை, கதவு, சாளரம் போன்ற அனைத்தையும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் செதுக்கும் திறன்கொண்ட இவர் தோற்கருவிகளுக் கான உறுப்புக்களை உருவாக்குவதில் அதிக நாட்டம் கொண்டவராக விளங்கி வருகின்றார்.

தோற்கருவிகளிற்கான கொட்டுகளைப் புதிதாக உருவாக்குகின்ற போது உதவியா ளர் பெருமளவில் தேவைப்படுவதில்லை. அதாவது ஒரு கொட்டினை உருவாக்கும் பணியைத் தொடக்கினால் அது முடியும் வரை கைமாறாமல் ஒருவராலேயே நிறைவு செய்யப்பட வேண்டும். அத்து டன் வேறு வேலைகளில் ஈடுபடவும் கூடாது. அளவுப் பிரமாணத்தில் ஒரு கடதாசியின் கனவளவு மாற்றம் ஏற்பட் டால் கூட, இசைக் கருவியின் நாதத்தில் இனிமை தோன்றாமல் போய்விடும். தோற்கருவிகளுக்கான கொட்டுகளை உருவாக்கும் பணியானது கரணம் தப்பினால் மரணம் என்பதைப் போன் றதே.

எனினும் சிற்பத்துறையில் சிறப்புற்று விளங்கி வரும் தற்கால இளையோர் லயக் கருவிகளுக்கான கொட்டுகளை உரு வாக்கும் முயற்சிகளிலும் எதிர்காலத்தில் ஈடுபட வேண்டுமெனக் கருத்துரைக்கும் இவரது நீண்ட காலக் கலைச்சேவையை நன்றியறிதலுடன் மதிப்பளிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தின் முன்னணி நாதஸ்வர, தவில் கலைஞர்களின் ஏற்பாட்டில் தாவடி விநாயகர் ஆலய மண்டபத்தில் 10.01.2012 செவ்வாய்க்கிழமை மாலை சிறப்பானதோர் பாராட்டுவிழா நடைபெற இருக்கின்றமை இவரது ஒப்பற்ற கலைத் தொண்டை எடுத்துக்காட்டி நிற்கின்றது எனலாம். ✱

■ வசாவிளான் தவமைந்தன்

# சொறி, சிரங்கு போக்கும் விலிம்பிக்காய்



**விலிம்பிக்காய்**
**வேறுபெயர்- புளிச்சக்காய்**
**தாவரவியற் பெயர்- Averrgoea**
**(அவேரியா பிலிம்பி)**
**குடும்பம்- Euphorbiaceae (யூபோபியேசியே)**
**சிங்களப்பெயர் - கமரங்கா**
**சமஸ்கிருதப்பெயர்- கமரங்க**
**ஆங்கிலப் பெயர்- Bilimbi**

இது சிறு வகுப்புரியது. அருநெல்லி மரத்தைப் பெரிதும் ஒத்திருக்கும் கூட்டிலைகள். சிற்றிலைகள் நீள்வட்டமாக இருக்கும். 10-35 வரை காணப்படும். முனை கூரானவை. சித்திரை- வைகாசியில் பூக்கும். பூக்கள் சிறியவை.

காய்கள் சற்று நீண்டவை. நீர்ப்பிடிப்பானவை. புளிப்புச் சுவையுடையவை. மஞ்சள் கலந்து பச்சை நிறம்.

சொறி, சிரங்குக்கு

இலையை நீர்விட்டரைத்துப் பூசிவர மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையைக் குடிநீரிட்டும் சொறி, சிரங்கு, கரப்பன் புண்களைக் கழுவி வந்தாலும் குணமேற்படும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**வாந்தி ஓங்காளத்துக்கு**

இதன் கனிச்சாறு ஒரு பங்குக்கு 3 பங்கு சீனி சேர்த்து நன்கு கலக்கி நாக்கிலிட்டு உமிஞ்சுவர ஓங்காலம், வாந்தி, நாச்சுவையின்மை என்பன மாறும்.

**பசியின்மை**

இதன் காய்களை நல்லெண் ணெய் சிறிதுவிட்டு வதக்கி பாற்கறி அல்லது பாற் சொதியாகச் செய்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர பசியின்மை, அருசி, அசீரணம், மலர்ச் சிக்கல் என்பன குணமாகும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S).
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 196

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | | 5 |
| 6 | | | 7 | | | 8 | |
| | | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | | 13 | | |
| 14 | | | | 15 | | | 16 |
| 17 | | | 18 | | | 19 | |
| | | 20 | | | | 21 | |
| | 22 | | | | 23 | | |

அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. செருக்கு
6. ஒரு கிரகம்
7. ஒரு திசையின் குறுகிய சொல்
8. தாண்டு
9.கழுவுதல்/ அலட்டுதல்
11. சாதாரண மனிதன்
13. நோவு
14.ரகம்
15.என்று
17. சிரசு
18. ஆசைப்படல்
20. துன்பம் இழைக்கும் செயல்
21. சேர்
22. திடீரென
23. படிப்பு

### மேலிருந்து கீழ்

1. நிகழக்கூடாதது
2. பழம்
3. புலவன்
4. தேர் இழுக்கும் கயிறு
5. சமுத்திரம்
8. ஒரு வாழைப்பழ ரகம்
9. இரும்புக் கருவிகளைத் தீட்டுவது இதில்
10. உலகம்
12. குழந்தை
15. சேற்றில் ஓய்வெடுக்கும் மிருகம்
16. பதத்தில் ஓர் உறுப்பு
18. தங்குமிடம்
19. வெளிச்ச வேளை
20. வழங்கு.

* வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

* ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 194 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) குத்துமதிப்பு (6) வதம் (7) ரவி (9) குமர் (11) புகட்டு (13) மறுப்பு.(15) தடு (16)புத்தர் (20) திரு (21) ஆம் (22) பாரதி (24) மதிப்பு (25) பாண்டவர் (26) புலி

### மேலிருந்து கீழ்

(1) குங்குமம். (2) துவர்ப்பு (3) மத (4) திம்பு (5) புரட்டு (8) விடு (10) மறு (12) கதர் (14) புத்தி (17) தருமர்.(18) அம்புலி (19) முரண் (21) ஆப்பு (22) பாபா (23) திட.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 196**
***நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.***

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 18.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.196 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 22.01.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 194 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**எல்.பி.மேரிதிரேசா**, இல.36, பாலிநகர், வவுனிக்குளம்

**2 ஆம் பரிசு**
**சொ.சாம்**, இல.1/8, புதுவீதி, கொய்யாத்தோட்டம்,யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**தே.பவித்திரன்**, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
**விஜயகுமார் பத்மாவதி**, சம்புளியவத்தை, வல்வெட்டித்துறை.

**5 ஆம் பரிசு**
**செல்வி ச.சிந்துயா**, செலிங்கோ ஆயுள் காப்புறுதி அலுவலகம், மானிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

**செல்வி க.ஆர்த்திகா**,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்

**திருமதி ஆர்.கிருஷானி**,
இல.41/3, மாப்பனாவத்துற வீதி, கண்டி.

**சி.உமாசிவம்**,
இல.90, கற்குழி, வவுனியா.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் [illegible] அனுப்பிவைக்கப்படும்.

# எல்லாமே......

(09 ஆம் பக்கம் தொடர்ச்சி)

துன்பமாய் எங்களுக்குச் செய்து கொண்டிருக்கின்றான்'' என்றார் சிவத்தார்.

''யாரண்ணை அந்தச் சாத்தான்?'' என்றார் சிவத்தார்.

''அட! உனக்கு அவனைத் தெரியாதே? அவன் தான் குழப்பக்காரன், கடவுளின் எதிரி, பைபிளில் யோபுவை சோதித்த பாவி. நீ பிழையாய் விளங்கி விடாதே'' என்று கிளாக்கர் கூறினார்.

''மனிதரிலும் அவன் வசப்பட்ட ஆக்கள் இருக்கினம் தானே. அதாலதான் சண்முகம் அப்படித் தடுமாறியது . அப்படித் தானே சண்முகம்?'' என்று கேட்டார் சிவத்தார்.

''ஓமண்ணை, அவனை விட பொல்லாத மனிதரெல்லாம் இந்தப் பகுதியில் சீவிக்கிறார்களே. அதுதான் தடுமாற்றம்'' என்றார் சண்முகம்.

''சரி கிளாக்கர்! உம்முடைய யாழ்ப்பாணப் பயணம் எப்படி இருந்தது?'' என்று கேட்டார் சிவத்தார்.

''உண்மையாய் அண்ணை! நீங்கள் சொன்னது போல ''பில்கிறீம் புறோசஸ்'' கதை மாதிரித்தான் இருந்தது. உப்புமடப் பிள்ளையார் மட்டும் மகாபாடு. நித்திய ஜீவனையடைய அவன் பட்டபாடு தான் எனது பாடும். அதுதான் போகட்டும், அண்ணை. மனிதர் படுகிறபாடு பெரும் பாடு. சிலர் றோட்டிலை பலன்ஸ் ரேஸ் ஓடுவார்கள், சிலர் சோடிப் பிரயாணம், சிலர் பக்கம் மாறி வருவார்கள், சிலர் தங்கள் வீட்டுமுற்றம் மாதிரி நினைத்துக் கொண்டு ஓடுவார்கள். சிலர் வீட்டுப் படலையிலிருந்து கண்ணை மூடிக் கொண்டு வருவார்கள், சிலர் றோட்டிலை சைக்கிளை நிற்பாட்டி ரெலிபோன் கதைப்பார்கள், சிலர் றோட்டிலை நிற்பாட்டி விட்டுட்டுக் கடைக்குப் போவார்கள், இன்னும் சிலர் சைக்கிளை றோட்டிற்கு குறுக்கே நிற்பாட்டிவிட்டுப் போவார்கள், சிலர் பாதையிலே நிற்பாட்டி கதைத்துக் கொண்டு நிற்பார்கள், சிலர் றோட்டிற்கு குறுக்கே ஏறிப் போவார்கள் , சிலர் யானை காட்டிலை சுதந்திரமாக நடப்பது போல நடு றோட்டிலை போவார்கள். இப்படி எத்தனை பாடுகள்? இத்தனையும் தாண்ட வேண்டும், மனதிற்குள் திட்டிக் கொண்டு தான் போவது'' என்றார் கிளாக்கர்

''ஏன் அண்ணை நீங்கள் பேச வேண்டியது தானே?'' என்று சண்முகம் கேட்டார்.

''ஏனப்பா! நான் அடி வேண்டி சாகவோ? இப்ப வசதி, செல்வாக்கு உள்ளவர்களும் , குண்டர்களும் தான் ஆதிக்கம். என்னவோ தெய்வம் நிண்டறுக்கட்டும். "Mill of the God works slow'' என்று வேதனையோடு கிளாக்கர் சொன்னார்.

''அண்ணை! தெற்கில் ஆடுமாடுகளை நெருக்கி கொண்டு போனால் தண்டனை. ஆனால் இங்கை மனிதரை கிழங்கு அடுக்கிற மாதிரி கொண்டு சென்றாலும் எப்படியோ போய் சாகட்டும் என்று விட்டுவிடுகிறார்கள்.'' என்றார் சீனிவாசக மாஸ்ரர்.

''இந்தக் கதையையும் கேளுங்கோ, என்ரை மருமகனுக்கு காலிலை விளையாடேக்கை விழுந்து வீக்கம். டொக்டர் ஒரு இடத்திலை எக்ஸ்ரே எடுக்க சொன்னாராம். இவை ஓர் இடத்திலை கொண்டுபோய் எக்ஸ்ரே எடுத்த பிறகு அங்கை வேலை செய்கின்ற ஒரு பிள்ளை கூறினாவாம் 'எல்லோரும் மேலே போங்கோ, படம் தரலாம்' என்று. அப்ப அங்கை வேலை செய்கின்ற பெரியவர் சொன்னவராம் 'பிள்ளை! கால் ஏலாதவர்கள் எல்லாம் இருக்கினம், நீர் கீழே பார்த்து கொடுத்துவிடுமென்ன?' என்று . ஆனால் அரை மணித்தியாலத்துக்குப் பிறகும் அந்தப் பிள்ளை மேலே வாங்கோ என்றுதான் கூறினாவாம். எல்லோரும் மேலே போனால் அங்க கடைசியாய் வந்த ஆளுக்குத்தான் முதலில் கொடுத்தவாம், இது அறிமுகம். மற்ற எல்லோருக்கும் கொடுத்து அரை மணித்தியாலமாம், இவர் எடுத்து பதினைந்து நிமிடங்கள் தான் ஆகுமாம் கொடுத்தாச்சு. பிறகு அங்கை வேலை செய்கிற ஆள்களுடன் ஏதோ கதையாம். அதன்பிறகும் கொடுப்பதும் கதைப்பதுமாம். எல்லோருக்கும் கொடுத்து முடிய ஒரு மணித்தியாலம் சென்றதாம். அதுக்கிடையில் பன்னிரண்டு மணி பஸ்ஸும் போட்டுதாம். அவர் கொடுத்த பின்பு சனம் ஒன்டரை மணி பஸ்ஸில் வந்துதுகளாம். பாருங்கோ இப்பத்தைப் பொடியள் சொல்லுற மாதிரி அந்த ஆள்களும் ஒரே பில்டப்பும், பிலிம்காட்டுறதும் தான்'' என்றார் சண்முகம்.

''சண்முகம்! நீ இதைச் சொல்கிறாய். எனது மருமகள் ஒருத்தி பிறைவெற் கிளினிக்கில் வேலை செய்கிறாள். அவளுக்கு அவளின்ரை பொஸ் கூறினாவாம் 'நீங்கள் இறங்கிப் போகக் கூடாது, உங்களின் தரத்தைக் குறைக்கக் கூடாது, றெஸ்பெக்ற்'' முக்கியம். இறங்கிப் போனால் சனம் மதிக்காது' என்று'' என்றார் சிவத்தார்.

''பாருங்கோ அண்ணை! தர்மாஸ் பத்திரியில் உப்படி நடந்தாலும் பரவாயில்லை. அது இலவசம். இவை காசையும் வாங்கிக் கொண்டு அதில்வேற பெருமை. சேவையை ஒழுங்காய் செய்வோம் என்ற யோசனை இல்லை'' என்றார் கிளாக்கர்.

''சரி இந்தப் பிரச்சினையை விடுங்கோ. மின்சாரம் எமக்கு எட்டாப்பொருத்தம் போல. மின்சாரத்துக்கு காசு காசு கட்டிக் கொண்டு அரிக்கன் லாம்பு, ரோஜ்லைற், ஜெனரேட்டர் எல்லாம் வைத்திருக்க வேண்டியுள்ளது'' என்றார் சண்முகம்.

''நாங்கள் உத்தியோகத்தரை குறை சொல்ல இடமில்லை. இது அரசு செய்யிர பிழை. மின்சாரம் இல்லை என்றால் குளிர்சாதனப் பெட்டி, கணனி எல்லாம் எப்படி இயங்கும்? சலூனில் கூட வேலை நடக்காது. மின்சாரம் இல்லை என்று அலுவலகங்களில் வேலை மந்தம், மில்களில் மிளகாய், மாதிரிக்க எல்லாம் கஷ்டம், வாழ்வே ஸ்தம்பித்து விடும்.'' என்றார் சீனிவாசக மாஸ்ரர்.

''நான் பத்திரிகையில் பாத்திருக்கிறேன் என்னென்றால் மின்சாரசபைக்கு வந்த மிசின்களில் சிலது பழைசு என்றும் அதனால் தான் அடிக்கடி நிக்குது என்றும்.'' என்றார் சிவத்தார்.

''மின்சாரத்தில் மட்டுமே சங்கடம்? வைத்திய வசதியிலும் சங்கடம் இருக்கு.'' என்றார் சண்முகம். ''அப்படி என்ன சங்கடம் என்றார் கிளாக்கர்.

''கிளாக்கர் ஐயா! உங்களைப் போல் குடும்பங்களில் டொக்டர், நேஸ் உள்ளவர்களுக்குப் பிரச்சினை இல்லை. எங்களைப் போன்ற குடும்பங் களுக்கு சங்கடமாகத்தான் இருக்கு. என்ரை அக்கா சரஸ்வதி கழுத்து நோ என்று ஒரு டொக்டருக்கு காட்ட ஒரு இடத்திலை பதிந்தவா. அவரிடம் உடனடியாகக் காட்ட முடியாதாம். குறைந்தது இரண்டு மாதம் காத்திருக்க வேணுமாம். இவா போய் காசு கட்டி மூன்று மாதத்துக்குப் பிறகு தான் வரச்சொல்லி ரெலிபோனில் சொன்னார்கள். ஆனால் அக்காவுக்கு அதுக்குள்ள வருத்தம் தானாய் சுகம் வந்திட்டுது பாருங்கோ'' என்றார் சண்முகம்.

''சிலவேளை ஏகலைவன் கற்ற மாதிரி அக்காவும் ஏதாவது வைத்தியம் பார்த்தாவோ தெரியாது'' என்றார் சிவத்தார்.

''உது மட்டுமே! நாங்கள் எங்கன்ரை ஊர் எண்டுகூட தலைநிமிர்ந்து நடக்க முடியாதுள்ளது. கிறிஸ்பூத விவகாரத்தில் பரந்தன், இரணைமடு விவகாரங்களில் எல்லாம் எங்களுக்கு என்ன மரியாதை இருக்கிறதென்றதையும், சட்ட ஆட்சியோ அல்லது காட்டுச் சட்டமோ நடைமுறையில் இருக்குதென்பதையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது'' என்று சிவத்தார் சொன்னார்.

''காட்டு நடைமுறையென்றால் என்ன?'' என்று கேட்டார் சண்முகம்.

''அது பெரிசு சின்னனை அடக்கி வாழ்வது. அதாவது பலமுள்ளது சுதந்திரமாய் வாழும், சிங்கம் மாதிரி. பலமில்லாதது என்ன ஆகுமோ? என்ன நடக்குமோ? என்று பயந்து பயந்து வாழுங்கள். எங்களுக்கு வாழ்வே சங்கடம் தான்'' என்று சிவத்தார் சொன்னார்.

''ஏன்? 'எங்களுக்கெல்லாமே சங்கடம் தான்'' என்று கிளாக்கர் கூறிக் கொண்டிருக்க கோவிலில் இறுதிப் பூசைக்கு மணி அடித்தது. எல்லோரும் எழுந்து சென்றனர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை போட ஒரு விடயம் 10

# அன்னை திரேசாவின் பாதையில் தடம் பதிக்கும் சகோதரி எலீசா

■ ரம்யன்

மன்னிப்பதென்பது தெய்வத்துக்குரிய குணம்சமாகும். குற்றம் புரியும் மனிதனானவன் தன் தவறை உணரும் போது அத்த வறை மீண்டும் செய்யாதிருக்க தீர்மானிப்பானாகில் இறைவனின் மன்னிப்பு நிச்சயமாக கிடைக்கும் என்கிறார்கள் பெரியோர்கள்.

அதேபோல் எமக்கு எதிராக பிறர் செய்யும் தவறுகளை அல்லது குற்றங்களை நாம் மன்னிக்கத் தயாராய் இருக்க வேண்டும். இல்லையெனில் நாம் செய்த தவறுகளை எங்ஙனம் இறைவன் மன்னிப்பார் என்று எதிர்பார்க்க முடியும்?

இறைமகனான யேசுகிறிஸ்துவுக்கு முள்முடி சூட்டினார்கள் - தோள்மீது பாரமான சிலுவையை சுமத்தினார்கள்- விரைவாக நகரும்படியாக காவலர்கள் அவரை கசையால் அடித்து கல்வாரி மலையை நோக்கி நடத்திச் சென்றார்கள் - பின்னர் சிலுவையில் இரண்டு கைகளையும் இரண்டு பக்கமாகவும் கால்கள் இரண்டையும் ஒன்றாகவும் வைத்து ஆணிகளை அறைந்து சிலுவையை செங்குத்தாக நிறுத்தினார்கள்.

இதை விட உலகத்தில் குற்றம் ஏதும் புரியாத ஒருவருக்கு இழைக்கப்படும் கொடுமை வேறு என்னவாக இருக்க முடியும்?

அவர் இறைமகன் என்பதால் தாங்கிக் கொண்டார் என்று நாம் ஆறுதல் அடையலாம் - உலகமாந்தர்கள் புரியும் பாவங்களுக்கு பிராயச்சித்தமாக அவைகளை ஏற்றுக்கொண்டார் என்றும் கூறிக் கொள்ளலாம். ஆனால் அத்தனை கொடுமைகளுக்கு பிறகும் இறைவனை நோக்கிப் பிதாவே இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறியாமல் செய்கிறார்கள்- இவர்களை மன்னித்தருளுக என்று மன்றாடும் மனப்பக்குவம் எவருக்கு வரும்? சாதாரண மனிதர்கள் அவ்வாறு செய்வார்களா? யேசுவால் முடிந்தது - அதனால்தான் அவர் இறைமகனானார்.

எந்தக் கொடுமையான வேளையிலும் மனிதனானவன் மன்னிக்கும் மனப்பான்மையை கைவிடலாகாது என்பதற்கு கல்வாரி மலையில் நடந்த சம்பவம் உலகுக்கு எடுத்துக்காட்டியது. அதனையே உலகம் முழுவதும் கிறிஸ்தவர்கள் யேசுவின் பிறந்த நாளையும் மறைந்த நாளையும் கொண்டாடி நினைவுறுத்துகிறார்கள். என்றாலும் மன்னிப்பு என்பது பெரும் வாய்ச் சொல்லின் அளவிலேயே மனிதர் மத்தியில் இருந்து வருகின்றது.

எங்கோ ஒருவர் இருவர் பெரும் ஆரவாரமின்றி இந்த மன்னிப்பு என்ற தாரக மந்திரத்தை செயல்படுத்துகிறார்கள் என்றால் உண்மையில் அவர்கள் பாராட்டுக்குரியவர்கள், மதிப்புக்குரியவர்கள், ஏன் வணக்கத்துக்கும் உரியவர்கள் ஆகிறார்கள்.

அவ்வாறான ஒருவர்தான் கொழும்புக்கருகில் ரவத்தாவத்த என்ற இடத்தில் உள்ள பிரேம் நிவாச என்ற கருணை இல்லத்தை நடத்துபவரான வணக்கத்துக்குரிய சகோதரி எலீசா ஆகின்றார்.

போலிக் குற்றச்சாட்டுக்களின் மீது பொலிசாரும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார அமைப்பைச் சேர்ந்தவர்களும் இந்த இல்லத்தை கடந்த நவம்பர் 23 ஆம் திகதி முற்றுகையிட்டு சகோதரி எலிசாவை கைது செய்து காவலில் வைத்தார்கள். ஆனால் இப்பொழுது அவர் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டுள்ள அதே நேரம் அதகாரிகளின் சட்டவிரோத மற்றும் கண்ணியமில்லாத இந்தச் செய்கையினை அச் சகோதரி முழு மனதுடன் மன்னித்துவிட்டார் என்றும் அறிய முடிகின்றது.

அன்னை திரேசாவின் வழியில் நிறுவப்பட்டு செயல்படும் இந்த நிறுவனத்தின் சகோதரியானவர் அந்த அன்னையின் நிலைக்கு இல்லாவிட்டாலும் சாதாரண மனிதர்களை விட பலபடிகள் இதன் மூலம் உயர்ந்துவிட்டார் என்று சொல்லலாம் அல்லவா.

மேற்படி சம்பவம் தொடர்பாக கொழும்பு ஆயர் மல்கம் ரஞ்சித் அவர்கள் கடுமையான விசனம் தெரிவித்து அதிகாரிகள் அந்த சம்பவத்தை நிவர்த்தி செய்யும் வரை அரசாங்கத்தின் எந்த ஒரு நிகழ்விலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருந்தார்.

பின்னர் சட்டமா அதிபர் திணைக்களம் சகோதரி எலிசா எந்த வித குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை - அவர் நிரபராதி என்று அறிவித்தது.

பிரேம் நிவாச என்ற கருணை இல்லம் என்பது அனாதைகளுக்கான மிஷனரி ஓப் செரிட்டி என்ற நிறுவனத்தின் சகோதரிகளால் நடத்தப்படுகின்றது. அதன் தலைவராக வண.சகோதரி எலீசா விளங்கி வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பாக இலங்கையின் பிரதான சமயங்களின் உயர் பிரமுகர்கள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், அருட் சகோதரியின் கைதும் விளக்கமறியலும் சட்ட விரேதமான செயல் என்று சட்ட வல்லுனர்களின் கருத்தாக இருப்பதால்; தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபையானது நாட்டின் சட்டங்களுக்கு மாறாக நடந்து கொண்டுள்ளது. இவ்வாறு மேலாதிக்க முறையில் அவர்கள் நடந்து கொண்டமைக்கு வேறு காரணங்கள் இருக்கலாமோ என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது என்று தெரிவித்துள்ளது.

தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதிகாரிகள் இயற்கை நீதியை, மனித உரிமைகளை, மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அன்னை திரேசாவால் நிறுவப்பட்ட கருணை இல்லங்களும் மறைப்பணியாளர் சபைகளும் 126 நாடுகளில் இயங்கி வருகின்றன. இவைகளில் 561 'நிறுவனங்களில் சுமார் 4600 சகோதரிகளும் 500இற்கு மேற்பட்ட சகோதரர்களும் பணியாற்றி வருகின்றனர். அந்த நிறுவனங்களின் ஒரு கிளையாகவே பிரேம் நிவாச கருணை இல்லமும் இயங்கி வருகின்றது.

அன்னை உயிருடன் இருந்த காலத்தில் பல்வேறு நாடுகளும், நிறுவனங்களும் அவர் சேவையைப் பராட்டி விருதுகளும் பரிசுகளும் வழங்கி யுள்ளன.

அன்னை திரேசாவுக்கு அளிக்கப்பட்ட விருதுகளில் எல்லாம் முதன்மையானது 1962 செப்ரெம்பர் திங்களில் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணனால் அளிக்கப்பட்ட பத்மஸ்ரீ விருதாகும். ஜோசப் பி.கென்னடி அறக்கட்டளையின் சார்பாக மற்றொரு பரிசும் அன்னைக்கு வழங்கப்பட்டது. அன்னைக்கு வழங்கப்பட்ட பரிசுத்தொகை 50,000 டொலர்களையும் கொல்கத்தாவின் டம்டம் விமான நிலையத்துக்குப் பக்கமாக அமைந்திருக்கும் ''நிர்மல் கென்னடி'' விடுதிக்காக அன்னை பயன்படுத்தினார். 1973 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற ''டெம்பிள்டன்'' அறக்கட்டளைப் பரிசை முதல் முதலாகப் பெற்றார். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் உலகப்புகழ் வாய்ந்த நோபல் அமைதிப் பரிசு அன்னைக்கு அளிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் பாரதத்தின் மிகப்பெரிய விருதாகிய '' பாரத் ரத்னா'' பட்டம் அன்னைக்கு வழங்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு அன்னையின் 70 ஆவது பிறந்த நாளையொட்டி அன்னையின் உருவம் தாங்கிய தபால்தலைகளை வெளியிட்டு இந்திய அரசு அன்னையைக் கௌரவித்தது.

1983 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத்திடமிருந்து பிரிட்டனின் மிக உயர்ந்த '' ஓர்டர் ஒப் மெரிட்'' என்னும் விருதினை அன்னை பெற்றார்.

1991 ஆம் ஆண்டு அக்ரோபர் 4 ஆம் நாள் இந்தியக் குடியரசு தலைவர் ஆர். வெங்கட்ராமன் அன்னைக்குப் பாரதீய வித்யாபவன் உறுப்பினர் என்னும் பதவி வழங்கிக் கௌரவித்தார்.

1993 ஆம் ஆண்டில் ரஷ்ய அரசினால் ஏற்படுத்தப் பெற்ற உலகப் புகழ்வாய்ந்த லியோ டால்ஸ்டாய் விருது அன்னைக்கு வழங்கப்பட்டது. 1993 டிசம்பர் 18 ஆம் நாள் ஐ.நாவின் யுனெஸ்கோ நிறுவனத்தின் அமைதிப்பரிசான 50,000 டொலர்களையும் அதன் இயக்குநர் டாக்டர் எப் எம்.சரகோய அன்னைக்கு வழங்கிக் கௌரவித்தார். இவ்விருதுகள் யாவற்றையும் விட அன்னையின் உள்ளத்தை நெகிழச் செய்த விருது ஒன்று உண்டு. அது ஒரு பிச்சைக்காரன் தன்னிடம் இருந்த ஈயத்தட்டில் இருந்த அவன் பிச்சையெடுத்த சில சில்லறை நாணயங்களே. அதை அவர் பெற்றுக்கொண்டார். தியாகத்தோடு கூடிய அன்புதான் மெய்யான அன்பு என அந்தப் பிச்சைக்காரன் மெய்ப்பித்து விட்டான்.

அன்னை அமரரானார்.

1997 செப்டம்பர் 5 ஆம் நாள் வெள்ளிக்கிழமை இரவு சுமார் 8.00 மணி இருக்கும் '' என்னால் மூச்சுவிட முடியவில்லை'' என்றார் அன்னை. இவைதான் அன்னையின் இறுதி வார்த்தைகள். 8.30 மணி அளவில் அன்னை தம் இன்னுயிரைப் பரமன் கரங்களில் ஒப்படைத்து விட்டார். அன்னை அமரராகிவிட்டார்

*அகிலம் புகழ்ந்திடும் அன்னை திரேசா*
*அவர் வழி நிற்பவர் கன்னி எலீசா*
*அநாதைச் சிறுவரை அரவணைத்தார்*
*அழிந்திட்ட மாதரை ஆதரித்தார்*
*செய்திட்ட குற்றமோ ஒன்றுமில்லை*
*செப்பிட முடியுமோ பட்டதொல்லை*
*கண்ணியமின்றியேநடத்தினார்கள்*
*பொலிஸில் வைத்துமே வருத்தினார்கள்*
*சட்டத்தின் முன் அவர் நிரபராதி என*
*சான்று பகர்ந்தார் மேலதிகாரி*
*பட்டவை யாவையும் மறந்து விட்டார் - செல்வி*
*பாங்குடன் மன்னிப்பும் வழங்கிவிட்டார்.*
*இட்டமுடன் அன்று யேசு பிரான் - நன்கு*
*இயம்பிய வழியினில் நின்று விட்டார்*
*வாழிய அவர் புகழ் வாழியவே - அந்த*
*வழியில் நிற்போர் மேலும் தோன்றுகவே.*

# ஓடி விளையாடு ஒன்றுடன் ஒன்று மோதுப்படாது

■ பாண்டியம்மா

யாழ். குடாநாட்டில் அமைக்கப்பட்டு வரும் 'காப்பெற்' வீதிகளும் வீதி அகலிப்பான தோற்றங்களும் வாகன சாரதிகளுக்கு ஒரு விளையாட்டுத் திடல் போல் ஆகிவிட்டன.

வாகனத்தில் ஏறி அமர்ந்துவிட்டால் ஏதோ வானத்தில் செல்பவர்கள் போல் அவரது நினைப்பு மாறிவிடும். தனியார் பேருந்துகளின் சாரதிகளுக்குத்தான் இது முதலில் சமர்ப்பணம்.

பஸ்ஸுக்காக காத்திருந்து வரும் பஸ்சில் ஏறிவிட்டால் அம்மா முன்னுக்கு போங்கோ, ஐயா பின்னுக்குப் போங்கோ ஆண்களை வேறு, பெண்களைவேறுஎனமுன்னும்பின்னும் தரம்பிரிக்கத் தொடங்கி விடுவார் நடத்துநர்.

சாரதிக்கு எங்கே இந்த நினைப்பு. வாகன சத்தத்துக்கு மேலாக ஒரு பாடல் ஒலிக்கும் . அது 'வை திஸ் கொலவெறி...' என்றவாறாக அலரும். இந்தத் தாளத்துடன் ஒரு கையில் போனும் இன்னொரு கையில் ஸ்ரேறிங்குமாக இருப்பினம்.

அவரது செல்லுக்கு அடிக்கடி கோல் வரும். அப்ப சாரதி வேகம் சடார் என்று தணிந்து போகும். அப்ப அவரின் ஓட்டத்திற்கு நடந்தே போய்விடலாம். தான் செல்லில் கதைக்கிற எல்லோரும் கேட்க வேண்டும் என்பதுதான் அவரது அவா போலும்.

அதுக்குப்பிறகு தான் ஒருக்கா நேரத்தைப் பார்ப்பார். 5 நிமிடம் இருக்கும். ஏத்தடா வாற போறதெல்லாம் அம்பிட்ட பாட்டுக்கு ஏத்திப்போட்டு 50 ஐயும் தாண்டி வேகமாகப் பறக்கும் பஸ். சாரதி தனது திரில்லை கடைசி நேரம் காட்டத் தொடங்கி விடுவார்.

இது தான் இப்ப உள்ள தனியார் போக்குவரத்தின் அவலம். எல்லாச் சாரதிகளையும் நாங்கள் இந்த விடயத்தில் குறை கூற வில்லை. தொப்பி ஆருக்கு அளவோ அவர்கள் போடட்டும்.

கடைசி நேர இந்த வேகத்துக்கு காரணம் என்ன தெரியுமே ஒரு நிமிடம் பிந்தினாலும் பைன் கட்ட வேணுமாம். அதுக்குத் தான் ஒவ்வொரு சந்தியிலையும் ஒவ்வொரு 'ரைம் கீப்பரை' நிப்பாட்டி வைச்சிருக்கினம். ஏறுற இடத்த இருந்து யாழ்ப்பாணம் வாறதெண்டா நான்கைந்து தடவை பதிவுவேலை நடக்கும். இதெல்லாம் எதுக்கு என்று தான் விளங்குவதில்லை.

ஒரு தடவை பிடித்தால் ஆயிரம், 3 ஆயிரம் என்று குற்றப் பணம் கட்டவேணும். இதுக்கு ஒரு நாள் முழுக்க பஸ் ஓடினாலும் போதுமா என்ன? அரச போக்குவரத்துச் சேவையை நம்பினாலும் அதோ கதிதான். அவை நினைச்சா ஓடுவினம் இல்லை எண்டா விட்டு விடுவினம். ஒரு நாள் இப்பிடித்தான் கிராமக் கோட்டுச் சந்தியால பின்னேரம் 6 மணிக்கு பஸ்ஸுக்கு வந்து நிற்கிறம். 6.45 மணியாச்சு பஸ்ஸைக் காணேல்லை. ''உந்த பஸ் இப்படித்தான் நினைச்சா வரும் இல்லாட்டி வராது. ஆக்கள் குறைவு என்றால் அவை ஓடமாட்டினமாம்'' இங்கு அங்கு பஸ்ஸிக்குக் காத்து நிண்டவை சொன்னதுதான் இது. பிறகு ஒரு மாதிரி அசைபோட்டுடன் 7 மணிக்கு பஸ் வந்தது. அது மட்டுமா, சிக்கல் சீசன் ரிக்கெற் எடுக்கிறவர்கள் படும்பாடு சொல்லிமாளாது. சீசன் ரிக்கெற்றையும் எடுத்து பஸ் இல்லாமல் தனியார் பஸ்ஸில் ஏறி காசைக் கொட்டுகினம்.

இதனால் அதிகமானோர் தனியார் பேருந்துகளைத் தான் ஒரேயடியாக நாடவேண்டியுள்ளது. தனியார் என்றபடியால் தாம் நினைச்ச பாட்டுக்குச் செய்ய முடியுமே. மக்கள் சேவையைப் பொறுப்போடு அதனை சரியான வழியில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பஸ் சாரதிகள்தான் இதற்குப் பொறுப்புடையவர்கள். குறிப்பிட்ட நேரத்தில் பஸ்சை உரிய இடத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். ஆனால் அதற்குத் தகுந்த வேகத்துடன் பஸ்ஸை நகர்த்த வேண்டும். தனிப்பட்ட தேவைகள் அனைத்தையும் தனது கடமை முடிந்தவுடன் வைத்துக் கொள்ளலாம். அதைவிடுத்து மக்களை அவலப்பட வைக்கலாமா?

குறித்த இடத்துக்கு சரியான நேரத்துக்கு செல்ல வேண்டும் என்ற நோக்குடன் பஸ்ஸில் ஏறும் ஒரு பயணிக்கு அங்கு தான் பாட்டுக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் வ்ராது. எப்ப நான் போய்ச் சேருவன் என்ற எண்ணம் தான் இருக்கும். இதை ஏனோ உணர மறுக்கின்றனர். தனியார் பஸ் சாரதிகள் தமது சேவை யைத் திறம்படச் செய்ய முன்வர வேண்டும். மக்களை ஏமாற்ற இது நேரம் அல்ல. தங்களது கடமையுணர்வும், நேரக் கட்டுப் பாடும் அவசியமானதொன்று என்பதை உணர வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணவாடைகளுக்கு நடுவே கழிந்த நாள்கள் 5

## உணர்வுகளை இறக்கிவைத்த நேரம்

- அருட்தந்தை சூ.ம.ஜெயசீலன்

அனுபவங்களே மனிதர்களின் பெற்றோராக, உற்றாராக, மற்றோராக, நல் ஆசானாக மாறிப் போவதை துயரங்களே உறுதி செய்கின்றன. காணுகின்ற காட்சிகள் அனைத்தும் ஒலியோடு பேசும் பட்சி கள் பலவும் சருகுகளின் சலசலப்புக்கும் சங்கடங்களின் முணுமுணுப்புக்களுக்கும் கூட அனுபவமாகி விடுகின்றது. போக்கிட மற்ற பொழுதுகளில் சோகத்தில் சோர்வுற்று, துயரங்களில் தோய்தெடுத்த முகமாக என்முன்னே வந்தமர்ந்தார் முப்பந்தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர்.

வழக்கமான வணக்கமும் யாருடனும் இலகுவாக இணைந்துகொள்ளும் புன்சிரிப்பும் நம்பிக்கையை பெறக்கூடிய நல்லுணர்வுகளும் சரியான விகிதத்தில் பரிமாறிக்கொண்டிருந்தது. நம்பிக்கையை உறுதியாக நங்கூரமிட்டவுடன் வெளிப்படையாக பேச ஆரம்பித்தார்.

நடந்துமுடிந்த பேரழிவு சண்டை பற்றிய தமது கருத்துடன் பேச்சை தொடங்கினார். இப்போரை கொண்டு நடத்திய ஆள்கள் சிலபேர் சில பழைகள் செய்ததால் முடிவு மணதை வசீகரிக்கும் மோகனமாய் மாறுவதற்கு பதிலாக முகாரியாகிவிட்டது. மற்றப்படி இந்தப் போராட்டம் பழை என்று கூறமுடியாது. சிலருக்கு போராட்டம் பிடிக்காமல் இருக்கலாம் அதற்காக சுவாசிக்க திடமிருந்தும் செயற்கை சுவாசத்தில் எவ்வளவு ஆண்டுகள்தான் வாழமுடியும் என்று என்னை நோக்கி வினா தொடுத்தார். நிகழ்வுகளின் நினைவுகளில் தமது கருத்துக்களை பதிவு செய்தார்.

நான் தோற்று போகலாம். அதன் பொருள் வெற்றி சாத்தியமற்றது என்பதல்ல. எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முயன்று தோற்றவர்கள் எத்தனையோ பேருண்டு. இறுதியில் எவரெட்ஸ் வெல்லப்பட்டது என்று முழங்கிய சேகுவேராவின் வார்த்தையை நினைவுபடுத்தினார்.

விடுதலைப் போராட்ட அமைப்போடு அருகில் வாழ்ந்தவன் நான். அவர்களுடன் ஆயுதம் தூக்கவில்லை. ஆனால் அனாயசமாக ஆயுதம் தூக்கி விரைந்து ஓடிய அழகைக் கண்டு ரசித்திருக்கிறேன். போர்ப் பயிற்சி பெறவில்லை மாறாக போர்க் குணத்தையும் போராட்ட நுட்பங்களையும் தூர இருந்து பார்த்திருக்கின்றேன். அப்படி எனக்கு அங்கே என்ன வேலை என்று நினைக்கலாம். நான் அவர்களுக்கென இருந்த கடை ஒன்றில் வேலை செய்தேன். இன்றளவும் அதனால் நான் பெருமை கொள்கிறேன்.

பாலைவனத்தில் வாழ்ந்த முதல் வனத் துறவி புனித வனத்துப் பவுல் (கி.பி.229). பட்டினி கிடந்து இறையனுபூதியாக வாழ்ந்த இந்த அடியாருக்கு தினந்தோறும் சிறு ரொட்டி துண்டு கொடுத்து ஒரு காகம் வலுவூட்டியது. அதைப்போல எனது உதவி ஈழதேசத்தின் விடுதலைக்காக இருந்தது.

நாட்டு விடுதலைக்கான தமது பங்களிப்பைப் பற்றி சிலாகித்து பேசிக்கொண்டிருக்கும் போதே உள்ளுக்குள் புதைக்க முற்பட்டு தோற்றுப்போன வதை வார்த்தைகளை தடுமாற்றத்தின் வழியே வலியோடு வெளிவரத் தொடங்கின.

போர் உக்கிரமானவுடன் உயிர் பயத்துடன் ஓட ஆரம்பித்தவர்களுடன் நானும் சேர்ந்து கொண்டேன். வலயமடத்திலிருந்து முள்ளிவாய்க்கால் மட்டும் குத்தும் முள்ளென்றும் சற்றுக்கும் பள்ளமென்றும் கவனியாது ஓடிக் கொண்டே இருந்தேன். விமானங்கள் குண்டு பொழிவதில் ஓய்ந்தபோது உயிர்துடிப்பின் உத்தரவாதத்தை உணர்ந்து கொண்டேன். பதுங்கிக் கொள்வதற்காக ஒவ்வோர் இடத்திலும் பங்கர் வெட்டி வெட்டியே எங்கள் கரங்கள் காய்ந்து போயின.

நாம் பங்கர் வெட்டி உள்ளே நுளைவதைப் பார்த்தவுடன் அந்தப் பக்கமாக தலைதெறிக்க ஓடி வருபவர்களும் தங்களை மறைத்துக்கொள்ள வருவார்கள். அவர்களையும் ஏற்றுக் கொண்டோம். பங்கர் இல்லாமல் தவிப்பதைப் பார்த்து அவர்களை அழைத்து வந்து உபசரித்தோம். என்று சொல்லும்போது அவர் பெருமிதப்படவில்லை மாறாக மனநிறைவு அவரது முகத்தில் தெரிந்தது.

பொஸ்டன் நகரில் நடந்த ஜனநாயகக் கட்சியின் மாநாட்டில் 2004 யூலை 27 அன்று சிறப்பு பேச்சாளராக இன்றைய அமெரிக்க அதிபர் ஒபாமா பேசினார். அப்போது,

இங்கே சுதந்திர அமெரிக்கா என்றோ, மிதமான அமெரிக்கா என்றோ ஒன்றும் கிடையாது ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற ஒன்றுதான் உண்டு. கறுப்பர்களின் அமெரிக்கா என்றோ, வெள்ளையர்களின் அமெரிக்கா என்றோ, லட்டினோக்களின் அமெரிக்கா என்றோ, ஆசியர்களின் அமெரிக்கா என்றோ கிடையாது. ஐக்கிய அமெரிக்கா என்ற ஒன்றுதான் உண்டு. நாம் அனைவரும் ஒருவரே. என்று பேசி அமெரிக்கா முழுமையும் அறிமுகமான நாள் நினைவுக்கு வந்தது.

சிங்களவன் தங்களை அப்படி ஒன்றுபட்ட தேசமாக ஏற்க மறுக்கும்போது என்ன சாதி எந்த ஊர், வசதி படைத்தவர்களா, ஏழைகளா என்ற எந்த வித்தியாசமும் பார்க்காமல் எல்லோரையும் பங்கருக்குள் ஏற்றுக்கொண்டதும் எல்லோரும் பங்கருக்குள் உணவு பகிர்ந்து கொண்டதும் அவருக்கு இல்லாவிட்டாலும் எனக்கு பெருமையாகவே இருந்தது.

பங்கர் வெட்டி மேலே ஓலைகள் அல்லது மரக்கட்டைகளை பரப்பி அதன்மேல் மணல் மூடைகளை பரப்பி வைக்க வேண்டும். மணல் நிரப்பி சாக்குப் பைகள் வேண்டுமே. சாக்கு கிடைக்காமல் பட்ட அவதி இன்னும் அதிகம். அந்த நேரங்களில் எல்லாம் ஒவ்வொருவர் முகத்திலும் மரண பயமும், வாழ்வின் ஏக்கமும் போட்டிபோட்டு கலங்கப்படுத்திகொண்டிருக்கும். அவதி அவதியாக ஓட்டமும் நடையுமாக மனைவியும் அவள் கரத்திலிருந்த குழந்தைகளையும் கொஞ்ச நஞ்சம் இருந்த சாமான்களையும் அள்ளிக்கொண்டு ஓடிவருகின்றபோது மறைவிடத்தை வேகமாக தேட ஆரம்பித்தோம். எங்களுக்கு பங்கர் வெட்டுவதற்கு கால அவகாசத்தை சிங்கள காடையனின் விமானம் கொடுக்கவில்லை.

எனக்கு முன் ஓடி வந்தவர்கள் வெட்டி தங்கிவிட்டுபோன பங்கர் இருக்கிறதா என்று தேடினால் அதுவும் இல்லை. வானத்தில் பறந்த விமானங்களின் வெளிச்சத்தில் அலைந்து கொண்டே இருந்தோம். என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதற்குள் ஒருவயதே நிறைவடையாத எனது பிள்ளையும் தூங்கிவிட்டதால் நிலமை தர்ம சங்கடமானது. இறைவனை எப்போதும் இல்லாதளவிற்கு மன்றாடினோம்.

அப்போது அப்பகுதியில் மூன்று பனை மரங்கள் ஒன்றுசேர நிற்பதை பார்த்தோம். ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால்சரி என்பதுபோல அதன் மறைவில் மறைந்து அமர்ந்தோம். சுற்றிலும் குண்டுகள் விழுகின்ற சத்தமும் அழுகையும் கேட்டுக் கொண்டே இருந்தது. தூக்கத்தில் சிணுங்கும் குழந்தையின் கவிதைகூட அச்சமூட்டும் ஓசையாகவே இருந்தது. காடுகளில் விலங்குகள் மத்தியில் மாட்டிக் கொண்டவர்களைப் பற்றி சிறுபிள்ளையாக இருக்கும்போது நிறைய கதைகள் பிடித்திருக்கின்றேன். ஆனால் அதே போன்ற சூழலின் சுழலுக்குள் நானும் சிக்கி கொள்வேன் என்று அப்போது நினைக்கவே இல்லை. இப்போது அதையெல்லாம். நினைத்து கலங்கிக் கொண்டிருந்தேன்.

தனித்து நின்ற எங்கள் குடும்பத்திற்கு ஜெபமாலைதான் துணையாக இருந்தது. இரவு முழுவதும் கையிலிருந்த ஜெபமாலையின் துணையுடன் ஜெபம் செய்துகொண்டே இருந்தோம். தூயதாய் மரியாள் எங்களுடன் உடனிருக்கின்றாள் என்பதை நினைத்து சற்றே ஆறுதல் அடைந்தோம். நாங்கள் திரு இருதய ஆண்டவர் ஜெபபுத்தகமும் வைத்திருந்தோம். பகல் நேரங்களில் மனத் தைரியம் வேண்டி அதைதான் வாசித்துக்கொள்வோம். இந்த இரவில் அருள் ஒளியோடு நிற்கும் திரு இருதய இயேசுவிற்கு அவ்வப்போது முத்தம் கொடுத்து அவரிடம் மன்றாடிக்கொண்டே இருந்தோம்.

நமது போர் முழக்கம் இன்னொருவரின் காதில் விழுமானால், இன்னொரு கரம் ஆயுதத்தை கையிலெடுக்கத் துணியுமானால், மற்றவர்கள் இயந்திரத் துப்பாக்கியோடு வந்து புதிய போர் முழக்கத்தை அறிவிப்பார்களேயானால் மரணம் வந்தால்கூட அதை வரவேற்கலாம். என்ற இளைஞர்களின் இதய துடிப்பாக இருக்கும்வரை இயங்கும் சேகுவாரா. அப்படி ஒன்று வரும் என்றுதான் நாங்கள் காத்திருந்தோம். ஆனால் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

போரை நிறுத்தும்படியும் அப்பாவித் தமிழர்களை காப்பாற்றும்படியும் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஒபாமா விடுத்த வேண்டுகோளை புறக்கணித்த ராஜபக்ஷ இலங்கையில் போர்நிறுத்தம் வரவேண்டுமென்று நேரடியாக இலங்கைக்கு வந்து வலியுறுத்திய பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் பெர்னார்டு கவுச்னர் ஆகியோரின் கரிசனைகளை காலடியில் மிதித்த ராஜபக்ஷ எளியவரின் ஏக்கத்தை மட்டுமா செவிமடுத்து விடுவார். அதுவும் தமிழனின் தவிப்பிற்கா தலைசாய்ப்பார்.

சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத்துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று. இந்த மண் எமக்கு சொந்தமான மண்; பழந்தமிழர் நாகரிகம் நீடித்து நிலைபெற்ற மண், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர்கள் வாழ்ந்து வளர்ந்த மண் என்று தமது கடைசி மாவீரர் உரையில் குறிப்பிட்டு(2008) எங்களையும் உலக சமூகத்தையும் வரலாற்று மாளிகைக்குள் அழைத்துச் சென்றவர் தலைவர் பிரபாகரன்.

இன்று அந்த மண்ணில் எல்லா திசையிலும் பண வாடைதான் என்று சொன்னவரின் முகத்திலும் அதே நெடி படர்வதை கவனித்தேன். ஆரம்பித்தில் எம் பிள்ளைகள் எங்களுடன் சேர்ந்து மூக்கை பிடித்துக்கொண்டே பிண நாற்றத்தை தவிர்க்கப் பார்த்தார்கள். காற்றே தன்னை பிணங்களுடன் கரைத்துவிட்ட பிறகு நாசியை பிடிப்பது என்பது நாடியை நிறுத்துவதற்கு சமம் என்பதனை உணர்ந்து எங்களை போலவே அவர்களும் சுவாசிக்க ஆரம்பித்தாங்கள்.

சுத்தமான காற்று என்ற சொல்பதத்தை மறக்க ஆரம்பித்தார்கள். எங்கும் பணங்கள், குவியல் குவியலாக விதை விதைத்ததை போல் வீரம் விளைந்த பூமியில் மக்கள் சிதைந்து விதைந்து கிடந்தார்கள். நாங்கள் பார்க்காத பணங்களே இல்லை. அவ்வளவு பிணங்கள் கால் இடரும் இடங்களெல்லாம் சதையும் அதன் ஆதார குருதியும்தான் பிரிந்து சிதறி கிடந்தன. என்ன செய்ய முடியும் சொல்லுங்கள்?

ஒவ்வொன்றாக எழுந்து மொத்த பிடரி மயிரை பற்றி இழுக்கும் அழுகுரல் கேட்ட மாத்திரத்திலேயே ஜனங்களுக்கு தெரியும் ரவுண்ஸ் பட்டுட்டது என்று. தனி ஒருவரோ, சேர்ந்து கனவுகளை பகிர்ந்து கொண்டவர்களோ அல்லது குடும்பத்தினர் அனைவருமோ செத்திட்டாங்களென்று எழுந்துபோய் பார்க்கலாம் என்று நினைப்போம் ஆனால் முடியாது.

துப்பாக்கி சன்னங்கள் விழுந்துகொண்டே இருக்கும். வெளியே வரமுடியாது. குண்டுகள் விழுந்து மாரியம்மன் கோவிலில் உடைக்கப்படும் தேங்காய் சில்லுகள் போல சிதறிக் கொண்டிருக்கும்போது எல்லோரும் அவரவர் குடும்பம் ஞாபகத்திற்கு வரும். எனக்கு எனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டமே என்ற எண்ணம்தான் முந்திக்கொண்டது. நான் போயிட்டா யார் பாதர் எனது குடும்பத்திற்கு பங்கர் வெட்டுவது. என்றபோது அவரோடு சேர்ந்து எனது கண்களும்என் அனுமதி இன்றியே குளித்தது.

யார் பாதர் மற்ற உதவிகளை செய்வது. நான் எப்போது சாவேன் என்று எனக்கு தெரியாதுதான் ஆனாலும் நான் உயிரோடு இருக்கும்வரை அவர்களை தனியாக தவிக்க விட்டுவிட முடியாது தானே. தத்தமது குடும்பத்தினரை கைவிட்டுவிடக்கூடாதே என்ற பரிதவிப்புதான் பலரையும் இந்த மனிதாபிமானத்திலிருந்து ஒதுக்கி வைத்தது. அழுவாரோடு அழமுடியாமல் தடுத்தது.

பிண வெறி பிடித்த இந்த சிங்களப் படைகளால் ஜனம் அலைமோதிக்கொண்டே இருந்தது. சில நேரங்களில் ஒரு விமானம் போய் விட்டு மறு விமானம் வருகிற இடைவெளி எப்போதாவது கிடைக்கும். அந்த நேரங்களில் மாத்திரம் வேகமாக அலறல் சத்தம் கேட்கும் திசையை நோக்கி ஓடி காயங்களுடன் காப்பாற்ற ஆள்களின்றி கதறுகின்றார்களா அல்லது செத்தவர்களில் எமது சொந்தங்கள் இருக்கிறார்களா என்று பார்த்திருக்கின்றோம். தெரிந்தவர்கள் அறிமுகமானவர்கள் என்றால் அவர்களை அவசர அவசரமாக குழிவெட்டி புதைத்திருக்கின்றோம். நானே தனி நபராக இரண்டுபேரை இப்படி வயலில் குழி வெட்டி புதைத்திருக்கின்றேன்.

எவ்வளவு வகுப்பெடுத்தாலும் புரியாத உணவின் அருமைகூட அப்போதுதான் தெரிந்தது. ருசிக்கு தேவையில்லை பசிக்காவது ஏதாவது கிடைக்குமா என்று ஏங்கி அலைந்தவர்கள் பலபேர். நான் என்னுடன் சிறிய உரல் ஒன்றும் கொஞ்ச நெல்லும் கொண்டு போயிருந்தேன். அதைத்தான் உரலில் போட்டு குத்தி அரிசியை எடுத்து சமைத்து சாப்பிட்டோம். பருப்பு சேர்த்து சாப்பிடுவது என்பது எங்களுக்கு மிகவும் பிடித்த உணவுமுறை ஆனால் பருப்பு இல்லாமல், சுவைக்கு புளி இல்லாமல், தேங்காய் கிடைக்காமல் அந்த அந்த இடங்களில் என்னென்ன கிடைக்கிறதோ அவைகளையே பயன்படுத்தி சமைத்தடி சென்றோம்.

அந்நாளில் ஒரு தேங்காய் ரூபாய் 2500 க்கும் அதிகமாக விற்றது. மீன், இறால் கிலோ 2000 விற்றது. பணத்தை பத்திரப்படுத்திக் கொண்டவன் முட்டாள் என்ற நிலைதான் நிலவியது. உயிரோடு அடுத்த விநாடி நிற்போமா அல்லது பணமாக மண்ணில் புதைவோமா என்று தெரியாத வாழ்க்கைக்கு வார்க்கப்பட்டவர்களாக வேறென்ன செய்யமுடியும்.

பண்டமாற்று முறையிலும் எங்கள் வயிற்றை நனைத்து கொண்டோம். உங்களிடம் இறால் இருக்கிறது, எங்களிடம் அரிசி இருக்கிறது என்றால் அரிசியை உங்களிடம் கொடுத்துவிட்டு இறாலை பெற்றுக்கொள்வது. கைவசம் ஏதுமின்றி கையறு நிலையில் தவித்தவர்களும் உண்டு. பெற்றோர்கள் தங்களுக்கு இல்லையே என்று ஏங்கியதை விட பெற்றெடுத்த முத்துக்களுக்கு ஏதுமில்லையே என்று தான் அல்லலுற்றார்கள். போவோர் வருவோரிடமெல்லாம் கைநீட்டி யோசிக்க நேரமின்றி யாசித்து புசித்தார்கள். இவ்வளவு ஜனங்கள் போகிறபோது தண்ணிக்கும் கஷ்டம்தான். நாவறட்சியோடு நடக்க முடியாமல் தவிக்கிற தாய் அல்லது தந்தையின் தோழில் தொற்றிக் கொண்டு அழுத குழந்தைகளை நினைத்தால் இப்போதுகூட கண்ணீர் வருகிறது என்று சொன்னவர் அழுதே விட்டார். (சந்திப்போம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சம்பூர் மக்களின் அவல வாழ்வுக்கு விடிவு கிட்டுமா?

■ கல்பனா

தொடர்ச்சியாகச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு எப்போது விடிவு காலம் பிறக்கும் என்ற அங்கலாய்ப்பு எம் சகலரது மனங்களிலும் நிலைபெற்றுள்ளது. இயற்கையின் சீற்றம், யுத்த அனர்த்தம் போன்றவற்றால் ஏற்பட்ட துன்ப துயரங்கள், இழப்புக்கள், தமிழ் மக்கள் மனங்களில் என்றுமே மாறாத வடுக்களாக அமைந்து விட்டுள்ளன.

**வேதனைகளைச் சுமந்து...**

அரசியல் ரீதியிலான, இயற்கை ரீதியிலான துன்ப துயரங்கள் தொடர்ச்சியாக ஈழத் தமிழ் மக்களை வாட்டி வதைத்து வருகின்றன. அந்த வகையில், கிழக்கு மாகாணம், சம்பூர் கிராம மக்கள் பல சோதனைகளுக்கு முகம் கொடுத்து, தமது வாழ்வில் எப்போது விடிவு பிறக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ நேர்ந்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் வங்காள விரிகுடாவையும், மேற்கே கொட்டியாராக் குடாவையும், தெற்கே தோப்பூர் மற்றும் சேருவில கிராமங்களையும் எல்லைகளாகக் கொண்டமைந்ததே சம்பூர் பிரதேசம். கடலும், வயலும், நீர் நிலைகளும் இயற்கைக் காடுகளும் நிறைந்த அந்த அழகிய பிரதேசம், இன்று சுடுகாடு போன்று மாறி, மக்கள் நடமாட்டம் இல்லாமல் வெறித்துப் போய் கிடக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் சம்பூர் பிரதேசம் பல வரலாற்று அடையாளங்களைக் கொண்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் கடந்த மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் காரணமாகத் தமது பெறுமதிமிக்க சொத்துக்களை மட்டுமன்றி விலை மதிக்க முடியாத உயிர்களையும் இழந்தனர். இந்தப் பிரதேசம் இக் காலப் பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும் மாறிமாறி இருந்துள்ளது. எனினும் 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின் அப்பிரதேசம் விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அங்கு அவர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**சுதந்திரம் கிடைத்த மணித்துளிகள்**

இந்தச் சமாதான காலத்தில்தான் சம்பூர் மக்கள் ஓரளவு சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கினர். இந்த நிலையில்தான் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி ஒடுக்கவென நான்காம் கட்ட ஈழப்போரை முதலில் ஆரம்பிப்பதற்கு அரசு, சம்பூர் பிரதேசத்தை தெரிவு செய்தமை வரலாற்றுப் பதிவாகும்.

போரின் கொடூரத்தையும், பாதிப்பையும் முதலில் அனுபவிக்கும் துரதிர்ஷ்டம் சம்பூர் மக்களுக்கே வாய்த்தது. இரு தரப்புக்களுக்கும் இடையேயான மோதல்களில் சிக்கி உயிரிழந்த தமது உறவுகளின் சடலங்களை அந்தந்த இடங்களிலேயே கைவிட்டு பாதுகாப்புத்தேடி ஓட வேண்டிய நிலைக்குச் சம்பூர் பிரதேச பொதுமக்கள் உள்ளாக நேர்ந்தது. அன்று இடம்பெயர்ந்து வெளியேறிய அப்பகுதி மக்கள் இன்று வரை நிரந்தர இருப்பிடமின்றி அகதி முகாம்களிலும், வேறு இடங்களிலும் வாழ்க்கையைக் கொண்டு செலுத்தி வருகின்றனர். சம்பூரை இராணுவத்தினர் கைப்பற்றிய சில நாட்களில் அரசு மூதூர் கிழக்குப் பிரதேசத்தின் சில பகுதிகளை அதனுடன் இணைத்து அதனை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது. சம்பூர், சூடைக்குடா, கூனித்தீவு, நவரெட்ணபுரம், இளக்கந்தை, கடற்கரைச்சேனை ஆகிய பிரதேசங்கள் அந்த உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல், கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் இன்றும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக இவர்களது வாழ்வு அகதி முகாம்களிலேயே கழிந்து வருகின்றது.

**கைத்தொழில் வலயமாகப் பிரகடனம்**

இலங்கையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் இனியும் பேணப்படமாட்டாது என்ற அரசின் அறிவிப்பு வெளியானதையடுத்து, இலங்கை அரசு சம்பூர் பிரதேசத்தைக் கைத் தொழில் வலயம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது.

2006 ஆம் ஆண்டில் சம்பூரில் இந்திய அரசின் அனுசரணையுடன் அனல் மின் நிலையமொன்று அமைக்கப்படவுள்ளதாக அறிவித்து, அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானதாக பல தடவைகள் ஊடகங்களில் செய்திகள் வெளியானபோதும், கடந்த செப்ரெம்பர் மாதமே உத்தியோக பூர்வமாக இந்திய நிறுவனமொன்று இந்த உடன்படிக்கையில் இலங்கை அரசுடன் கைச்சாத்திட்டது. இந்தியாவின் இத்தகைய செயல் சம்பூர் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே அளித்ததாக அந்த வேளையில் விமர்சிக்கப்பட்டது.

**அரசின் நாடகம்**

தமக்கான அரசியல் விடிவுக்காக இந்தியாவை நம்பியிருந்த சம்பூர் பகுதி மக்களுக்கு, இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது. இவற்றை விட, அனல் மின் நிலையத்துக்குக்கென சம்பூர் பகுதியில் 1500 ஏக்கர் நிலம் மட்டுமே பெறப்பட்டதாக அரச வர்த்தகமானி அறிவித்தல் மூலம் அரசு அறிவித்தது. எனினும் பத்தாயிரம் ஏக்கர் நிலம், கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1500 ஏக்கர் நிலமே தேவை எனக் கூறிவிட்டு 10,000 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தி யிருப்பது, எந்த விதத்திலும் நியாயமான தொன்றாகத் தோன்றவில்லை.

தமது பூர்வீக நிலத்தை இழந்த மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. இன்று வேறு இடங்களில் சென்று குடியேறுமாறு அப்பகுதி மக்கள் அரசினால் கோரப்பட்டு வருகின்றனர்.

இந்த மக்களுக்கான மாற்றிட வசதி ஏற்பாடு, கருங்கல் பாறைகளும், காடுகளும் நிறைந்த வேறொரு பிரதேசத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கைநழுவிப் போகும் உரிமை**

இடம்பெயர்ந்த சம்பூர் மக்கள் தத்தமது பூர்வீக இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என பல தரப்புக்களும் அரசை வலியுறுத்தி வரும் நிலையில், அரசு இவ் விடயத்தில் வாய் மூடி மௌனம் காத்து வருகின்றது. வடக்கில் மீள் குடியேற்றப் பிரச்சினை குறித்து தான் முன்னுரிமை வழங்கி வருவதாக அரசு காட்டிக் கொள்கிறது. அந்த வகையில் பூர்வீகமாக சம்பூர் பகுதியில் வாழ்ந்த மக்களது உரிமை கை நழுவிப் போவது தெளிவாகத் தெரிகிறது. அமைக்கப்படவிருக்கும் சம்பூர் மின் நிலையத் திட்டம் காரணமாகப் போரால் பாதிக்கப்பட்டு தற்போது அகதிமுகாம்களில் வாழும் மக்களை கடந்த 29 ஆம் திகதி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அனல் மின் நிலையத்துக்கு தேவைப்படாத மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பகுதிகளில் அம் மக்களை மீண்டும் குடியமர்த்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவே உள்ளதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

அரசு, சம்பூர் மக்களின் அவல வாழ்வை எண்ணிப் பார்ப்பதில்லை. அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் வாழ்விடங்கள்தான் அழிக்கப்படுகின்றன. சம்பூர் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தாவிட்டால், அந்தப் பாரம்பரிய தமிழர் நிலத்தை திருகோணமலை மாவட்டம் காவு கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதை எவராலும் தடுத்து நிறுத்த இயலாது. ✱

# சினம் கொள்ள வேண்டாம்

■ பிரேமினி

அன்புள்ள தம்பி, தங்கைகளே! வணக்கம். பிறந்திருக்கும் புதிய ஆண்டில்உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல பல விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவும், உங்கள் மனதிற்குப் பிடித்த கருத்துக்களை அள்ளித்தரவும் ஆசையாய் இருக்கின்றேன். நான் தொடங்கப் போகும் இந்தப் பயணத்தில் என்னோடு வழித் துணையாய் வருவீர்கள் என்று நம்புகின்றேன்.

அந்த நம்பிக்கையோடு இன்று உங்களுக்கு நான் சொல்லப்போகும் செய்தி என்ன தெரியுமா...? 'சினம் கொள்ள வேண்டாம்'

சினம் என்றால் கோபம் என்று உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்தக் கோபம் என்ன செய்யும் தெரியுமா? அது எம்மையும் அழித்து எம்மைச் சார்ந்தவர்களையும் அழித்து விடும். காலம் காலமாக, நாம் மற்றவர்களுக்குச் செய்து வந்த உதவிகளை எல்லாம் கணப்பொழுதில் இல்லாமல் செய்துவிடும்.

நல்லவராக இருந்த எம்மைக் கொடியவராக, கயவராக மாற்றி விடும் வலிமை இந்தக் கோபத்திற்கு இருக்கிறது. இந்தக் கோபம் நாங்கள் என்ன செய்கிறோம் என்று கூட சிந்திக்க விடாது. எங்கள் கண்ணை மறைத்து அறிவை மறைத்து எங்களை மனிதர் என்ற நிலையில் இருந்து தரமிறக்கி, விலங்குகளாக, காட்டுமிராண்டித் தனமானவர்களாக மாற்றி விடும்.

நாளாந்தம் ஊடகங்கள் வாயிலாக நாம் பார்க்கும், கேட்கும், அறியும் செய்திகளை ஒரு தரம் நினைவூட்டிப் பாருங்கள்... 'மனைவியை வெட்டிய கணவன்', 'மாமனைக் கொன்ற மருமகன்' இப்படிப் பல செய்திகள். மனிதனை மனிதன் கொலை செய்யும் அளவுக்கு வக்கிர எண்ணத்தை உருவாக்குவது இந்தக் கோபம்தான்.

இதனால் தான் எங்கள் முன்னோர்கள் இந்தக் கோபத்தால் வரும் கேடு பற்றி, நிறையச் சொல்லியிருக்கிறார்கள். 'பொறுத்தார் பூமியாள்வார்', பொங்கினார் காடாள்வார்', 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்' என்றெல்லாம் பழமொழிகள் மூலம், சினத்தை அடக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள்.

ஔவையார் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். அந்த ஔவைப் பாட்டி கூட என்ன சொல்லுகிறார் தெரியுமா? 'அறம் செய விரும்பு' எனக் கூறிவிட்டு அடுத்ததாகவே 'ஆறுவது சினம்' என்று சொல்லியிருக்கிறார்.

நாங்கள் வீட்டிலோ, பாடசாலையிலோ அல்லது பொது இடங்களிலோ மற்றவர்களோடு பேசும் போது கோபம் கொள்ளாது, சீறி விழாது, பண்பாக, அன்பாக நடந்து கொள்ள வேண்டும். எங்கள் நிலை மறந்து, நாம் கொள்ளும் கோபம் காலமெல்லாம் நினைத்து, நினைத்து, நாம் வருந்தும்படியான நிலையை எமக்குத் தந்துவிடும். இந்தச் சினம் பற்றி பாரதியார்:

*'சினம் கொள்வார் தம்மைத்தாமே*
*தீயாற் சுட்டுச் செத்திடுவார் ஒப்பார்*
*சினம் கொள்வார் தாம் மனங்*
*கொண்டு*
*தம் கழுத்தை தாமே வெய்ய வாள்*
*கொண்டு*
*கிழித்திடுவார் மானிடரோ....'*

என்று மிக அழகாகக் கூறி யிருக்கிறார்.

தம்மைத்தாமே தீயால் சுட்டெரிக்கும் மனிதர்களையும், தம் கழுத்தைத்தாமே வாளால் வெட்டி எறியும் மனிதர்களையும் நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா...? சாதாரண நிலையிலுள்ள மனிதர்கள் ஒருபோதும் இந்தக் காரியத்தைச் செய்ய மாட்டார்கள் அல்லவா..? இதனால் தான் சினங் கொள்பவர்களை இவர்களோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

கோபம் பற்றி உளவியலாளர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்த்தால், கோபம் ஏற்படும் போது ஒருவரது உடலும் உள்ளமும் பாதிப்படைகிறதாம். இதனால் மனச்சுமை அதிகமாகி சிந்தனை ஆற்றல் அடிபட்டுப் போகவே சமநிலை இழந்து எதைச் செய்வது? எதைப்பேசுவது..? என்று தெரியாமல் நிலை தடுமாறிப் போகின்றார்களாம். இவ்வாறாக கோபம் கொள்வதால் நமக்கு எவ்விதமான நன்மைகளும் எட்டிவிடப் போவதில்லை. மாறாக தீமைகளே நம்மை வந்து சேர்ந்து கொள்ளும் எனச் சொல்கிறார்கள். இது தேவைதானா..?

வள்ளுவப் பெருந்தகை கூட கோபத்தை உள்ளத்தாலும் ஒருவன் நினைக்காது விட்டான் எனில் 'அவன் விரும்பிய பேறுகளை எல்லாம் பெறுவான்' என்கிறார்.

''நகையும் உவகையும் கொல்லும் சினத்திற் பகையும் உளவோ பிற''

என்ற குறளின் ஊடாக ஒருவருக்கு முகத்தில் இருக்கின்ற சிரிப்பையும் மனத்தில் இருக்கின்ற மகிழ்வையும் கொன்று அழிக்கின்ற சினத்தைப் போல் பகை இருக்கின்றதா? எனக் கேள்வி எழுப்புகிறார்.

அதே நேரம் கொடுமைகளைக் கண்டு பொங்கி எழுகின்ற, சுரண்டல்களையும் அநீதிகளையும் கண்டு துடித்தெழுகின்ற தார்மீகக் கோபம் நேர்மையுள்ள மனிதனுக்கு இயல்பானது. நேர்மையான கோபம் அழிவிலிருந்து மனிதனை மீட்டு ஆக்கத்துக்கு ஊக்கமளிக்கின்றது. அநீதி அழிந்து நீதி பிறக்கவழி செய்கின்றது.

எனவே ஒருவனுக்கு ஒழுக்க விடயத்தில் கோபத்தின் மறுபக்கமான 'நல்ல கோபம்' உதவுவதாய் பெரியோர்கள் கருதுகின்றனர். எனவே எமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கின்ற அழியாப்பழியைச் சுமத்துகின்ற கோபத்தை விடுத்து அன்பின் வழியதில் சென்று அகிலத்தை வெல்வோம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தச் சோகை

**இரத்தச் சோகை என்றால் என்ன?**

இரத்தச் சோகை என்பது, உடலில் ஹீமோக் குளோபின் அல்லது இரத்தச் சிவப்பு அணுக்கள் குறைவுபடுவதே. ஹீமோக்குளோபின் என்பது, திசுக்களுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லும், இரத்தச் சிவப்பு அணுக்களிலுள்ள (RBC) இரும்புச் சத்து நிறைந்த புரதமாகும். ஒருவரின் இரத்தத்தில் ஹீமோக்குளோபினின் அளவு மிகக் குறைவுபடும் போது இரத்தச் சோகை ஏற்படுகிறது. அதாவது உடலில் போதியளவு ஒட்சிசன் வழங்கப் படாதிருக் கும் நிலையாகும். இது உடல் வெளிறுதல், களைப்பு அல்லது சோர்வு மற்றும் உடற்பலவீனத்தை ஏற்படுத்தலாம்.

இரத்தச் சோகை ஒரு குறுகிய காலத்துக்கு அல்லது ஒரு நீண்ட காலத்துக்கு நீடிக்கலாம். தீவிரம் குறைந்த நிலைமைகளில், உணவு முறையில் ஒரு எளிமையான மாற்றம் தான் சிகிச்சையாக அளிக்கப்படுகிறது. தீவிரம் கூடிய நிலைகளுக்கு மருத்துவச் சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.

**இரத்தச்சோகைக்கான அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்.**

இரத்தச் சோகைக்கான அறிகுறிகள் அதன் கடுமை, ஹீமோக்குளோபின் எவ்வளவு விரைவாகக் குறைகிறது மற்றும் அதற்கான காரணம் என்ன என்பவற்றை பொறுத்திருக்கிறது. ஒரு பிள்ளையின் உடல் எவ்வளவு நன்றாக ஹீமோக்குளோபினின் தாழ்ந்த நிலையைச் சமாளிக்கின்றது என்பதிலும் தங்கியுள் ளது. அறிகுறிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.

* இரத்தத்தின் சிவப்பு நிறத்துக்கு ஹீமோக் குளோபின் தான் காரணமாக இருப்பதால் தோல் வெளிறுதல்.
* உடலில் ஒட்சிசனின் அளவு குறைக்கப்பட்டதால், உடலில் சக்தி குறைவுபடுதல்.
* உடலில் ஒட்சிசனின் அளவு குறைந்ததால், உடற்பயிற்சி செய்தபின் அல்லது விளையாடிய பின் விரைவான சுவாசம்.

**இரத்தச்சோகைக்கான காரணங்கள் மற்றும் அதன் வகைகள்**

இரத்தச்சோகையில் பல வகைகள் இருக்கின்றன. பொதுவான, காரணங்களின் அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஊட்டச்சத்து இரத்த சோகைகள்**

இரத்தச் சோகை வகைகளுள் மிகவும் பொதுவானது, இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகையாகும். இது உணவில் இரும்புச் சத்து குறைவதால் ஏற்படுகிறது. ஹீமோக்குளோபின் தயாரிப்பதற்கு இரும்புச் சத்து தேவை. சாதாரணமாக குழந்தைகளுக்கு 06 மாதங்கள் வரைக்கும் தாய்ப் பாலில் உள்ள இரும்புச் சத்து அவர்களுக்குப் போதுமானது. இரும்புச் சத்து உள்ளடக்கப்படாத பசுப்பால் போர்முலாக்கள், அல்லது முழுப் பசுப்பால் மாத்திரம் குடிக்கும் குழந்தைகளுக்கு இரும்புச் சத்துக் குறைபாடு ஏற்படும் ஆபத்து இருக்கிறது. உங்கள் குழந்தை 06 மாத முடிவில் திட உணவு உண்ணத் தொடங்காவிட்டால் இரும்புச் சத்து குறைபாடு ஏற்படும். முழுமையாக முதிர்ச்சியடைந்த குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் ஆரோக்கியமுள்ள தாய்மார்கள், இரும்புச் சத்து நிறைந்த திட உணவுகள் பரிந்துரை செய்யப்படும் வரையில் 6 மாதங்களுக்குத் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான இரும்புச்சத்தைக் கொண்டிருப்பார்கள். தாய்ப்பாலிலுள்ள இரும்புச் சத்து நன்கு உறிஞ்சப்படும். 6 மாதங்களில் திட உணவுகள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 2 வயது வரை தாய்ப்பால் கொடுக்கும்படி சிபாரிசு செய்யப்படுகிறது.

இது தாய்ப்பால் ஊட்டுதல் மாத்திரமல்ல, ஆனால் சிபாரிசு செய்யப்படும் சமயத்தில் இரும்புச் சத்து நிறைந்த திட உணவுகள் அறிமுகப்படுத்தப்படாவிட்டால் இரத்தசோகை ஏற்படும் ஆபத்து இருக்கிறது.

எமது சமூகத்தில் முறையான தனிநபர் சுகாதாரத்தை பின்பற்றாதவர்களுக்கு கொழுக்கிப்புழு தொற்று ஏற்படுவதாலும் இரத்தச்சோகை ஏற்படலாம்.

உணவில் போலிக் ஆசிட் விற்றமின் B12 அல்லது விற்றமின்E குறைவுபடும்போது விற்றமின் குறைவினால் ஏற்படும் இரத்தச்சோகை உண்டாகிறது. ஹீமோக்குளோபின் தயாரிப்பதற்கு உடலுக்கு, இந்த எல்லா ஊட்டச் சத்துக்களும் தேவைப்படுகின்றன.

**நோயினால் ஏற்படும் இரத்தச்சோகைகள்**

1.அரிவாள்செல் இரத்த சோகையும் தலைசீமியாவும் சிவப்பு அணுக்களை உருக்குலையச் செய்யும் பரம்பரை வியாதிகளாகும். இந்த உயிரணுக்கள் சாதாரண இரத்தச் சிவப்பு அணுக்களைப் போல உடல் முழுவதும் நன்கு நீந்திச் செல்ல முடியாது. இதனால் உடலுக்கு குறைந்தளவு ஒட்சிசனே கிடைக்கின்றது.

2.சிறுநீரகம் செயற்படாமல் போதல், புற்றுநோய், மற்றும் க்ரோன்ஸ் நோய் என்பனவற்றாலும் தீராத இரத்தச் சோகை ஏற்படலாம். எலும்பு மச்சை நோய் மற்றும் லூபஸ் நோய் போன்ற தன்னுடல் தாக்கும் நோயினாலும் இரத்த சோகை ஏற்படலாம்.

3.அப்ளாஸ்டிக் இரத்தச் சோகை என்பது ஒரு அரிதான மற்றும் கடுமையான நோய். இது உடல் போதிய அளவு இரத்த உயிரணுக்களை உற்பத்தி செய்வதை நிறுத்திவிடும். ஒரு பிள்ளை இந்த இரத்தச் சோகை நோயுடன் பிறந்திருக்கலாம் அல்லது ஒரு வைரஸ் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட பின்னர் ஏற்படலாம் அல்லது ஒரு மருந்தின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். சிலவேளைகளில் இது இரத்தப் புற்றுநோயின் தொடக்க அறிகுறியாகும்.

**இரத்தச் சோகைக்கான ஆபத்தான காரணிகள்**

இரத்தச் சோகையை விருத்தி செய்வதற்கான உயர்ந்த ஆபத்திலிருக்கும் சில பிள்ளைகளின் பிரிவுகள் இருக்கின்றன. உயர்ந்த ஆபத்துக்குக் காரணமாகக் கூடிய காரணிகள் பின்வருவனவற்றை உட்படுத்தலாம்.

* குறைமாதப் பிரசவம் மற்றும் பிறப்பின் போது எடை குறைவாக இருத்தல்
* முன்னேற்றமடைந்துவரும் உலகிலிருந்து சமீபத்தில் குடியேற்றம் செய்தல்
* வறுமை
* உடற்பருமன் அல்லது தவறான உணவுப் பழக்கங்கள்.


*(தொடரும்)*

குழந்தை வைத்திய நிபுணர்
**ந.ஸ்ரீசரவணபவானந்தன்**
மாவட்ட பொது வைத்தியசாலை.கிளிநொச்சி

# புழு வியாதியும் சிகிச்சை முறையும்

வயிற்றில் புழுக்கள் இருப்பது பரவலான பிரச்சினை. அதுவும் குழந்தைகளில் புழு வியாதியின் ஆதிக்கம் அதிகம். பொதுவாக எமது நாட்டில் புழு வியாதியை ஏற்படுத்தும் புழுக்கள் கொளுக்கிப் புழு (hook worm), இழைப்புழு (Pin worm), வட்டப்புழு (round worm). இந்த புழுக்கள் தமக்கு வேண்டிய உணவையும் பாதுகாப்பையும் எமது உடலில் இருந்து பெற்றுக் கொள்கின்றன. இவை தமக்கு வேண்டிய ஊட்டச் சத்துகளை பெற்றுகொள்வதுடன் எமக்கு பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், பலவீனம் ஆவதற்கும், நோயுறுவதற்கும் காரணமாக அமைகின்றன. எமது முறையற்ற உணவுப் பழக்கத்தாலும், உணவாலும், உடல் நோய்க்கு ஆளாக நேரிடுகிறது. இந்த வகையில் சிறுகுடற் புழுக்கள் உணவின் மூலம் உட லுக்குச் சென்று பல்கிப் பெருகி உடலை பாழ்படுத்து கின்றன. இவை உணவின் மூலம் உடலுக்குச் செல்வ தோடு, சருமத்தின் மூலமும், நீரின் மூலமும் செல்கிறது.

**புழுக்கள் உடலினுள் தொற்றுகள் ஏற்படுத்தும் பொதுவான முறைகள்**




புழு தொற்றுகைக்கான பொதுவான அறிகுறிகள்

* இரத்தச்சோகை
* பசியின்மை
* எடை குறைதல்
* எடை அதிகரிக்காமல் இருத்தல்
* வயிற்று வலி
* நித்திரையின்மை
* தூக்கத்தில் பல்லை நற நற என கடித்தல்
* காலில் நீர்ச்சிரங்கு ஏற்படுதல்
* மலவாசலில் அரிப்பு

**கொளுக்கிப் புழு தொற்றும் அதன் மூலம் ஏற்படும் விளைவுகளும்**

இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இவ்வகை புழுக்களின் தொற்று காணப்படுகின்றது. இவை இரண்டு வகையில் உடலினுள் செல்கிறது. பிரதானமாக தோலினூடாக (முக்கியமாக பாதத்தினூடாக) வாய் வழியாக (உணவு, நீர் வழியாக) உடலினுள் செல்கிறது.

**உடலினுள் நாளத்தினூடாக - வலது இதயம்- நுரையீரல் - மூச்சுக்குழல் - தொண்டை - உணவுகால்வாயை அடைகிறது.**

**ஏற்படும் விளைவுகள்**

* **நீர்ச்சிரங்கு - புழு மேனியில் எந்த இடத்தின் வழியாக உள்நுழைந்ததோ அங்கு எரிச்சலும் நமைச்சலும் ஏற்படும். அந்த இடத்தின் தோல் சிவந்து** காணப்படும்.
* குருதிச்சோகை - குடலிலிருந்து அதிக இரத்தம் வெளியேறுவதால் ஏற்படுகிறது.

**பொதுவாக சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.**

சோர்வு, களைப்பு, வெளிறல் போன்றன ஏற்படும்.

ஒரு நாளுக்கு 1 புழு 0.03 மீ லீ வீதம் குருதியை அகத்துறிஞ்சுகின்றது.

* நுரையீரல் வழியாக புழுக்கள் செல்வதால் காய்ச்சல், இருமல் உண்டாகலாம்.
* மேல் வயிற்றில் வலி. உடல் தளர்ச்சி

இழைப்புழுவின் (Pin worm) தொற்றுமுறையும் அதனால் ஏற்படும் விளைவுகளும்

இது மனிதனின் குடலில் வாழும் ஒரு வகைப் புழு ஆகும்

இரவு நேரங்களில்/ படுக்கைக்கு செல்கையில் இவை குதப் பகுதியை வந்தடைந்து அங்கு முட்டைகளை இட்டு விட்டு மீண்டும் குடலினுள் செல்கின்றன. மலத்தின் மூலம் சூழலுக்கு விடுவிக்கப்படும் முட்டைகள்/ சொறியும் போது நக இடுக்குகளில் செல்லும் முட்டைகள், வாய்குழி வழியாக மீண்டும் குடலை அடைகின்றன. பொதுவாக பெண்கள் மற்றும் சிறுவர்களில் **ஏற்படுகின்றது.**

**ஏற்படும் விளைவுகள்**

* **முக்கிய அறிகுறி - குதப்பகுதிகளில் சொறிவு, எரிச்சல்**
* **ஏனைய அறிகுறிகள் - பசியின்மை, நித்திரை குழப்பம், பெண் குழந்தைகளின் இலிங்க உறுப்பையும் இந்த புழுக்கள் சேர்ந்து பாதிக்கும். இதனால் படுக்கையில் சிறுநீர் கழித்தல், எரிச்சல் போன்றவை ஏற்படும்.**

*(தொடரும்)*

**க.வசீகரி**
**மருத்துவ பீட மாணவி.**

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற் கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

■ மங்காத்தா

# சீருடை மாறியது; ஆனால் செயற்பாடு..?



கல்வித்துறைசார் அதிகாரிகள் சகலருக்குமே ஆளுநர் வாய்ப்பூட்டுப் போட்டுள்ளார். இப்போது கல்வித் துறை யின் மூலை முடுக்குகள் என இவரது அரசியல் தலையீடு இல்லாதது எதுவுமேயில்லை. இராணுவ சீருடை வெள்ளைச் சீருடையாக மாறியிருக்கிறதே தவிர செயற்பாடுகளில் எந்த மாற்றமும் ஏற்பட வில்லை.

பொதுவாக நாய்களுக்கு ஒரு பழக்க முண்டு. அதன்மீது யாரும் கல்லெறிந்தால் உடலில் எங்கு பட்டாலும் காலைத் தான் தூக்கிக் கொள்ளும். அதனுடைய பரம் பரைப் பழக்கம் அது. தங்களுடைய பழக்க வழக்கங்களை எந்த இடத்திலும் மாற்றிக் கொள்ளாதவர்களை இந்த உதாரணத்தைச் சொல்லி கூடவே ''நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணிதான்'' என்று வர்ணிப்பது ஊர்ப் பெரிசுகளின் வழக்கம்.

எம்மவர்களின் பாரம்பரிய சொத்தாக இன்றுவரை பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் ஒன்றாகக் கல்வி திகழ்கின்றது. அன்றும் சரி இன்றும் சரி கல்வியின் மகத்துவத்தை, கல்விக்கான முக்கியத்துவத்தை வழங்க எம்மவர்கள் என்றைக்குமே பின் நின்றதில்லை. உள்நாட்டுச் சண்டை நடைபெற்ற காலத்தில் கூட கல்வியைக் கண்ணாகப் போற்றினார்கள். அந்தளவுக்குப் பற்று ஏற்படுமளவுக்கு பரம்பரையாக ஈர்க்கப் பட்டிருந்தனர். அந்த ஈர்ப்பு இன்று வரை விடுபடாது நிலைத்துள்ளமை அதன் முக்கியத்துவத்தினை சரிவரப் புரிந்து கொண்டுள்ளனர் என்பதை வெளிக்காட்டுகிறது.

சண்டை நடைபெற்ற காலத்தில் கல்வியைத் தொடர்வதில் சற்று சிக்கல் ஏற்பட்டது. தமது கல்வியைத் தொடர்வதில் மாணவ சமுதாயம் இடையூறுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. வன்னியில் பலர் கல்வியைக் கைவிடவேண்டிய நிலையேற்பட்டது. அங்கு மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலும் இந்த நிலை தொடர்ந்தது. இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், பாதுகாப்புக் கெடுபிடி, இராணுவ வாகன தொடரணிகள் என்பவற்றினால் வீதிச் சந்திகளில் மணிக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவையெல்லாம் தினம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளாக, பின்னர் வழக்கமான தொன்றாக மாறிவிட்டது. இவற்றையும் தாண்டி மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்தனர். மாணவர்களுடன் சேர்ந்து பெற்றோர்களும் மாணவர்களது கல்விக் காக அசாதாரண சூழ்நிலைகளுக்கு எதிராகப் போராடினர்.

பெற்றோர்கள் மட்டுமன்றி, ஆசிரியர்கள், அதிபர்களுடன் தனியார் அமைப்புகள், நிறுவனங்கள், குழுக்கள் என்பனவும் பலவகைகளில் மாணவர்களுக்கு,

**இன்று வடக்கில் பல பாடசாலைகள் எந்தவித அபிவிருத்தியும் இல்லாமல் உரிய வசதிகள் ஏற்படுத்தப்படாமல் அரைகுறை யாக இயங்கிவருகிறது. பிறரது உதவிகளே இதனை நிவர்த்தி செய்து விரைவில் மாற் றியமைக்கும். எமது இனத்தின் மீது அக் கறையில்லாத தன்மையை இவரது எண்ணங்கள், செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.**

பாடசாலைகளுக்கு உதவியிருந்தனர். குறைபாடுகளை, கஷ்டங்களை நீக்கி எமது பாடசாலை மாண வர்களுக்காக, எதிர்கால சிறந்ததொரு சந்ததிக்காக அர்ப்பணித்திருந்தனர். இதற்கு பிற அழுத்தங்கள், தடைகள் எதுவுமே ஏற்பட்டிருந்ததில்லை. பாதுகாப்புக் காரணங்கள் என்ற போர்வையில் மட்டும் சில அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தனர்.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. எம்மவர்களின் கல்வி மீதான மாணவர், பாடசாலைகள் மீதான அக்கறை அதிகரித்துள்ளது. ஆனால் இவர்களது இந்த அக்கறையைத் தடுத்து அதன் மூலம் முன்பிருந்த பற்றினைக் கூட இல்லா தொழிக்கும் செயற்பாடுகள் முடுக்கிவிடப் பட்டுள்ளதனைக் காணமுடிகிறது.

பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்வார்கள் ''உங்களுக்கு நாங்கள் பிச்சையெடுத்தாவது சாப்பாடு, படிப்புச் செலவு தருவோம். நீங்கள் நல்லாப் படிச்சு நல்ல நிலைக்கு வந்தால் காணும்'' என்று சொல்வதனை இன்றும் காணலாம். வசதியானவர்களுக்கு இது சாதாரண விடயமெனினும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் எத்தனையோ ஆயிரம் பேர் இந்த வாசகத்தை தினம் கூறுவதனை காணுகிறோம்.

ஆனால் இத்தகைய பிறரது உதவிகள் பாடசாலைகளுக்கு சென்றடைவதனைத் தடுத்து நிறுத்தும் தீவிர முயற்சியில் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து கல்விப் பணிப்பாளர்களை, பாடசாலை அதிபர்களை பயப்பீதி அடைய வைத்து கல்வித் துறையிலும் அரசியலைப் புகுத்தி அதிகாரத் தோரணையில் செயற்பட்டு வருகிறார் வடமாகாண ஆளுநர்.

வெளிப்படையாக கல்வியை வளர்க்கிறோம். கல்விக்காக மில்லியன் கணக்கில் செலவழிக்கிறோம். கல்வி அபிவிருத்தி துரிதமாக வடக்கில் நடைபெறுகிறது என்று கல்வி அவிருத்திக் கூட்டங்களையும் நடத்தி செயற் படும் ஆளுநர் மறைமுகமாக எமது கல்வியை மழுங்கடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாரா என்பதை அனைவரும் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

காலம் காலமாக பாடசாலைகளுக்கு உதவி செய்பவர்கள் போர்முடிவுக்கு வந்த பின்னர் எமது தாயகப் பகுதியில் எம்மால் முடிந்தளவு மக்களுக்கு உதவுவோம். பாடசாலைகளுக்கு உதவுதல் மூலம் எமது எதிர்காலச் சந்ததிகளை கல்வியாளர் களாக்குவோம் என்ற பல நல்ல கனவுகளுடன் பலர் உதவி களை அள்ளி வழங்கி வருகின்றனர். சண்டைக்காலத்திலும் இது காணப்பட்டாலும் தற்போது தீவிரமாகியுள்ளது.

ஆனால் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி இத் தகைய உதவிகளுக்கு பூட்டுப் போட்டுள்ளார். பாடசாலைகளுக்கான இலவச உதவிகள், அன்பளிப்புகள் எதுவாக இருப்பினும் தனது அனுமதி பெறப்பட வேண்டுமாம். எமது கல்விக்கு, எமது பாடசாலைகளுக்கான உதவிகள் கிடைக்கப் பெறுவதைத் தடுக்கவும் தட்டிக் கேட்கவும் இவருக்கு என்ன அருகதை இருக்கிறது. இந்தச் செயற்பாட்டினையும் ஆளுநர் நாசூக்காக கையாண்டுள்ளார்.

அதாவது இத்தகைய உதவிகளைப் பெறுவதாக இருந்தாலோ வெளிநாட்டு, உள்நாட்டு அமைப்புக்களை, குழுக்களை, தனிநபர்களைச் சந்திக்கவோ அவர்களிடம் உதவி பெறுவதாக இருந்தாலோ வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரது அனுமதி பெறப்பட வேண்டும். தன்னிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதையே நாசூக்காக இவர்களிடம் அனுமதி பெறவேண்டும் என்று சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், கோட்டக் கல்வி அதி காரிகள், விளையாட்டுத்துறைத் திணைக்களப் பணிப்பாளர்கள் அனைவருக்கும் கடும் உத்தரவு பிறப்பித்துள்ளார். இவற்றை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதனைத் தவிர்க்க முடியாது எனவும் ஆளுநர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு கல்வித்துறைசார் அதிகாரிகள் சகலருக்குமே ஆளுநர் வாய்ப்பூட்டுப் போட்டுள்ளார். இப்போது கல்வித்துறையின் மூலை முடுக்குகள் என்று இவரது அரசியல் தலையீடு இல்லாதது எதுவுமேயில்லை. இராணுவ சீருடை வெள்ளைச் சீருடையாக மாறியிருக்கிறதே தவிர செயற்பாடுகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இன்று வடக்கில் பல பாடசாலைகள் எந்தவித அபிவிருத்தியும் இல்லாமல் உரிய வசதிகள் ஏற்படுத்தப்படாமல் அரைகுறையாக இயங்கிவருகிறது. பிறரது உதவிகளே இதனை நிவர்த்தி செய்து விரைவில் மாற்றியமைக்கும். எமது இனத்தின் மீது அக்கறையில்லாத தன்மையை இவரது எண்ணங்கள், செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

எமது கல்விக் கடலில் அரசியல் டோறாக்களை ரோந்துவிட்டு அச்சுறுத்திய வண்ணம் செயற்பட்டு வருகிறார் ஆளுநர். அதனால் சீரழிக்கப்படுவது எமது கல்வி மட்டுமல்ல இனமும் தான்.

பிற உதவிகள் சில பாடசாலைகளுக்கு மட்டும் தொடர்ந்து கிடைப்பதை தவிர்த்து உதவிகள் கிடைக்காத பாடசாலைகளுக்கும் அவை கிடைப்பதனை உறுதி செய்தல் வேண்டும். அந்த நோக்கத்தை செயற்படுத்துவதற்கு பணிப்பாளர்களதும், செயலரதும் அனுமதி ஏற்றுக் கொள்ளலாம். அதுவும் உதவி கிடைக்காத பாடசாலைகளுக்கும் அவ் உதவிகள் போய்ச்சேர இது வழி வகுக்கும். தவிர [illegible] ஏற்படப் போவதில்லை.

இதுவரைகாலமும் இல்லாத இந்த ஆளுநரின் உத்தரவு அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது தமிழ்க் கட்சிகள் சில பாடசாலைகளுக்கு உதவியதனைத் தொடர்ந்தே இவை அமுல்படுத்தப்பட்டதனை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இதிலிருந்து தமிழர்களுக்கும் தமிழர் கல்விக்குமிடையில் எத்தகைய பிரிவினையை உண்டு பண்ண விளைகிறார் என்பது தெரிகிறது. எது எவ்வாறாயினும் எமது கல்வி தொடரப்படல் வேண்டும். ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடிக் கொண்டிருக்கும் ஆளுநரின் பிடியில் சிக்கி எமது கல்விப் பாரம்பரியம் அழிந்து போகக் கூடிய அபாயம் உண்டு. அதையெல்லாம் தாங்கிக் கொண்டு மீண்டும் தமிழர்களின் கல்விப் பயிர் முளைத்தெழுமா?

## பழக்க தோசப் பகிடிகள்



ஒருவர்: டிரக்டர் ஓடிக் கொண்டிருந்தவரை பஸ் ட்ரைவராப் போட்டது பிழையாப் போச்சு
மற்றவர்: ஏன்?
ஒருவர்: பழக்க தோசத்தில அடிக்கடி பஸ்ஸ வயலுக்க விடுறார்.

* * *

மந்திரி: பிச்சைக்காரர் போல மாறுவேடத்தில் நகர வலம் போன நம் மன்னரை மக்கள் கண்டு பிடித்து விட்டார்களா? எப்படி?
சேனாதிபதி: அம்மா தாயே பிச்சை போடுங்கள் என்பதற்குப் பதிலாக பழக்க தோஷத்தில் ''யாரங்கே! பிச்சையைக் கொண்டு வாருங்கள்'' என்று சொல்லிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிடுபொடியாகிய நம்பிக்கை

■ ஹரிஸ்

பரீட்சை திணைக்களத்தின் அண்மைய செயற்பாடுகள் "பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிற விடயமாகவே" உள்ளது. இலங்கை அரசு மட்டும் அல்ல நாங்களும் ஆசியாவின் அதிசயம் தான் என்பதை பரீட்சைத் திணைக்களம் கடந்த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் வெளியீடுகளின் போது அச்சொட்டாக நிரூபித்து விட்டது. "நந்நவனத்திலோர் ஆண்டி அவன் நாலாறு மாதமா குயவனை வேண்டி கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதை கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி...." என்ற சித்தர் பாடலின் உள்ளார்ந்த அர்த்தம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் கடந்த பரீட்சை முடிவுகளின் மூலம் அம்பலமாகியுள் ளது. இவ்வளவு காலமும் பரீட்சைத் திணைக்களம் மீது மக்களும் மாணவர்களும் வைத்திருந்த அபரிமித நம்பிக்கையை இந்தமுறை தவிடு பொடி ஆக்கி விட்டது பரீட்சைத் திணைக்களம்.

ஒரு பரீட்சையிலே புதிய பெறுபேறு, பழைய பெறுபேறு என்று பாகுபாட்டுடன் பெறுபேறு களை வெளியிட்ட பெருமை உலகத்தின் கல்வி வரலாற்றை பொறுத்தவரையில் இலங்கை யையே சாரும். அந்தளவுக்கு முறைகேடுகளும், தவறுகளும் ஒன்றாகச் சேர்த்து பரீட்சை முடிவுகளாக வெளியிட்டு தனது பெருமையை தாங்கள் ஆசியாவின் அதிசயம் என்ற உண்மையை போட்டுடைத்திருக்கின்றன. இலங்கை பரீட்சைத் திணைக்களமும் அதனை வழிநடத்தும் கல்வி அமைச்சும்.

கடந்த 4 வருட பரீட்சை முறைகளோடு ஒப்பிடும் போது பழைய பாடத்திட்டம் புதிய பாடத்திட்டம் என்ற பாடுபாடு இம்முறையே இருந்தது. இதை எவராலும் மறுக்க முடியாது. 2009 ஆண்டு பரீட்சைக்கு பிற்பாடு பாடத்துறைகளில் மாற்றம் கொண்டுவரப் பட்டு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வகையில் எ புள்ளிவிவகாரத்தில்சில நெருக்கடிகளை இலங்கை பரீட்சைத் திணைக்களம் எதிர்கொண்டது. என்ற உண்மையை எவராலும் மறுக்கமுடியாது. சில பாடத்துறைகளுக்குரிய சரியான z புள்ளி நிலைகளை நிர்ணயிப்பதன் ஊடாக மாவட்ட தேசிய நிலைகளை நிர்ணயிப்பதில் இம்முறை வழமையைவிட இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் சில பிரச்சனைகளை எதிர் கொண்டது. இதனால் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமத நிலையும் ஏற்பட்டது. இதையே பரீட்சை ஆணையாளர் அநுர எதிரசிங்கவும் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளும் தம்மை தொடர்பு கொண்ட ஊடக நிறுவனங்களிடம் கிளிப்பிள்ளையைப் போல் திரும்பத் திரும்பக் கூறிவந்தனர். ஆனால் இவையெவற்றையும் கருத்தில் கொள்ளாத அரசியல் தலைவர்களாக தங்களை கூறிக் கொள்பவர்களின் அழுத்தமும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிதானமற்ற செயற்பாடும் இம்முறை பரீட்சை முடிவையே எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் அளவுக்கு நிலைமையை சிக்கலாக்கி இருக்கின்றது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. தாமதத்துக்கான சில காரணங்களை பரீட்சைத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள், புத்திஜீவிகள் முன்வைத்திருந்தாலும் அவையெவற்றையும் காதிலே போட்டுக் கொள்ளாமல் பரீட்சை முடிவுகளை வெளியிடுமாறு வற்புறுத்துவது எரிகின்ற நெருப்பில் எண்ணைய் ஊற்றுவதாகவே இம்முறை அமைந்துள்ளது. இதன் காரணமாக கணித பாடத்தில் தோற்றிய ஒருவருக்கு புவியியல் பாட முடிவு வெளியிடும் துர்பாக்கிய நிலமை ஏற்பட்டுள்ளது.

பரீட்சை முடிவுகள் வெளியிடப்படுவதற்கு சில நாள்கள் முதல் பரீட்சை முடிவுகள் பற்றிய பிரதிவாதங்கள் அரசாங்கத்திற்கு அதிகரித்திருந்தது. முடிவு தாமதம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நாடாளுமன்றத்திலும் சூடுபிடித்திருந்தது. இந்நிலையில் இதனை அறிந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக சட்டமா அதிபரை அலரி மாளிகைக்கு அழைத்து பரீட்சை முடிவுகளால் ஏற்படும் சட்டப்பிரச்சனையை எவ்வாறு எதிர்கொள்ளவது என சட்டமாஅதிபர் மொஹான் பீரிஸிடம் ஆலோசனை பெற்றதும் பரீட்சை முடிவுகளை வெளியிடுமாறு அதிகாரிகளை பணித்ததும் யாவரும் அறிந்த உண்மை இதை பல அரச சார்பு ஊடகங்கள் தமது முதன்மைச் செய்திகளாக அலங்கரித்தன.

இந்தப் பணிப்பே பின்னர் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக அப்பாவி மாணவர்கள் பாதிக்கப்படும் அளவுக்கு நிலைமையை கொண்டு போய் விட்டிருக்கின்றன. இது தொடர்பாக பல விமர்சனங்கள் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்டும் வருகின்றன.

இவற்றிற்கு வழமைபோலவே 'விசாரணைக்குழு அமைக்கப்படும்' என்ற கருத்து உயர் கல்வி அமைச்சரால் கூறப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக பரீட்சை ஆணையாளர் அநுரஎதிரசிங்க விசார ணைக்கு உட்படுத்தப்பட்டதான செய்திகளை சில ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

இலங்கை வரலாற்றில் விசாரணைக்குழு அமைப்பது என்பது எவ்வாறு கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டது என்று யாவரும் அறிந்த உண்மை. எனவே இலங்கை அரசு விசாரணை குழு அமைப்பதுடன் மாத்திரம் நின்று விடாது இன்று பரீட்சை பெறுபேறு வெளியிட்டால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குரிய தீர்வை வழங்க வேண்டும் இதுவே பாதிக்கப்பட்ட மாணவர்களின் எதிர்பார்ப்பும் கோரிக்கையும் ஆகும்.

# உங்களுக்காக பணம் ஈட்டும் மாபெரும் படை

■ குளோரியஸ் ஸ்டீவ்

ஒவ்வொரு நபருக்கும் தேவையான பணத்தைச் சம்பாதிக்க நம் ஒவ்வொருவராலும் முடியும். தேவைக்கேற்ப சம்பாதிக்க முடியாதவர்கள் சோம்பேறிகள் என்று உறுதியாகச் சொல்லலாம். தேவைக்கதிகமாக சம்பாதிப்பவர்கள் பேராசைக்காரர்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அப்படியிருக்க, ஏன் ஒருவன் மிகப்பெரிய பணக்காரனாக வேண்டும்? ஏன் அத்தகைய ஆசை நம் உள்ளக்கிடக்கையைக் கிளர்ந்தெழச் செய்கிறது? ஏன் சிலர் மட்டும் தலைவர்களாக மாறுகிறார்கள்? ஏன் அவர்களுக்கென்று அளவுக்கதிகமான பாதுகாப்பு வழங்கப்படுகிறது? ஏன் அவர்களுடைய தேவைகள் பெரியதாய் தெரிகின்றது? இப்படி இன்னும் பல கேள்விகள் நம் மனதில் அன்றாடம் எழத்தான் செய்கின்றது.

மேலே கூறப்பட்ட கேள்விகளுக்குச் சரியாய் அளிக்க வேண்டிய ஒரே பதில் இதுதான். மிகப்பெரியதாய் சிந்திப்பதற்கும் மிகச் சிறியதாய் சிந்திப்பதற்கும் காரணமாக இருப்பது நமது கனவு. இலட்சியம் மற்றும் நாம் நம் மனதில் வைத்திருக்கும் இலக்குதான்.

பத்துப்பேருக்காக உழைக்க வேண்டும் என எண்ணுபவன் அதற்கேற்ப பணம் சம்பாதிக்கிறான். நூறு பேருக்காக உழைக்க எண்ணுபவன் அதற்கு எவ்வளவு பணம் வைத்திருக்க வேண்டுமோ அந்த அளவுக்குப் பணம் சேகரிக்க முயல்கிறான். அவ்வாறே ஆயிரம் பேருக்கும் அல்லது ஒரு நாட்டுக்கும் உழைக்க விரும்புகிறவன் அந்தந்த தேவைகளுக்கேற்ப பணம் ஈட்டுகிறான்.

இப்படித்தான் பெரிய பண முதலைகள் எல்லாம் பெரிய இலக்குகளை முன்னிறுத்தி, அவரவர் அளவுக்கேற்ப பணக்காரர்களாக மாற முடிந்தது என்றால் நம்புவதற்குச் சற்றுக் கடினமானதாக இருக்கும். ஆனால் உண்மை அதுதான். இப்படிப் பணத்தை ஏராளமாக சம்பாதித்த பிறகு, எதற்காக இவ்வளவு பணம் சம்பாதித்தோமோ அந்த உண்மையான இலக்கை முன்னிறுத்தி தொடர்ந்து சம்பாதிப்பதற்குப் பதிலாக அவர்களின் உண்மையான இலக்குகளைத் தொலைத்துவிட்டு இடையில் ஏதோ வசதிக்கேற்ற விதத்தில் தங்கள் இலக்குகளை மாற்றிக் கொண்டவர்களே மக்களால் பேராசை கொண்ட பணக்காரர்களாக கருதப்படுகிறார்கள். உண்மையில் தங்கள் இலக்குகளை விடாமல் மனக்கண் முன் நிறுத்தி வேலை செய்பவர்களுக்கு இத்தகைய சிக்கல்கள் ஏற்படுவதில்லை.

அது இருக்கட்டும். இவர்கள் எப்படி இவ்வளவு பணத்தையும் சம்பாதித்திருப்பார்கள் என்ற கேள்விக்கான விடையை இந்தத் தருணத்திலே உங்களுக்குத் தொடர்ந்து கொடுக்க எண்ணியுள்ளேன். உங்களுடைய இலக்குகளையும் கனவுகளையும் சுமந்து கொண்டு உங்களுக்காக பலரையும் வேலைசெய்ய வைக்கும் முறையைத்தான், இங்கே உங்களுக்காக அயராது உழைக்கும் ஒரு படையையே உருவாக்கும் நிலையைத்தான் இங்கு குறிப்பிட உள்ளேன்.

உங்கள் கனவும் இலட்சியமும் எவ்வளவு பெரியதாகவும் பரந்ததாகவும் இருக்கிறதோ, அவ்வளவு பெரியதாக உங்கள் வங்கிக் கணக்கும் இருக்கும். காரணம் நீங்கள் ஒரே ஒரு ஆளாக இருந்தாலும், உங்கள் கனவுகளை உள்வாங்கி உங்கள் இலக்குகளை முன்னிறுத்து அயராது வேலைசெய்யும் மாபெரும் படையைத் தயாரித்து இருப்பீர்கள். வேறு ஒரு வகையில் சொல்ல வேண்டுமென்றால் உங்கள் இலட்சியம் உயர உயர உங்களைத்தேடி அத்தகைய கனவுகளுக்காக வேலைசெய்யும் படைவீரர்கள்வந்து குவிந்துவிடுவார்கள். இலட்சியவாதிகளுக்கு விளம்பரங்கள் தேவையில்லை. அவர்கள் பேசி தங்களுக்கு விளம்பரம் தேடிக்கொள்ளவேண்டிய அவசியமுமில்லை. அவர்களது மௌனம் கூட அவர்களுக்கு மாபெரும் விளம்பரமாக மாறும்.

ஆனால் அத்தகைய படையை உருவாக்க வேண்டுமென்றால், உங்களிடம் சில அடிப்படை பண்புகள் இருக்கவேண்டும். அந்தப் பண்புகளே உங்கள் முதல் நிலை படைவீரர்கள். ஆயிரம் மனிதர்களைக் கொண்ட படையைவிட உங்களுக்குள் உள்ள 'இலட்சிய பண்பு' என்ற படைதான் சக்திவாய்ந்த படை.

500 அமெரிக்க பணக்காரர்களை நேர்காணல் செய்தபின் பின்வரும் பண்புகளை நெப்போலியன் ஹில் என்ற ஆய்வாளர் குறிப்பிடுகிறார். அவை: தெளிவான ஒரே இலக்கு, சேமிக்கும் பழக்கம், தன்னம்பிக்கை, கற்பனைத்திறன், புதிய முயற்சிகள் மேற்கொள்ளும் தைரியம், தலைமை பண்பு, ஆர்வம், சுய கட்டுப்பாடு, பெறுகின்ற சம்பளத்துக்கும் மேலாக வேலை செய்யும் ஆர்வம், அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஆளுமை, துல்லியமான சிந்தனை, கவனம், கூட்டொருமைப்பாடு, தோல்விகளைக் கண்டு துவளாமை, பொறையுடைமை. உங்களை நீங்களே தயார் செய்து கொண்டபின் உங்களுக்காக வேலை செய்யும் படைகளைத் தயார் செய்வது மிகவும் எளிதாகிவிடும்.

பல ஆண்டுகளுக்கு முன் ஃ போடு மோட்டார்ஸ் நிறுவனத்தை நிறுவிய ஹென்றி ஃ போர்டு என்ற [illegible] டது. அந்த வழக்கின்படி ஹென்றிஃ போர்டுக்குப் பல தரவுகள் தெரியாமல் அறிவிலியா இருக்கிறார் என்பதை எதிர்கட்சி வழக்கறிஞர் நிரூபிக்க முயன்று கொண்டிருந்தார். அதற்காக நூற்றுக்கணக்கான கேள்விகளை அடுக்கடுக்காய் கேட்டுக் கொண்டிருந்தார். அவற்றுக்குப் பதில் சொல்லிச் சலித்துப்போன ஹென்றி ஃ போர்டு, திடீரென பதில் சொல்வதை நிறுத்திவிட்டு அந்த வழக்கறிஞரைப் பார்த்து, "நீங்கள் கேட்கின்ற முட்டாள்தனமான கேள்விகளுக்குப் பதிலளிப்பது எனக்கு எளிது. அது மட்டுமன்றி எனக்குப் பதிலாக பொதுமக்களாலேயே உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியும். நான் ஒரே ஒரு பட்டனை தட்டினால் போதும்,நான் செய்யும் தொழில் பற்றி என்னிடம் பணிசெய்யும் யாராலும் அதற்குப் பதிலைத் தரமுடியும்.

அப்படியிருக்க நான் ஏன் பொது அறிவு என்ற பெயரில் என் மண்டைக்குள் அத்தனை அவசியமற்ற தகவல்களை அடைத்து வைக்க வேண்டும்? என்னைக் சுற்றி அதற்காக ஆட்கள் இருக்கின்றபோது நான் ஏன் தேவையற்ற இந்த வேலையைச் செய்ய வேண்டும்?" என்றார்.

அந்த வழக்கில் அவர் வெற்றி பெற்றார். இப்படிச் செய்ததன் வழியாக, நெப்போலியன் ஹில் குறிப்பிட்ட மாஸ்டர் மைண்ட் (master mind) என்ற தத்துவத்தை நிரூபித்தார். ஃ போர்டு, அதாவது ஒருவரிடம் இருக்கும் சிறு பகுதி அறிவும் முயற்சியும் முன்னேற்றத்துக்கும் பணம் ஈட்டுவதற்கும் போதுமானதாக இருக்காது. மாறாக அறிவும் முயற்சியும் இரண்டுக்கும் மேற்பட்ட இணைந்து பணியாற்றும் குழுவிடம் இருந்தால் அது பெரிய சக்தியாகவும் அதிக பணம் ஈட்டுவதன் மூல காரணியாகவும் மாறும் என்பதுதான் அந்த மாஸ்டர் மைண்ட் தத்துவம்.

அதனால் நீங்களாகவே ஏதோ ஒரு தொழிலைச் செய்தோம்; பணம் சம்பாதித்தோம் என்றில்லாமல், பணம் ஈட்டுவதில் அதிகமான நபர்களுக்கு வாய்ப்புகளை வழங்கி அவர்களிடமிருந்து பணம் ஈட்டுவதற்கான பங்களிப்பை உருவாக்க வேண்டும். இதுதான் உங்களுக்காக பணம் ஈட்டும் மாபெரும் படையை திரட்டும் விதி. ஆனால் அதற்கு உண்டான அறிவும் முயற்சியும் திறனும் உள்ளவர்களை இணைக்க முயற்சி எடுக்க வேண்டியது உங்களின் மாபெரும் திறமையைப் பொறுத்தது. எந்த அளவுக்கு நீங்கள் ஆட்களைக் குவிக்கிறீர்களோ அவ்வளவுக்கதிகமான பணத்தை உங்கள் வங்கிக் கணக்கில் குவிக்கமுடியும் என்பதை மறந்து விடாதீர்கள்!

"நம்முடைய 100 விழுக்காடு முயற்சியை விட, நூறுபேரின் ஒரு விழுக்காடு முயற்சியையே நான் பெரிதாக மதிக்கிறேன்." ஜான் பால் கெட்டி என்ற எண்ணெய் நிறுவன கோடீஸ்வரர் சொல்வதை நமது இலக்காக மாற்றுவோம்.

தாமதிக்காமல் உங்கள் கனவுகளையும் இலட்சியங்களையும் பகிர்ந்துகொண்டு உங்கள் கனவை நனவாக்கும் மிகப்பெரிய படையை உருவாக்குவதன் அவசியத்தை இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். அதற்காக நீங்கள் எந்தப்பெரிய செலவையும் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், சில மணித்துளிகளை இதற்காக ஒதுக்கி, உங்கள் கனவைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்! அதுபோதும் உங்கள் கனவைத் தங்கள் கனவாக மாற்றத் தயாராக இருக்கும் பலர், உங்களோடு அந்தப் பணம் ஈட்டும் படையில் தேனீயாய் இப்போது இணையத் தயாராக இருப்பார்கள். இந்த மாதம் முழுவதும் அப்படிச் செய்து பார்த்து உங்கள் அனுபவங்களை steviglo@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள். பணத்தை உருவாக்கும் படை வேறெங்கும் இல்லை. அது உங்களிடம்தான் இருக்கிறது.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக்கு ரயில்!

## அடிப்படைத் தேவையா?



சொந்த காணியில் மீளக் குடியமர முடியாமல் ரயில் நிலையத்தில் தங்கியுள்ள மக்களிடம் சொந்தக் காணியைக் காட்டுமாறு கேட்கின்றனர். எப்படியிருக்கிறது வடக்கின் அபிவிருத்தி?



■ நெற்றிக்கண்ணன்

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கும் சீவன் போகிற பரிதாபக் கதையாகி விட்டது ரயில் நிலையக் குடியிருப்பாளர்களின் வாழ்க்கை.

வடக்கில் வசந்தம் பொழிகிறது எனக் கூறி மக்களின் வலியை மூடி மறைக்க முயலும் மஹிந்த அரசு, தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏதிலிகள் ஆக்குவதில் தீவிர அக்கறை காட்டியுள்ளது.

### ரயிலை அனுப்புவதில் அதீத அக்கறை

வடக்கிற்கு ரயிலை அனுப்புவதிலுள்ள அக்கறை வடக்கிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள், வாழ்வியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் அறவே இல்லை.

சர்வதேச வல்லாதிக்க சக்திகளின் துணையுடன் முள்ளி வாய்க்காலில் தமிழினப் படுகொலையை நிகழ்த்திச் சாதித்த மஹிந்தா, சர்வதேசத்துக்குப் பூச்சாண்டி காட்ட அபிவிருத்தியை முன்மொழிகிறார்.

அவ்வாறானதொரு அபிவிருத்தியின் வெளிப்பாடுதான் வடக்குக்கு ரயில் அனுப்பப்படுவது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் அடுத்த வருட இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு ரயில் வரும் எனக் கூறி அதற்கான முன்னாயத்தங்கள் தடலபுடலாகத் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

ரயில் நிலையங்கள், மற்றும் ரயில் பாதைகளில் குடியிருப்பவர்களை உடனடியாக அகன்றுவிடுமாறு எழுத்து மூலமான அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### போகுமிடம் தெரியாத நிலை

வட பகுதியிலுள்ள ரயில் நிலையங்கள் மற்றும் பாதைகளில் குடியிருந்தவர்களில் வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து செல்லக்கூடிய மக்கள் அவ்வாறு சென்று விட்டனர். ஏனையோர் போகுமிடம் தெரியாமல் தொடர்ந்தும் தங்கியிருக்கின்றனர்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண மத்திய ரயில் நிலையத்தில் 32 குடும்பங்களும், நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ரயில் நிலையத்தில் 74 குடும்பங்களும் சாவகச்சேரிப் பிரிவில் 06 குடும்பங்களும் உடுவில் பிரிவில் 14 குடும்பங்களும் தற்போது செய்வதறியாது தங்கியுள்ளனர்.

மீளக் குடியமர்த்தப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களே ரயில் நிலையங்களை விட்டுப் பிரிய முடியாத நிலையில் உள்ளனர்.

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சுன்னாகம் ரயில் நிலையத்துக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் நேரில் சென்று மக்களது அவலத்தைப் பதிவு செய்ய முடிந்தது.

### 27 வருடங்களில் 35 இடப்பெயர்வு

கடந்த 27 வருடங்களில் 35 தடவைகள் இடம்பெயர்ந்த குடும்பம் ஒன்றும் அங்கு தங்கியிருக்கிறது. தையிட்டி காங்கேசன் துறையிலிருந்து 85 ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த ஆசீர்வாதம் சந்திரசேகரம் என்பவரே 35 தடவைகள் இடம்பெயர்ந் திருக்கிறார். 36 ஆவது இடமாக சுன்னாகம் ரயில் நிலையத்தில் தஞ்சம் புகுந்த அந்த குடும்பம் 37 ஆவது இடத்தை தேடி அலைகிறது.

பாடசாலை செல்லும் வயது உள்ளடங்கலான 6 பிள்ளைகளைக் கொண்ட எட்டுப் பேரை உள்ளடக்கிய அந்தக் குடும்பம் ஆற்றிலே நீரும் இல்லை ஆதரிப்பார் யாரும் இல்லையென விரக்தியின் விளிம்பில் நிற்கிறது.

ஆசீர்வாதம் சந்திரசேகரத்தை அணுகி இது குறித்து கேட்ட போது. அவர் தனது குடும்பத்தினர் மாறி மாறி இடம்பெயர்ந்த இடங்களை மூச்சு விடாமல் அடுக்கிக் கொண்டுபோனார்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலடி, கோண்டாவில் ரயில் நிலையம், சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியா லயம்...........

.............விசுவமடு , ஆனை விழுந்தான், உரும்பிராய் என தனது குடும்பம் இடம்பெயர்ந்த 33 இடங்களை, சுமார் 30 செக்கனில் கூறி முடித்தார். அத்துடன் இடம் பெயர்ந்த ஒரு சில இடங்கள் தற்போது நினைவுக்கு வரவில்லை. அதனையும் கொஞ்சம் பொறுங்கள் கூறுகிறேன் எனக் கூறி முடித்தார்.

மூச்சு விடாமல் கணப்பொழுதில் அவர் இடங்களைக் கூறுவது பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் 'மண்ணில் இந்தக் காதலின்றி யாரும் வாழ்தல் கூடுமோ.....' என்ற பாடலை மூச்சு விடாமல் பாடி விட்டுப் பின்னர் மூச்சு வாங்குவதைப் போலிருந்தது.

### படையினரின் நெருக்கடி

ஜனாதிபதி நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, வடக்கு மக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்ய வந்த போது மக்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்த விதம் போல இருந்தது ரயில் குடியிருப்பாளர்களின் சோகக் கதைகள்.

அதாவது, என் மகன் இத்தனையாம் ஆண்டு, இந்த இராணுவ முகாமிலுள்ள இன்ன பெயருள்ள இராணுவத்தினரால் கடத்தப் பட்டவர் என பல்லில்லாத வயதான அம்மாக்கள் ஆண்டு திகதி மறக்காமல் கூறியது போல் ரயில் குடியிருப்பாளர்கள் நிகழ்ந்த அவலத்தைக் கூறி வாழ வழி சொல்லுங்கள் என அழுதனர்.

சில தினங்களுக்கு முன்னர் சுன்னாகம் ரயில் நிலையத்துக்குச் சென்ற இராணுவத்தினர் உடனடியாக மக்களை வெளியேறி விடுமாறும் இல்லையேல் புல்டோசர் கொண்டு இடித்துத் தள்ளப்போவதாக மிரட்டியுள்ளனர். ஏன் இந்தக் கொடுமை எங்களுக்கு என அழுகின்றனர் அங்குள்ள மக்கள்.

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த மக்களே மீளக் குடியமர அனுமதியின்றி ரயில் நிலையத்தில் தங்கியுள்ளனர். மக்கள் காணியைக் காட்டினால் தற்காலிக வீடு அமைப்பதுக்கு உதவுவோம் என அரச அதிகாரிகள் அந்த மக்களுக்கு அறிவித்திருக்கின்றனர். சொந்த காணியில் மீளக் குடியமர முடியாமல் ரயில் நிலையத்தில் தங்கியுள்ள மக்களிடம் காணியைக் காட்டுமாறு கேடகின்றனர். எப்படியிருக்கிறது வடக்கின் அபிவிருத்தி?

வலி வடக்கு மட்டுமன்றி வடக்கில் பல்வேறு பகுதிகள் இன்னமும் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

காணியைக் காட்டிய குடும்பம் ஒன்றுக்கு தற்காலிக வீடு வழங்க மறுத்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

எனவே அவசரமாக ரயிலை வடக்கிற்கு அனுப்புவதற்கு முன்னர், அல்லாடும் மக்களை முதலில் மீளக் குடியமர்த்துவதில் அக்கறை காட்டுங்கள். அந்த அபிவிருத்தியை வடக்கு ஏற்கும். ✱



சரணம் நம்பினேன் யேசுநாதா... என்று ஆரம்பித்த பாடலில் இறைவன் யேசுநாதரை பிரார்த்தனை செய்து பக்தியின் மார்க்கத்தினூடாக அவரிடம் சரணடையும் காட்சியைப்-பரதநாட்டியத்தில் முதன்முதலாக வெளிப்படுத்தியிருந்ததை செல்வி சுகாஸ்ஸி, ஸ்ரீகுமார், சௌமி ஸ்ரீகுமார் சகோதரி களின் சலங்கையின் நாதம் எனும் நாட்டிய அரங்கேற்றத்தில் காணக்கூடியதாக இருந்தது. கடந்த புதன்கிழமை அந்தி வேளையில் திருமறைக் கலாமன்றத்தில் சகோதரங்களின் சலங்கையின் நாதம் அரங்கேறியது.

அந்த அரங்கேற்றத்தின் போதே இந்தக் காட்சியை காண முடிந்தது. பாடலுக்கு ஏற்ப உடை, ஆபரண அலங்கரிப்பு, மேடை அமைப்பு ஆகியன அபிநய ஆடலுக்கு மேலும் மெருகூட்டியனவாக அமைந்தது. அரங்கத்தில் இருந்து அனைவரது பார்வையையும் தன் வசம் ஈர்த்தது இந்தப் பாடலின் நடனம். பொது வாக [illegible] ணம் [illegible] பாரதியார் பாடல் என்பவற்றின் பகுதிகளை ஒன்றை வைத்து அசை போடுவது வழக்கமான ஒன்றாகும். அந்த வகையிலேயே இந்த நடனம் ஒரு புது முயற்சி பாராட்ட முடிந்தது. பாவம், ராகம், தாளம், ஸ்ருதி இவை நான்கும் ஒன்று சேர்ந்ததே பரதம் எனப்படுகிறது. அரங்கேற்றத்தின் கலாவித்தகர் திருமதி சுதர்சினி கரண்சஸின் நட்டுவாங்கமும் குரலிசை மிருதங்கம், வயலின் ஆகியன ஆடலுக்கு மேலும் மெருகூட்டின.

முதலில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமான சலங்கையின் நாதம் அரங்குகளில் விறுவிறுப்பை ஏற்படுத்துவதற்காக அமைவது அலாரிப்பு. சபையோருக்கு வணக்கம் செலுத்தும் வகையில் ஆடுவது சிறப்பாக அமைந்தது. அபிநயத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து ஆடப்படுவது பதம். அதிலே நவரசங்களையும் முகப் பாவனையில் வெளிப்படுத்தியிருந்தது. அற்புதமாக அமைந்தது. இரு சகோதரிகளும் புலம்பெயர் நாடான கனடாவை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். தாய்நாட்டையும் நாட்டின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் மதித்து திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்களாக இளந்தளிர்களின் தமது ஆன்மார்த்தமான உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தனர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு சக்தி ஆய்வில் ஈரான் கண்டுள்ள பெரும் முன்னேற்றம்

■ ராம்

“ பேர்ஸியன் குடாவில் அமெரிக்க– ஈரான் மோதல் வெடிக்கலாம்

ஐ.நா. எதிர்பார்ப்பையும் மேற்கு நாடுகளின் அச்சுறுத்தல்களையும் மீறி ஈரான் தனது அணு ஆய்வுத் திட்டத்தை முன்னெடுத்திருப்பது மட்டுமல்ல, அதனால் ஒரு போதும் சாதிக்க முடியாது என்று மேற்குலக நாடுகளால் கருதப்பட்டு வந்த அணு எரிபொருள் உலோகத் தடியையும் உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது என்று அந்த நாட்டின் அணுசக்தி முகவர் அமைப்பு அறிவித்துள்ளது.

அணு எரிபொருள் உலோகத் தடியானது வளப்படுத்தப்பட்ட யுரேனியத்தின் குறுணிகளைக் கொண்ட குழாய்களாகும். அணு உலைக்களுக்கான எரிபொருளை இது வழங்குகின்றது. இந்த அறிவிப்பானது அணு எரிபொருள் சுற்றோட்டத்தின் முழுமையான அறிவினை அந்த நாடு பெற்றுள்ளது என்பதின் அறிகுறியாகும். இதன் மூலம் யுரேனிய ஃகினை துருவி ஆராய்ந்து அணு எரிபொருளை உருவாக்கிக் கொள்வதற்கு அது சாத்தியமான நிலையில் இருக்கிறது என்பதாகும். ஈரான் நாடு அணு குண்டைத் தயாரிக்காமல் இருக்கச் செய்வதற்கு ஐ.நாவும் பெரும் பாடுபட்டு வருகின்றது.

ஐ.நா. பொருளாதாரத் தடைகளையும் அமெரிக்கா அதே விதமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. ஈரான் அணு உலைகளுக்குத் தேவையான அணு எரிபொருள் உலோகத் தடியை வெளிச் சந்தைகளில் வாங்கிவிடாதபடி அமெரிக்காவும் வர்க்கத் தடைகளை விதித்திருந்தது.

ஆனால், இப்போது அந்த நாடு தனக்குத் தேவையான முதலாவது அணு எரிபொருள் உலோகத்தடியை தன் முனைப்பாகத் தயாரித்துக் கொண்டுள்ளமை உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அணு குண்டைத் தயாரிக்கும் திறனையும் அந்த நாடு பெற்றுவிட்டதாகக் கருதப்படுகின்றது.

இந்தக் கருவியை ஏற்கனவே அணு உலையில் பொருத்தி விட்டதாக ஈரான் அறிவித்துள்ளது. ஆனால் அதில் யுரேனியக் குறுணிகள் உள்ளனவா அல்லது வெறும் கருவிதான் சோதனைக்காக பொருத்தப்பட்டுள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

### பேர்ஸியன் குடாவில் போர் மூளும் அபாயம்

பேர்ஸிய குடாப் பகுதியில் அமெரிக்க போர்க் கப்பல்கள் தொடர்ந்தும் பணியில் ஈடுபட்டிருக்கும் என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது.



“ ஹோமுஸ் நீரிணை வழியாக உலகின் எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் பலவும் சென்று வரு வது வழமையாகும். இவ் வழியாகச் செல்லும் அமெரிக்க கப்பல்கள் தடுக்கப்படுமானால் அந்தப் பகுதியில் பெரும் நெருக்கடியொன்று தோன்ற இடமுண்டு. அதனால் உலக எரிபொருள் விலையோ எகிறும் – பெற்றோலிய பொருள் தட்டுப்பாடும் விலையேற்றமும் தடுக்க முடியாமல் போகும்.

அமெரிக்க விமானத் தாங்கி போர்க் கப்பலான யு.எஸ் எஸ்.ஜோன் சி.ஸ்டென்னிஸ் அண்மையில் ஹோர்முஸ் தொடுவாய் வழியாகக் கடந்து சென்றது. ஈரான் தனது 10 நாள் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் இக் கப்பல் அப்பகுதியில் சென்றமை ஈரானுக்குப் பலத்த சந்தேகத்தையும், கோபத்தையும் கிளப்பியிருந்தது. தற்பொழுது பேர்ஸியன் குடாவில் தரித்து நிற்கும் இக் கப்பல், மீண்டும் தெஹ்ரான் குடாப் பகுதிக்கு வரக் கூடாது என்றும், அப்பகுதியை மூடப் போவதாகவும் ஈரான் அறிவித்துள்ளது.

இருந்தாலும் ஓமான் குடாப் பகுதியில் தமது கப்பல்கள் தொடர்ந்து நிலைகொண்டு பணியில் ஈடுபட்டிருக்கும் என்றும், சர்வதேச கடற் சட்டங்கள் அதற்கு அனுமதிக்கின்றன வென்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

‘‘பல வருடகாலமாக பேர்ஸியன் கடல் பகுதியில் எமது கப்பல்கள் நடமாடி வருகின்றன. அது போல் தொடர்ந்தும் அவை இருந்து வரும். அமெரிக்க விமானத் தாங்கிக் கப்பலும் அதனுடனான ஏனைய கப்பல்களும் ஹோர்மஸ் குடாவழியாக பயணம் செய்வது அப் பகுதியின் பாதுகாப்புக்கான எமது கடப்பாடாகும். சர்வதேச சட்டங்களுக்குட்பட்டதாகும்’’, என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹோமுஸ் நீரிணை வழியாக உலகின் எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் பலவும் சென்று வருவது வழமையாகும். இந்த வழியாகச் செல்லும் அமெரிக்க கப்பல்கள் தடுக்கப்படுமானால் அப்பகுதியில் பெரும் நெருக்கடி ஒன்று தோன்ற இடமுண்டு. அதனால் உலக எரிபொருள் விலையோ அதிகமாக்கப்படுவதுடன் பெற்றோலிய பொருள் தட்டுப்பாடும் விலையேற்றமும் தடுக்க முடியாமல் போகும். அதுவே உலக நெருக்கடி ஒன்றுக்கு வழிகோலினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### அமெரிக்க - ஆப்கானிஸ்தான் பேச்சுக்கள் விரைவில்

ஆப்கானிஸ்தானில் செயற்பட்டுவரும் தலிபான்களை சமூக வாழ்வில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவது இப்பொழுது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட அவர்கள் முன் வந்திருப்பதுடன் அவ்வாறு செய்வதற்காக வெளிநாடு களில் தமது பணிமனைகளை [illegible] உடன்பாட்டைச்செய்து கொண்டிருப்பதாக அறிவித்துள்ளனர். அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு அவ்வாறான பணிமனையொன்றை முதலில் கட்டாரில் அமைத்துக் கொள்வது சாத்தியமாகலாம் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

## உலகப் பார்வை ஒரு தொகுப்பு

ஆப்கானிஸ்தானுக்கு வெளியில்பணிமனையொன்றை அமைத்துக் கொள்வது தொடர்பாகக் கட்டார் உட்பட சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுடனும் பூர்வாங்கமாக பேசியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சகல வெளிநாட்டு துருப்புகளும் ஆப்கானிஸ்தானத்திலிருந்து வெளியேறியாக வேண்டும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் வெளியார் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வர வேண்டும், ஆப்கான் மக்கள் தமக்கென இஸ்லாமிய அரசொன்றைச் சுயேச்சையாக நிறுவிக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். பேச்சு வார்த்தைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையென்று கூறும் தலிபான்கள், தமது முதல் முக்கிய கோரிக்கை அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள குவாண்டநாமோ பேயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது போராளிகளின் விடுதலை பற்றியதாகவே இருக்கும் என்று கசியவிட்டுள்ளனர். கடந்த 11 வருடங்களாக தலிபான் போராளிக் குழுவானது மேற்கு நாடுகளின் ஆதரவில் செயல்பட்டு வரும் அதிபர் கர்ஸாயின் அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடென், சஞ்சிகை ஒன் றுக்கு வழங்கியுள்ள செவ்வி யில் பொதுவில் தலிபான்கள் தமது எதிரிகள் அல்லர்; அவர்களுடனான பேச்சுக்கள் ஆப்கானில் அமைதியைத் தோற்றுவிக்கவும் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வரவும் உதவும் என்று கூறியிருக்கிறார். தலிபான்களுடன் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க கட்டாரில் அவர்களுக்குப் பணிமனையொன்று அமைக்கப்படுவதான இந்த செயற்பாட்டில் தம்மையும் இணைத்துக் கொள்வதாக இருந்தால் நாம் அதற்கு குறுக்கே நிற்கப் போவதில்லையென்று அதிபர் கர்சாய் தெரிவித்துள் ளார்.

இதற்கிடையில் தலிபான்கள் நாட்டின் பிரதான அரசியல் வாழ்வுக்குள் இணைத்துக் கொள்ளப்படுவார்களானால் மனித உரிமைகளும் சுதந்திரமும் சீர்குலைவதாக அமைந்து விடும் என்று ஆப்கான் பிரஜைகள் அனேகர் அஞ்சுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

* * *

### வடகொரியா பற்றி தென்கொரியா கருத்து

வடகொரியா, தென்கொரிய ஆட்சியாளர்களை துரோகிகள் என்று கடுமையாக விமர்சித்துள்ள அதேநேரம் தென்கொரியா விடுத்துள்ள ஒரு செய்தியில் வடகொரிய தலைமைத்துவத்துடன் தங்களுக்குப் பிரதானமாகப் பிரச்சினை ஒன்றும் கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளுடன் நல்லுறவைப் பேணிக் கொள்ளவே தாங்கள் விரும்புவதாக தென்கொரியா அறிவித்துள்ளது. அண்மையில் வடகொரியா ஆட்சியாளர்கள் விடுத்த ஓர் அறிவித்தலில் கிம் ஜொங் டன் அவரது தந்தை யாரின் மரணத்துக்குப் பின் மாபெரும் வாரிசாக வந்துள்ளார். ஆனால் நாட்டின் கொள்கை மாற்றப்படாமல் அப்படியே இருக்கிறது என்று உலக நாடுகளை அவர் எச்சரித்திருந் தார்.

### பாகிஸ்தானில் தலிபான் நடவடிக்கை

ஆப்கானிஸ்தானில் கர்சாய் அரசுக்கு எதிராகப் போராடி வரும் தலிபான்கள் அங்கு அமைதியைத் தோற்றுவிப்பதற்கு அமெரிக்காவுடன் பேச்சு ஆரம்பிக்க முயற்சித்துவரும் அதேவேளை, பாகிஸ்தானில் தமது நடவடிக்கைகளை இறுக்கமாக கடைப்பிடித்து வருகின்றனர்.

அண்மையில் ஆப்கான் எல்லைக்கருகில் தாம்கடத்திச் சென்ற பாகிஸ்தான் இராணுவத்தினர் 15 பேரை அவர்கள் கொன்றுள்ளனர். தங்களுக்கெதிராக நடத்தப் படும் ராணுவ நடவடிக்கைகளுக்கு பழிவாங்கும் முகமாகவே இந்த நடவடிக்கை என்றும் தொடர்ந்து இவ்வா றான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தலிபான் பேச்சாளர் ஒருவர் அறிவித்துள்ளார். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர்களுக்கு எந்த வர்ணம் பிடிக்கும்?




மனிதர்களில் பல வகை உண்டு அது போல் வர்ணங்களில் பல வகை உண்டு என்கின்றனர் ஆய்வாளர்கள். ஒரு... த பிடித்த கலரைக் கொண்டு அவருடைய குணத்தை ...பிடித்து விடலாம் என்கின்றனர் உளவியலாளர்.

காதலில் நீங்கள் எப்படி என்பதைக் கூட உங்களுக்குப் பிடித்த கலரை வைத்து கண்டுபிடித்து விடலாமாம்.

**சந்தோஷம் தரும் மஞ்சள்**

மஞ்சள் நிறப் பிரியர்களின் காதல் ஆசைகள் அளவுக்கு மீறியதாக இருக்கும். அத்தனை ஆசைகளையும் இவர்களது காதல் இணையால் நிறைவேற்ற முடியாது.

அதனால் இந்த நிற மனிதர்களின் காதலுக்கு ஜோடி கிடைப்பது கஷ்டம். காதலுக்காக உயிரைக்கூட கொடுப்பேன் என்பார்கள். ஆனால் பணத்தைக்கூட செலவழிக்க யோசிப் பார்கள்.

இவர்கள் அறிவாளியாகவும், கொள்கையில் பிடிப்பு கொண்டவர்களாகவும் இருப்பதால் கல்யாண வாழ்க்கை என்று வந்துவிட்டால், தனது ஜோடியை எல்லா விதத்திலும் சந்தோஷப் படுத்துவார்கள்.

**நினைத்ததை முடிக்கும் சிவப்பு**

சிவப்பு வர்ணத்தை விரும்புபவர்கள் வேகத்துடன் இருப்பார்களாம். அளவிட முடியாத ஆசைகளைக் கொண்டிருப்பார்கள். தன்னுடைய கற்பனையில் கண்டதை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று துடிப்பார்கள்.

இவர் விரும்பும் ஜோடிக்கும் படித்த நிறம் சிவப்பு என்றால், இவர்கள் வாழ்க்கையை திகட்ட திகட்ட அனுபவிப்பார்கள். ஆனால் காதல் விஷயத்தில் இவர்களின் பிடிவாத குணம், சில நேரங்களில் மிகப்பெரிய சிக்கலை உருவாக்கி விடும். இவர்கள் ஆசைப்பட்டதை அடையாமல் விட மாட்டார்கள்.

**காதல் மன்னன் பிங்க்**

பிங்க் நிறத்தை விரும்புபவர்கள் கணக்கற்ற காதல் கனவுகள் கொண்டவர்களாக இருப்பார்கள். தினமும் இரண்டு மூன்று பேருக்காவது அவர்கள் ரூட் விடுவார்களாம்.

காதல் விஷயங்களை படிப்பதிலும், அதை செயல்படுத்திப்பார்த்து உண்மையா, பொய்யா என்று கண்டறிவதிலும் மெனக்கெடுவார்கள். தங்கள் காதல் இணையை ரொம்பவும் புகழ்ந்து, கனவு காணவைத்து தான் நினைப்பதை சாதிக்க முயற்சிப்பார்கள். பிங்க் நிறத்தை விரும்பும் பெண்கள் தனித்துவம் பெற்றவர்கள். ஆண்களை எளிதில் நம்பி ஏமாந்துவிட மாட்டார்கள்.

**காதலில் திளைக்கும் பச்சை**

பச்சையை விரும்பும் பெண்களின் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிவது கடினம். இவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். காதல் உணர்வுகளையும் எளிதாக வெளிப்படுத்தமாட்டார்கள்.

ஆனால் இந்த நிறத்தை விரும்பும் பெண்களிடம் காதல் உணர்வுகள் அதிகம் இருக்கும். காதலரே கணவர் ஆனாலும் காலம் முழுக்க அவரோடு காதல் கொள்ள துடிப்பார்கள்.

**புதுமையை விரும்பும் நீலநிறம்**

நீல நிறத்தை விரும்பும் பெண்கள் நாலைந்து ஆண்களை ஆராய்ந்து, இறுதியில் அதில் ஒருவரை தேர்வு செய்து காதலிப்பார்கள். இந்த நிறத்தை விரும்புகிறவர்களிடம் காதல் உணர்வு அதிக மிருக்கும். நீல நிறத்திற்குரிய ஆண்களிடமும் இதே இயல்புகள் இருக்கும்.

**சுயநலவாதியான நாவல்**

நாவல் வர்ணத்தை விரும்புபவர்கள் காதல் என்றாலும், கல்யாணம் என்றாலும் தனது எதிர்காலத்துக்கு அதன் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்று கணக்கு போடும் சுயநலவாதிகள்.

கல்யாணத்திற்கு பெண் பார்த்தாலும் அவளிடம் தனியாகப் பேசி தன் எதிர்பார்ப்புகளை எல்லாம் தொன் கணக்கில் கொட்டுவார்கள். அதைக் கேட்டு அதிர்ந்து போகும் பெண், அவரோடு தன்னால் வாழ்க்கை நடத்த முடியாது என்று கூறிவிடுவாள். அதனால் இந்த நிறத்தை விரும்புகிறவர்களுக்கு காதல் மட்டுமல்ல, கல்யாணமும் தள்ளிப்போய்க்கொண்டே இருக்கும்.

**தத்துவம் பேசும் ஒரேஞ்**

ஒரேஞ் வர்ணம் விரும்புவோர் கடவுள் நம்பிக்கை அதிகம். காதல் இவர்களுக்கு சுட்டுப்போட்டாலும் வராது. யாராவது காதல் தூதுவிட்டாலும் தத்துவம் பேசி விரட்டிவிடுவார்கள்.

அதற்கு போய் யாராவது நேரத்தை செலவிடுவார்களா என்று தத்துவம் பேசுவார்கள். இந்த நிறத்தை விரும்பும் ஆண்களை, பெண்கள் சாமியார் என்பார்கள்.

**மன அழுத்தம் தரும் கறுப்பு**

கறுப்பு நிறத்தை விரும்புபவர்கள் யாரிடமும் மனம்விட்டுப் பேச மாட்டார்கள். இறுக்கமான மனிதர்களாக இருப்பதால் இவர்கள் காதல் பார்வை பார்த்தாலும், எதிர்பாலினம் நம்பிக்கை கொள்ளாமல் நழுவிச்சென்றுவிடும். காதல் இவர்களுக்கு பெரும்பாலும் கைகூடாது. மன அழுத்தம் இவர்களிடம் அதிகம் உண்டு. அதை தீர்க்க சரியான மருந்து தாம்பத்ய உறவு கொள்வதுதான் என்று நம்புவதால் விரைவில் திருமணம் முடிக்க ஆசைப்படுவார்கள்.

**காதலை வெறுக்கும் வெள்ளை**

வெள்ளை நிறத்தை விரும்புபவர்கள் காதலாவது கத்தரிக்காயாவது என்று எப்போதும் காதலுக்கு எதிராகவே பேசுவார்கள்.

காதலிப்பவர்களை தூற்றவும் செய்வார்கள். இதனை விரும்பும் ஆண்களைப் பார்த்தாலே பெண்கள் நாசூக்காக நழுவிப் போய் விடுவார்கள். ஆனால் குடும்ப வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

YK





செழிப்பான அறுவடையைக் கொண்டாடும் பேருவகையை நாமும் உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்!

யாழ்ப்பாணம் ஸ்டைல் பார்க் வழங்கும் ரூபா 2,000 பெறுமதியான அன்பளிப்பு வவுச்சர்கள்

தைப்பொங்கல் அல்லது "தமிழர் திருநாள்" என்பது செழிப்பான அறுவடையையிட்டு சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் உலகெங்கும் வாழும் தமிழர்களால் தொன்றுதொட்டு கொண்டாடப்பட்டுவருகின்ற மகத்துவம்மிக்க ஒரு பண்டிகையாகும்.

மிகவும் சிறப்பான இத்தினத்தில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்களது சுற்றத்தார் மற்றும் அன்பிற்குரியவர்களுடன் மகிழ்ச்சியுடன் ஒன்றுகூடி செழிப்பான மற்றுமொரு ஆண்டினுள் காலடியெடுத்து வைப்பதற்கு DHL தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி - ஜனவரி 1 முதல் 13 வரை DHL இன் யாழ்ப்பாணத்திலுள்ள விற்பனைநிலையத்தின் மூலமாக பொருட்களை அனுப்பிவைக்கும் ஒவ்வொருவருக்கும் ஸ்டைல் பார்க் வழங்கும் ரூபா 2,000 பெறுமதியான அன்பளிப்பு வவுச்சர் ஒன்று கிடைக்கப்பெறும். தைப்பொங்கல் பண்டிகைக்கான பொருட்களை கொள்வனவு செய்யும் இக்காலகட்டத்தில் நீங்களும் விரைந்து இச்சலுகையை இப்போதே பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு 021-4923528 என்ற இலக்கத்தினூடாக DHL யாழ்ப்பாண விற்பனை நிலையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்
அல்லது இல.94, கேகேஎஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு வருகை தாருங்கள்.

EXCELLENCE. SIMPLY DELIVERED. DHL



வாங்கிவிட்டீர்களா..
வாசித்துவிட்டீர்களா..?




★ சமகால அரசியல் ★ சிறுவர் பகுதி
★ ஆன்மீகம் ★ மருத்துவம்
★ நவீன தொழில்நுட்ப/விஞ்ஞான தகவல்கள்
★ சிறுகதை ★ பல்சுவை கவிதைகள்
★ உண்மைக் கதைகள் ★ விசேட நேர்காணல்கள்
★ சினிமா ★ பல்சுவை அம்சங்கள்

என அனைவரினதும் விருப்பங்களையும் நிறைவேற்றும் வகையில் புதிய மெருகூட்டல்களுடன்
இந்தவார சுடரொளி வெளிவந்துள்ளது.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காருக்குள் குழந்தைகள் இருந்தால் ஆபத்துத் தான்



நீண்ட தூரம் ஓடிய பிறகு நிறுத்திய காருக்குள் குழந்தைகள் சிறிது நேரம் இருந்தாலும் மூளை பாதிக்கப்படலாம் என்று ஆஸ்திரேலிய ஆய்வு எச்சரித்துள்ளது.

இதுகுறித்து லா ட்ராப் பல்கலைக்கழக ஆய்வு குழு பேராசிரியர் பீட்டர் ஓ மெரா கூறியதாவது:

வெளியே 29 டிகிரி வெப்பம் நிலவும் நாளில் காருக்குள் ஏசி மூலம் 20 டிகிரி வெப்ப நிலையாக குறைந்தால், அடுத்த 10 நிமிடங்களில் வெப்பம் இரு மடங்காக உயரும். கார் நின்ற அடுத்த 10வது நிமிடம் 3 மடங்காக அதிகரிக்கும். இந்த திடீர் வெப்ப நிலை அதிகரிப்பால் குழந்தைகளின் மூளை பாதிக்கப்படலாம்.

நீண்ட தூரம் ஓடிய பிறகு நிறுத்தப்பட்ட காருக்குள் குழந்தை, செல்லப் பிராணிகள் அதிக நேரம் இருக்க நேர்ந்தால் உயிரிழக்கும் அபாயம் உண்டு. கடந்த ஓராண்டில் மட்டும் காருக்குள் வெப்பத்தில் சிக்கிய 1,500 குழந்தைகள் ஆஸ்திரேலியாவில் மீட்கப்பட்டனர்.

வெப்பமான காருக்குள் சிக்கும் குழந்தைகளுக்கு உடனடியாக உடலில் நீர் வற்றி போய் மூளை பாதிக்கப்படும். பெரியவர்களைவிட குழந்தைகளுக்கு விரைவாக சோர்வு ஏற்பட்டு உடல்நிலை சீர்கெடும். நீண்ட நேரம் காருக்குள் வெப்பத்தில் இருக்கும் குழந்தைகள் சுயநினைவிழந்து பிறகு மீள முடியாத கோமா நிலைக்கு செல்லும் ஆபத்தும் இருக்கிறது.

இதை தவிர்க்க சூடேறிய காருக்குள் இருந்து குழந்தைகளை உடனடியாக வெளியே கொண்டு வர வேண்டியது அவசியம். நீண்ட தூரம் ஓடிய பிறகு நிறுத்தப்படும் கார் கதவுகளை பூட்டி குழந்தைகள் ஏறி அமராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.- என்று பீட்டர் ஓ மெரா தெரிவித்தார்.

CIC

செழிப்பான வாழ்க்கைக்கு

CIC நிறுவனம் 6 தசாப்த காலத்திற்கும் மேலாக, பயிர்ச்செய்கை, பெயின்றுகள், நுகர்வுப் பொருட்கள் போன்ற துறைகளில் நாமத்தை போஷித்து வளர்த்து வருகின்றது. பல வருடங்களுக்கு முன் பிரித்தானியாவிலுள்ள ICI நிறுவனத்தின் வர்த்தக நிலையமாக ஆரம்பிக்கப்பட்டு, திட்டமிட்ட அபிவிருத்திக்கான CIC கொள்கையின் பிரதிபலனாக, உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் உடல்நல பராமரிப்புப் பொருட்கள் போன்ற பிரதான உற்பத்திப் பொருட்களுக்கும் தனது வர்த்தகத்தை விஸ்தரித்துள்ளது. தற்போது CIC நிறுவனம் "ஜோன்சன் அன்ட் ஜோன்சன்" மற்றும் "சின்ஜெண்டா" உட்பட உலகப் பிரசித்தி பெற்ற பல நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரிய நிறுவனமாகவும் மாறியுள்ளது.

CIC நிறுவனத்தின் புதிய வணிகக் குறியீடு, இலங்கையின் வளமிக்க மண்ணில் இருந்து வெளிவரும் பாசத்தையும் போஷணையையும் எடுத்துக் காட்டி, சக்தியுடன் எழுந்திருந்து, பேரபிமானத்துடன் முன் சென்று தன்னையும் பாதுகாத்து, நிறுவனத்தின் பணியை திரும்பவும் ஆரம்பித்துள்ளது.




CIC Holdings PLC www.cic.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TVS

# இரண்டு சக்கர லொறியினால்

## வியாபாரத்துக்கு நல்ல இலாபம்



TVS XL SUPER HEAVY DUTY

அதிக பாரம். அதிக இலாபம்.

ரூ.75,446 + VAT

- 2 ஸ்ட்ரோக் 70CC எஞ்ஜின்
- 1 வருடத்திற்கு அல்லது 12,000 கிலோ மீற்றருக்கு உத்தரவாதம்
- அதிக பாரம் ஏற்றக்கூடிய பின்புற லகேஜ்
- 3 பராமரிப்புச் சேவைகள் இலவசம்



இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டது

உடனடி அழைப்பு: 0770 777 888

TVS Lanka (Pvt) Ltd.
இல.757, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14, இலங்கை.
தொலைபேசி: +94 11 4 605200 தொலைநகல்: +94 11 4 614909 இ-மின்னஞ்சல்: info@tvslanka.lk

பிரதான காட்சியறை - 0114605246 நகர காட்சியறை - 0114710416
ஜா-எல காட்சியறை - 0114979189 நுவரேலிய காட்சியறை - 0777590580
தெஹிவலை காட்சியறை - 011436400 மற்றும் நாடெங்கும் விநியோகஸ்தர்களும் விற்பனை முகவர்களும்

5th Elephant

# வரண்ட சருமத்தை மறந்துவிடுங்கள்

மிகவும் சக்திவாய்ந்த சுத்திகரிப்புடன் கூடிய உலகின் மிகச் சிறந்த குளிர்ச்சிதரும் திரவம்
குளிர்ச்சி, வரட்சி அல்லது மழை காரணமாக சேதமடைந்த சருமத்திற்கென்றே விசேடமாகத் தயாரிக்கப்பட்டது



கண்களுக்கு கீழ் ஏற்படும் கருமையையும் சருமத்தின் வரட்சியையும் விரைவாகக் குறைக்கிறது.




# NNO

போஷாக்கு தரும் இரவுநேர எண்ணெய்
ஜோஜோபா எண்ணெய் மற்றும்
விற்றமின் ஈ யினால் வளமாக்கப்பட்டது

சருமத்திற்கு
போஷாக்கை வழங்கி
புத்தொளி பரப்பி பளபளப்பாக்குகிறது

பிரான்ஸிலுள்ள ஸ்பின் கட்டுப்பாட்டு நிலையம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பலனாக NNO ஒரு தடவை உபயோகிக்கப்பட்டால் 6 மணித்தியாலங்களில் சரும ஈரலிப்புத்தன்மை 220% அதிகரிக்கும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**உங்களது சருமத்தில் NNO எவ் ா ு செயற்படுகிறது?**

- வரட்சியான, மெருகற்ற, மாசடைந்த மற்று ் உப்பிய சருமத்திற்கு பூரண போஷாக்கை வழங்குகிறது.
- முதிர்ச்சியடைதல் மற்றும் சூழல் காரணங் ளினால் ஏற்படும் சரும வரட்சியை குறைக்கிறது.
- கண்களுக்குக் கீழ் கருமை படர்வதை நீக்கு கிறது.
- ஈரலிப்பைக் காப்பாற்றவென சருமத்தின் மேலான பாதுகாப்பு பூச்சு.
- சருமத்திலுள்ள அடையாளங்கள், சுருக்கங்களைப் போக்கி தழும்புகளை நீக்க உதவுகிறது.
- கடுமையான ஒளிக்கிரணங்கள், களைப்பு மற்றும் அசுத்தக் காரணிகளிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கிறது.

**NNO வை எவ்வாறு நாம் உபயோகிக்கலாம்?**




நாடெங்கிலுமுள்ள பிரபல மருந்தகங்கள் நவீன சந்தைகளில் கிடைக்கும்.

**NNO (போஷாக்கு தரும் இரவு நேர எண்ணெய்)** ஒப்பற்ற முறையில் தயாரிக்கப்பட்ட ஈரலிப்பை ஏற்படுத்தும் எண்ணெய் ஜொஜோபா ஒயில் விற்றமின் ஈ என்பனவற்றினால் வளமாக்கப்பட்டு உங்களது சருமத்திற்கு போஷாக்கை வழங்கி புத்தொளி பரப்பி பளபளப்பாக்குகிறது. உங்களது சருமத்தைப் பளபளபாக்கவென சருமத்திலுள்ள இயற்கை எண்ணெய் வளத்தை மேம்படுத்துவதோடு உங்களது சருமத்தின் வரண்ட தன்மையை 2-3 வாரங்களில் நீக்கி விடுகிறது.

அனுமதிப்பத்திரம் வழங்கியவர் அவுஸ்திரேலியாவின் மெகா லைப்சயன்செஸ் நிறுவனம
துரித அழைப்பு : +94 77 3410071 | தொலைபேசி : +94 11 4305366
இணையத்தளம் : www.nnoforever.com | மின்னஞ்சல் : mega-sl@megawecare.com


MEGA We Care Human Wellness

INMARC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.

# குடும்பத்தின் குதூகலத்தை அதிகரிக்க
# ரொக்கெட் வேகத்தில் WWW



உங்கள் குடும்பத்தின் குதூகலத்தை அதிகரிக்க SLT புறோட்பேண்ட் புதிய ரொக்கெட் வேக WWW பக்கேஜ்களை வழங்குகிறது. இப்போது WWW வேகம் 8 Mbps வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. நிலையான, தடங்கலற்ற, அதிவேக இணையத்தின் துணையோடு நீங்கள் குடும்பத்தினருடன் எந்நேரமும் தொடர்பில் இருக்கலாம். அத்தோடு ஒன்லைன் ஷொப்பிங், பொழுதுபோக்கு, வெப் தேடல்கள் என்பவற்றை விரைவாக மேற்கொண்டு நீங்கள் குடும்பத்தினரோடு செலவிடும் நேரத்தை மேலும் மகிழ்ச்சியுள்ளதாக மாற்றுங்கள்.

இனிமேல் எப்படி WWW?

| பக்கேஜ் விபரம் | | Web Family |
|---|---|---|
| ஆரம்பக் கட்டணம் (ரூ.) | | 1,000 |
| மாதாந்தக் கட்டணம் (ரூ.) | | 1,490 |
| டவுன்லோட் வேகம் | அதிகபட்சம் | 8 Mbps |
| | குறைந்தபட்சம் | 2 Mbps |
| அப்லோட் வேகம் | | 1 Mbps வரை |
| மாதாந்த பாவனை அளவு (GB)<br>அப்லோட் (நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற), டவுன்லோட் (நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற) (நெருக்கடி மணித்தியாலங்களில் பெற்றுக்கொள்ளகூடிய அதிகபட்ச டவுன்லோட் அளவு) | | 20 |
| மாதாந்த மேலதிக இலவச பாவனை அளவு (GB)<br>அப்லோட் (நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற), டவுன்லோட் (நெருக்கடியற்ற) | | 5 |
| மொத்த மாதாந்த பாவனை அளவு (GB) | | 25 |
| விசேட சலுகைகள் | | ஒரு ஈமெயில் கணக்கு இலவசம் |

- தற்போதைய Web Mate வாடிக்கையாளர்களின் பக்கேஜ்கள் Web Family பக்கேஜ்களாக தரமுயர்த்தப்படும்.
- அதிகபட்ச நெருக்கடி நேர டவுன்லோட் கொள்ளளவை அல்லது மொத்த பாவனைக் கொள்ளளவை அடைந்ததும் வேகம் 64 Kbps க்கு குறைவடையும் (வேகக் குறைவு ஏற்படுவதைத் தவிர்க்க மேலதிக பாவனைக் கொள்ளளவைப் பெற்றுக் கொள்ள முடியும். அது தொடர்பாக ஒரு GB க்கு ரூ. 250 அறவிடப்படும்).
- டவுன்லோட் கொள்ளளவு தொடர்பாக கருதப்படும் நெருக்கடியற்ற நேரம் நள்ளிரவு 12.00 முதல் காலை 6.00 மணி வரையாகும்.
- வேகமானது இணைப்பின் தூரம் மற்றும் நிலைமைக்கு ஏற்ப வேறுபடலாம்.
- சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

BROADBAND
சக்தியளிப்பது Megaline

www.slt.lk துரித அழைப்பு (011) 2 555 555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

الفلاح

AL-FALAAH

*Shari'ah is our Success*

ISLAMIC FINANCIAL SERVICES

நேர்மையான வழியில் இலாபமீட்டுவதே
எல்லாவற்றிலும் அதிசிறந்தது

உங்கள் முதாரபா முதலீடுகளுக்கு

**12.16% இணையற்ற இலாபம்**

**வழங்கப்பட்டது**

முதாரபா முதலீடுகள் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கம்பனிகள் தொடர்பான சட்டத்தின் விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுக்கோப்புக்களுக்கு அமையவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பன்னிரண்டு (12) மாத முதிர்ச்சித் திட்டத்திற்கான இலாபப் பங்கீட்டு விகிதம் 62:38 ஆகும். இதில் 62% முதலீட்டாளருக்கு வழங்கப்படும்.

உங்கள் முதாரபா சேமிப்புகளுக்கு

**7.69% இணையற்ற இலாபம்**

**வழங்கப்பட்டது**

முதாரபா முதலீடுகள் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கம்பனிகள் தொடர்பான சட்டத்தின் விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுக்கோப்புக்களுக்கு அமையவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பொதுச் சேமிப்புகளுக்கான இலாபப் பங்கீட்டு விகிதம் 40:60 ஆகும். இதில் 40% முதலீட்டாளருக்கு வழங்கப்படும்.

நாடெங்கும் **400** ATM இயந்திரங்கள்

**இலகுவான அணுகல்**


லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(LOLC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனம்)

மேலதிக விபரங்களுக்கு எமது துரித அழைப்பு இலக்கத்திற்கு அழைக்கவும் : 011 5 880 786

அல்லது 4 பிரத்தியேகமான Al-Falaah நிலையங்கள் உள்ளிட்ட 52
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி. கிளைகளில் ஒன்றிற்கு வருகை தாருங்கள்.

முதாரபா
இலாபப் பங்கீட்டு
முதலீடுகளும் சேமிப்புகளும்

இஜாரா
குத்தகை



டிமினிஷிங் முஷாரகா
வேலைத்திட்ட
அபிவிருத்திக்கான மூலதனம்

முராபஹா
வர்த்தக நிதியுதவி

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி. ... இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையின் அனுமதிப்பத்திரத்தையும் ஃபிச் ரேட்டிங்ஸ் லங்காவின் A-(lka) தரப்படுத்தலையும் பெற்றுள்ளது.

BRANDS ALLEY


## விளையாடும் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்குவர்

துறுதுறுவென ஓடியாடி விளையாடும் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

நெதர்லாந்தில் உள்ள வியு யுனிவர்சிட்டி மெடிகல் சென்டரின் எம்கோ சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் நிபுணர் அமிகா சிங் தலைமையிலான குழுவினர் குழந்தைகளின் உடல் அசைவுக்கும் கல்வித் திறனுக்கும் உள்ள தொடர்பு குறித்து ஆய்வு நடத்தினர்.

அமெரிக்காவில் ஏற்கனவே நடத்தப்பட்ட 10 ஆய்வுகள் மற்றும் கனடா மற்றும் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்ட தலா ஒரு ஆய்வு முடிவுகளை ஆராய்ந்தனர்.

6 முதல் 18 வயதுக்குட்பட்ட வயதினரை உள்ளடக்கிய இந்த ஆய்வுகள் 53 முதல் 12,000 பேர் இந்த ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் உடல் இயக்கத்துக்கும் கல்வித் திறனுக்கும் தொடர்பு இருப்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதாவது எப்போதும் துறுதுறுவென ஓடியாடி விளையாடும் சிறுவர்கள் விளையாட்டில் ஆர்வம் இல்லாதவர்களை விட படிப்பில் சிறந்து விளங்குவது தெரிய வந்தது.

விளையாடும் போது உடல் உறுப்புகள் இயங்கும். ஒட்சிசன் மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மூளை சுறுசுறுப்படைகிறது.

இதன்மூலம் புதிய நரம்பு செல்கள் உண்டாவதால் கல்வியில் சிறந்து விளங்க காரணமாகிறது. உடற்பயிற்சியும் இதுவிஷயத்தில் பலன் அளிக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் ரயில் பெட்டிக்குள் 20 கிலோ எடை தங்கம்

பிரான்ஸ் தலைநகர் பரிஸ் அருகே ரயிலில் கேட்பாரற்றுக் கிடந்த பெட்டியிலிருந்து 20 கிலோ தங்கத்தை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸின் தென் மேற்குப் பகுதியைச் சேர்ந்தது மாசே பலாய்சியூ ரயில் நிலையம். இந்த ரயில் நிலையத்தில் பெட்டி ஒன்று அநாதையாகக் கிடந்தது. இதனைக் கவனித்த ரயில்வே ஊழியர் ஒருவர் பொலிஸுக்குத் தகவல் அளித்தார்.

இதனையடுத்து பொலிஸார் வெடிகுண்டு நிபுணர்கள் உதவியுடன் சோதனை நடத்தினர். சோதனையில் பெட்டியில் அளவுக்கு அதிகமாக தங்கக் கட்டிகள் இருப்பது கண்டறியப்பட்டது. இதன் மொத்த எடை சுமார் 20 கிலோ எனவும் சர்வதேச சந்தையில் இதன் மதிப்பு சுமார் 800 ஆயிரம் யூரோ அதாவது ஒரு மில்லியன் டொலர் எனவும் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தில் எந்த வித முத்திரையும் காணப்படவில்லை என்றும் பொலிஸாருக்குத் தெரிந்தால் பிரச்சினையாகும் என்ற கோணத்தில் அந்த விவரங்கள் அழிப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து ரயில் நிலையங்களிலும் உள்ள கண்காணிப்பு புகைப்படக்கருவியை பரிசோதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், யாரும் உரிமை கோராத பட்சத்தில் அவை கருவூலத்தில் ஒப்படைக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




## ஆஸ்திரேலிய கடலில் கலப்பின சுறாக்கள்

உலகின் முன்னணி கடல்வாழ் உயிரின ஆ[illegible] ஆஸ்திரேலியாவிலுள்ள குவின்ஸ் லேண்ட்டிலிருந்து நியூ சவுத் வேல்ஸ் கடலில [illegible] ழும் உயிரினங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

2 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்த ஆராய்ச்சி நடந்தது. அப்போது அங்கு 57 கலப்பின சுறா மீன்கள் இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

அவை பொதுவான பிளாக்டிக் சுறாக்களும், ஆஸ்திரேலியா பிளாக்டிக் சுறாக்களும் கலந்து உருவான கலப்பினமாகும். இவை மற்ற சுறா மீன்களை விட வலுவாகவும், உறுதியாகவும் உள்ளன. கடல் நீரின் தன்மை மற்றும் பருவநிலை மாற்றத்துக்குத் தக்கப்படி தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவை தாங்களாகவே கலப்பின சுறாக்களை உருவாக்கிக்கொண்டதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பொதுவாக சுறாக்கள் இதுபோன்று கல்ப்பினத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடாது. ஆனால், பருவநிலை மாற்றம் காரணமாகதான் அவை புதிய இனத்தை உருவாக்கியுள்ளன என குவின்ஸ் லேண்ட் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் ஜெஸ் மோர்கன் என்பவரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த சுறாக்களின் மரபணுக்களை விஞ்ஞானிகள் ஆராய்ச்சிசெய்துவருகின்றனர்.

## மன நிறைவுடன் சுவிஸ் பணியாளர்

சுவிஸ் நாட்டில் 94 சதவிகித பணியாளர்கள் தாங்கள் செய்யும் வேலைகளில் மனநிறைவுடன் இருப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் 35 சதவீத பேர் மிகுந்த மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் இருக்கின்றனர். 6 சதவீதம் பேர் மட்டும் வேலையில் திருப்தியில்லாமல் மனக்குறையுடன் இருக்கின்றனர். பெண்கள் மிகவும் மன மகிழ்ச்சியுடன் வேலை செய்கின்றனர். 37 சதவீதம் பேர் ஆனந்தமாக வேலை செய்கின்றனர். ஆனால் ஆண்களில் 33 சதவீதம் பேர் மட்டுமே சந்தோஷமாக வேலை பார்க்கின்றனர்.

வேலைப் பளுவைப் பற்றி விசாரித்த போது 64 சதவீதம் பேர் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், மூன்றில் ஒரு பங்கினர் வேலைப் பளு மிகுதி எனறும், அடுத்த மூன்றில் ஒரு பங்கினர் வேலை மிகவும் குறைவு என்றனர். வேலை செய்வதிலும் மனநிறைவு அளிப்பதிலும் வேலையாள்களின் வயதும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது.

15 முதல் 29 வயதுவரை உள்ளவர்களில் 22 சதவீதம் பேர் வேலைப் பளுவால் சிரமப்பட்டனர். 30-49 வயதுள்ளவர்களில் 34 சதவீதம் பேர் வேலைப் பளு அதிகம் இருப்பதாக உணர்கின்றனர். 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் 42 சதவீதம் பேருக்கு வேலை சிரமமாக இருப்பதாகவே உணர்கின்றனர்.

சுவிஸ் சம்பளமும் நிறைவாக வழங்கப்படுகிறது. 85 சதவீதம் பேர் தங்கள் சம்பளம் குறித்து மனநிறைவுடன் இருக்கின்றனர். 20 சதவீதம் பேர் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளனர், 15 சதவீதம் பேர் மட்டும் தங்கள் வேலைக்கு இன்னும் அதிகமாகச் சம்பளம் கொடுக்கலாம். இப்போது கொடுப்பது குறைவு என்று புலம்புகின்றனர்.

பணியாளர்கள் 9 சதவீதம் பேர் தங்கள் முதலாளிகள் குறித்து வருத்தம் தெரிவிக்கின்றனர். 47 சதவீதம் பேர் மனநிறைவுடன் உள்ளனர். 44 சதவீதம் பேர் மனமகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TATA MOTORS

TATA

# 24,000

# வாடிக்கையாளர்கள்

# சிறந்தது என ஏற்றுக்கொண்டுள்ளனர்



ரூ. 850,000/- (வட் உள்ளடங்கலாக)

சில்லரை வியாபாரங்கள் முதல் பாரிய அளவிலான நிறுவனங்கள் வரை சகல தேவைகளுக்கும் உகந்த ஓர் வாகனம் டிமோ பட்டா. எந்தவொரு இக்கட்டான நிலையிலும் உங்கள் தொழில் தடைப்படாமல் தொடர்ந்து செயற்படுவதற்கான உத்தரவாதத்தை டிமோவின் உன்னதமான சேவை உங்களுக்கு அளிக்கின்றது.

- விற்பனையின் பின்னரான சேவை
- மிகக்குறைந்த பாவனைச் செலவு
- டிமோவின் 24 மணிநேர வீதியோர சேவை
- நாடுபூராகவும் விற்பனை, சேவை மற்றும் உதிரிப்பாக நிலையங்கள்
- வினைத்திறனான எரிபொருள் பாவனை

## தைத்திருநாளை முன்னிட்டு விஷேட சலுகைகள்*

**ஜனவரி 5 முதல் 15 வரை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா கிளைகளில்**

- TATA ACE HT/ACE
  - இலவசக் காப்புறுதி
  - இலவச பதிவு
  - ஒரே நாளில் கையளிப்பு
- TATA ACE Ex
  - இலவசக் காப்புறுதி
  - ஒரே நாளில் கையளிப்பு

துரித அழைப்புகளுக்கு **0777393597**

யாழ்ப்பாணக் கிளை:
இல. 214, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வவுனியாக் கிளை:
இல. 43, யாழ்ப்பாண வீதி,
வவுனியா.

*இச் சலுகை வட மாகாணத்திற்கு மட்டுமே

www.sarva

வாழ்க்கை சுமையை சுமக்கும்

டிமோபட்டா

DIMO TECHNOLOGY
www.dimolanka.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org